[illegible]

[illegible]

22:417F9
N08
117867

ண்டாவது சஞ்சிகை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பூர்வாசாரியர்கள் அருளிச்செய்த

பன்னீராயிரப்படி, ஆறாயிரப்படி

முதலிய பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு பரிசோதித்த

# குருபரம்பரா ப்ரபாவம்.

யதீந்த்ர ப்ரவணப்ரபாவம், ப்ரமாணத்திரட்டு,

ஆகிய இவற்றுடன்.

---

சுத்தமான நூதனப் பதிப்பு.

---


ஸ்ரீமத்

உ. வே. அ. க. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள்

முன்னிலையில்

வித்வான் - ஸ்ரீமாந்.

ம. இராஜகோபாலபிள்ளை யவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

ஸ்ரீமாந்.

பெ. து. ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமிகளாலும்

அவர் குமாரர்

பார்த்தசாரதி ஐயங்கா ரவர்களாலும்

ஸ்ரீமாந். செஞ்சி - இல்லிடு.

அரங்கசாமி முதலியா ரவர்களாலும்

அவர் குமாரர்

திருவேங்கட முதலியா ரவர்களாலும்



சென்னை,

கோமளேச்சுவரன் பேட்டை

சச்சித்ராநந்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.


---


காப்பி ரயிட்.


---

எட்டுப்பாரங்கொண்ட

சஞ்சிகை ஒன்றன் விலை அணா 4.

ப்ராஞ்ஜலிம் த்ருஷ்டபாத தநயம்முநிவர்யம் ஜகத்பதிம்,
ஸவிதாஸ் த்த்ரிநயைக்ருபகந்தஸ், த்ஷ்டாவப்ரணதோ
ந்ததாதார மச்யுதம்" என்கிறபடியே ஸ்ரீயாஞ்ச ஜனய
ச்திகாலே க்ஞானவைலக்ஷண்யமுடையருய் முனிசிரேஷ்
டியச் சர்வேசுவரனே வேதசாஸ்த்ர சம்மதமாய்த் துதிக்கவல்லை
ஸர்வக்ஞனை அருவனே போதுவுந், சகல வேதார்த்தங்களையுந்
த துடப்ரம்மணங்களான புராணேதிஹாசங்களையுஞ் சாக்ஷாத்கரி
த்தலாமலகமாக்கிக்கொண்டுந் தோரணக்கம்பத்தடிவாரத்
தில் கெழுந்தருளிநின்று "காரணந்துத்யேய:" என்கிறபடியே
இந்த ஜகத்துக்குக் காரணவஸ்து எவனே அவனே த்யானத்துக்
குரியவனென்றருளிச்செய்து, முதலில் வேதத்திற்றொடங்கி
"யதோவா இமாநி பூதாநிஜாயந்தே யேநஜாதாநி ஜீவந்தியத்ப்ர
யந்த்யபிஸம்விசந்தி தத்விஜிக்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்மேதி" என்கிற
படியே" எவனிடத்திலிருந்து உடலுமுயிருஞ் சாமு மசரமுமா
கச் சொல்லப்படுகிற பொருள்களெல்லாமுண்டாகின்றனவோ, எவனு
டையவையாவும் நிலைபெற்றிருக்கின்றனவோ, முடிவிலவனிடத்தி
லேயவைகளெல்லாம் லயமாகின்றனவோ அவனே பரப்ரம்ஹம் என்
றும், "யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்யமநஸாஸஹ ஆனந்
தப்ரம்ஹணோ வித்வான் நபிபேதிகுதச்சந" என்கிறபடியே எது
வாக்கினாலும் மனதினாலுந் துதிக்கவும் அறியவும் அருமையாக
விருக்குமோ அந்த பரப்ரம்ஹத்தை யறிந்து கொண்டவர்கள்
எமதிகட்கும் பயப்படார் என்றும், "யத்வேதாதௌஸ்வர:
ப்ரோக்தோ வேதாந்தேச ப்ரதிஷ்டித:, தஸ்யப்ரக்ருதி லீநஸ்யய:
பரஸ்ஸமஹேச்வர:" என்கிறபடி வேதங்களின் ஆதியிலும் அந்தத்
திலுஞ் சொல்லப்பட்டிருக்கிற ப்ரணவமெதுவோ அதன் பிறப்
பிடமாகிய அகாரத்தில் † லீனமாயிருப்பவனெவனே அவனேபர
னும் மஹேசவரனுமாகச் சொல்லப்படுகிற பரப்ரம்ஹம் என்றும்
"நதத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே" என்கிறபடி அந்த பர
ப்ரம்ஹத்துக்கு ஒத்தார் மிக்காரில்லையென்றும், "யஸ்யப்ரம்ஹா ச
க்ஷத்ரஞ்ச உபேபவதவோதநே" என்கிறபடி அவன் ப்ராம்ஹா
வையும் க்ஷாத்ரத்தையுடைய ருத்ரனையும் அன்னத்தை யுண்
பதுபோல் கற்பாந்த்யத்தில் புஜிக்கிறுனென்றும், "ம்ருத்யுர்யஸ்
யோபஸேசநம்" என்கிறபடியே ப்ரளயகால ருத்ரனவனுக்கு

† லீனம் - ஐக்கியம்.

னாகிகாய்ஸ்தான மாகிறனென்றும், "யதோர்ண
க்ரஹணதேச ததாப்ரதிஸ்யாமோக்ஷதய்ஸம்பவ",
படியே சிலந்திப்பூச்சியானது எவ்வளவு பொழுதில் நூ
லைக் க்ரஹித்துக் கொள்ளுமோ அவ்வளவு காலத்தில்
திவ்யாதி சகல பதார்த்தங்களையும் அந்த பரன் படைத்த
னம், "யோஸௌ சர்வஜிதோ விஷ்ணுஸ்ஸத்வ குணப்ரணி
வத்" என்கிறபடியே அந்த பரன் விஷ்ணுவென் னு மபிதான
தோடையனுய்ச் சாத்விகனுய்த் தன்னை யொழிந்த சர்வராலும்
பூசிக்கப்படுகிறானென்றும், "தஸ்யநாபேரஜ ஆத்மஸ்வயம்பு" என்
கிறபடியே அவனுடைய நாபீ கமலத்திலிருந்து இராஜஸனன
ப்ரம்ஹா பிறந்தானென்றும், "ததாதஸ்ய ப்ருவோர்மத்ய ராஜாத்
தமோருத்ரஃ ப்ராதுரபவத்" என்கிறபடியே அந்த ப்ரம்ஹாவின்
புருவங்களின் மத்ய ப்ரதேசத்திலிருந்து தாமஸனன ருத்ரன்
பிறந்தானென்றும், "வந்தே விஷ்ணும் ஓங்கார வாச்யம்" என்
கிறபடி ஓங்கார வாச்யனை அந்த விஷ்ணுவை நமஸ்கரிக்கிறே
னென்று சுருதி சொல்லிற்றென்றும், "ஓங்காரோ பகவான்
விஷ்ணுஸ் த்ரயீ வசஸாம்பதிஃ, தஸ்யோச்சாரண மாத்ரேண
பரப்ரம்ஹாதிகச்சதி" என்கிறபடியே ஓங்காரத்துக்குப்
பொருள் விஷ்ணு வொருவனேயென்றும், அவன் ‡ த்ரயீ யென்
கிற வேதவசனங்களுக்கு நாயகனென்றும், ஜீவர்களந்த ஓங்கா
ரத்தை யுச்சரித்த மாத்ரத்தில் அவனை யடைகிறார்களென்றும்,
அப்படிப்பட்ட ஓங்காரத்தில் ப்ரதம ஸ்வரமான அகாரம் அவ
னையே குறிப்பிடுகிறதென்றும், "அகாரோவை ஸர்வவாக்" என்
கிறபடியே அந்த அகாரம் சர்வ வாக்குகளுக்கும் மூலாக்ஷரமென்
றும், "அகாரோவிஷ்ணுஃ ப்ரதமநாமோச்யதே" என்கிறபடியே
அகாரம் விஷ்ணுவினுடைய ப்ரதான திருநாமத்தை ப்ரதி
பாதிக்கிறதென்றும், "அஇதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதமா
பிதாநம்" என்கிறபடியே அகாரமானது அந்த பகவானகிய
நாராயணனுடைய ப்ரதான திருநாமமென்றும், "அபஹதபாப்
மா திவ்யோதேவ ஏகோ நாராயணஃ" என்கிறபடி அந்த நாரா
யணனொருவனே பாப ரஹிதனு யிருக்கிறானென்றும், "அத
புருஷோஹவை நாராயணஸ்லோகாமயத ப்ரஜாஸ்ருஜேயேதி
அஸ்ருஜத் நாராயணாத் ப்ரம்ஹா ஜாயதே நாராயணாத்ருத்ரோ

‡ த்ரயீ = வேதத்ரய...



ஜாயதே நாராயணாதிந்த்ரோ ஜாயதே நாராயணாத் த்வாதசாதித்
யாஃ ருத்ராஃ வஸவருஷயஃ ப்ரஜாபதயப்ச ஸர்வே தேவாஸ்ஸ
முத்பத்யந்தே" என்கிறபடி, ஸ்ரீமந் நாராயணனிடத்திலிருந்து
ப்ரம்ஹாவும் ருத்ரனும் த்வாதசாதித்யரும் ஏகாதசருத்ரர்களும்
சப்தருஷிகளும் நவப்ரஜாபதிகள் முதலான தேவர்களும் பிறந்
தனரென்றும், "ஏகோஹவை நாராயணஆஸீத் நப்ரம்ஹா
நசசங்கரஃ ஸமுநிர் பூர்வாஸமசிந்தயத்ததஏதே வ்யாநாஜ்ஜா
யந்தேவிப்வோ ஹிரண்யகர்ப்போக்னிர் யமவருணா ருத்ரேந்த்
ராஃ" என்கிறபடி ப்ரம்ஹ ருத்ர ஈசான ப்ரிதிவ்யாதி பதார்த்
தங்களனைத்தும் கற்ப 0 க்ஷயத்திலழிந்து நாராயணனொருவனே
யிருந்துப் பின்பு அவன் நினைவினாலே அவையாவு முண்டாயின
வென்றும், "நாராயண பரம்ப்ரம்ஹ தத்வம் நாராயணஃ பரஃ"
என்கிறபடி நாராயணனே பரப்ரம்ஹ, நாராயணனே பரன் என்
றுஞ் சொல்லுகிற இத்யாதி வேத உபநிஷத்வாக்ய ஸஹஸ்ரங்களை
யருளிச்செய்து, அனந்தரம் அவைகளை நன்றாக விளங்கச்சொல்
லும் இதிஹாசங்களில் பாரதத்து "மந்நாபி பங்கஜாஜ் ஜாதோய
த்மயோநிஃ பிதாமஹஸ்தஸ்யாலோடாத்பவோ ருத்ரஸ்தஸ்மாஜ்
ஜாதஷ்டஸாநகஃ" என்கிறபடி என்னுடைய நாபி கமலத்தி
லிருந்து ப்ரம்ஹாவும் அவனுடைய புருவங்களினிடையிலிருந்து
ருத்ரனும் அவனிடத்திலிருந்து ஆறுமுகனுமாகப் பிறந்தன
ரென்று பகவானே இதையி லருளிச்செய் திருப்பதையுமெடுத்
துதஹரித்துத், ததனந்தரம் இப்படிப் பரத்வங்கூறிநூர் தமக்கு
முன்பேயும் பல பெருந்தலைகளிருந்தன ரென்பதை நிர்வஹிப்ப
தாய்த்திருவுள்ளம்பற்றி அதர்வணச்சிரம்மென்கிறசுருதியில்" அஹ
மேகஃ ப்ரதமமாஸம்வர்த்தாமிபவிஷ்யாமிசநாந்யஃ கச்சின்மத்தோ
வ்யதிரிக்தஃ இதிலோந் தராதந்தரம் ப்ராவிசத்தி ஸம்சாந்தரம்
ப்ராவிசத்ஸோஹந்நித்யா நித்யோஹம் ப்ராஞ்சோஹம் ப்ரத்
யஞ்சோஹம் உதஞ்சோஹம் அதச்சோர்த்வா இமச்சாஹந்
திரிஷ ஜகத்யனுஷ்டப்ஸோஹந் சந்தோஹந் த்யரஹம் பார்ஹ
ஸ்பத்ஸோஹம்" என்கிறபடி ருத்ரன் தெய்வ லோகத்துக்குப்
போயிருந்தபோது ஒரு ப்ரஸ்தாபத்தில் அந்த நாராயணன் என்
னுளந்தர்யாமியா யிருக்கையால் நான் த்ரிலோகாதிபதியா யிருக்
கப் பெற்றேனென்றும், அவ்வேற்றத்தாலே பூத, பௌஷ்ய,

0 க்ஷயம் = முடிவு.

வர்த்தமான காலங்களிலு மெனக்கீடானவ ரொருவருமில்லை யென்றுஞ் சந்தோஷப் பெருக்காலே தேவசபையில் நின்று சொல்லி யிருக்கிறனென்றும், "யத்ரதேவாஸ்ச முநயோஸ்ச ஸா ஹ்யாஸ்ச ஸமஸ்கரா: ஜாநந்தி பரமேஸஸ்ய தத்விஷ்ணோ: பரமம் பதம்" என்கிறபடி தேவர்களாலுஞ் சனகாதிமுனீசுவரர்களாலும் என்னாலுஞ் சங்கரனாலும் பரமேசுவரனால் விளங்கா நின்றுள்ள அந்த விஷ்ணுவின் பரமமான பதத்தை அறியக்கூடாதென்றும் ப்ரம்ஹா சொல்லியிருக்கிறனென்றும், "ஸோபித்யாய ஸரீராத் ஸ்வாத்ஸிஸ்ருக்ஷுர்விவிதா: ப்ரஜா:" என்கிறபடியே அந்த பகவான் தன் திருமேனியினின்றும் வெவ்வேறுபட்ட ஆத்மாக்களைச் சிருஷ்டிக்கும்படித் திருவுள்ளம் பற்றி முதலில் ஜலத்தையுண்டாக்கி அதில் அண்டத்தை நிர்மித்துத் தன்னாபியினின்றும் ப்ரம்ஹாவைத் தோற்றுவித்து அவனால் ருத்ரனையும் மற்றவரையும் படைத்தாரென்று (மநு) ஸ்மிருதியிற் சொல்லியிருக்கிறனென்றும், "ஸஹோவாச வ்யாஸ: பாராஸர்ய:" என்கிறபடி க்ஞானாதிக்யரான பராசரனுடைய புத்ரராகிய வியாசரது வசனங்கள் சத்தியமானவையென்று எசுர்வேதத்திற் சொல்லி யிருக்கிறபடியே சத்யவாதியான வியாசர் "நாராயண பரோ தேவோ ஸ்பூதோ நபவிஷ்யதி, ஏதத்ரஹஸ்யம் வேதாநாம் புராணாநாஞ்ச ஸம்மதம், ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்ருத்ய புஜமுச்யதே, வேதஸாஸ்த்ராத்பரம் நாஸ்திநதைவங் கேசவாத் பரம்" என்கிறபடியே பூத பௌஷ்ய வர்த்தமான காலங்களிலும் நாராயணனுக்கு மிஞ்சின பரதெய்வமில்லையென்று வேதங்களும் புராணங்களு மிணங்கி இரட்டித்துச் சத்ய பூர்வகமாகச் சொல்லி யிருக்கையால் அவ்வர்த்தத்தை இந்த ருஷிகூட்டத்தினிடையில் நானுமொருமுறை ப்ரமாண பூர்வமாகச்சொல்லக்கடவேனென்று கையை யுயரவெடுத்து மூன்றுதரஞ் சத்யஞ்செய்து வேதங்களுக்கு மிஞ்சின சாஸ்திரமுங் கேசவனுக்கு மிஞ்சின பரதெய்வமு மில்லையென்று சொல்லியிருக்கிறரென்று மருளிச்செய்தார். ஆகவித்தியாதிகளாலே சமஸ்த வேதார்த்தங்களும் வேதாந்தத்தி லடங்கி, வேதாந்தம் அஷ்டாக்ஷரத்தி லடங்கி, அஷ்டாக்ஷரம் ப்ரணவ தாத்பர்யமாகி, அந்த ப்ரணவம் அகாரத்தி லேக்கியமாயிற் றென்றும், அதுகொண்டு "ஸமஸ்த ஸப்த மூலத்வா தகாரஸ்யஸ்வபாவத:" என்கிறபடியே அகாரத்தைச்



சமஸ்த சப்தங்களுக்கும் மூலமாயிருக்கும் ஸ்வபாவத்தை யுடையதாகச் சொல்லுகையென்றும், "அக்ஷராணமகாரோஸ்மி" என்கிறபடியே கீதோபதேஷ்டாசார்யனான கண்ணன் அக்ஷரங்களில் அகாரமாயிருப்பவன் நானே யென்று திருவாய்மலர்ந்தருளினனென்றும், "யதா ஸர்வேஷுதேவேஷு நாஸ்திநாராயணாத்பர: ததாமந்த்ரேஷு ஸர்வேஷு மந்த்ரோஷ்டாக்ஷராத்பர:" என்கிறபடியே சமஸ்த தேவர்களிலும் வைத்துக்கொண்டு நாராயணனொருவனே பரனாயிருப்பதுபோல சர்வ மந்த்ரங்களிலும் அஷ்டாக்ஷர மொன்றே பரதத்வ நிர்ணயஞ்செய்யும் பரமமான மந்த்ரமா யிருப்பதென்றும் ப்ரசங்கித்து, இத்யாதிசுருதிஸ்மிருதிஇதிஹாச புராணவசன சம்மதங்களை முன்னிட்டுக்கொண்டு "கண்ணனல்லாற் றெய்வமில்லை" என்று நாமுஞ்சொன்னோம், நமருஞ் சொல்மின் என்றார். அப்போது வித்யாசுல்கமாகக் கட்டியிருந்த கிழியானது தன்கடையே தாழவளைந்து இவர் திருக்கையைத் தீண்ட "விரைந்து கிழியறுத்தான்" என்கிறபடியே அதனை யறுத்தருளினார்.

அப்போது சபையிலிருந்த சமயாசாரியர் பலரும் வித்வஜ்ஜனங்களும் அவர்களுடன் அநுவர்த்தித்த அரசனும் விஸ்மிதராய் இவ்வாழ்வார் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்து "வேதாந்த விழுப்பொருளின் மீதிருந்த விளக்கை விஷ்ணுசித்தன் விரித்தனன்" என்று அதிக ப்ரீதியுடனே இவரை ஆனைக் கழுத்தின் மீதேறியருளப்பண்ணி அரசனே தொடக்கமான யாவருஞ்சத்ர சாமர தாலவ்ருந்தாதிகள் தரித்துச்சேவித்துவர "வேதப் பயன் கொள்ளவல்ல விஷ்ணுசித்தர்" வந்தாரென்றும், "வில்லிபுத்தூர் வேதக்கோன்" வந்தாரென்றும், விருதூதித் திருச்சின்னம் பரிமாறி "சண்டிய சங்கமெடுத்தூதி" அரசனிவருக்குப் பட்டர்பிரான் என்று திருநாமஞ்சாற்ற அதை யாவருமுவந்து ஏககாலத்தில் பலமுறையுச்சரித்துக் கரதாளந் தட்டிக்கொண்டு, மங்கள வாத்ய முழங்க, நகர்வலமாகப் பவனிமஹோத்சவங் கண்டருளப் பண்ணினார்கள். அவ்வேளையில் (புத்ரர்களை ப்ரம்ஹாதம் பண்ணுகையில் காணவாதரித்துவரும் மாதாபிதாக்களைப்போல) ஸ்ரீமந் நாராயணன் நிரூபக பூதையான பிராட்டி சஹிதனாய் "மஞ்சுயர் பொன்மலைமேலெழுந்த மாமுகில்" என்கிறபடியே பனிதோயும் முகட்டையுடைய கனகிரியேபோல் ஆகாரவிசேஷத்தை

பொத்துத் "திருச்சக்கரஞ் சங்கினொடும்" என்கிறபடியே சங்க சக்ர திவ்யாயுத தரனாய்க் "கீளர்ந்த பிரமன் சிவனிந்திரன் விண்ணவர்சூழ விளங்க வொருநாள்காண வாராய் விண்மீதே" என்கிறபடியே "அப்ராக்ருதம் ஸூரைர்வந்த்ய மயுதார்க்க ஸமப்ரபம்" என்கிறபடியே ப்ரம்ஹ ருத்ராதிதேவர்களால் சேவிக்கப்படுமவனாய் ஆயிரஞ் சூர்யரோரிடத்திற் சேர்ந்திருப்பதுபோற் காணுஞ் சுடர்ச்சோதியோடுங் கூடிய அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனாய் ஆகாசத்திலிருந்து சேவைசாதிக்க, இவர் சேவித்துப் பகவத் ப்ரசாதமடியாக நிரவதிக பக்தியைப் பெற்றிருப்பவராகையாலே, தமக்குவேண்டிய அபேக்ஷிதங்களைப் ப்ரார்த்தியாமல் அவனுடைய சர்வஜ்ஞத்வ சர்வசக்தித்வ சர்வரக்ஷகத்வாதிகளையநுசந்திக்கப்புக்குக், † காலக்ருத பரிணாமமின்றிக்கே ‡ ஸதைகரூபமாய், நித்ய ஸித்தமாய்ப், பஞ்சோபநிஷன்மயமான பரமபதத்தில் "ஸதா பஶ்யந்தி ஸூரய:" என்கிறபடியே நித்யஸூரிகளால் ஸதாதர்சிக்கப்படுகிற வஸ்து அந்த பரமாத்ம ஸ்தானத்தையாதரியாமல் காலக்ருதபரிணாமமாய் 0 க்ஷணக்ஷரண ஸ்வபாவமாய், அரக்கரசுரர்க்கு வாசபூமியாய்த் துர்விதவான்கள் () துரபிசந்திபண்ணும் ஸ்தலமாய்க், கலி ‡‡ சாம்ராஜ்யம்பண்ணுகிற இவ்விருள்தரு மாஞாலத்திலேவந்து †† சக்ஷுர்விஷயமாகிறதானால், ப்ரம்ஹருத்ராதிகள் தொடக்கமான வித்தேசத்தாருடைய த்ருஷ்டியால் இவ்வஸ்துவுக்கென்ன தீங்குவருகிறதோவென்னும் மதிசங்கையாலே, யானைக்கழுத்தின்மேற்கிடந்த மணிகளைத் தாளமாகக்கொண்டு, அந்த சௌந்தர்யாதிகளுக் கொருதீங்கும் வாராமல் நித்தியமாகச் செல்லவேண்டுமென்று தம்முடைய ஸ்வரூப நசையைமறந்து ப்ரேமபரவசராகி மங்களாசாசனம் பண்ணியருளி, இவ்விஷயத்தில் தாமொருவரே நிற்கில் போதாதென்று நினைத்துத், தமக்குத்தோள் தீண்டிகளான ஐச்வர்ய கைவல்ய பகவச்சரணார்த்திகளையும் மங்களாசாசனயோக்யராம்

† காலக்ருத பரிணாமம் - காலத்தினுற் செய்யப்படும் விகாரங்கள்.

‡ ஸதைகரூபமாய் - ஒரே தன்மையான ரூபமாய். 0 க்ஷணக்ஷரணஸ்வபாவமாய் - க்ஷணத்துக்கு க்ஷணம் விகாரப்படுந் தன்மையதாய். () துரபிசந்தி - குதர்க்கம். ‡‡ சாம்ராஜ்யம் - அரசாட்சி. †† சக்ஷுர் விஷயமாய் - கண்ணுக்குத் தெரியும்படி.



படித் திருத்திச் சேர்த்துக்கொண்டுப் பலவகையாலுந் திருப்பல்லாண்டு பாடியருளினார்.

பின்பு அரசனையும் விசேஷகடாக்ஷஞ்செய்தருளி "வில்லிபுத்தூருறைவான்றன் பொன்னடி" காண்பதோராசையினால் மீண்டு ஸ்ரீவில்லிபுத்தூரிலெழுந்தருளிக் கிழிச்சீரையிலிருந்த தனத்தை வடபெருங் கோயிலுடையான் திருமுன்வைத்துத் தண்டன் சமர்ப்பித்துத் தாஞ்செய்துகொண்டிருந்த "கானார் நறுந்துழாய்க் கைசெய்த கண்ணியும்" "செண்பக மல்லிகையோடு செங்கழுநீ ரிருவாட்சி" யுமான திருமாலை கைங்கர்யத்திலிழிந்து வடபெருங் கோயிலுடையானை யுகப்பித்து, அவன் கிருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீமாலாகாரரை யிரந்து பூமாலை சூட்டிக்கொண்டவனந்தரம் மல்லரோடு பொருது வெற்றி கொண்ட தோளுக்குப் பல்லாண்டு பாடினவராகையாலே, அவ்வவதாரவிசேஷத்தில் ப்ரவணராய்க் "கண்ணன் கேசவநம்பி பிறந்தனில்" என்று அவதரித்தது முதலாக "வென்றிசேர்பிள்ளை நல்விளையாட்டையும்" என்னுமவனுடைய வதிமாநுஷ சேஷ்டிதங்களைத் தாமுங் கோபஜன்மத்தை யாஸ்தாயம் பண்ணி யநுசரித்து, அவனுடைய சௌலப்ய சௌசீல்யாதி குணங்களில் ஆழங்காற்பட்டு அதிப்ரீதராகிப் பெரியாழ்வார் திருமொழியென்கிற திவ்ய ப்ரபந்தத்தையுந் திருவாய்மலர்ந்தருளிச், சாயைபோலப் பாடவல்ல ஸஜ்ஜனங்களுக்குபகரித்தருளி உலகத்தை வாழ்வித்தருளினார்.

### திருநக்ஷத்ரத் தனியன்.

மிதுநேஸ்வாதிஜம் விஷ்ணோ ரதாம்ஸாம் தன்விஸ:புரே,
ப்ரபத்யேஸ்வஸுரம் விஷ்ணோ விஷ்ணுசித்தம் புர:ஶிகம்.

ஸ்ரீபெரியாழ்வார் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

☞ பெரியாழ்வார் திருவவதார வருஷம் - சகூ௬ச - க்குச் சரியான பஹுதான்ய வருஷம்.

# ஸ்ரீ ஆண்டாள் வைபவம்.

## தனியன்கள்.

### வெண்பா.

ஸ்ரீ உய்யக்கொண்டா ரருளிச்செய்தது.

அன்ன வயற்புதுவை யாண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதிகம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாணற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்—நாடிநீ
வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

"தேவஸ்யமஹிஷீம் திவ்யாமாதௌ கோதா முபாஸ்மஹே யன்மௌலிமாலிகாம் ப்ரீத்யாஸ்வீகரோதிஸ்வயம் ப்ரபு:" என்கிறபடி ஸ்ரீயபதியான சர்வேசுவரன் பூமிப்பிராட்டியின் ஹம்சையான எந்த கோதாதேவியினுடைய திருக்குழலில் சூடிக்கொடுத்த பூமாலையைப் போக்யமாக வங்கீகரித்தானோ அந்த வேதமஹிஷியை ஆசிரயிக்கிறேன் என்றும் "ஸவிஷ்ணுசித்தஸ்துளஸீவனாவநிங்கநித்ர வக்த்ரேணநிகாதயந் கலௌ பராபவே ம்ஹூர்த்தே பராசிமாஸிபல்குநீ ப்ராதிதாரே துளஸீவனாந்தரே புவோ பவத்காஞ்சன பாலகன்யகா பூம்யம்சகாம் வீக்ஷ்யவிஸிஷ்மியே முதா" என்கிறபடி விஷ்ணுசித்தரென்கிற பெரியாழ்வார் தமது துளசிவனத்தில் களைகொத்திக் கொண்டிருக்கையில் ஆடிமாதம் பூரநட்சத்ரத்தில் நல்லமுஹூர்த்தத்தில் மண்ணில் அங்கொரு திருத்துழாய் வேரின்கீழ் சுவர்ண கவசத்திற்குள் † காஞ்சனமயமான பசுங்குழந்தையாய் ப்ரகாசித்துக்கொண்டிருந்து சேவைதந்தருளிய பூதேவியின் ஹம்சையான கோதாதேவியைத் தரிசித்து ஆச்சர்ய மடைந்தாரிறே என்றும் இவரவதார விசேஷத்தைத் திவ்ய சூரிசரிதையில் சொல்லிற்று.

† காஞ்சனம் - பொன்.



(†) எங்ஙனேயென்னில் "அயதேக்ருஷத: க்ஷேத்ரம் லாங்கலாதுத்திதா மயாக்ஷேத்ரம் யோதயதாலப்தா. நாம்நாஸீதேதி விஸ்ருதா பூதலாதுத்திதா ஸா துவ்யவர்த்த தமமாத்மஜா" என்கிறபடியே ஸ்ரீஜனகராஜன் யாகசாலைக்காக ஸ்தலந்திருத்த நிலம்

(†) மற்றொருபிரதியில்:—ஸ்ரீமந்நாராயணன் திருப்பாற்கடலில்யோக நித்ரையினின்றும் நீங்கி ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவிகளாகியபிராட்டிமார் மூவரோடு நவரத்நகசிதமாகிய ஸிங்காஸனத்தின்மேல் எழுந்தருளியிருக்க, அப்பொழுது பிராட்டிமார்மூவருள் பூப்பிராட்டியாரெழுந்து எம்பெருமான் திருவடிகளைவணங்கிக் கைகுவித்து நின்றுகொண்டு ஸ்வாமி! பூலோகத்திலுள்ள ஆத்துமாக்களில் யாரிடத்தில் தேவரீர் பிரியங் கொள்வீரென்று கேட்க ஸ்ரீமந்நாராயணன் பிராட்டியாரது திருமுகத்தைக் குளிர நோக்கிப் புன்னகைகொண்டு, அநித்யமாகிய ப்ரபஞ்சத்தில் பற்றுவையாமல் நித்யமாகிய நமது பரமபதத்தினிடத்துப் பற்றுவைத்து இடைவிடாது பக்திபூர்வமாக நம்மை நினைத்து நமதுவிஷயமாகப் பாமாலையும் பூமாலையுந் தொடுத்துச் சாத்துகின்ற பாகவதர்களிடத்தே பிரியங்கொள்வோமென்று திருவாய் மலர்ந்தருளினன்.

அதுகேட்டுப் பூதேவியார் ஸ்வாமி! அடியேனும் அந்தப்ரகாரந்தேவரீர் விஷயமாகக் கைங்கர்யங்களைத் திருவுள்ள முகக்கும்படிச்செய்து வந்தாலல்லவோ உத்தேசமெடுத்ததனுலாகிய பயனைப் பெற்றுக்கொள்வேன்; ஆதலால் அடியேனையும் அவ்வாறு செய்வித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீமந்நாராயணன் பூலோகத்தில் நமது பெரிய திருவடி அம்சமாகிய விஷ்ணுசித்தரென்னும் விப்ரோத்தமர் ஸ்ரீவில்லிபுத்தூரென்னுந் திவ்யதேசத்திலிருந்து கொண்டு அந்த கைங்கர்யங்களைச் செய்துவருகின்றனர்; அவருக்குப் புத்ரியாகவுதித்து உன்னுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டு வருவாயென்றருள; அதுகேட்டுத் தேவியார் அதிக ஆனந்தமடைந்து ஸ்வாமி வில்லிபுத்தூரென்னுந் திவ்யதேசத்தின் வரலாறும் அவ்விடத்தி லெழுந்தருளி யிருக்கின்ற தேவரீரது லீலையும் அந்த பாகவதரது பெருமையும் அடியேனுக்குத் தெரிவித்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்தார்.

ஸ்ரீமந்நாராயணன் திருவுளமுவந்து பூலோகத்தில் ஜம்பூத்வீபத்தில் தக்ஷிண திசையிலுள்ள பாண்டியதேசத்தில் ஒரு திவ்யக்ஷேத்திர முண்டு. அதனிடத்து அர்ச்சாவதாரமாகவிருந்த நாம் பூர்வம் உனக்குத் துன்பமுண்டாக்கிய இரணியாக்ஷனை வராகவடிவங் கொண்டு வென்று உனக்குப் பலதர்மங்களையும்உபதேசம்பண்ணினோம். அப்பொழுது நீயிவ்விடத்தில் இவ்வுருவோடு எழுந்தருளியிருக்க வேண்டுமென்று நம்மை ப்ரார்த்தித்தபடி நாம் அத்தலத்தில் வராகவுருவத்துடன் அனேககற்பக்க ளன்றேகூடியிருந்தோம். பின்பு அந்தஸ்தலம் ஆரண்யமாக அனேககால மிருந்தது.

உழுகையில் அந்தப்படைச்சாலிலே ப்ராதுர்ப்பவித்தருள் யென்னுமபிதானம்பெற்று அவனுக்குப் புத்ரியாகவளர்ந்தரு "பார்வண்ணமடமங்கை" என்கிற பூமிப்பிராட்டி வேயர்கு திரு மொருகால் வளர்ந்தருளத் திருவுள்ளம்பற்றி, ஸ்ரீவில்லி ... ப்ராதுர்ப்பவித்தருளி - வெளிப்பட்டு.

---

அதில் ப்ருகு மார்க்கண்டேயர் முதலானரிஷிகள் இருந்து நம்மிடத்தி அன்புவைத்துத் தவஞ்செய்யும்போது காலநேமி யென்னும் ராக்ஷஸ அவர்கள்செய்யுந் தவத்துக்கு இடையூறு செய்யவேயவர்கள் நம்மைக்குறி முறையிட, நாம் திருப்பாற்கடலைவிட்டுவந்து அவனைச் சக்ராயுதத்தால் ஹரித்தோம். பின்பு அவனது இரத்தந்தோய்ந்திருந்த சக்ரத்தைக் கழு படி வருணனுக்கு ஆக்யாபித்தோம். அவன் கங்கை - யமுனை - ஸரஸ் என்னு மூன்று நதியையும் அவ்விடத்திலழைத்து அவைகளால் சக்ரத்தி படிந்த இரத்தத்தை அகற்றினான். அன்றுமுதல் அந்தத்தீர்த்தமான திருமுக்குள மென்று பேர்பெற்றது அந்த க்ஷேத்ரத்தி [illegible] அந்த ரிஷிகள் எங்களிருவரையும் திருப்பாற்கடலைவிட்டு [illegible] இந்தக்ஷேத்ரத்தில் ஸேவைசாதிக்கும் படிவேண்டிக்கொண்டார் ... ன்று ப்ரார்த்திக்க, அவ்வாறே வடபத்ரத்தில் சேஷசயனத் த்திருக்கும் பாவனையாக ஸேவைஸாதித்தோம். அதனால் அ வடவேசவரபுரமென்றும் ... வடபெருங்கோயிலென்றும் ... ... அவ்வாறு அதுமுதலாக எம்முடைய ... க்க உன்னுடைய ... கூடியிருந்தோம். இவ்வாறு சென்றபின்பு திரும்பவும் ஆரண்யமாய்ப் புத்தூரென்று ஒரு அதன் ஸமீபத்தில் வேடர்கள் அனேகர் குடிகொண்டு அவ் வூருக்கு அதிகாரிகளாகவிருந்தார்கள். அவ்வேடக்குடியில் மல் வஜ்ரியினிடத்தில் வில்லியென்றும் கண்டனென்றும் இருவர் பிறந்தார்கள். அவர்கள் வலியுள்ளவரானமையால் அவ்வேடக்கா காரர்களாக விருந்தார்கள்.

அவ்வாறிருந்தவர்கள் ஒருநாள் வேட்டையாடப் புறப் ஆரண்யத்திற்குட்புகுந்து நாம் பள்ளிகொண்டிருக்கும் சயனித் திற்குச் சமீபமாக வரும்போது அங்கொரு புலியைக்கண்டு கண்டனென்பவன் அதைத் துரத்திப்போக, அப்புலியான மறைவிற் பதுங்கியிருந்து அவனை ஸமீபத்தில் வரக்கண்டு அவ ந்து கொன்றுவிட்டது. அதையறியாமல் தமையனான வில்லி தம்பியைத் தேடிப்போய்த் தம்பி இறந்து கிடக்கிறதைக்கண்டு கீழ்விழுந்து புரண்டுபுரண்டு மூர்ச்சையாயினான். அவன்கனவில் அப்பா! இவ்விடத்தில் நாம் சேஷசயனத்தில் சயனித்திரு நமக்குக் கோயில் முதலானவைகளைக் கட்டுவித்து நால்வகைக்



(†) வேதக்கோனான பெரியாழ்வார் ஒருநாள் தமது திருநந் வனத்தில் திருத்துழாய்க்கு ‡ கொட்டெடுத்துக் கொத்திக் கிளப்புவராகிற்க, அங்கொரு திருத்துழாய்வேர் மண்ணின்கீழ் பத்தாகாம் பாரதாம்கலாவ பகமேவர்வேஷ கனாக்யோரவேள,

‡ கொட்டு - கிளைகொத்துங் கருவி.

---

[illegible] நித்தியமாகப் பிரதிதினந் திருவிழா முதலியவை நடத்தென்று [illegible]ல; அவனும் ஸ்வாமி! புலியினாலிறந்த என் தம்பியை எழுப்பிக்கொ [illegible] வேண்டிய திரவியங்கள் வரும்வழியுங் காட்டியருளவேண்டுமென்று [illegible] த்திக்க; அதற்கு நாம் உன் தம்பி உயிர்பெற்றெழுவான் நீயுமவனு [illegible] டேகூடி அவனைக்கொன்ற புலி ஓர் குகையிலிறந்துகிடக்கின்றது, அந் [illegible] குகைக்குள்ளிருக்கின்ற அளவிறந்த திரவியங்களை எடுத்துக்கொள்ளுங்க [illegible] ளென்று ஆக்கியாபித்தோம். அவனுங் கண்விழிக்கத் தம்பியும் உயிர்பெற் [illegible] றெழுந்திருக்கக்கண்டு அதிசயமடைந்து ஸந்தோஷத்துடன் தம்பிக்குத் [illegible]மாக நம்மை [illegible]ரவைத் தெரிவித்து அவனுடன் சிலதூரம் போகும்போது [illegible] குகையில் அந்தப்புலியானது அம்புபட்டு இறந்து கிடக்கின்ற [illegible] ஆச்சர்யமடைந்து அக்குகையிலுள்ள அளவிறந்த திரவியங்க [illegible] தகோஷித்து அந்தக்குகையை மூற்றுகையிட்டுக் காவல் செ [illegible] சயனித்திருக்கின்றனரென்று தேடிக்கொண்டு [illegible] இவ்விடத்தில் ஓர் ஆலவிருக்ஷத்தினடியில் மூடிய புதரினிடமாத ஆதலால் அவ[illegible] ஆனந்தமடைந்து அந்த திரவியங்களைக்கொண்டு நமக்கு [illegible], ஸ்ரீமந்மதில், கோபுர முதலியவைகளுங் குறைவில்லாமல் கட்டு வித்து [illegible]வீதி முதலானவைகளும் ஏற்படுத்திப் பின்பு அதையடுத்துக் இவ்வதேசத்திலுள்ள புத்தூரென்னும் ஊரிலிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் ன்றூர்; அவர்களை வருவித்து அதில் குடியேற்றித் திருவாராதனந் திரு விழைவேற்றினவைகளை விபவமாக நடப்பித்துக் குடியேறிய ப்ராமணர் ஆனந்தமடைந்தனர் முன்னிருந்த புத்தூரும் தன்பெயராகிய வில்லியென்ப தும் அவ்விடம் அவ்வூர்க்கு வில்லிபுத்தூரென்றும், பழமையாகவிருந்த க்ஷேத்ரமாதலால் பெரியபுதுவையென்றும் பேர் விளங்கவைத் பார்த்திருக்கையில் திருவிழாமுதலான சிறப்புகளைத்தேவர்களுங் கண்டு அதி ஸ்ரீமந்நா ... செய்வித்துவந்து பின்பு தன் தம்பியுடன் ஸ்ரீவை குந்தத்தையடைந்தான்.

அதனிடத்தில் பட்டர்பிரானாகிய விஷ்ணுசித்தர் உலகத்தவரைத் திருத் டாக்கிய இட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்து ஐந்து வயதிலேயே நித்ய பலதர்மங்களென்று அறிந்து அதுதொட்டு நந்தவனங்கள் வைத்து வளர்த்து வருமவரும் பூமாலைகட்டிச் சாத்திக்கொண்டு பாண்டியனது ஸபையிற்கட்டிய நாம அத்தவைய யறுத்துப் பரமதங்களைக் களைந்து ஸ்ரீவைஷ்ணவசித்தாந்த விருத்திசெய்து அரசன்முதலான ஸமஸ்தரையுந்திருத்தி மற்றவர்களை

யமே கர்க்கடகம் விஷ்ணுபதி க்ஷேத்ரேடௌஷி ஸ்ரீமதி, நக்ஷத்ரேய மனோதவ தேசுதீ திடிவோ வாரே சதுர்த்யாம் திதௌ, கோதாபரா தர பூதேவீம் மஹிமா ஸ்ரீவிஷ்ணுசித்த ஸுதாம்" என்கிறபடியே கலியாப்தம் தொண்ணூற்றெட்டில் நிகழ்ந்த நளவருஷத்தில் கர்க் கடக சூர்யப்ரவேச காலமாகிய ஆடிமாசம் ஆறாந்திகதி சுக்ல பக்ஷத்து சதுர்த்தசி செவ்வாய்க்கிழமைகூடிய பூரநக்ஷத்ரமாகிய சுபதினத்தில் ஸ்ரீபூமிப்பிராட்டியின் அம்சமாய்ச் சகலலக்ஷணசந்நி யன் அதிகவற்புதமான திருவுருக்கொண்டு அமர்ந்து ப்ரகாசிக்க, அவர் கண்டுவிஸ்மிதராய், பின்னையும் தன்னிடையாளான இந்த லக்ஷ்மீ ரத்நத்தை அதிப்ரீதியுடன் தனக்குப் புத்ரியாகவெடுத் துக்கொண்டு "சுரும்பார்குழற்கோதை" என்று திருநாமஞ்சாற் றித் திருமகள்போலே பொலிவுறவளர்த்துவந்தார்.

இங்ஙனமிருக்கையில் இந்நாச்சியார் தமது திருத்தகப்பனாராகிய பெரியாழ்வார் வடபெருங்கோயிலுடையானுக்காகத் திருமாலை கட்டிப்போருகிற விதத்தை அதிக நுட்பமாகக் கவனித்துக் கற்றுச் சில காலத்துக்குமேல் தாமுமவரைத் தொடர்ந்து திருநந்தவனத்துக்குப்போய்ப் பூக்கொய்து () புட்டிலிற்சேர்த்துக்கொண்டுவந்து செண்டுமாலை, குழல்மாலை, முடிமாலை, கிளிமாலை, தொங்கல்மாலை, உனாமாலை, வெற்றிமாலை முதலியனாகிய மாலைகளைத் தகப்பனார் மகிழ்வடையும்படிக் கட்டிக்கொடுத்துவந்து, நாளுக்கு நாள் பெருமான்பக்கல் ப்ரேமையதிகரிக்கப்பெற்று ஆழ்வாரிவ்

() புட்டில் - புஷ்பக் கூடை.

---

யுக் திருத்துழாய்ப்பொருட்டு தமது சேவகையமைத்துச் செந்தமிழ்ப்பாமாலை களைத் தொடுத்துச் சாத்திவருகின்றனென்று திருவாய்மலர்ந்தருளினார்.

பூதேவியார் அநுமேட்டு ஜனந்நமடைந்து எம்பெருமானிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தேவர்கள் முனிவர்கள் பூமாரிபொழிந்து ஸ்துதிக்கவும் ஸ்ரீமந்நாராயணனுடைய திருவுள்ளத் தொடர்ச்சியால் உலகத்திலுள்ள ஜீவாத்மாக்களெல்லாங்கடைத்தேறவும் அனேக அற்புதங்கள் உண்டாகி விளங்கவும் ஸ்ரீவில்லிபுத்தூரிலே விஷ்ணுசித்தராகிய பெரியாழ்வார் வைத்து வளர்த்துவருகின்ற நந்தவனத்திலுள்ள திருத்துழாயின் அடியாகக் கலியுகம்தொண்ணூற்றெட்டுக்குமேற் செல்லுகின்ற நளவருஷத்து ஆஷாடீ சுக்லபக்ஷ சதுர்த்தி செவ்வாய்க்கிழமைகூடிய பூரநக்ஷத்திரத்தில் பூமிப்பிராட்டியார் அம்சமான தாம் அவதாரஞ்செய்து கோடிசூரிய ப்ரகாசம் போலப் ப்ரகாசித்திருந்தார்.



லாத அவசரங்களிலே கட்டிவைத்திருக்கும் மாலைகளையெடுத் துச் சூடிக்கொண்டு இந்த வடபெருங்கோயிலுடையானுக்கு நேரொவ்வா திருக்கின்றேனோ? ஒத்திருக்கின்றேனோ? என்னுஞ் சொல்லினைத்துக், () காரைபூண்டு கூறையுடுத்துச் சூடகமணிந்து தோள்வளை தரித்துக் கைவளைகுலுக்கிக் காலிற் சிலம்பும் பா டகமுமணிந்து அஞ்சனந்தீட்டிக் கோவைச்செவ்வாய் திருத்தி அசைந்தசைந்து அவ்வொப்பனை யழகை அங்குள்ள கண்ணாடி யிலேகண்டு ஹ்ருதயங் குளிர்ந்து அனந்தரங் களைந்து அவை தம்மை முன்னிருந்தபடியே வைத்துவிட்டு வேறுகைங்கர்யத்தி லீடுபட்டிருப்பார்.

இப்படித் தினந்தினமும் நடந்தேறிவருவதைப் பெரியாழ்வா ரறியாதவராகியே புட்டியிலிருக்கும் புஷ்பங்களையெடுத்துக்கொ ண்டு போய்ப் பெருமானுக்குச் சமர்ப்பித்துக் கொண்டிருக்க, அந்த புஷ்பங்கள் பெருமான் திருமேனியில் சாத்தினவளவிலே எங்குமில்லாத நறுமணத்தை வீசத்தலைப்பட்டன; அதைக்கவ னித்த அர்ச்சகரும் திருமுற்றத்தாரும் ஆழ்வாருடைய கைங்கர யத்தின் வாசிதான் இப்படி மணங்கமழ்ந்து போருகிறதென்று சொல்லி அவர் திருவடிகளிலே மிகவும் பக்தியுக்தராயிருந்தார் கள்.

இப்படியிருக்கையில், வடபெருங்கோயிலுடையான் தன்னு நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே இந்த ரஹஸ்யத்தை வெளிகாணச்செ ய்து நாச்சியாருடைய அவதார விசேஷமிருக்கும்படியை யாவரு மறிந் துஜ்ஜீவிக்கலாம்படித் திருவுள்ளம்பற்றி, ஒருநாள் இந்த நாச்சியார் அவனுக்காக வைத்திருந்த மாலைகளைச் சூடிக்கொண்டு கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டிருக்கையில் நினைவுக் கிஞ்சித்து மாறுவிட, அவ்வளவிலே தகப்பனாரான பெரியாழ்வா ரங்கெழுந்தருளிப் பார்த்து வியப்புடைந்து, குழந்தாய்! அழகிது நீசெய்தது, அடிமைக்கவத்தம் விளைவதே! என்று கடிந்து விரை வில் திருநந்தனவனம்புக்குப்பூக்கொய்துவந்து மாலைகட்டிக்கொண் டுபோய்ச்சன்னிதியில் ஸமர்ப்பிக்க, அர்ச்சகர் வழக்கப்படி யம்மா லைகளை எடுத்துச் சாத்தப்போகையில், வடபத்ரசாயி முகத்திருப் பங்கொண்டு சேவைசாதித்தான்; மாலைகளும்பூர்வம்போலே மணங்

() காரை - கண்டாபரணம்.

கமழாதிருந்தன. அதுகண்டு அர்ச்சகர் முதலான கோயிற்பரிகாரத்தார் ‡ விஸ்மிதராய்விட, அன்றிரவில் வடபத்ரசாயி ஆழ்வாருடைய ஸ்வப்நத்தி லெழுந்தருளி ஏதுகாண்! இந்நாளைக்கு நீர் கமழ்க்குச்சித்தியும் மணமில்லை மலர்மாலைகளை வாருந்தீரென்று வினவியருள; ஆழ்வாரும், எந்தையே! வழக்கப்படி வகுத்துவைத்திருந்த நறுமண திருமாலைகளைத் தேவரடிமைச் சிறுபெண் சூடிக்களைவதைக் கண்டனன்; அதனைப் பொறுத்தருள வேண்டுமென்று திருவடிகளைப் பிடித்துக்கொண்டு ப்ரார்த்திக்க, வடபத்ரசாயி ஆழ்வாரைநோக்கி, அழகிதுநீர் சொன்னது, அவளை நமக்குச் "சூடிக் கொடுக்கவந்த சுடர்க்கொடி" யென்றறியீரோ? இனி அவள் சூடிமுடித்துக் கொடுக்குமாலையே நமக்குப் ப்ரியமுற்றதென்றறிந்து கொள்ளுமென்றருளிச்செய்துவிட்டு மறைந்து, சன்னிதி முதலிகளுக்கு மிப்படியே ஸ்வப்நமருளிவிட்டுப் போயினான்.

அனந்தரம் ஆழ்வார் நித்ரைகலைந்தெழுந்து விஸ்மிதராயிருக்கையில், சன்னிதிகாப்போரோடுவந்து தங்கள் ஸ்வப்நவிருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்ய, இவருந்தாம்கண்டதையவர்களுக் கறிவித்து, இதனை யாராயக்கடவோமென்று, அன்றேபூத்துவந்த கட்டியபுஷ்பங்களை நாச்சியார் திருமுன்புவைத்து இவற்றைச் சூடிக்கொடுக்கவேண்டுமென்றிரக்க, அவ்வண்ணமே நாச்சியாருஞ்செய்ய, அம்மாலைகளை யெடுத்துக்கொண்டுபோய்ச் சுவாமிக்குச் சமர்ப்பித்தார்; அவைதம்மை அர்ச்சகரேற்றுஞ்சாத்தப் போகையில் வடபத்ரசாயி, முன்னாள் திருப்பிக்கொண்ட தன்னுடைய திருமுகத்தை அக்காள் செவ்வேதிருத்தித் திருக்கண்களை மலர்த்தி முத்தனைய வெண்முறுவல்செய்து மகிழ்வெய்திச் சேவை தந்தருளினான். அப்போது அர்ச்சகரும் கோயில் பரிகாரத்தாரும் ஆச்சர்யமடைந்து நாச்சியார் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்து க்ருதார்த்தராயினர்கள்; ஆழ்வாரும் பெருக்களிப்படைந்து தம்முடைய திருமகளாரை அருட்கண்களால் நோக்கி ஆனந்தபாஷ்பம் பெருகப் புளகிதகாத்ரராய்த் திருவாய் திறந்து, என்னை ஆண்டாளிவளே!! என்றருளிச்செய்து, நாளுக்குநாள் ப்ரீதிமேற்பட்டு, இவள் பெண்ணைகொல்! நிலமாமகள்கொல்!

‡ விஸ்மிதராய் - ஆச்சரிய முற்றவராய்.



திருமகள் கொல்! இங்ஙன மவதரித்திருப்பதென்று விஸ்மயப்ரதிபத்தி செய்துபோந்தார்.

அதன்பின்பு, இந்நாச்சியார் எட்டுப்பெண்களோடு வந்து தெள்ளியமணலால்சிறுவீடுகட்டி விளையாடுகையில் அழகியமணவாளன் பாலயனாய்வந்து திருவடியாலதைச் சிதைத்தோட "இன்றுமுற்று முதுகுநோக விருந்திழைத்த விச்சிற்றில்" "தீமை செய்யுஞ் சிரீதரா வெங்கள் சிற்றில்வந்து சிதையேலே" என்றுபாசுரமிட்டு, அந்த அவசரம் நீங்கினவாறே அவனுடையகல்யாணகுணத்திசயங்களைவாயினாற்பாடி மனத்திலுஞ்சிந்திப்பதுவே காட்டுக்கமான ப்ராவண்யத்தால் "அவனை விட்டகன்றுயிராற்றலில்லா" என்கிறபடியே பெரிய † அபிநிவேசத்தைப் பண்ணிக்கொண்டு வடபெருங்கோயிலுடையானோடேதழுவி முழுகிப் பரிமாறவேணுமென்றுசெல்ல; அர்ச்சாவதார சமாதியாகையால் நினைத்தபடிக் கவன் முகங்காட்டாமையாலே மிகவுநொந்து, அவனோடு பரிமாறப்பெற்றாருண்டோ இல்லையோ வென்றாய்ந்து பார்த்துத், திருவாய்ப்பாடியில் பிறந்தபெண்கள் யதாமனோரதம் அவனோடனுபவிக்கப் பெற்றதை யறிந்து, அதுவுங் காலாந்தரத்திலாகையாலே அதற்குத்தவப் பேற்றிலோமென்றாறி, அவனுலாவிப்போன அடிச்சுவடும் அவனும் பெண்களுமாய்க்குளித்துத்திளைத்த யமுனையும் அவனெடுத்த கோவர்த்தனமும் கிடந்தவாயில் அவற்றைப்போய்க் கண்டாகிலுந் தரிப்போமென்று பார்த்து, அதற்குந் தனக்குப் போகபல மில்லாமையாலே அவற்றையநுசந்தித்துக் காலாழ்ந்து கண்சுழன்று நெஞ்சழிந்து () அவஸந்நையாய், ஸ்ரீஜநகராஜன் திருமகளைப்போலே வில்லென்றொரு அவதி பெறுதலும் நப்பின்னை நங்கையைப் போலே ஏறென்றொரு அவதி பெறுதலும் செய்யப் பெறாமையாலே தளர்ந்து, இனி உப்புமுபாய மேதென் றாராயப்புக்கு, க்ருஷ்ணனும் பெண்களுமாய்க் குரவை கோத்து அதிரவம் செல்லா நிற்க, ப்ரீதியாலே குமிழ்நீருண்டு இனி நற்கேடுகேடவொன்றுதென்று அந்தரவம்மாறுகைக்காக, அவனந்தப் பெண்களைப் பிரிந்து ஒளிக்க "துஷ்டகாளியதிஷ்டாத்ர க்ருஷ்ணோ ஹமிதிசாபரா" என்கிறபடியே க்ருஷ்ண

† அபிநிவேசம் - அபிப்ராயம்.

() அவஸந்நையாய் - மூர்ச்சித்தவளாய் (மெய்மறந்தவளாய்).

விரஹத்தைச் சகியாமல் அவனையே யநுகரித்துத் தரித்தார்களென்று சிலதார்மீகர் ப்ரசங்கிக்கக் கேட்டு அவர்களைப்போலே தாமும் மார்கழி நீராட்டமென்கிற நோன்புசெய்யப் புகுந்தார்.

தாம் ப்ராம்ஹணியா யிருக்கையிலும் (யாகத்திலே தீக்ஷித்தவர்கள் ‡ தேவதத்தாதி நாமங்களைத் தவிர்ந்து அது முடியுந்தனையும் யஜமானனென்றும் அத்வர்யுவென்றும் ஹோதாவென்றும் பெயர்கள் வஹித்திருப்பதுபோல) ஸ்ரீ வில்லிபுத்தூரைத் திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களை இடைப்பெண்களாகவும், தாம் அவர்களி லொருத்தியாகவும், வடபெருங்கோயிலே நந்தகோபன் திருமாளிகையாகவும், உள்ளுறங்குகிறவனை க்ருஷ்ணனாகவும் அநுசந்தித்துத், திருவாய்ப்பாடியில் தம்முடைய திருவுள்ளங் குடிபோய்ப் † பாவநப்ரகர்ஷத்தாலே 0 அநுகாரம் முற்று, இடைப்பேச்சும் இடை நடையும் இடைமுடியுமுடையராய், நிகில உபநிஷத்ஸாரமான (‡) திருப்பாவை முப்பதும் பாடியருளி நோன்பு நோற்றும், நாச்சியார் திருமொழி யென்னும்

‡ அதாவது யாகஞ்செய்யப்புகுந்தோர் அதுதொடங்கி முடியுமளவும் தங்களுக்கு வேறுபெயர் வைத்துக்கொள்வது விதியாதலின் அதுபோலவே நாச்சியாருஞ் செய்யத் துணிந்தார். † பாவநப்ரகர்ஷத்தாலே - மேன்மையானபாவனையாலே. 0 அநுகாரம் - பாவனை.

(‡) மற்றொருபிரதியில்:—

மார்கழித் திங்களென்று தொடங்கித் திருப்பாவை முப்பது பாட்டாகப்பாடி எம்பெருமான் தம்மையணைதற்கு உபாயஞ் செய்யவேண்டுமென்று மன்மதனை வேண்டி அதுதோன்ற தையொரு திங்களென்று தொடங்கி மேகத்தைத் தூதுவிடல், திருமாலிருஞ்சோலைப் பெருமானை வழிபடல், மால்செய்வகையொடு மாற்றமியம்பல், திருவரங்கத்துச் செல்வனைக்காமுறல், சீதரனிருந்துழிச்சேர்த்தவேண்டல், அழகியமணவாளன் அணிபொருள்கொண்டு அவலந்தீர்ப்பீரென்றல், ப்ருந்தாவனத்துப்பரந்தாமனைக்காணல், எம்பெருமான் தன்னைக்கனவில் பாணிக்கிரஹணம்பண்ணல் என்று மிவைகளை யமைத்துத் தனித்தனிப் பத்துப்பத்துப் பாடலாகப் பாமாலைபாடி ஸ்ரீரங்க நாதனிடத்தில் அளவிறந்த காதல் கொண்டு இருந்தார்.

ஒருநாள் இவர் பெரியாழ்வாரைப்பார்த்து அடியேன் ஸ்ரீரங்கநாதனை ஸேவிக்க விரும்பினேனென்று சொல்ல ஆழ்வாரும் அதை வடபெருங்கோயிலானுக்கு அறிவித்து அவரது ஆஜ்ஞைப்படி கோதையாரைப்



ப்ரபந்தத்தை யருளிச்செய்தும் [திருத்துழா யானது பரிமளத்தோடே கூடி முளைக்குமாபோலே ஆஜந்ம (பிறந்ததுமுதல்) பால்ய யௌவநாவஸ்தைகள்தோறும் பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளையுடையராய்க்கொண்டு] அவன் விஷயமான காமபஜநாதிகளைப்பண்ணிவாழுங்காலத்திலே "பதிஸம்யோக ஸுலபம்வயோத்ருஷ்ட்வாசமேபிதா, சிந்தார்ணவகதః பாரம் நாஸஸாதாப்லவோயதா" என்கிறபடியே ஸ்ரீஜனகராஜன் பிராட்டிக்குப் பர்த்ருஸம்ஸ்லேஷ யோக்யமான பருவம் நெருங்கின வளவிலே, சாகரத்தில் நழுகின ஒருவன் கரையேறுவதற்கு ஓடத்தை யபேக்ஷித்துநையுமாபோல, இந்த பொற்கொடிக்கேற்ற ஓர்பதியை நாம் கண்டு கொடுக்கக் காலமெங்ஙனங் கூறுமென்று சிந்தார்ணவகதனு (எண்ணமாகிய கடலுளழுந்தினவனு) பின்னைத் தொத்துப் பெரியாழ்வாரும் இந்த நாச்சியாருடைய விவாஹயோக்ய பருவத்தைக் கண்டு வ்யாகுலாந்தః கரணராக, அவர்கருத்தை யறிந்த நாச்சியார் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் நான் வாழகில்லேன்" என்ன; ஆழ்வார்பின்னை எங்ஙனே யென்ன; அதற்கு "மற்றொருவர்க்கென்னைப் பேசவொட்டேன் மாலிருஞ் சோலையெம்மாயவற்கல்லால்" என்கிறபடியே அவன் முகத்தன்றி விழியேனென்ன; ஆழ்வார், நூற்றெட்டுத் திருப்பதியி னெம்பெருமான்களில் நீரா

பொற்சிவிகையி லேற்றிக்கொண்டு ஸ்ரீரங்கத்தைக்குறித்துத் தென்திருக்காவேரிக்குச் சமீபத்தில் எழுந்தருளும்போது நாச்சியார் இதுதொட்டு இறங்கி நடந்துபோகவேண்டுமென்றுவினைக்க எம்பெருமான் நாச்சியாருள்ளத்தையறிந்து, நடந்தால் வருந்துவாளென்று தமதருளினால் அந்த க்ஷணமே யொருவருமறியாதபடி ஸந்நிதிக்கு வரும்படித் திருவுளங்கொண்டருள நாச்சியாரும் அப்படியே ஸந்நிதிக்கெழுந்தருளி அழகிய மணவாளனைச் சேவித்து ஸமீபத்தில் வீற்றிருந்தார். சிவிகையெடுக்கின்றவர்கள் பாரந்தோன்றாமலிருப்பதறிந்து அதிசயித்து ஆழ்வாரிடத்து விண்ணப்பஞ்செய்ய ஆழ்வாருஞ் சிவிகையைத்திறந்து திகைப்படைந்து அந்தக்ஷணமே விரைந்து ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியிற்சென்று கண்களில் நீர்வடியநின்று எம்பெருமானே எமது அரும்பொருளாகிய கோதையாரைத் தேவரீரே மாயஞ்செய்து மறைத்ததாகத்தோன்றுகின்றது; அவரைக்காட்டி அடியேனையும் ரக்ஷித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க; எம்பெருமானும் ஆழ்வாரே! உமது புத்ரியாரை யிதோபாருமென்று காட்டியருள அதுகண்டு மகிழ்ந்து ஸ்வாமி! தேவரீர் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளிப் பரமபாகவதர் முதலிய பலருங் கண்டுகளிப்படையக் கோதையாரைப் பாணிக்ரஹணம் பண்ணியருளவேண்டும்; அப்போது அந்த மணவாளக்கோலத்தை

ருக்கு வாழ்க்கைப் படுகிறீரென்ன; அதற்கு அவ்வவருடைய குணாதிசயங்களைக் கீர்த்தித்தருளினால் குறிப்பிடுகிறேனென்ன; ஆழ்வாரும் வடபெருங்கோயிலுடையான் வைபவமடியாகப்பாண்டிய மண்டலத்திலும், வடதிருவேங்கடந்தொடங்கித் தொண்டமண்டலத்திலும், தென்றிருவேங்கடந் (திருமாலிருஞ்சோலைமலை) தொடங்கி சோழமண்டலத்திலு முள்ள திருப்பதியிலெம்பெருமான்களின் வைபவங்களையெல்லாம் அருளிச்செய்தார்.

நாச்சியார் இவற்றைக்கேட்டு ஆனந்தபாஷ்பந்துளிக்கப்புளகீக்ருத காத்ரராய்த் தென்னரங்கத் தின்னமுதருடைய குழலழகு வாயழகு கண்ணழகுகளை மனதில்நாட்டி வ்யாகுலராய் மாலேறி மோஹித்து "வந்தானோ திருவரங்கன் வாரானோ வென்றென்றே வளையுஞ்சோரும்" என்கிறபடியே அழகியமணவாளனையே காமித்திருக்க, அவனும் நாச்சியாருடைய ஸ்வப்நத்தில் வந்து பாணிக்ரஹணம் பண்ணிப்போக, அந்த ஸ்வப்நவைபவத்தாலுண்டான களிப்பு உள்ளடங்காமல் சிந்தையைத் தூண்ட "நாளைவதுவைமணமென்று நாளிட்டுப், பாளைகமுகு பரிசுடைப்பந்தற்கீழ், கோளரிவாமனன் கோவிந்தனென்பானோர், காளைபுகு

யடியேனுங் கண்குளிரக்கண்டு ஆனந்த மடையவேண்டும் என்று ப்ரார்த்தித்து ஸாஷ்டாங்கமாகச் சேவித்து நின்றார்.

அப்பொழுது அழகியமணவாளனென்கிற எம்பெருமான் ஆழ்வாரைக் கடாக்ஷித்து உமது இஷ்டப்படியே பங்குனியுத்திரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வருகிறோம் நீர் கோதையாருடன் முன்னதாகப் போமென்று ஆஜ்ஞாபிக்க விடைபெற்றுப் பொற்சிவிகையில் கோதையையெழுந்தருளப்பண்ணித் தாமும் வேறு சிவிகையிலெழுந்தருளி அநேக ஸம்ப்ரமங்களுடன் இடையிலுள்ள திவ்யதேசங்களிலெழுந்தருளிய எம்பெருமானையடிபணிந்து ஸ்ரீவில்லிபுத்தூரையடைந்து அங்குள்ளவர்களெதிர்கொள்ள வடபத்ரசாயியின் ஸந்நிதிக்கெழுந்தருளி எம்பெருமானைச் சேவித்துத் தமது திருமாளிகைக்கெழுந்தருளினார். பின்பு அழகியமணவாளர்பங்குனியுத்திரத்தில் கோதையாரைப்பாணிக்ரஹணஞ்செய்துகொள்ள எழுந்தருளுவதான சுபச்செய்தியை அந்நகரத்திலுள்ள பலர்க்கும் அறிவிக்க அனைவரும் கேட்டுமகிழ்ந்து ஆழ்வார்திருமாளிகைக்கு வந்து கோதையாரையும் ஆழ்வாரையும் பலமுறை ஸேவித்து ஸ்தோத்ரஞ்செய்து எங்களது கண்களினால் ப்ரம்மாதி தேவர்களுக்குங் கிடைத்தற்கருமையாகிய ஸ்ரீமந்நாராயணனது மணவாளக் கோலத்தைச் சேவித்து க்ருதார்த்தர்களாகும்படிச்செய்யுமுதவிக் கென்ன பிரதியுபகாரஞ்செய்வோ



தக் கனாக்கண்டேன்" என்றும், "மத்தளங்கொட்ட வரிசங்கம் நின்றூத, முத்துடைத்தாமநிரை தாழ்ந்தபந்தற்கீழ்" "பூப்புனை கண்ணிப்புனிதனோடென்றன்னைக், காப்புநாண்கட்டக் கனாக்கண்டேன்" என்றும், "மந்திரக்கோடியுடுத்தி மணமாலை, அந்தரி சூட்டக் கனாக்கண்டேன்" என்றும், மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக், கைத்தலம் பற்றக்கனாக்கண்டேன்" என்றும், "காய்சின மாகளிறன்னானென் கைப்பற்றித், தீவலஞ்செய்யக்கனாக்கண்டேன்" என்றும், "நம்மையுடையவன் நாராயணன் நம்பி, செம்மையுடைய திருக்கையாற்றாள்பற்றி, அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன்" என்றும், "அரிமுகனச்சுதன் கைமேலென் கைவைத்துப், பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன்" என்றும், "மங்கல வீதி வலஞ்செய்துமணநீர், அங்கவனோடு முடன்சென்றங் கானைமேல்" "மஞ்சனமாட்டக்கனாக்கண்டேன்" தோழீ என்றும் பாசுரமிட்டுக்கொண்டு, ஒளியரங்கத்துளோங்கு மொள்யுளாரான அணியரங்கத் தம்மானுக்கே தீர்ந்த காதலை யுடையராகவிருந்தார்.

அவ்வளவில்ஆழ்வார் கோதைக்குத் தக்கவரன் கோயிற்பிள்ளைதானென்றுகருதி இதனைக்கூடும்படி எங்ஙனேயென்று சிந்தை

மென்று நானாவிதமாக வுவந்து விடைபெற்றுத் தங்கள்தங்கள் இரகத்திற்சென்று தங்கள் தங்கள் வீதிகளில் மலர்ப்பந்தல் சித்திரக்கொடி மகாதோரணம் முதலாகிய அலங்காரங்களைச் செய்து மாளிகை முகப்புகள்தோறும் மலர் மாலை முதலிய மாலைகளைத்தூக்கி வாழை கமுகு முதலியவைகளை நாட்டிப் பூரணகலசங்கள் முகவிளக்குகள் கண்ணாடிகள் முதலிய அஷ்டமங்களங்களை நிரப்பித் தாங்கள்தாங்களும் ஆடையாபரண முதலிய அலங்காரங்களைச் செய்து கொண்டும் ப்ராம்ஹண போஜனமுதலிய கருமங்களைச் செய்துகொண்டும் பங்குனி யுத்திரம் எப்போது வருமென்று எதிர்பார்த்திருந்தார்கள். இவ்வாறிருக்க எம்பெருமானருளியபடி பங்குனியுத்திரத்தில் பெரியாழ்வார் தமது திருமாளிகையை யலங்கரித்து விவாஹஞ் செய்தற்கு வேண்டிய உபகரணங்களை யெல்லாம் நிரப்பிப் பேரிகை மத்தளந் தாள முதலிய மங்கள வாத்தியங்கள் கோஷிக்கவும் நாடகக்கணிகையர் நடிக்கவுங் கீதம் பாடவும் அழகியமணவாளரை யெதிர்நோக்கியிருந்தார்.

பின்பு ஸ்ரீமந்நாராயணன் ஆக்ஞைப்படி ப்ரம்ஹா ருத்திரன் தேவேந்திரன் முதலான தேவர்களுங் காந்தர்வர் கிம்புருடர் கின்னரர் சித்தர் முனிவர் முதலான பதினெண் கணத்தாரும் ஸ்ரீவில்லிபுத்தூரை

...ளச்செய்தருளத், திருவரங்கச் செல்வனார் அவர் ...கதி லெழுந்தருளி, ஆழ்வீர்! உம்முடைய புத்ரியாகிய கோதையை நம்முடைய திருவரங்கந்திருமுற்றத் தேறக்கொண்டு வாரீர்; நாமே தகுதியாக பாணிக்ரஹணம் பண்ணுகிறோமென் றருளிச்செய்தபோக, ஆழ்வாரும் நிர்ப்பரரா யிருந்துவிட்டார்.

அவ்வளவிலே திருவரங்கச்செல்வனார் திருமுற்றத் தடியார்க ளைக்கடாக்ஷித்து நம்முடையசத்ரசாமரதாலவ்ருந்தாதி சகலபரிஜன பரிச்சதங்களுடனே ஸ்ரீவில்லிபுத்தூர் சேறச்சென்று விஷ்ணுசித்த ருடைய திருமகளாரான சூடிக்கொடுத்தாளை அழைத்துக்கொ ண்டு வாருமென்று பவளச்செவ்வாய் திறந்தருளிச் செய்ய; அவர் களும் நியமனப்படியே ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று ஆழ் வாரைக்கண் டடிபணிந்து நம்பெருமாளருளப்பாடிட்டபடியை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் அதிப்ரீதியாய் ஆச்சர்யப்பட்டு வடபெருங் கோயிலுடையான் திருவடிகளில் விண்ணப்பஞ்செ ய்து விடைகொண்டு, ஆண்டாளை மணிப்பல்லக்கி லெழுந்தருளு வித்துக்கொண்டு ஸ்ரீவல்லபதேவ பாண்டியனுஞ் செல்வநம்பியும் மற்றுமுள்ளவர்களுங் கூடிச்சேவித்துக்கொண்டுவர அதிவாத்ய

யடைந்து ஆழ்வாரது திருமாளிகையிற்சென்று கோதையாரையும் ஆழ்வாரையும் வணங்கிப் பலவிதமாகப் புகழ்ந்து கோதையாரை அலங் காரஞ்செய்வித்து வடபத்ரசாயியின்கோயிலே அலங்கரித்து சேவித்திருந் தார்கள். இவ்வாறிருக்க கோதையார் அழகிய மணவாளனை இன்னும் எழுந்தருளக் கண்டேனில்லையே யென்செய்வேனென்று மனமுருகிப் பெரிய திருவடியைக்குறித்து ஸ்தோத்திரஞ்செய்ய அவர்வந்து எதிர் நிற்க அவரைநோக்கி என்னுயிர்த் தலைவனாகிய ஸ்ரீரங்கநாதனை நீர்போ யழைத்து வரவேண்டும்; அப்படிச்செய்தால்நாமும் அவரு மிருக்கின்ற ஆல யத்தில் நீருமிருப்பீர் என்றுசொல்ல; அதுகேட்டு இதோ அவ்வாறே செய் கின்றேன் என்று அக்ஷணமே ஸ்ரீரங்கத்திற்குப் போய் ஸ்வாமியை சேவித்துத் தேவரீர் இன்னுமலைக்கணம் எழுந்தருளத்தாழ்ந்தால் கோ தையார் உயிர் தரியாரென்று விண்ணப்பஞ்செய்ய; அது கேட்டருளி எம் பெருமான் அவர் திருத்தோள்களி லாரோகணித்துக்கொண்டு ஸ்ரீவில்லி புத்தூருக் கெழுந் தருளினார். அதுகண்டு ப்ரம்மாதி தேவர்களும் மற்றவர் களும் ஆனந்த பரவசராய்த் தண்டன் ஸமர்ப்பித்து ஸ்தோத்திரஞ் செய்ய ஸ்வாமியுங் கருடனை விட்டிறங்கி வடபெருங்கோயிலுக் கெழுந்தருளப் பெரியாழ்வார் கோதையாருடன் வந்து எம்பெருமானை யடிபணிந்து என் புத்திரியாகிய கோதையாரைத் தேவரீருக்குக் கொடுத்தேனென்று தாரை



கோஷத்துடனே அனைவருங்காணும்படி நிசுளாபுர மென்கு உறையூரிலே வந்துதங்க; அப்போது அழகியமணவாளன் சத் சாமராதி யலங்காரத்தோடு தீர்த்தப்ராசாதங்களனுப்பி வைக்க அவைகளை ஆழ்வாருந் திருமகளாரும் அதிப்ரீதியுடன் ஸ்வீகரித் துத் தத்சேஷத்தை மற்றவர்களுக்கு ப்ரசாதித்து அங்கிருந்தும் புறப்பட்டுத் திருவரங்கன் திருப்பதியுள் எழுந்தருளினவாறே சூடிக்கொடுத்தாள் வந்தாள்! சுரும்பார்குழற் கோதைவந்தாள்! ஆண்டாள் வந்தாள்! ஆழ்வார் திருமகளார் வந்தார்! திருப்பாவை பாடிய செல்விவந்தாள்! தென்னரங்கந்தொழுந்தேவி வந்தாள்! என்று பலசின்னங்கள் பரிமாறவெழுந்தருளுவித்துக்கொண்டு அழகிய மணவாளன் திருமண்டபத்துட்சென்று நின்று திருப் பல்லக்கின் பட்டுத்திரையை வாங்க, அப்போதே நாச்சியார் அனை வருங்காணும்படி, உகந்தியுத்த பட்டுச்சேலையும் பருத்தசெங்கழு நீர்மாலையுந் திருநுதற்கஸ்தூரிகாமமுங் கயல்போல்பிளிர்ந்துகாதள

வார்ந்து விவாஹோத்ஸவத்துக்கு வேண்டிய சடங்குகளைச் செய்விக்க எம் பெருமானுங் கோதையாருக்குத் திருமங்கலிய தாரணஞ் செய்தருளினார். அதுகண்டு தேவர்கள் புஷ்பமாரிபெய்தும் முனிவர்களாசீர்வதித்தும் ஆன ந்தபரவசத்தரா யிருந்தார்கள். திருக்கலியாணத்தை சேவித்த ஸ்ரீவைஷ்ண வர்கள் முதலிய பலரும் கண்களித்தும் மனமகிழ்ந்தும் ஆத்ம லாபத்தை யடைந்தவர்களா யிருந்தார்கள். சுமங்கலிகள்மங்களம்பாடவும் மற்றைச்சட ங்குகள்முழுதும்முடிக்கவும் எம்பெருமான்நாச்சியாருடன்ஸகலஸம்ப்ரமங்க ளோடு வெள்ளையானையின்மேல் எழுந்தருளி ஊர்கோலம் வந்தருளித் திருக்கல்யாணத்தை சேவிக்கவந்த தேவர் - முனிவர் - பாகவதர் - முதலிய யாவருக்கும் அனுக்கிரஹஞ்செய்து விடைகொடுத்தருளிப் பெரியாழ்வாரை நோக்கி ஆழ்வாரே! நீர் நமது மாமனாராகக்கடவீரென்று நியமித்து ஸ்ரீரங் கத்துக்கு வாருமென்று திருவாய் மலர்ந்தருளிச் சூடிக்கொடுத்தநாச்சியாரா கிய கோதையாருடன் திருவரங்கம் பெரிய கோயிலுக் கெழுந்தருளினார்.

பின்பு ஆழ்வாரும் வடபத்ரசாயியை சேவித்து அங்கு நின்றும்புறப் பட்டு ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளி யெம்பெருமான் சந்நிதியிற்சென்று தண்டன்ஸமர்ப்பித்துக் கைகுவித்து ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு நிற்க அழகியமணவாளன் பெரியாழ்வாரை நோக்கி நீர் இவ்விடத்தில் ஒரு கோயில்கட்டி ஓர் ஆலயத்தில் நம்மையுங் கோதையையுங் கருடனையும் எழுந்தருளப்பண்ணி ஆராதனஞ்செய்துகொண் டிருமென்று ஆக்ஞாபித்த ருள; அந்தப்படியேகட்டுவித்து அதில் எம்பெருமான்முதலாக மூவரையும் எழுந்தருளப்பண்ணி இந்தலீலாவிபூதியில் - (௮௫). - ஸம்வத்ஸரம் எம்பெ ருமானை ஆராதித்துக்கொண்டு பெரியாழ்வார் பின்பு சூடிக்கொடுத்தநாச்சி யார் முன்னிலையாகத் திருமந்த்ரத்தை யோதி ஸ்ரீமந்நாராயணன [illegible] கலை யடைந்தார்.

வோடிய கடைக்கண்விழியும் ப்ரகாசிக்கச் சிலம்பார்க்கச் சீரா
வளையொலிப்ப அன்னமென்னடைகொண்டு அணியரங்கத்தப
மான் திருமுன்பேசென்று கண்களாரக் கண்டுகளித்துக் கேச
நம்பியைக் கால்பிடிப்பாளென்னும் பேர்பெற்று உள்ளேபுகுந்து
நாகபர்யங்கத்தை மிதித்தேறித் திருவரங்கச்செல்வனைச் சேர்ந்து
அவன்றிருவடிகளிலே யந்தர்ப்பவித்தருளினார்.

அப்போது ஆழ்வாருஞ் செல்வநம்பியும் ஸ்ரீவல்லபதேவப
ண்டியனும் மற்றவரும் விஸ்மயப்பட்டிருக்கத், திருவரங்கச்செல்வ
னார் ஆழ்வாருக்கருளப்பாடிட்டு, க்ஷீரசமுத்ர ராஜனைப்போலவும்
ஸ்ரீஜனகராஜனைப் போலுங், கும்பாண்டன் தொடக்கமானவர்க
ளைப்போலவும், நீர்நமக்கு † ஸ்வசுரராய் விட்டீரென்று உவப்
புடனருளிச்செய்து ஸ்ரீவிஷ்ணுசித்தரை எப்போதும் நமருகி
லிருப்பதுபோல நீரும்ஸ்ரீவில்லிபுத்தூருறைவான்பொன்னடியைப்
பூண்டு வாழக்கடவீரென்று திருமாலை திருப்பரிவட்டந்தீர்த்தமும்
ஸ்ரீசடகோபனையும் ப்ரசாதித்து விடைகொடுத்தருள, ஆழ்வார்
அதிப்ரீதியுடனுந் திருமகளாரைப்பிரிய நேரிட்டதுக்குத்துடனும்
ஸ்ரீவில்லிபுத்தூருக் கெழுந்தருளிப் பூர்வம் போலே வடபெருங்
கோயிலுடையானுடைய கைங்கர்யத்திலீடுபட்டு, ஆண்டாளுடைய
திவ்யமங்களவிக்ரஹத்தை யெழியருளப்பண்ணிவைத்து ஆண்
டாளையேத்யானித்துக்கொண்டு எண்பத்தைந்தாவது திருநட்சத்
மளவும் எழுந்தருளியிருந்து அனந்தரம் நித்யவிபூதியைத் திரு
ள்ளம் பற்றினார். நாச்சியார் அதிமானுஷவிக்ரஹமாக வெழுந்த
ளியிருந்தது பதினாறு திருநக்ஷத்ரம்.

### திருநக்ஷத்ரத் தனியன்.

கர்க்கடேபூர்வபல்குன்யாம் துளஸீகாநநோத்பவாம் பாண்ட
யே விஶ்வம்பராங்கோதாம்வந்தே ஸ்ரீரங்கநாயகீம்.

ஶாஸிமாஸிபாண்ட்யபுவிபூர்வபல்குநீகயோதுலஸீவநாந்
ராத், தயதாமுதாரகுணரங்க நாயகப்ரியவல்லபாம்வஸு மதிரு
பாஸ் மஹே.

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீ ஆண்டாள் திருவவதாரவருஷம் ௪௮௯௪-க்குச்ச
டான ப்ரம்மாதி வருஷம்.

† ஸ்வசுரர் - மாமனார்.

# ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்.

## தனியன்கள்.

திருவரங்கப் பெருமாளரைய ரருளிச்செய்த

இருவிகற்பநேரிசைவெண்பா.

மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்—உற்ற
திருமாலை பாடுஞ்சீர்த் தொண்ட ரடிப்பொடியெம்
† பெருமானை யெப்போதும் பேசு.

மண்டங் குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த்
தொண்ட ரடிப்பொடி தொன்னகரம்—வண்டு
திணர்த்தவயற் றென்னரங்கத் தம்மானைப் பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த வூர்.

"சோளக்ஷிதௌ தநுஷி மாஸிமஹேந்த்ரதாரே, யஃப்ராது ராஸமுராஜித் வநமாலிகாம்ஶஃ, ரங்கேஶகேளிஸுகமூர்த்வ விகந்த்விஜேந்த்ரம், பக்தாங்க்ரிரேணு மநகாத்மகுணம் ப்ரபத்யே" என்கிறபடி சோழதேசத்தில் மார்கழிமாசம் கேட்டை நக்ஷத்ரத்தில் எம்பெருமானுடைய வனமாலாம்ச ஸம்பூதராய் மண்டங்குடியிச் சோழிய ப்ராம்ஹண வம்ஸத்தி லவதரித்தருளி நம்பெருமானுடைய கல்யாணகுணங்களி லாசக்தியுடையவரும் நிர்தோஷமான ஆத்மகுணங்களையுடையவருமான ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வாரைச் சேவிக்கிறேனென்னும் "தத்ரோதபூத்பாகவதாத்விஜேந்த்ராத் மாஹேந்த்ரபேமாஸிச மார்க்கஶீர்ஷே, ஸ்ரீவிப்ரநாராயண நாமதேயஃ முராரிவக்ஷோ வநமாலிகாம்ஶஃ" என்கிறபடி சோழதேசத்தில் மார்கழிமாசங் கேட்டைநக்ஷத்ரத்தில் எம்பெருமானுடைய வனமாலாம்சராய் ப்ராம்ஹண ஸ்ரேஷ்டரான விப்ரநாராயணரென்கிற ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் அவதரித் தருளினாரென்றும் இவருடையஅவதார விசேஷத்தைத் திவ்யஸூரி சரிதையிற்சொல்லிற்று.

† "பெம்மானை" என்று பாடாந்தரம். இதன்படி இஃது இரண்டாமடியிறுதி தனிச்சொற்பெற்று மூன்று விகற்பத்தால்வந்த இன்னிசை வெண்பா.

இவர் ப்ரபாவ மிருக்கும்படி எங்ஙனே யென்னில் "ததோ மஹாந் ஸ்ரீமதி சோளதேசைகவேஷாயாஸ்தடவீமதி கஸ்மிந், க்ராமேஸ்தி மண்டங்குடி நாமதேயோ தத்ராபவேத ஸப்தஸஹஸ்ராநி விப்ரா:, ருக்வேதிந: கேசநபூஷாபி ரேந்த்ரா: கேசித்யஜுர்வேத விதோமஹாந்த:, ஆங்யேபி ஸாமஸ்வதி காநபாண்டா: தங்வந்தி பத்ரோர்த்வ விகாநிவாஸம்" என்கிறபடி திருக்காவேரிதீரத்தில் சம்பத்துநிறைந்த திருமண்டங்குடி யென்கிற அக்ரஹாரத்தில், ருக்வேதிகளும் யஜுர்வேதிகளும் சாமவேதிகளுமாக நிறைந்திருந்த எழுநூறு திருமாளிகை ப்ராம்ஹணருள் சிரேஷ்டரான வேதவிசாரத ரென்னுந் திருநாமத்தை யுடைய முன் குடுமிச்சோழியர் புத்ரப்பேறுவேண்டி யாதவாத்ரிக்குப் பத்னீ சஹிதராய்ச் சென்று திருநாராயணனை யடிபணிந்து ப்ரார்த்திக்க, அவ்வெம்பெருமானுங் கடாக்ஷித்தருள, தத்பத்னீ கர்ப்பவதியாய் "தேஹாஸ்ரீமராதுத்தரே ப்ரபவநாம்ந்யப்தே கலௌமாஸகரே, சாபக்ராஹிணி பூமிஸுநுதிவஸே ஜ்யேஷ்டாபிதே ஸ்ரீமதி, ருக்ஷக்ருஷ்ண சதுர்த்தயீதிதியுதே பக்தாங்க்ரிரேணுஸ்ஸுதீ:, ரங்கேசபாங்க்ரி ஸரோருஹைக ஹ்ருதய: ப்ராபாவதாரம்புவி" என்கிறபடியே கலியாப்தம் இருபத்தெட்டுக்குமேல் ப்ரபவ வருஷம் மார்கழி மாசங் க்ருஷ்ணபக்ஷத்து சதுர்த்தசி செவ்வாய்க்கிழமைகூடிய கேட்டை நக்ஷத்ரமாகிய சுபதினத்தில் ப்ரசவிக்க, எம்பெருமானுடைய வனமாலாம்சரான இவ்வாழ்வாரவதரித்தருளினார். நம்பெருமாளிவரை ஜாயமானகடாக்ஷத்தாலே அமலங்களாக விழித்தருள, மாதாபிதாக்கள் மனங்கொள்ளாத மகிழ்ச்சியடைந்து இவருக்கு விப்ர நாராயணரென்று திருநாமஞ்சாற்றிக் காலவளவுபடிக்குச் சௌள உபநயனாதிகளைச் செய்துவைத்து வேதசாஸ்த்ர முதலான அகில வித்தைகளையு மதிகரிப்பிக்க, இவரு மதிகரித்து அதிக விரக்தராய் "மருத்வ்ருதாயா மத்யஸ்தம் சந்த்ரபுஷ்கரிணீதடே, ஸ்ரீரங்கமதுலம் க்ஷேத்ரம் ஸ்ரியாஜுஷ்டம் ஸுபாஸ்பதம்" என்கிறபடி உபயகாவேரிமத்தியில் சந்த்ரபுஷ்கரணிக் கரையில் சமானாதிக ரஹிதமும், மங்களாதாரமுஞ், சேவிக்கச் சுபகரமானதுமாயிருக்கிற திருவரங்கப் பெருநகரத்துக் கெழுந்தருளி "விமாநமப்யேத்ய சது: ப்ரதக்ஷிணஞ் சதுர்த்தி ஸம்தஸ்ய க்ருதப்ரணாம:, ததந்தராவிப்ரய விதிர்ததர்ஸ மிந்த்ரநீலாசலஸந்நிகாஸம், ப்ரஸந்நவக்த்ரம் நளிநாயதே



க்ஷணங் க்ருபாமயங்காந்தி நிகேதரூபம்" என்கிறபடி அங்கே அரவரசப்பெருஞ்சோதியான திருவனந்தாழ்வான்மேல் அஞ்சனமலைபோல அகிலதேஜஸுக்கு மாதாரபூதனாய் விளங்கிக் குளிர்ந்த திருமுக மண்டலத்தை யுடையனாய், க்ருபையே புறவிதழாக விருக்கிற புண்டரீக † சதுர்சாவயவனாய்ச் சாய்ந்தருளி யிருக்கிற பரவாசுதேவனைச் சதுர்முகனை ப்ரம்ஹா ப்ரதக்ஷிணஞ்செய்து கீர்த்தனம் பண்ணி யடைந்தாற் போலே அடைந்து கண்டு களிக்கலுற்றார்.

அழகிய மணவாளனும் இவரது விஷயவாசி யறிந்து வந்து பற்றுகிறதே பற்றாசாகத் தன்னுடைய குழலழகு கண்ணழகு வாயழகுகளைக் காட்டிப் "பும்ஸாந்த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்கிறபடியே ஸ்ரீதண்டகாரண்ய வாசிகளான ருஷிகளை மோஹிப்பித்தாற்போலே இவரையுந் தன்னுடைய வடிவழகில் ஈடுபட்டு நிரதிசய பக்தியுக்தராம்படிக் கடாக்ஷித்தருள, இவர் ஸ்ரீபுண்டரீகரைப்போலும் "தஸ்யோஹம்" என்கிறபடி அசோகத் திளஞ்சிக்கமான தன்னையிராமனுக்கு நறுமணத் திருமாலைகளைச் சாத்தித் தன்யனாயினே னென்று ஸந்துஷ்டரான ஸ்ரீமாலாகாரரைப்போலும் "ஸுநாக வரஸ்ஸ்ரீமாந்" என்கிறபடி கைங்கர்யஸ்ரேயஸ்ஸாலே ஸ்ரீமானை ஸ்ரீகஜேந்த்ராழ்வானைப் போலும் "எண்பகர் பூவுங் கொணர்ந்தேன்" என்கிற பெரியாழ்வாரைப் போலும் "அலங்கலந்தொடையல் கொண்டடியிணைபணிந்து" தொடையொத்த துளவமுங் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்ட ரடிப்பொடி யென்னும், அடியனை பெரியனென் றருளி நின்னடியார்க் காட்படுத்தாய்" என்னுமளவான பாமாலையோடு பூமாலையையுஞ் சமர்ப்பித்துத் திருநந்தனவனஞ் செய்து போருகிறகாலத்திலே ஒருநாள் திருக்கரம்பனூரிலிருந்த அதிசுந்தரையான தேவதேவியென்னு மொருவேசி திருவுறையூருக்குப் போய், நிசுளாபுரேந்த்ரனை சோழராஜாவைத் தர்சித்துத் திரும்பி வருகையில் தடத்தோரத்திலிருந்த இவ்வாழ்வாருடைய திருநந்தனவனத்தைக் கண்ணுற்றாள்.

கண்டவள் தனது மார்க்காயாசத்தைப் போக்கிக்கொள்ளும் நிமித்தம் அதனுள் ப்ரவேசித்து ஓர் வ்ருக்ஷத்தி னடியிலே தன் சகிகளோடு நின்றுகொண்டு, அந்த சோலையின் சிங்காரத்தைச்

---

† சதுர்சாவயவன் - (புண்டரீகத்தை) ஒத்த அவயவத்தையுடையவன்.

சுற்றிச்சுழன்று பார்க்கப், பலா பாடலீ தென்னை அசோகு புன்னை ஏலுமிச்சை பூகம் வாழை மா விளா வகுளம் நார்த்தம் ஆமலகாதி வ்ருக்ஷஸமூஹங்கள் மலிந்து பொலிவடைந்து அவற்றின்கிளைகள் மேல் மஞ்ஞை மைநாகங் கிள்ளை பூங்குயில் முதலிய பட்சி சமூகங்களமர்ந்து செவிக்கின்பமா பொலிக்கவும், புஷ்பமதுக்களையுண்டு களித்துக் கிளம்பிய † ப்ரமரங்க ளிசைக்கவும், தாமரை தண்ணும்பல் மல்லிகை முல்லை இருவாட்சி செண்பகம் பச்சை தமனகம் பாதிரி பத்மம் முதலிய புஷ்பங்கள் மணக்கவும், மநோஹரமாயிருக்கிறதைக் கண்டு, தன் அக்கையான தேவியென்பவளை நோக்கி இந்த்ரனுக்கோர் பூங்காவன முண்டெனவுஞ் சைத்ரரதனுக்கோர் உத்யானவனமுண்டெனவும் நாம்கேட்டிருப்பதே யொழியப்பார்த்திருப்ப தில்லையே; இந்த திருநந்தவனத்தைப் பார்த்த பின்பும் அவற்றி னலங்காரங்களைக்கேட்டுப் பிரமிப்போமென்பதுண்டோ? இஃதிங் கமைந்திருப்ப தியாருக்காகவோ என்று வினவ, அவளும் தேவதேவியை நோக்கித் தங்காய்! இதிலுள்ள தருக்குலங்கள் பெரியபெருமாளுடைய வருளையே தாரகமாகப் பெற்றுப் பொலிவடைந்து புஷ்பித்து ப்ரகர்ஷத்தாலே அவர் திருமுடியைப்பூஷித்து வருமவையாயும், இத்தோட்டம் அவர் வேட்டையாடி வந்து ஆயாசந் தீர்த்துக்கொள்ளுமிடமதாயுமிருக்கின்றமையாலே அஸ்மதாதிகளுக்குச் சிரமஹரஞ்செய்து சிங்காரமாய்க்காணு தொழியுமோவென்றுப்ரியாலாபம் பண்ணிக்கொண்டிராநிற்க, அவ்வெளையிலிவ்வாழ்வார் தலையிற் சிகையாலும் முகத்தில் மீசையாலும் திருமேனியெங்கும் ரோமங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருக்கிற திருவுருவினராய், மஹா தாவள்யமான தந்தபங்க்திகளை யுடையராய்த் துல்பமான மடியையுந் த்வாதசோர்த்வ புண்ட்ரங்களையுந் துளசி நளினாட்சமாலைகளையுந் தரித்துக்கொண்டு அங்கே தருக்குலங்களுக்குக் குழிகட்டித் திருமஞ்சனம் பரிமாறிக்கொண்டு சஞ்சரிக்க, அவர்களிருவரும் இவரை அத்யாச்சர்யத்தோடு பார்த்துக்கொண்டேயிருக்க, இவர் தமது கைங்கர்யத்தில் ஆசக்தசித்தரா யிருந்துகொண்டு அவர்களை முகமெடுத்துப்பாராதே திரஸ்கரித்திருந்துவிட்டார்.

அவ்வளவிலே தேவதேவி யென்பவள் ‡ ஸ்வாக்ரஜையை நோக்கி இதென்ன! நாமிவன்முன்னே வந்துநின்று இத்தனைபோதாக

† ப்ரமரம் - வண்டு. ‡ ஸ்வாக்ரஜை - தமக்கை.



கடாக்ஷிக்கவில்லையே இவன்மேல் விழுகையிலும் கண்ணை நோக்காதொழிகிறானே! இவன் நபும்சகனோ? அல்லது உன்மத்தனோ கண்டு சொல்லாயென; அவளும் தங்காய்! இவர் நபும்சகருமன்று உன்மத்தருமன்று; ஸ்ரீரங்கேச கைங்கர்யாசக்த சித்தரான விரக்தராகையாலே உன் சௌந்தர்யத்தைக் காலி யுமிழ்ந்திருப்ப ரென்ன; அதற்கவள் இப்படிப்பட்டவரை நானொருகால்கைக்கொள்ளாதொழிவேனோ வென்ன; மூத்தவள் நீ யிவரை யுன் சௌந்தர்யத்தில் மோஹிக்கச் செய்வாயாகில் நாமுன்னை வாரஸ்த்ரீகளுக்குள் முக்யையென்று சொல்வதோடு ஆறுமாசகாலமுனக்கு அடிமைப் பெண்ணாகவு மிருப்பேனென்ன; அவளும் நானிவரை வசீகரியாவிடில் உனக்காறுமாசம் பணிவிடைக்காரியாவேனென்று ப்ரதிக்ஞை பண்ணி அப்பொழுதே தான் தரித்திருந்த திவ்ய வஸ்த்ராபரணாதிகளைக்களைந்து தன் அக்கை கையிற் கொடுத்துச் சகிகளுடனே கூடியனுப்பிவிட்டுச் சாத்விகவேஷந் தரித்துக்கொண்டு இவ்வாழ்வார் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்து நின்றாள். ஆழ்வாரவளைப் பார்த்து நீயார் பிள்ளாயென்று கேட்க, ஸ்வாமி! அடியேனொரு வாரஸ்த்ரீ வம்சத்திலே ஜன்மாந்தர வினையின் வழியாலேபிறக்க, அவள் ஸர்வரையும் பறித்து † அர்த்தார்ஜனை பண்ணென்றுபாதிக்க, அடியேன் அதற்கிசையாமல், பூர்வம் பண்ணின பாபத்தாலே இந்த ஜன்மமெடுக்க நேரிட்டதே! இன்னமும் பாபார்ஜனைபண்ணிப் படுகுழியில் விழுவானேன் தொழில் தப்பிக்கிறேனென்று அவளைப் பரித்யஜித்து ஸ்ரீரங்கேசனுக் கந்தரங்க கைங்கர்யாசக்தசித்தராயிருக்கிற தேவரீருடைய திருவடிகளிலே ஆஸ்ரயம் புகுந்து உஜ்ஜீவிக்கலாமென்று வந்திருக்கின்றேன்; ‡ ஆகிஞ்சின்யையாய் அனன்யகதித்வமுடைய அடியேனை இரங்கியருளித் திருநந்தனவன கைங்கர்யத்தி லிருக்கும்படி நியமித்தால் தேவரீர் பெருமாளுக்குத் திருமாலை சமர்ப்பித்துப் பிக்ஷைகள் பண்ணிக்கொண்டு வருமளவும் இப்பொழிலிலே மேயவருகிற கறவைகளை யுள்ளேவிடாமல் காத்துக்கொண்டு மௌனமாகி யிருந்து மனோவ்ருத்தியை யடைவேனென்று ப்ரார்த்தித்தாள். இவ்வாழ்வாரும் அவள் ப்ரார்த்தனைக்கிரங்கி யருளித் தம்முடைய திருவாராதனமான பெருமாளுக்கு நித்யமும் ० பைக்ஷத்தை

† அர்த்தார்ஜனை - பணஞ்சம்பாதித்தல். ‡ ஆகிஞ்சின்யை - தரித்திரை. ० பைக்ஷம் - நைவேத்தியம். (உபாதானம்).

யமுது செய்வித்துத் தாமு மமுதுசெய்த வனந்தரஞ் சேஷித்ததை யவளுக்கு ப்ரசாதித்து வந்தார்.

அனந்தரந் தேவதேவி ஆழ்வார் நியமனப்படிப் புஷ்பதருக்களுக்குக் களையெடுத்தல் குழிகட்டல் திருமஞ்சனம் பரிமாறல் முதலிய கைங்கர்யங்களில் அதிகபக்தியுக்தையைப் போலிபெட்டு, ஆறுமாஸம்வரையிலும் இப்படிக்காலம்போக்கி, ஒருநாளில் திருத்துழாய்க்குக் குழிகட்டித் திருமஞ்சனம்பரிமாறிக்கொண்டிருக்கையில் ஒரு பெருவர்ஷம் வர்ஷித்ததால் ஆழ்வாருடைய பர்ணசாலையின் வெளிப்புறத்தி லொதுங்கிநின்று நனைந்துகொண் டிருக்க, இதைஆழ்வார்கண்டிரங்கி யவளையுள்ளே யொருபுறமாய்வந்திருக்கும்படி யாக்ஞாபிக்க, அவளும்உள்ளேபோனவளவில் ஈரவஸ்த்ரத்தோடிருக்கக்கண்டு, தம்முடைய உத்தரீயத்தை ப்ரஸாதிக்க அதையவள் வாங்கித் தரித்துக்கொண்டு, ஆழ்வாரிடத்தில் நயவார்த்தையால் திருவடிகளை வருடுகிறேனென்று ப்ரார்த்தித்து, அவரையதற் கனுகூலிக்கச் செய்துகொண்டு, வருடுகிறதறுவாயில், அவள் † களாசாஸ்த்ர முறையறிந்தவளாகையாலே, சில நரம்புகளைப் பக்வமாய்த்திண்டி, இவர்மதியை மயக்கிக்கடைக்கண்ணால் பிரட்டிக் கிஞ்சுகம்போல் கொஞ்சிக்கொண்டு பக்கத்தில் நெருங்கி, இவர் தன்கையைப் பிடிக்குமளவுஞ்செய்யவேண்டியப்ரயத்தனங்களை யெல்லாங் குறைவறச்செய்து, ஒருகாலும் விஷயவாசனையேயறியாத இவரைக் கடாலிங்கனஞ்செய்து ரமித்து, மறுநாள் தன்னுடைய திவ்யவஸ்த்ராபரணாதிகளை யழைப்பித்துத் தரித்துக்கொண்டு, தன்னுடைய ரூபலாவண்யங்களை யதிகமாய்ப் ப்ரகாசிப்பித்து, அதனாலிவரைப் பின்னும் விகாரிக்கச் செய்து தன் வசப்படுத்திக்கொண்டு, இவருடைய சந்தி ஜபதபாதிகளையும் வர்ணாசிரம தர்மத்தையுங்குலைத்துத், திருநந்தவனத்தையும் விட்டுத் தன்க்ரஹத்துக்கே யழைத்துக்கொண்டுபோய் இவருடைய ஸ்வார்ஜிதங்களெல்லாந் தன்வசமாகுமளவுந் தழுவிப் பரிமாறி அச்செல்வ மொழிந்தவாறே வெளியில் தள்ளிவிட்டாள்; பிறகு இவர் அவளைப்பிரிந்ததா லுண்டான துக்கத்தில்மூழ்கி அவளுடைய வாசல்காப்பானாகிப் படிமேலுறங்கிக் கிடக்க, அப்போது பெரியபெருமாள் பிராட்டி ஸஹிதராய் ஸ்வவிலாஸ ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டு அவ்வழியே யெழுந்தருளா நிற்கப் பிராட்டி

† களாசாஸ்த்ரம்-காமநூல்.



இவர் கிடக்கையைக் கண்டு மந்தஹாஸம் பண்ணிப் பெருமாளுடனே † வேசியாக்ரஹத்வாரத்திற் கவலையுட்பட் டுறங்கிக்கிடக்கிற இவராரென்ன; பெருமாளும் இவனே நமக்குப் பூமாலைதந்துகொண்டிருந்த விப்ரநாராயணன்; இவன் வேசியாஸக்தனாகி ஸ்வார்ஜிதங்களையும் பறிகொடுத்து இப்போதவளால் தள்ளுண்டு கிடக்கிறானென் றருளிச்செய்தார்.

அவ்வளவிலே பிராட்டி, சுவாமி! நமக்கந்தரங்கரானவிவர் இப்படி வேசியாஸக்தரானாலும் விசுவமோஹன ஹேதுவான தேவரீர் மாயைக்கு விஷயமில்லாமையோ? இவருடைய தோஷங்களை யாராயாமல் பூர்வம்போலே நமக்கந்தரங்கராம்படிக் கடாக்ஷித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்குப்பெருமாளிசைந்து தம்முடைய பஞ்சபாத்ரத்திலே பருகிருக்குஞ் சுவர்ண சுத்தோதகபாத்ரத்தை யெடுத்துக்கொண்டுபோய் அந்த வேசியாக்ரஹத்வாரத்தில் நின்று கதவைத்தட்டித் தேவதேவி கதவைத்திறவாயென்றழைக்க; அவள் ஆரென்று கேட்க; நான் அழகிய மணவாளதாஸன், விப்ரநாராயணர் அனுப்ப வந்தேனென்ன; அவளுஞ் சடக்கெனக் கதவைத்திறந்து என்னென்று வினவ; உனக்கிந்தச் சுவர்ண பாத்ரத்தை விப்ரநாராயணர் தந்தாரென்ன; அதையவள் மஹா சந்துஷ்டையாய் வாங்கிக்கொண்டு அவரை யுள்ளேவரச் சொல்லுமென்ன; பெருமாளும் இவரண்டையில்வந்து நின்று விப்ரநாராயணரே! உம்மைத் தேவதேவி உள்ளேவரச்சொன்னாளென் றருளிமறைய; இவருக்கவ்வார்த்தை கர்ணாம்ருதமாக விருக்கையாலே சந்துஷ்டராகித் திடுக்கென்றெழுந்து உள்ளேசெல்ல, அவளிவரை மஹா ப்ரீதியுடனாதரித்திருந்தாள்.

இஃதிப்படியிருக்க, மறுநாள் விடிவுகாலத்தில் கோயில்திருக்காப்பை நீக்கினவளவிலே சுவர்ணசுத்தோதகபாத்ரத்தைக்காணாமையால், அர்ச்சகபரிசாரகர்களனைவரும்பயந்து அதிகாரிகளுக்கறிவிக்க, அவர்களும் அரசனுக்கறிவிக்க, அவன் மஹா ‡ குபிதனாய், அர்ச்சகபரிசாரகர் முதலியோரைத் திருத்தேரடியிலே நிறுத்தி அபராததண்டம்வாங்க, அத்தறுவாயில் தேவதேவி அகத்துக்கு ஜலங் கொண்டுவரப் போன அடிமைப் பெண் ணொருத்தி

† வேசியாக்ரகத்வாரத்தில் - வேசிவீட்டுத் தெருவாசற்படிக்கண்.
‡ குபிதனாய் - கோபமூண்டவனாய்.

அவ்வழியே செல்ல, அங்கே தன்னோடு சம்மந்தமுடையா ளொ
ருவனை அரசன் பாதிக்கக்கண்டு, இதுவென்னென்று விசாரித்துச்
சுவர்ணபாத்ரக் களவைப்பற்றி நடத்துவதென்றறிந்து, அரசனை
நோக்கி ஐயனே! அந்தபாத்ரத்தை விப்ரநாராயண னென்பவன்
எங்கள் தேவதேவிக்குக் கொடுத்திருக்கின்றான்; அவளு மதைத்
தன் மெத்தைத் தலைக்கணைக்குள் வைத்திருக்கின்றா ளென்ன;
அரசன் தத்க்ஷணமே இவ்விருவரையுஞ் சுவர்ண பாத்ரத்துடன்
கண்டுபிடித்துக் கைப்பிடியாகக் கொண்டுவரச் செய்து தேவ
தேவியைப் பார்த்ததட்டி, நீபெருமாளுடைய பொருளை யிப்படி
யபஹரிக்கலாமோ வென்றுகேட்க அவள் † நாயன் தே! இந்தவிப்ர
நாராயணர் அதைத்தன் றாதனுகிய அழகியமணவாள தாஸனிட
த்திற்கொடுத்து அடியேனுக்கனுப்பி வைக்க, அதை இவர்பொரு
ளாக விருக்கலா மென்றே நம்பி வாங்கிக் கொண்டே னித்தனை
யல்லது அடியேன் புத்திபூர்வமாக அபராதியாகவில்லை யென்
றாள்; அப்போது அரசன் இவரை நோக்கி நீரிப்படிச் செய்த
துமக்குத் தகுதியோவென்ன? இவர் நானவ்வட்டிலையு மறியேன்
எனக்கொரு தாதனுமில்லையென்ன; அவளுமுண்டென்ன; இவரி
ல்லையென்ன; அவனிவ்விருவர் விவாதத்தையுங் கேட்டுக் குபித
னாகித் தேவதேவி யிடத்தில் அபராதம்வாங்கி வட்டிலைப்பெருமா
ளுக்குச் சமர்ப்பித்து விட்டு, இவரை நன்றாயாராய்ந்து தண்டிப்
போமென்று காவலில் வைத்துப்போயினன்.

அவ்வேளையில், லோகமாதாவான பெரியபிராட்டியார் திரு
வரங்கச்செல்வனரை யடிபணிந்து சுவாமி! தேவரீரினிமேலாவது
நம்முடைய விப்ரநாராயணரை மாயைக்கு விஷயமாக்காது க்ரு
பைக்கு விஷயமாக்கி ரக்ஷித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்
கத்,தென்னரங்கத் தின்னமுதனும் அன்றிரவில் தானே சோழ
பூபதியின் ஸ்வப்னத்தி லெழுந்தருளி அரசனே! அந்த விப்ரநாரா
யணர்க்கு ப்ராப்தகர்மகழிகைக்காக நாமே தடாணிபப்பாத்ரத்தை
யெடுத்துக்கொண்டு போய்த் தேவதேவிக்குக்கொடுத்து அவரை
யிப்படித் தண்டிப்பித்தோ மித்தனையல்லது, அவர் தண்டியரே
யன்று; ஆகலின், நிர்த்தோஷரான அவரைக் காவலரையிலிருந்து
விடுத்துப் பூர்வம்போலவே யவரை நம்முடைய கைங்கர்யத்தில்
நியுத்தி வையுமென்றும் அந்த விலைமகள் வசப்பட்டபொருளில்

† நாயன் தே - அரசனே.



நமக்கபேக்ஷித மில்லை யென்று மருளிச்செய்து மறைய; அரசன்
இடுக்கிட்டு விடிவுகாலத்தி லெழுந்து மந்த்ரிகளுடனே பெரிய
பெருமாளுடைய நியமனமிருந்த படியைச்சொல்ல, அனைவரும்
விஸ்மிதராகி அப்பொழுதே இவ்வாழ்வாரிடத்தில் வந்து தண்டன்
ஸமர்ப்பித்துத் திருபல்லக்கி லேறியருளப் பண்ணிக்கொண்டு
அரசனிடம்வர, அரசனும் இவரை யடிபணிந்து பெரியபெருமா
ளருளிச்செய்த படியை விண்ணப்பஞ் செய்து க்ஷமைபெற்றுக்
கொண்டான்.

அனந்தரம் ஆழ்வார் தமக்கு ப்ராப்தமாயிருந்த நிந்திதக்ருத்
யங்களையெல்லாம் நினைந்துநைந்து "யஸ்யமூர்த்நி ஸ்திதம் யாவத்
வைஷ்ணவாங்க்ரிஜம்பஜம், கங்காதிஸர்வ தீர்த்தாநிதாவத்தி
ஷ்டந்த்யஸம்ஸயம்" என்கிறபடியே பாகவதர்களுடைய ஸ்ரீபாத
தூளி எவன் சிரசில்படிர்திருக்குமோ அவன் கங்காதிஸகல தீர்த்
தங்களிலும் ஸ்நானஞ்செய்வதினால் வரும்பலனைச்சம்சய மின்றிப்
பெறுகிறானென்றும், "நிரபேக்ஷம் முநிம்ஸாந்தம் நிர்வைரம்
ஸமதர்ஸிநம் அநுவ்ராஜாம் யஹம் நித்தியம் பூயயேத்யங்க்ரிரேணு
பிஃ" என்கிறபடியே நிரபேக்ஷையுந் த்யானசீலத்வமுஞ்சமதமாதி
குணங்களும் அத்வேஷமுஞ் சமநோக்கும் உடையவர்களான
பாகவதர்களின் ஸ்ரீபாதரேணு ஒன்றே பரிசுத்தத்தைத் தரும
தென்றும், "ஏதத்ஸமஸ்த பாபாநாம் ப்ராயச்சித்தம்மநீஷிபிஃ,
நிர்ணீதம் பகவத்பக்த பாதோதகநிஷேவணம்" என்கிறபடியே
சகல பாபங்களுக்கும் ப்ராயச்சித்தமாக பகவத்பாகவத ஸ்ரீபாத
தீர்த்தத்தை ஸ்வீகரிப்பதைவிட வேறுபாய மில்லையென்றும்
"மாயன்றமரடி நீறுகொண்டணிய முயலில் மற்றில்லை கண்டீர்
வணக்குக்கே" என்றும், "நாதனை நரசிங்கனை நவின்றேற்றுவார்
களுழக்கிய பாதநாளிபடுதலாலிவ்வுலகம் பாக்கியஞ் செய்ததே"
என்றும், "தொண்டரடிப்பொடியாட நாம்பெறிற் கங்கை நீர்
குடைந்தாடும் வேட்கையென்னவாவ்த" என்றும் வேதவித்துக்
கள் பலராலும் உத்தேசியதமமாகவருளிச் செய்யப்பட்டிருக்கிற
படியே, பகவத்பாகவத ஸ்ரீ பா த தீர்த்தத்தையபேக்ஷித்து
ஸ்வீகரித்து க்ருதார்த்த னாயினேனென்று மனங்குளிர்ந்து
ஸ்ரீ தளவத்தொண்டிலே நிஷ்டராய்ப்போரும் ஸ்ரீவைஷ்ணவர்க
ளையே தமக்குத் தேசியர்களாகவெண்ணிப் பூர்வம்போலவே கைங்
கர்யநிரதராகி (க்ரமகுலமுறைகளால் வரும்பெயர் அனர்த்தஹேது

வாகையாலே) முன்தசையிலிருந்த விப்ரநாராயண ரென்கிற பெய ரொழிந்து ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வாரென்னுந் திருநாமத் தைப்பெற்றும் "யாவோநாங் யத்ரகச்சதி" என்கிறபடியே என் மனம் சக்ரவர்த்தித் திருமகன்திருவடிகளையன்றி வேறொரிடத்திற் பற்றுகிறதில்லையென்கிற சிறியதிருவடியைப் போலும் "ஐஸ்வர் யம்வாபிலோகாநாம்காமயேநத்வயாவிநா" என்கிறபடி உன் திருவடி களையன்றி இப்ரபஞ்ச ஐசுவர்யாதிகளில் எனக்கிச்சையுண்டாக வில்லை யென்கிற இளையபெருமாளைப்போலும் "மாயாப்பெருவிற லுலகம் மூன்றினொடுநல்வீடு பெறினுங்கொள்ளுவதெண்ணுமோ தெள்ளியோர்குறிப்பு" என்கிறபடி த்ரைலோக்ய ஐசுவர்யாதிக ளடையத் திரண்டெதிர் படுவதாயினும் நல்வீடென்கிற கைவல்ய புருஷார்த்தம்ஸித்திப்பதாகவிருக்கிலும் ஸாராஸாரங்களைப் பகுத் தறிந்துஸ்ரீயஃபதியினுடைய திருவடிகளில்நாட்டிளமனத்தையுடைய பெரியோர்களான க்ஞானிகளுடைய லக்ஷ்யத்தில் அவைகொள் ளப்படா என்கிற நம்மாழ்வாரைப்போலும் "இந்திரலோகமாளும் அச்சுவைபெறினும் வேண்டேன்" அதாவது இந்திரையென்கிற லக்ஷ்மிக்கு வல்லபனான ஸ்வாமியின் லோகமான பரமபதந் தமக்கு ப்ராப்தமாவதாயிருக்கிலும் இங்கே பெரியபெருமாளுடைய திரு வடிகளிலே யடிமைப்பட்டுத் திருநாமஞ்சொல்வதிலிருக்கிற ஸாரம் அதைமறுக்கச்செய்கையால் அதிப்பற்றுத திருவுள்ளத்தை யுடையராய் "என்னைத்தீமனங்கெடுத்தாய்" என்றும் "மருவித் தொழும் மனமேதந்தாய்" என்றுஞ் சொல்லுகிறபடியே "மாத ரார் கயற்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனைப் போதரே யென்று சொல்லிப் புந்தியிற்புகுந்து தன்பாலாதரம் பெருக வைத்தவழகன்" அதாவது ஸ்த்ரீகளுடையகண்வலைக்குளகப்பட்டு மீளவகையறியாதே மக்னனானவென்னை வாராயென்றுதரித்து, நம்மைச் சேவித்துக்காணென்று ஹிதமுரைத்து, என்ஹ்ரு தயத்திலும் ப்ரவேசித்து அத்யந்த பக்தியை யுண்டாக்கியருளிய தயாளுவே! என்று அழகியமணவாளனுடைய திருநாமவைபவங் களையே அநுஸந்தித்துக்கொண்டு க்ருதக்ஞராயிருக்க, நம்பெரு மாளு மிவர்க்கு மயர்வறமதிநலமருளித் தன்னுடைய பரத்வாதி † பஞ்சப்ரகாரரூபமான ‡ விபூதி சேஷ்டிதங்களை யெல்லாங்

† பஞ்சப்ரகார ரூபம் - பரத்வம், வ்யூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்னும் ஐந்து வடிவங்கள். ‡ விபூதி - செல்வம்.



காட்டிக்கொடுக்க இவர்தெளிவுற்ற சிந்தையராய்ப் பரபக்தி பரக் ஞான பரமபக்திகள்தலையெடுக்கப்பெற்றுப் "பிதாபுத்ரஶ்ச நாரா யணஃ" என்கிறபடியே தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்று மாய ஸர்வவிதோத்தாரக பந்துவாயிருப்பவன் நாராயணனொரு வனே யென்று திருமந்த்ராநுஸந்தானத்தாலே யநுஸந்தித்துத் "திறம்பேன் மின்கண்டீர் திருவடிதன்னாமம் மறந்தும் புறந் தொழா மாந்தரை" என்கிறபடி அயர்வறுமமரர்தலைவனான ஸ்ரீயஃ பதியினுடைய தாபாறு சுடரடியை ஸர்வகால ஸர்வதேச ஸர்வா வஸ்தைகளிலுந் தங்களுக்குத் தாரக போஷக போக்யாதிகளாக, த்யானித்துக் கொண்டிருக்கும் ப்ரபந்நர்களைக் கண்டால் ஆனை போல் மதித்துச் செல்லுகிற நீவிர் பூனைபோலொடுங்கிச் சத்வ குணப் போலிகளாகித் தண்டன் ஸமர்ப்பித்து அவர்கள் க்ருபை க்குப் பாத்ரராகக்கடவீரென்று எமன் பாஶ ஹஸ்தனான ஸ்வ புருஷனைப் பார்த்துக் கர்ணமூலத்திலே யுபதேசிக்கத்தக்கதாக, "நமன்றமர்தலைகண்மீதே நாவலிட் டுழிதருகின்றோம்" என்று வாலியின் பெயர் கேட்டவளவிலே ஜ்வரமடைந்து குகையிற்பது ங்கியிருந்த ஸ்ரீசுக்ரீவமகாராஜர், சக்ரவர்த்தித்திருமகனை அண்டை கொண்ட பலத்தாலே கிஷ்கிந்தாபுரித்வாரத்திற்சென்று நின்று, தம்மைஜெயிக்கவல்லவருண்டாகில் எதிர்கொண்டு வரலாமென்று அறைகூவினாற்போலே, முன்பு எமன்பெயர்கேட்க அஞ்சிக்கிட ந்த இவர் திருநாமத்தையண்டைகொண்ட பலத்தாலே † சமன புரித்வாரத்திற் சென்றுநின்று (நான் பண்ணின பாபத்துக்காக நீ சித்ரகுப்தனை லெழுதிவைத்திருக்கிற பட்டோலையைக்கொண்டு என்னைத்தண்டிக்க வல்லையாகில் புறப்படாயென்று) அறைகூவி அவன் தலைமீதும் அவனுகந்தார் தலைமீதும் தாமுந் தாமுகந்தா ரும் அடியிட்டுச் சஞ்சரிக்கச் சக்தராகிறதாக வருளிச்செய்து, ஸ்ரீவைஷ்ணவர்களடியிலே முடியிட்டு, ஆனந்தித்து, திருமாலை கட்டித் திருமாலைசாற்றி நினைத்த இவர் (ஸ்ரீசௌனகபகவான் வக்தாவாகியிருந்து திருநாமங்களைச்சொல்ல, ஸ்ரீசதாநந்தர் ஶ்ரோ தாவாகி யிருந்து கேட்டாற்போலே) பெரியபெருமாள் ஶ்ரோதா வாகத் தாம்வக்தாவாகித் திருமாலையை யருளிச்செய்தார்.

† சமனபுரி - எமபுரம்.

பிறகு "பூதாநி சகவர்க்கேண சவர்க்கேணேந்த்ரியாணிச,
டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா, மகயகாரேணா
வோக்தம் ஸகாரேணத்வஹங்க்ருதி, ஸகாரேண ஹகாரேண மஹா
ந்ப்ரக்ருதிருச்யதே" என்கிறபடியே "பொங்கைம்புலனும் பொறி
யைந்துங்கர்மேந்திரிய மைம்பூதம், இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மா
னாங்காரமனங்கள்" என்கிறபடியே, க, ங, ஙு, ங, ங ஆகிய விவ்
வைந்தக்ஷரங்களால் நிருபகமான ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு,
ஆகாசம் என்கிற பூதங்களைந்தும், ச, ஸ, ஜ, ஜ, ஞ ஆகிய வைந்
தாலும் நிரூபகமான வாக், பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்
கிற கர்மேந்த்திரியங்களைந்தும், ட, ட, ட, ட, ண ஆகிய வைந்தா
லும் நிரூபகமான த்வக்கு, சக்ஷுஸ், சுரோத்ரம், ஜிஹ்வை, ஆக்
ராணம் என்கிற ஞானேந்த்ரியங்களைந்தும், த, த, த, த, ந ஆ
கிய இவ்வைந்தாலும் நிரூபகமான சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம்,
கந்தம் என்கிற புலன்களைந்தும், ப, ப, ப, ம ஆகிய விந்நான்
காலும் நிரூபகமான மனம், அஹங்காரம், மஹத், ப்ரக்ருதி என்
னும் நான்கும் கூடிய இருபத்துநான்கு தத்வாத்மகமான சரீரத்தில்
பண்ணும் ஆத்மபுத்தியைச் சிதலமான வெளிச்சுவரையுடைய க்ரு
ஹத்தில்வைக்கு மாசையையே போன்றதென்று விவரித்து "ஆ
த்மாதுமகாரேண பஞ்சவிம்ஸப்ரகீர்த்திதஃ" என்கிறபடியே
இருபத்தைந்தாமக்ஷரமான மகாரம் ப்ரக்ருதேஃபரனான ஆத்ம
ஸ்வருபத்தை விளக்குகிறதென்று நிர்த்தேசித்து "மெய்ம்மையே
மிகவுணர்ந்து உன்கடைத்தலை யிருந்துவாழுஞ்சோம்பர்" என்று
சேஷத்வபாரதந்த்ரியம் கைபுகுந்தவர்களே தமக்கு உத்தேசியர்க
ளென்றருளிச்செய்து உன்னடியார்க் கென்னை யாட்படுத்தாயென்
று பெரியபெருமான் தமக்குண்டாக்கின ததியசேஷத்வத்தை
ப்ரார்த்தித்து, இவ்வர்த்தங்களை அகிலருமறிந் துஜ்ஜீவிக்கும்படிச்
"திருமாலை" "திருப்பள்ளியெழுச்சி" என்கிற ப்ரபந்தங்களிலே
விஸ்தமாகவருளிச்செய்து நூற்றைந்து திருநக்ஷத்ர மெழுந்தருளி
யிருந்து உலகத்தை வாழ்வித்தருளினார்.

தேவதேவியென்பவளும் இவ்வாழ்வார் கடுபோட்டைப்பார்த்
துந்தானுமிவரைப்போலவே உஜ்ஜீவிக்கவேணுமென்றெண்ணித்
தன் ஸர்வஸ்வத்தையும் நம்பெருமாள் திருவடிகளில் ஸமர்ப்பித்



துப் பரமஸாத்விகையாய் (ஸத்ஸங்கம் ஸதாதர்சனத்தில்வைக்கு
மென்னுமாபோல) கோயிலிலே கடைத்தலை சிக்குங்கைங்கர்ய
நிரதையாயிருந்து கடுவினை களைப்பெற்று உஜ்ஜீவித்தாள்.

### திருநக்ஷத்ரத் தனியன்.

கோதண்டே ஜ்யேஷ்ட நக்ஷத்ரே மண்டங்குடி புரோத்பவம்,
சோளோர்வ்யாம் வநமாலாம்ஸம் பக்த பதரேணுமாச்ரயே.

ஸ்ரீதொண்டரடிப்பொடி யாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

குறிப்பு.—ஸ்ரீநஞ்சீயர் இவ்வாழ்வாருடைய வைபவமுழுமை
யுங்கேட்டு ஸ்ரீபட்டர் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து
ஸ்வாமி இப்படிப்பட்ட மஹாநுபாவருக்கிந்த நிந்திதக்ருத்யமெப்
படி ப்ராப்தமாகலாமென்று அடியேன் பேதைமையால் மயங்கு
கிறேன்; ஆகையால் ஸர்வக்ஞரான தேவரீரிதனை விளங்கவருளிச்
செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்க; அவரும் கேளீர் பண்டிதா
க்ரேசரே! பூர்வம் த்ரேதாயுகத்தில் ஸர்வேசுவரன் சக்ரவர்த்தித்
திருமகனாக வவதரித்திருந்தபோது, அந்த திருவுருவத்தைக்
கண்ட ஸ்ரீதண்டகாரண்யவாஸிகள் மோஹித்தாற்போலே, இரா
வணனுடையதாயஹகாரியான சூர்ப்பணகை யென்பவளும்மோஹி
க்க, அவ்வவதாரத்தில் பெருமாள் ஏகபத்நீ வ்ரதரானபடியாலே
அவளைத் திரஸ்கரித்துவிட்டு, த்வாபரயுகத்தில் அந்த ருஷிகளை
யெல்லாங் கோபாங்கனைகளாகவும் இராஜகன்னிகைகளாகவும்ஜன்
மிக்கச்செய்து தான் க்ருஷ்ணாவதாரஞ்செய்தபோது அந்தசூர்ப்ப
ணகையுங் கம்ஸபுரியி லொரு குப்ஜையாய்ப் பிறந்திருந்து கம்ஸ ஸம்
ஹாரார்த்தமாக ஸ்வாமி யெழுந்தருளுகையில் ஸ்ரீகந்தசாத்துபடி
கொண்டுவந்துஸமர்ப்பித்துமாளஸமாகமோஹித்துத்தண்டனிட
அப்போது ஸ்வாமி க்ருபைகூர்ந்து, கலியுகத்தில் நிமக்னரை புய
ர்த்ததம்முடைய வனமாலாம்சனை ஸ்ரீவிப்ரநாராயணரென்னும்
த்விஜராயவதரிக்கச்செய்தும், அப்போதவளைத் தேவதேவி யென்
கிறவாரஸ்திரீயாகப்பிறப்பித்து அவளாவலை ஸவாஸனமாகவொ
ழித்து நம்பெருமாளுக்குகந்த கைங்கர்யபுக்தையாக்கி அனந்தரம்
மேல்விடளிக்கவுந் திருவுள்ளத்திற் குறிப்பிட்டருளியதாய் ஸ்ரீ
ப்ரம்ஹாண்ட புராணத்தில் சொல்லியிருக்கிறது. ஆகையால் இவ்

வாழ்வாருக்குந் தேவதேவிக்கும் வாய்த்த ஸம்மந்தம் எம்பெருமானுடையபீலைக்குவிஷயமாயிருந்ததென்றருளிச்செய்தார். அதன்மேலும் ஜீயர் ஸ்வாமி! இங்ஙனமிருந்ததே யாகிலும், இவ்வாழ்வாருக் கது நிந்தையாகாதோவென்ன? கேளீர் ஜீயரே! தேனை இச்சித்த கொசுக்கூட்டம் அதில்இறங்கினமாத்ரத்தில் அதன்பசையால் இறகும் காலுமொட்டிக்கொள்ள, அதனால்வருந்தி, வருந்துந்தசையிலுந் தமக்கதனால்வாய்த்தது இவ்விதியென்று நெஞ்சிற்றேறுமென்னுமல் உயிர்விடுமளவுமதையேசுவைத்து ஒழியுமாபோலே, இம்மாயாப் பெருவிற லுலகவின்ப சாகரத்தில் ஆழமறியாது காலிட்டுக்கொண் டழுந்துவோர்களான ஜீவர்களை அதினின்றும் மீட்கத் திருவுள்ளம் பற்றிய சர்வேசுவரன் வழிகாட்டிகளாக அவதரிப்பித்தவர்களோடு தாமு மொருவராய்க் கலந்திழிந்து ஜீவர்களது திய க்ருத்யங்களையெல்லாந் தாமேறிட்டுக்கொண்டு, அவ்வவற்றி னுழுங்களை யளவிட்டுக்காட்டியும், அவை தம்மிலிருந்து மீளுவதற் குபாயமானது எம்பெருமான்திருவடிகளேயென்று பாசுரமிட் டறிவித்தும், அவ்வுபாயத்தில் மனம் நிலைமாறாதிருக்க வேண்டித் தேஹாரோக்கியத்தினால் வருஞ் செருக்கை யடக்குமதான கைங்கர்யமடியாய்வரும் நைச்சியாநுஸந்தானத்தை யநுஷ்டித்துங்காட்டியும்போருமவரானலொழிய, ஜீவர்கள் திரும்பார்களானீரென் றருளிச் செய்தார்.

பட்டர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் திருவவதாரவருஷம் ௪௮௯௨-க்குச்சரியான ப்ரமாதி வருஷம்.

# ஸ்ரீ திருப்பாணாழ்வார் வைபவம்.

## தனியன்.

கலித்துறை.

திருமலைநம்பிகளருளிச்செய்தது.

காட்டவே கண்ட பாதங் கமல நல்லாடை யுந்தி
தேட்டரு முதர பந்தந் திருமார்பு கண்டஞ் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனிபு குந்து
பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவி னோமே.

"ஸ்ரீலோகஸாரங்க மஹா முநீந்த்ர ஸ்கந்தாதிருடங்கலயாமி நித்யம் - களங்கஹீநம்கமலாபயக்தம் ஸம்ஸ்ரம் காயக ஸார்வபௌமம்" என்கிறபடி. நிர்த்தோஷரும் நிரவதிக பக்தியையுடையவருங் கவிச்ரேஷ்டரும் ஸ்ரீலோகசாரங்கமகாமுனிவருடைய தோளின்மேலெழுந்தருளினவருமான திருப்பாணாழ்வாரை எப்பொழுதுந் துதிக்கின்றேன் என்றும், "அதந்த்ர குலேந்திமே ரமாரமனோரஸ் ஸ்திதஸ்ராஞ்சநாம்பரஜ:, ஸமஜாயதபாணஸம்ஜ்ஞகஸ் ஸுகவி: கார்த்திக மாஸிவைதபே" என்கிறபடி திருஉறையூரில் கார்த்திகை மாஸம் ரோஹிணிநக்ஷத்திரத்தில் அந்த்ய ஜாதியில் விலக்ஷண கவிச்ரேஷ்டராய்த் திருமருவுமார்பனுடைய ஸ்ரீவத்ஸாம்சபூதராய் ஸ்ரீதிருப்பாணாழ்வா ரவதரித்தருளினர் என்றும் இவரவதாரவிசேஷத்தைத் திவ்யசூரிசரிதையில் சொல்லிற்று.

## திவ்யதேச ப்ரபாவம்.

"காவேரீதோயமா ஸ்ரித்யவாதோயத்ரப்ரவர்த்ததே, தத்தேரவாஸிநாம்முக்தி: கிமுதத்தீரவாஸிநாம்" என்கிறபடி திருக்காவேரியின் ப்ரவாஹ ஸ்பர்ஸ ஸம்மந்தமுடைய காற்றானது சஞ்சரிக்கிற ப்ரதேசங்களில் வசிப்பவர்களெல்லோருஞ்சுகிர்தத்தைப் பெறுவார்களென்றால் அந்த தீரத்தில்தானே வாஸஞ்செய்யுமவர்க்குள்ள சம்பத்தை விவரிக்க வேண்டுவதுண்டோ? என்னலான திருக்காவேரி நதிக்கரையில் நிசுளாபுரியென்று சொல்லப்பட்டிருப்பதாய் மாட கூட ப்ராஸாதோப சோபிதமான திருவுறையூரிலே தர்மவர்மாவின் வம்சோத்பவனான சோழபூபதி மஹாதார்மீகனாய் ப்ருத்வீ பரிபாலனம்பண்ணி நிற்கச்செய்தே, நீளாதேவி

யின் ஹம்ஸையான உறையூர்நாச்சியார் அவனுக்குப் புத்ரியாக வவதரித்தருள, அவன் மனமகிழ்ச்சியுடையவனாய், ஸ்ரீஜநகராஜன் பிராட்டியை ப்ரீதியோடே பெற்றெடுத்து வளர்த்தாற்போலே, உவப்போடே வளர்க்க வளர்ந்தருளுந்தசையில் பாலக்ரீடாகாலத்திலும் நம்பெருமாளையல்லாது வேறு விளையாட்டையறியாதவளாய்த், தன் சகிகளோடு ஒருநாள் உத்யானவனத்திலே டோலாலீலைகள் செய்துகொண்டு ப்ராப்தயௌவனையாய் ப்ரகாசித்துக்கொண்டிருக்க "வேட்டையாடிவருவானை விருந்தாவனத்தே கண்டோமே" என்கிறபடியே நம்பெருமாள் அங்கே ம்ருகயாவிஹாரபரராய் இந்த நாச்சியார்கண்ணிற்காணும்படி யெழுந்தருள, நாச்சியார் மோஹித்து ஊருக்குள்வந்து, பிதாவையடிபணிந்து நம்பெருமாளையல்லது வேறொரு புருஷனுக்கு நான்வாழ்க்கைப்படேனென்றும் அவருக்கே என்னை யுதகம்பண்ணிக்கொடுமென்றும் ப்ரார்த்திக்க, ராஜனும் சந்துஷ்டனாய், நம்பெருமாள் சந்நிதியிற் சென்று, அச்செய்தியை விண்ணப்பஞ் செய்ய, பெருமாளும் உவப்புடன் நோக்கி நாமே பாணிக்ரஹணம் பண்ணுவோம், உதகம்பண்ணிக்கொடுமென்று திருவுள்ளம்பற்ற, அவனுஞ் சந்துஷ்டனாய் அரங்கமாநகரையலங்கரித்துப் பற்பல பறைமுழக்கத்தோடு அதிப்ரீதியுடனே பெருத்த கல்யாணஞ்செய்து, நாச்சியாரை உதகம் பண்ணிக்கொடுக்க; பெருமாளும் உவப்புடன் அங்கீகரித்தருள; அது அடியாக அரசன் தன்னுடைய ஸர்வசொத்தையும் நம்பெருமாளுக்கேயாக்கி வாழ்ந்திருந்தான்.

## ஆழ்வார் ப்ரபாவம்.

அக்காலத்திலே அந்த திருஉறந்தையில் "ஸ்ரீவேலாப்தவிதிர்க்கமே கலியுகே மஹம்வத்ஸரே துர்மதௌ, பாசௌ வ்ருச்சிகபாஜி பஞ்சமதிநே வாரே புதஸ்யோத்தமே, ரோஹிண்யாஸஹிதே லஸத்யுடுபதௌ க்ருஷ்ணே த்விதீயேதிதௌ, ஸஞ்ஜஜ்ஞே முநிவாஹநப்சரணயோர் யோரங்கிணோர்த்தகே" என்கிறபடி கலியாப்தம் முன்னூற்று நாற்பத்து மூன்றில் நிகழ்ந்த துன்மதி வருஷம் வ்ருச்சிக ஸூர்ய ப்ரவேசகாலமாகிய கார்த்திகைமாதம் ஐந்தாந்திகதி க்ருஷ்ணபக்ஷம் த்விதியை புதவாரம் ரோஹிணிநட்சத்திரங்கூடிய சுபதினத்தில், நம்பெருமாளுக் கந்தரங்கரான இவ்வாழ்வார், ஸ்ரீவத்ஸாம்சராய்ச் செந்நெற் பயிரிடமாக வவதரித்தருளிச் சுவர்ணபிம்பம்போல் ப்ரகாசித்துக்கொண்டிருக்க; அவ்வேளையில்,



அந்த செந்நெல்வயலின்மார்க்கமாய்ப் பத்நீசஹிதனாய் வந்துகொண்டிருந்த ஓர் பக்திசீலனான † பாணனொருவன் ஆச்சர்யமடைந்து புத்ரசம்பத்தைக் கோரியிருந்தவனாதலால், நித்யதரித்ரன் நிதியைக்கண்டாற்போலே, தன்தலைமேல் இருகைகளாலுந் தழுவியெடுத்து மார்போடணைத்து மயிர்க்கூச்செறிய ஆனந்தித்துத், தன்பத்னி கையிற்கொடுக்க, அவ்வம்மையும் ஆதரம் மிகுந்து அங்கையிற்றாங்கி மார்வத்திலணைத்து மனமகிழ, அந்தக்ஷணமே ஸ்தனத்தில் பால் சோர்ந்தது. அதுகண்டு அவ்வம்மை மிகவுமுவந்து அதை இவர்க்குண்ணக்கொடுக்க இவர் அதையுண்ணாதவராகத், தம்பதிகளிருவரும் இவரை புத்ரஸ்வீகாரம்பண்ணிக்கொண்டு சந்தோஷப்பெருக்கோடு தங்கள் சேரிக்குக் கொண்டுபோய் ஆவின்பால்புகட்ட, அதை யுண்டருளினார்; அவர்கள் அன்றுதொட்டு இவர்க்கு ஆவின்பாலையே புகட்டி வளர்த்துவந்தார்கள். இப்படி வளர்ந்தருளுகிறகாலத்தில் "ஜாயமாநம்ஹி புருஷம் யம்பச்யேந் மதுஸூதந:, ஸாத்விகஸ்ஸ துவிஜ்ஞேயஸ் ஸவைமோக்ஷார்த்த சிந்தக:" என்கிறபடி எந்தபுருஷன் ஸ்ரீயபதியினுடைய கடாக்ஷத்தைப் பெற்றுப்பிறக்கின்றானோ அவனே சத்வகுண ப்ரசுரனும் மோக்ஷத்தில் இச்சையுடையவனும் ஆவானென்கிறபடியே, எம்பெருமானிவர்க்கு மயர்வறமதிநலமருளியபடியாலே கேவல ஸத்வகுண ப்ரசுரராகியும், மோக்ஷார்த்தியாகியும், ஆத்மகுணங்களைப்பெருக்கி, சேமமுடைய நாரதனைப்போலும் "கீதஹாத்தாரயான்மாத்மவேதநிதேஷ்யமாம், ஸமுத்தவாநுசண்டாளம் ராக்ஷஸப் பராணக்தக:" என்றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமானைப்பாடின கைசிகஸ்வரத்தின் பலனைக்கொடுத்து எனக்கு வாய்த்திருக்கிற இந்த தேஹத்தைப் போக்கி ரக்ஷித்தருளவேண்டுமென்று சரணாகதனான ப்ரஹ்மராக்ஷஸனுக்கிரங்கித்தான் பாடுகிற யாதொரு கைசிக கானத்தின் அந்திய பாகத்தின் குறைப்பான பலனையாவது அதைக்கொடுத்து அவனுக்கு மங்களமுண்டாக்கியருளின காரணத்தால் (ப்ராம்ஹணவேள்விக்குறை முடித்த பாகவதர்) என்றழைக்கப்படுகிற ‡ நம்பாடுவானைப்போலும், பகவத்ஞானவித்தைக்குச்சார்வுடையராய் "பரமாத்மனைச்

---

† பாணன் - பஞ்சமன்.

‡ நம்பாடுவானென்னுமோர் பாகவதோத்தமர், திருக்குறுங்குடிக்குச் சமீபத்தில் முகனிக்கமமென்னும் ஊரைச்சேர்ந்த சேரியில் ஒருபாணனுக்

சூழ்ந்துநின்று" ஸாமகானம் பண்ணும் நித்யஸூரிகளிலொருவர் வந்திங்கவதரித்திருக்கின்றாரோ! வென்று சொல்லலாம்படியான திவ்யசரித்ரத்தையுடையராகி ஸ்வதோஷாநுஸந்தானத்தாலே ஸ்வவர்ணாநுகூலமாக இரண்டாற்றுக்கு நடுவில் தாம் புகுராமே, தென்னாற்றின் தென்கரையில் திருமுகத்துறைக்கெதிரே நின்று கொண்டு "தொழுமத்திசையுற்றுநோக்கி" என்கிறபடியே திருவரங்கமேயான் திசையை நோக்கி "வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்று" உள்கலந்து, ப்ரதிதினமும் வீணையை

---

குப் புத்ராயவதரித்தருளி எம்பெருமானுடைய ஞாயமானகடாக்ஷத்தால் பால்யந்தொடங்கி இடையறாத பக்திரூபாபன்னஞானசீலராகி, ப்ரதி ஏகாதசியிலும் வீணையுங்கையுமாய்த் திருக்குறுங்குடிக் கெழுந்தருளித் திருமதிட்கு வெளிப்புறத்தில் நின்றுகொண்டு, நம்பியின் வடிவழகைத் தமது ஞானத்ருஷ்டியால் பாவனைபுரிந்து திருப்பகலெழுப்பாடுவதும், அதில் நம்பி உவப்புடையவராய் இவரிருக்குமிடத்தேற வெழுந்தருளிச் சேவைசாதிப்பதுமாக பஹுகாலம் நடத்திவாராநிற்கக், கார்த்திகை மாஸம் சுக்லபக்ஷம் ஏகாதசிகூடிய ஓரொருநாளில் இந்த பாகவதர் வழக்கப்படியே வீணையுங்கையுமாய்த் திருக்குறுங்குடிக்கு எழுந்தருளுகையில் நம்பியினுடைய வடிவழகை அகக்கண்ணாலேயுற்றனுபவித்துக்கொண்டே நடவாநிற்க, வழிமாறிப்போய் காட்டுக்குள்ளேபோய்விட, அங்குள்ள ஒரு ப்ரம்ஹராக்ஷஸன் இவரைமடக்கிப் பக்ஷணம்பண்ணப்புக, இவர் திடுக்கிட்டுப்பார்த்துத் தம்முடைய நல்வார்த்தையால் அவன்வசனத்தைப் போக்கித், தாம் நம்பியைச் சேவித்துமீளுகையில் அவ்வழியேவந்து அவனுக்காஹாரமாவதாய்ச் சத்யஞ் செய்துகொடுத்து விடைபெற்று நம்பி சந்நிதிக்கு த்வரையாயெழுந்தருளி வழக்கப்படிப்பாடி நம்பியை உவப்பித்தநுபவித்து மீண்டுவந்து அந்த ராக்ஷஸனெதிரில் நிற்க; அவன் இவரடிகளில் தண்டனிட்டு அஞ்சலிஹஸ்தனாய் நின்று, ஸ்வாமீ! அடியேன் பூர்வத்திலோர் ப்ராம்ஹணனாயிருந்து ஒரு ப்ரபலமான யாகத்தைச் செய்யப்புக்கு, அதில் மந்த்ரலோப க்ரியாலோபங்கள்நேரிட அதனால் சாபமேற்று இவ்வநுசிதமான நீசதேஹத்தை யடைந்திருக்கின்றேனாகையால் தேவரீர் எம்பெருமானை உகப்பிக்கிற கைசிககானத்திற் குரிய பலனை அடியேனுக்குத் தத்தஞ்செய்தருளி இந்த சாபத்தினின்றும் மீட்டு ரக்ஷித்தருளவேண்டுமென்று பஹுப்ரகாரமாக ப்ரார்த்திக்க; இவரவனுக்கிரங்கித் தம்முடைய கானத்தின் அந்த்யபாகத்திற் குறிப்பான பலனை யவனுக்குத் தானம்பண்ணி மங்களமுண்டாக்கியருளினவரானார். அந்தக் காரணத்தால் இவரை "ப்ராம்ஹண வேள்விக்குறை முடித்த பாகவதர்" என்றும் கார்த்திகைமாஸம் சுக்லபக்ஷத்தில் வருகிற ஏகாதசியை "கைசிக ஏகாதசி" என்றும் சொல்வதாயிற்று. இவர் ப்ரபாவத்தை வராஹபுராணம் கைசிகமஹாத்மியத்தில் விரிவாய்க் காணலாம்.



மார்பிற்றுங்கி, மெல்லியவிரல்கள் சிவப்பெய்தத் தடவியிழற்றிச் "சித்திக்குந்திசைக்குந்தேறுங்கைகூப்பும்" என்கிறபடியே பெரிய பெருமாளை அனவரதபாவனை பண்ணிக்கொண்டு திருப்புகழ் பலவும்பாடிப் போருகையில், ஒருநாள் பெரிய பெருமாளுடைய திருமஞ்சனார்த்தமாக ஸகலவைபவங்களுடன் திருக்காவேரிக்கு வந்த ஸ்ரீலோகசாரங்க முனிவரரென்கிற ஜீயர் மெய்மறந்து கானம்பண்ணிக்கொண்டு நிற்கிற இவரைப்பார்த்து த்யானநிஷ்டரென் றறிந்துகொள்ளாமல் தமது வர்ணதர்மத்தைமாத்திரமே கவனித்துச் சிற்றங்கொண்டு ஸமீபஸ்தர்களுக்கு ஸாஞ்ஞிப்பிக்க, அவர்களிவர்மேல் கல்கொண்டெறிய, அது இவர் திருமேனியிற் படத், திருக்கண்களை விழித்துப்பார்த்துப் பயந்து "அபராதாங் க்ஷமஸ்வ" என்கிறபடி அடியேனுடைய அபராதங்களை க்ஷமித் தருளவேண்டுமென்று சொல்லிக்கொண்டே பிற்காலித்து விலகினார்.

அவ்வளவிலே, பக்த ஹ்ருதய நிவாஸியான ஸ்ரீரங்கநாதனுடைய திருமேனியில் செந்நீர் ப்ரவாஹமிட்டது. அதைக்கண்ட அர்ச்சகபரிசாரகர்கள் பயந்தோடிச் சோழபூபதிக்கறிவிக்க, அவனும்வந்து சேவித்து நடுநடுங்கி அநேக விஞ்ஞாபனங்கள் செய்துகொண்டவனாயினான். அனந்தரம் நாச்சியார் பெருமாளிடத்தில் நமக்கந்தரங்கரான பாண்பெருமாள் இன்னமும் புறம்பேநிற்கலாவதோவென்று விண்ணப்பஞ்செய்யத் "ததோமேதத்கதம்மநः" என்கிறபடியே பெருமாளும் உவந்தவுள்ளத்தராகி, இவரை அருளப்பாடிட்டுப்போகவிட; அப்போதும் இவர் நித்யஸூரிகளே சிறுமாமனிசராய் வந்து சஞ்சரிக்கிற இரண்டாற்றின் மத்யப்ரதேசத்தை நீசனாகிய இவன் மிதிக்கக் கூடுமோவென்று ஸ்வரூபத்தால் வந்த நைச்சியத்தாலும் ஸ்வவர்ணத்தால்வந்த நைச்சியத்தாலும் பிற்காலித்துக் கடிதடையிட்டு அகலப்பார்த்தார். அதனால் பெரிய பெருமாள், பின்னையுமிவர் பக்கலுள்ள க்ருபாதிசயத்தாலும், தனது நிரங்குச ஸ்வாதந்த்ரியத்தாலும் ஸ்ரீலோகசாரங்க முனீந்த்ரரைப் பார்த்து ஜீயரே! நமக் கந்தரங்கரான பாண்பெருமாளை நீர் நெகிழ நினைத்து நம்முடைய திருமேனியை நோகச்செய்வது தகுதியோ? அவரை உமது தோளிலேற்றிக்கொண்டு நம்பக்கலில் கடுகக் கொண்டுவர வேண்டுமென்று ஸ்வப்நமுகேன வாஜ்ஞைச் செய்தார்.

அவரும் விடிவோரையிலெழுந்திருந்து "அத்யமே ஸபலஞ் ஜந்மஸுப்ரபாதாசமேநிசா" என்கிறபடியே அத்தைவிடிவு தமக்கு நல்விடிவாயிற்றென்றுந் தம்முடைய ஜந்மம் ஸப்ரயோஜனத்தையடைந்ததென்றும் நினைத்து ஸ்வப்நத்தை நிச்சயித்து, மிகவும் ஹ்ருஷ்டராய்த், தோதவத்தித் தூய்மறையோருடன் திருமுகத்துறையிலே "காட்கரலே நீராடி" அநுஷ்டானத்தை முடித்துக்கொண்டு "ஸுதூரமபி கந்தவ்யம் யத்ர பாகவதஸ்ஸ்திதஃ" என்கிறபடி பாகவதர்கள் எவ்வளவு தூரத்திலிருக்கினும் ஆயாஸமில்லாமலே எதிர்கொண்டுபோய்க் காணவேண்டியது ஸ்வரூபமாகையாலே, "யாழினிசை வண்டினங்களாளம் வைக்கும்" அரங்கத்தை நோக்கி ஸேவித்துக் காலந்செய்து கொண்டு அதிதூரத்தில் நிற்கிற இவ்வாழ்வாரிடத்தே திருப்போடெழுந்தருளித் திருவடிகளிலே தாளுந்தடக்கையுங் கூப்பிப்பணித்து ஸ்வாமி! தேவரீரை நம்பெருமாள் எழுந்தருளுவித்துக்கொண்டு வரவேண்டுமென்று அடியேனை நியமித்தருளினாரென்றுவிண்ணப்பஞ்செய்ய; இவர் "குலந்தாங்குசாதிகள் நாலிலுங்கீழிழிந்து" என்றும், "குலங்களாயவீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்" என்றும், "நீசனேனிறையொன்றுமிலேன்" என்றுஞ் சொல்லுகிறபடியே நைச்யத்தை முன்னிட்டுக்கொண்டு பிற்காலித்துத், திருவரங்கப் பெருநகரை நான் மிதிப்பேனோவென்ன; ஜீயர் ஆகில் பெரியபெருமாளருளப்பாட்டப்படியேயடியேனுடையதோளின்மேலேயெழுந்தருளுவித்துக் கொண்டுபோகச் சித்தமா யிருக்கின்றேனென்ன; அதின்மேல் இவர் "செய்த்தலை யெழுநாற்றுப் போலவன் செய்வன செய்து கொள்ள" என்கிறபடியே அவன் செய்யுஞ் சேமத்தையெண்ணித் தெளிவுற்றுப் பரதந்த்ரராய்நிற்க; ஜீயர் முக்தனைப்போருமவனை ஆதிவாஹிகர் எழுந்தருளுவித்துக்கொண்டு திருமாமணிமண்டபத்தேறப்போமாபோலே, இவரைத்தமது திருத்தோளின்மேலே கொண்டு அழகிய மணவாளன் திருமண்டபத்தவருகே புகப், பெரியபெருமாள் தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை நித்ய தரித்திரனுக்கு நிதிகாட்டுவாரைப்போலே, இவருக்குக்காட்டியருள "கிரீடகேயூர ரத்நகுண்டல ப்ரலம்பமுக்தா மணிஹார



பூஷிதம், விசாலவக்ஷஸ்ஸ்தலசோபிகௌஸ்துபம், ப்ரியாசமேதஸ்யாத் யுதிதோருவக்ஷஸம், ப்ரதப்தசாமீகரசாருவாஸஸம் ஸமேகலம்நூபுர ஸோபிதாங்க்ரிகம் ஸுவர்த்துலிஜாத ம்ருணாளகோமளம்ததாநமச்சச்ச விபந்தஸூத்ரகம், புஜோபதாநம்ப்ரஸ்ருதாக்யஹஸ்தம்,நிகுஞ்சிதோத்தாநிதபாதயுக்மம்,ஸுதீர்க்கமுத்பாஹுமுதக்ரவேஷம் புஜங்கதல்பம் புருஷந்ததர்ஸ" என்கிறபடி இரத்னகசிதமான கிரீட - கேயூர - கௌஸ்துப - முக்தாஹார - யக்ஞோபவீத - பாதாபரணாதிகளையும் பெரியபிராட்டியார் அமர்ந்திருக்குஞ் செல்வக்களஞ்சியமான விசாலவக்ஷஸ்தலத்தையும் ப்ரகாசித்து வலத்திருக்கரத்தைச் சிரசுக் கணையாக வைத்து இடத்திருக்கரத்தைத் தொடையின்மேலில் படியவைத்துக் கொண்டு, வலத்திருத்தாளைச் செவ்வேநீட்டி, இடத்திருத்தாளை யதன்மேல் அழகாய்த் துவளக்கிடத்திக் கொண்டு, திருவனந்தாழ்வானென்னும் படுக்கைமேல் சாய்ந்தருளியிருக்கிற திருக்கோலத்தைச்சேவித்து, ஸ்தனந்தயப்ரஜை மாதாவினுடைய ஸர்வாவயவங்களுங்கிடக்கச் செய்தே, முலையிலே வாய்வைக்குமாபோலே (சேஷிபக்கல் சேஷபூதன் இழிபுந்துறை திருவடிகளாகையாலே) அவனுடைய ஸர்வாவயவங்களுங்கிடக்கச், சேஷித்வ-போக்யத்வ - உபாயத்வங்களில் குறைவற்ற திருவடிகளையேபற்றி "அரங்கத்தம்மான்திருக் கமலபாதங்கள் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றதே" என்று பாசுரமருளிச்செய்து (அரங்கத்தம்மான் என்கையால்) சேஷித்வத்தையும், (கமலம் என்கையால்) போக்யத்வத்தையும், (பாதம் என்கையால்) உபாயத்வத்தையும் வெளியிட்டு ஸ்ரீபெரியாழ்வார் "திருப்பாத கேசத்தை விருப்பாலுரைத்" தநுபவித்தாற்போலே, "இருளகற்று மெறிகதிரோன் மண்டலத்தூடேற்றிவைத்தேணி வாங்கி, யருள்கொடுத்திட் டடியவரை யாட்கொள்வானை" அழகிய மணவாளனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தைப் பாதாதிகேசாந்தமாக அநுபவித்து அவ்வநுபவஜனிதப்ரீதி யதிசயத்தாலே "அமலனாதிபிரான்" என்கிற திவ்ய ப்ரபந்தத்தைப் பத்துப்பாசுரங்களாகப் பிற்பாடரும் அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கலாவதாகத் திருவாய்மலர்ந்து உபகரித்தருளி உலகத்தை வாழ்

வித்து மிகவுமுவப்போடே நிற்க அப்பொழுதே அழகிய மணவாளன் (ஆறுமேவர் குடிமைவர்களுள் மண்பற்றுகழற்றுதாப்போல) இவ்வை அந்த திருமேனியோடே அங்கீகரித்தருள, அனைவரும் காணும்படி இவர் அவன் திருவடிகளிலே அந்தர்ப்பவித்தருளினார். இவ்வாழ்வார் இந்த விபூதியிலெழுந்தருளியிருந்தது என்பது திருநக்ஷத்ரம்.

### திருநக்ஷத்திரத் தனியன்.

வ்ருஸ்சிகே ரோஹிணிஜாதம் ஸ்ரீபாணிம்நிசளாபுரே, ஸ்ரீவத்ஸாம்சாய சேத்ரம் முநிவாஹநமாஸ்ரயே.

ஸ்ரீதிருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

☞ ஸ்ரீ திருப்பாணாழ்வார் திருவவதார வருஷம் சசகசக -க்குச் சரியான ப்ரமாதி வருஷம்.

# ஸ்ரீ திருமங்கையாழ்வார் வைபவம்.

## தனியன்.

உடையவரருளிச்செய்தது.

நேரிசைவெண்பா.

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியான் மந்திரங்கொண் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

"ஸமஜாயத தத்ர பாபப்ரமுக: கர்சகநீலநாமக:, புருஷோத்தம கார்முகாம்சகஸ் ஸ்புரிதே கார்த்திகக்ருத்திகோடுநி" என்கிறபடி கார்த்திகை மாதம் க்ருத்திகை நக்ஷத்ரத்தில் ஸ்ரீசார்ங்காம்ச பூதரான கலிகன்றி நீலனென்னும் பெயரையுடையவராய் மிலேச்சகுலத்தி லவதரித்தருளினார் என்றும் "பரகால ஹரிம்வந்தே ஹரிபாதகுஹாஸ்ரயம், உந்நதப்ரதிகூலேப கும்பஸம்பேத விப்ரமம்" என்கிறபடி ஸ்ரீயபதியினுடைய திருவடித்தாமரைகளாகிற குஹையை ஆச்ரயித்து ப்ராந்தலட்சணத்தையுடைய ப்ரதிவாதிகளான யானைகளின் மஸ்தகங்களைப் பேதிக்குமதில் கொஞ்சமேனும் அவகாசம்பெறாமல் வ்யாபரிக்கும் பராக்ரமசாலியான பரகாலனென்னும் ஸிம்ஹத்தைச் சேவிக்கின்றேன் என்றும், சப்தபலத்தாலே மிரட்டப்படுகிற பாஹ்யமதயானைகளைப் பரிவாரங்களாகவுடைய ஸ்ரீய:பதியினுடைய திருவடிகளில் வணங்கும் முடியினையுடைய பரகாலனென்னும் ஸிம்ஹமே! தேவரீருடைய திருவடிகளை யாச்ரயிக்கிறேன் என்றும் இவரவதாரவிசேஷத்தைத் திவ்யஸூரிசரிதையில் சொல்லிற்று.

இவ்வாழ்வாருடைய வைபவமிருக்கும்படி. பெங்களேயென்னில்; திருவாலிதிருநகரியைச்சார்ந்த திருக்குறையலூரில் கள்ளக்குடிமரபில் தலைவனாயிருந்த நீலன் என்பவருக்குப் புத்ரராக "ஸாதாமாதாப்தாநாம் கலியுக ஸவாநாம பக்ஷே, நளேவர்ஷே மாஸேஸாதிசாமே கைவகருத்ரா:, திநேதாரே வஹ்நேர்ஸவிலிகிரணே பூர்ணிமஜாஷி, க்ஷிதாவாவிர்ப்பூத: கலிபுரமே

யாத்ம மஹிமா" என்கிறபடி. கலியாப்தம் மூன்னூற்றெ—— நிகழ்ந்த நளவருஷம் சரத்ருதுவில் வ்ருச்சிக ஸூர்ய ப்ரவேசகால மாகிய கார்த்திகைமாஸம் குருவாரம் பௌர்ணமி க்ருத்திகா நக்ஷத்ரங்கூடிய சுபதினத்தில் ஸ்ரீசார்ங்காம்சரா யவதரித்தருள; தந்தையார் இவருடைய கட்டழகைக்கண்டுகளித்துஜாதகர்மமுதலிய வற்றைச் செய்துவைத்து இவருக்கும் நீலனென்றே நாமகரணஞ் செய்து வளர்த்துவருகையில் இவர் "தெரியேன்பாலகனாய்" என்கிறபடியே பால்யாவஸ்தானந்தரம் சகல வித்யாபாரங்கதராய் மல்வித்தை வில்வித்தை அஸ்வாரோஹண கஜாரோஹண ரதா ரோஹணாதி சங்க்ராமலக்ஷணோ பாயங்களிலும் அதிநிபுணராய்ச், சோழபூபதியைச்சேவித்து ஓர்சேனைவீரராகி நீர்மேல்நடப்பான், நிழலிலொதுங்குவான், தோராவழக்கன், உயரத் தொங்குவான், தாளூதுவான், சாயைப்பிடிப்பான் என்கிற தோள்துணைவர்களோடு அதிக பராக்ரமசாலியா யிருக்கச், சோழராஜன் கண்டு சந்தோஷித்துஇவரைத்திருவாலிதிருநகரிக்குச்சிற்றரசனாக்கிவைத்தான்.

அக்காலத்தில் இவர் "மாரனார்வரிவெஞ்சிலைக்காட்செய்து" "தெரிவைமாருருவமேமருவி". மிகவும் விஷயப்ரவணராயிருக்க; ஆலிநாட்டிலே நன்றாயிருப்பதொரு தடத்தவிழ் தாமரைப்பொய்கையில் "சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடுஞ்சீர்" என்கிறபடியே சில அப்ஸரஸ்ஸூக்கள் நாளும்வந்து ஜலக்ரீடைபண்ணிப் போகாநிற்க; அவர்களில் திருமங்கையென்னுமொரு அப்ஸரஸ்ஸூ ஒருநாளில் குமுதமலர் கொய்துவரப்போக அச்சமயத்தில் மற்றவர்களவளைமறந்து விமானமேறிக் ககனமார்க்கமாய்ப்போய் விட; அந்த மங்கையர்க்கரசி மாநுஷமான சரீரத்தைப் பரிக்ரஹித்துத் தனித்துநிற்க; அப்பொழுது திருநகரியில் எம்பெருமானைச்சேவித்துத்திரும்பித் திருநாங்கூருக்குப் போவாரொருபாகவதர் அநுஷ்டானார்த்தமாகஅந்தப்பொய்கைக்குச்சென்றுதனித்துநிற்கிற அப்பேண்ணரசியைப் பார்த்து நீயார் பிள்ளாய்!என்று கேட்க; ஸ்வாமி அடியேன் திருமங்கையென்னும் நாமத்தையுடையளாய்ச் சகிகளான அப்ஸரஸ்ஸூக்களோடு அவர்கட்கெல்லாம் நாயகியாய்த் திவ்யரூபத்தோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தவள்; அப்படியிருக்கையி லொருநாள் ஹிமவத்கிரிக்குப்போய் அங்குள்ள வைபவங்களையெல்லாம் பார்த்துக்கொண்டுவருமளவில் ஒருசித்தாச்ரமத்தில் ஸ்ரீமந்நாராயணாம்சஜரான கபிலாசார்யர் பக



வத்வைபவங்களைச்சொல்ல அதைக்கேட்டுக் கொண்டிருந்த மஹருஷிகளில் ஒருவரைப்பார்த்து இவர் குரூபியாய்க் காணப்படுகிறா ரென்று அடியேன் பரிஹாசம்பண்ணுகிற்க; கபிலாசார்யருக்கு அடியேன்பேரில் சீற்றம்பிறந்து நீ மனுஷ்ய தேஹத்தைப்பரிக்ரஹித்து நீசனுக்குவாழ்க்கைப்படக் கடவாயென்று சபிக்க; அப்போது அடியேன் அதிகசோகத்தோடே அவரை ப்ரார்த்திக்க; அவர் ப்ரஸன்னராய்ப்பின்னாய்! ஜகத்ரக்ஷணார்த்தமாகநம்முடைய சார்ங்காம்சஜரான பரகாலனென்பவர் திருக்குறையலூரில் அவதரித்துத் திருவாலிதிருநகரிக் கதிபதியாகி வாழ்கின்றாராகையால் நீ அவருக்குப்பத்நியாயிருந்து அவரைப்பாகவதோத்தமராம்படிக்குப் புருஷகாரம் பண்ணுவாயாகில் அப்போதுன்குறை தீருமென்று திருவாய் மலர்ந்தருளினார்; ஆகலின் அடியேனிங்குவந்து இங்ஙனம் மாநுஷமான சரீரத்தை பராபித்திருக்கின்றேனென்று தான்வந்த க்ரமத்தைச்சொல்ல; அந்தபாகவதரும் புத்ரஹீனதையாலே மிகவுஞ் சந்துஷ்டராயுகந்து; ஆகில் குழந்தாய்! நமக்கு நீர் புத்ரியாகவிருப்பீர் வாருமென்று தமது திருமாளிகைக்கழைத்துக் கொண்டுபோய்ப் பத்நியையழைத்துத் தமக்குக் குமாரி வந்த க்ரமத்தைச்சொல்லி ரக்ஷிக்கும்படிக் காட்டிக்கொடுக்க; அவ்வம்மையும் † வந்த்யையாகையாலே, அதிப்ரீதியோடே யங்கீகரித்துக் குமுதமலரைக் கையிற்கொண் டிருந்த காரணமாகக் "குமுதவல்லிநாச்சியார்" என்று திருநாமஞ்சாற்றி வளர்த்துக் கொண்டுவர; அவ்வளவில் அந்தப் பெண்பிள்ளையின் கட்டழகைக்கண்டுங் கேட்டுமிருந்த சிலர் நீல நிறத்தரான இவ்வாழ்வாருக்குணர்த்தினர்.

அதுகேட்டு இவர் நின்றவா நில்லாநெஞ்சினையுடையராய்ச் "கலவியேகருதியோடினேன்" என்கிறபடியே அப்பொழுதே திருநாங்கூருக்குச்சென்று, மருத்துவனை அந்தப்பாகவதர் திருமாளிகைக்குப் புகுந்து அவருடனே சம்பாஷணம் பண்ணிக்கொண்டு திண்ணையிலே யிருக்கச்செய்தே, அப்பெண்பிள்ளை அவ்விடத்தி லுலாவக் கண்டுவிஸ்மிதராய், அந்தப்பாகவதருடனே இந்தச்சுவர்ணசோபிதமான திருவுருவமைந்தபெண் அனபத்யரான உமக்கு எங்ஙனம் வாய்த்ததென்றுகேட்க; அவர் அப்பெண்ணின் வரலாற்றை விவரமாகத் தெரிவித்துத் தனக்கிருந்த புத்ரசோகந் தீரப்பெற்

† வந்த்யை - மலடி.

றதையுமுரைத்து அக்ஞாதகுலகோத்ரையான இவளையாருக்கு வாழ்க்கைப்படுத்துவதென்று இவளுடைய விவாஹோசித பருவத்தைக்கண்டு வ்யாகுலாந்தக்கரணராகாநின்றே னென்றுஞ் சொல்ல; அவ்வளவிலே இவர், அப்பெண்ணைத் தமக்கே பத்நியாகத்தரவேண்டு மென்றுகேட்டு அப்போதே வஸ்த்ராபூஷணாதிகளைச் சங்கோசமறக்கொடுத்து மிகவுமனுவர்த்திக்க; அவருமிவருக்கே உதகம்பண்ணிக்கொடுக்க உத்யோகிக்க; அத்தருவாயில் அந்தப் பெண்பிள்ளை "தாப:புண்ட்ரஸ்ததாநாம மந்த்ரோயாகஶ்ச பஞ்சம:" என்கிறபடி தப்தசக்ராங்கன - ஊர்த்வபுண்ட்ரதாஸ்யநாம - திருவஷ்டாக்ஷரீ யுபதேச - திருவாராதனங்களையுடையவர்களுக்கொழிய மற்றொருவற் கென்னைப்பேசவொட்டேனென்று தன்னுடைய அத்யவஸாயத்தைச்சொல்ல; இவர் அவ்வசனத்தைக்கேட்டதே காரணமாகத் திருநறையூருக்குச்சென்று "ஶாபஸ்ய ஶீக்ரம்" என்கிறபடியே அதித்வரையோடு "பொன்னியலுமாடக்கவாடங் கடந்துபுக்கு" என்கிறபடியே திருநறையூர்நம்பி திருமுன்பேசென்றுநின்று ப்ரார்த்தித்து "அக்நிதப்தேநசக்ரேண பாஹுமூலே லாஞ்சித:" என்கிறபடியே தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின் கோயிற்பொறியாலே பொற்றுண்டு "ஸர்வைர் ப்ரவேசம்ருதா தார்யம் ஊர்த்வபுண்ட்ரம் யதாவிதி, ருஜூநி ஸாந்தராளாநி ஹரே: கேசவ்யத்வா தமஸ்வதி" என்கிறபடி நெற்றி-உதரம்-கண்டம்-உதரத்தின்வலப்புறம்-இடப்புறம்-வலப்புஜம்இடப்புஜம்-வலத்தோள் இடத்தோள்-அடிமுதுகு-பிடரி ஆகிய விப்பன்னிரண்டு அவயவப்ரதேசங்களிலும் இடைவெளியுடைய ஊர்த்வபுண்ட்ரங்களைத் தரித்துக்கொண்டு துளசிநளிநாக்ஷமாலைகளைக் கழுத்திலணிந்து கம்பீரமாய்க்காண்பதோர்சிரேயஸ்ஸையுடையராய்க், குமுதவல்லியார் திருமாளிகைக்கேறவந்து அந்தத்திருமங்கையின் ஸ்வீகாரத்தாயைநோக்கி என்பக்ஷத்திலினியென்ன குறைகாண்பீர்கள்? என்று கேட்டுநிற்க; குமுதவல்லியார் "ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம்பரம், தஸ்மாத்பரதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் ந்ருப" என்கிறபடியே சமஸ்த தேவதைகளையு மாராதிப்பதைக்காட்டில் விஷ்ணுவை ஆராதிப்பது சிரேஷ்டமென்றும், அதைக்காட்டில் அவனடியார்களான பாகவதர்களையாராதிப்பது அத்யுத்க்ருஷ்டமென்றும் சொல்லப்படுகையால், நீர் ஒரு





ஸம்வத்ஸர காலம் நித்தியம் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களை அமுதுசெய்வித்து அவர்களுடைய ஸ்ரீபாததீர்த்த தளிகை ப்ரசாதங்களை ஸ்வீகரித்து ஸ்வரூபஜ்ஞானமொழிய உம்மை நான்பார்த்தாவாக அங்கீகரியேனென்று ஒரு நியமம்பண்ண; இவர் அதற்குமிசைந்து ப்ராவண்யாதிசயத்தாலே ப்ரதிக்ஞைபண்ணிக் கொடுக்க; அனந்தரம் அந்தப்பெண்பிள்ளையை இவருக்கு ஊரும் நாடுமறிய நல்லதோர் வதுவைசெய்து உதகபூர்வகமாகச் சமர்ப்பித்தார்கள்.

அதன்பின்பு இவ்வாழ்வார் திருமாலடியாரைப்பூசிக்க ஒருப்பட்டு, அதற்காகத்தம்முடைய சர்வசொத்தையும் வ்ரயம்பண்ணித் ததீயாராதனகைங்கர்யஞ்செய்துகொண்டிருக்க; அப்போது புறங்கூறிக்காலங்கழிக்குஞ் சிலபுத்திஹீனர்கள் சோழபூபதியிடத்திற்போய்ச் சமயம்பார்த்துப் பரகாலன் பகுதித்ரவ்யங்களை யெல்லாம் வ்ரயம்பண்ணித் ததியாராதனஞ் செய்து, ஏழையாய் விடுகிறானே நீர் அவன்கையில் ஒருதேசத்தின் ஆளுகையைக்கொடுத்திருக்கையால் என்ன பிரயோசனத்தை யடையப்போகிறீரென்ன? அவன் அதைக்கேட்டுக் குடிகளுடைய பகுதிக்காக இவர்பக்கல் தரவுக்காரர்களையனுப்ப; அவர்கள் அதித்வரையாய் இவரிடம்வந்து பகுதியைக் கொடுமென்றுகேட்க; இவர் அவர்களுக்குச்சில சமாதானவார்த்தைகளைச்சொல்ல அதை அவர்கள் கேளாமல் நிர்ப்பந்திக்கத் தலைப்பட, இவரவர்களைத் தள்ளிவிட, அவர்கள் அரசனிடம் போய் நடந்ததை யறிவிக்க அவன் தன்னுடைய ஆக்ஞைக்குப் பங்கம் வரலாமோவென்று சீறித் தன்னுடைய சேனாநாயகனை சண்டேஸ்வரனென்பவனை யழைத்து நீபோய் அந்தப்பரகாலனைக் கைப்பிடியாகக் கொண்டுவரக்கடவா யென்றாக்ஞாபிக்க; அவனும் அப்போதே நால்வகைச்சேனைகளையுங் கூட்டிக்கொண்டு வெளிப்பட்டுவந்து, நாகைப்பட்டணத்திலிருந்து திருவாலிதிருநகரிவரையில் அங்கங்குத் தளத்தைப் பிரித்து அணிவகுத்து வளைத்துக் கொண்டு கோலாஹலஞ்செய்ய; அந்தச்செய்தியை இவர்சூரர்களாலறிந்துகொண்டு தம்முடைய சேனாபதியான சத்ருபஞ்ஜனனை அவர்கள்மேலேவ; சத்ருபஞ்ஜனனும் அந்தக்ஷணமே சில ஸைன்யங்களுடன் எதிர்கொண்டுபோய் தளநாயகனாய்வந்திருந்த சண்டேஸ்வரனை ஸம்ஹரித்து, அவன் சேனைகளையும் பராஜிதராக்கியோட்டிவிட; அந்தச்சண்டேஸ்வரனுடையபுத்ரனாகிய சுப்ரமண்ய

உபாசகனை கார்த்திகேய னென்பவன் பிதாவின் மரணத்தைக் கேட்டுச் சோகாவிஷ்டனாய்க் கோபித்தெழுந்து, திரும்பிச் சேனைகளைத் துணை சேர்த்துக் கொண்டெடுத்து வந்து, ப்ரமாதமான யுத்தஞ்செய்தும் ஜயம்பெறாமல் அலுத்துத் திரும்பியோடி அரசனுக்கறிவிக்க; அவனும் விதேஹ பர்ப்பராதிராஜர்களைச்சஹாயமாகக்கூட்டிக்கொண்டு படையெடுத்து, அதிரப்பறை முழக்கஞ்செய்துகொண்டு யுத்தத்திற்குவர; அவனெதிரில் இவர்தாமே யுத்தோன்முகராகி ப்ரபலமானயுத்தஞ்செய்து கொண்டிருக்கையில், இவருடைய மந்த்ரிகளிலொருவனை சாயை பிடிப்பான்கையிலே அவன் பாண்டிய மிதுலாதிபதிகளோடும் அகப்பட்டுக்கொண்டு பராஜயமடைந்து பிழைக்க விடந்தேடி யோடிச் சிலநாள்கழிந்த பின்பு ஸ்ரீவைஷ்ணவவேஷம் பூண்டுவந்து கலந்திருந்து ஆயமறிந்துகொண்டு, சமயம்வாய்த்தபோது கபடமார்க்கமாய்த் தன்னுடைய சேனைகளைவரவழைத்துத் திடீரென்று வளைத்துக்கொண்டு, இவரைப்பிடித்துக் காவலுக்குட்படுத்தி நரையூர் நம்பி சன்னிதியிலே கொண்டுபோய்விட்டுக் காவல்வைத்துப்போயினன்; அன்றிரவில் நரையூர் நம்பியிடத்தில் நாச்சியார் சுவாமீ! தேவர் சன்னதியில் நம்முடைய பரகாலன் உபவாஸிதராயிருப்பது தகுமோவென்ன; நம்பி நாச்சியார் கேள்விக்கிசைந்து நாச்சியாருந்தானுமாய் மடைப்பள்ளிக்குள்போய், அங்கிருந்த ப்ரஸாதசேஷங்களையும் பாலமுதையும் நாச்சியார் திருக்கையாலெடுப்பித்துக்கொண்டு இவரிடம் வந்து அவற்றை ப்ரசாதிக்க; இவர் ஸ்வீகரித்துச் சயனித்துக்கொண்டு, தனக்குநேர்ந்த ஆபத்தை நினைப்பதை விட்டு, இன்றுதொட்டு ததியாராதன கைங்கர்யம் சித்தியாமற் போகிறதேயென்று வ்யாகுலமடைந்து, பெரியபெருமாளையும், பேரருளாளனையும், திருவேங்கடத்தப்பனையும் நினைத்துக்கொண்டு சோகித்துக்கிடக்க; இவருடைய ஸ்வப்நத்தில் பேரருளாளன் ப்ரசன்னமாய், ஆழ்வீர்! நீர் நம்முடைய காஞ்சிமாநகரிக்கு வருவீராகில் உம்முடைய கவலையைத் தீர்த்தருள்வோமென்றருளிச்செய்து போக; இவரும் வைகறையிலெழுந்து சோழபூபதியின்மந்த்ரிகளைநோக்கி, நீங்கள் என்னுடன் காஞ்சீபுரிக்குவந்தால், அவ்விடத்தில் ஆழத்தனமாகச் சேமித்துக்கிடக்குந்தனத்திலிருந்து உங்களுக்குத் தரவேண்டிய பகுதி த்ரவ்யங்களைக் கொடுத்து விடுவேனென்ன; அவர்களிதை அரசனுக்குத் தெரிவிப்பிக்க; அவன் இவரைக்



காவலுடனே கொண்டுபோய் இப்போது சொல்லியபடியே செய்யக் கடவீரென் றுக்ஞாபித்தான்.

அவர்களும் ஆக்ஞைப்படிக்கே இவரைக் காவலோடே காஞ்சிநகர்க் கழைத்துப் போக; இவரவ்விடத்திற்போய்ப் பேரருளாளன் திருவடிகளில் தம்முடைய நெஞ்சை யொப்புவித்துக் கண்களை மூடிக்கொண்டு கிடக்கக் கருணாகரனும் ஆர்த்திதார்த்தப்ரதானசரனை பேரருளாளன் மறுபடியும் இவர் ஸ்வப்நத்திலவந்து அஞ்சாதே கொள்ளும் ஆழ்வீரென்று வேகவதி தீரத்திலே தனமிருக்குமிடத்தை அடையாளத்தோடுங்காட்டியருளிப்போக; இவர் விழித்தெழுந்துபோய் அவர் காட்டிய அடையாளத்தைக்கண்டு அவ்விடத்தில் பூமியைக்கல்லிச்சோதித்து த்ரவ்யமிருக்கக்கண்டு, இராஜ மனுஷ்யரிடத்திற் சேர்க்கவேண்டிய பகுதித் தொகையைக்கொடுத்துவிட்டு மிகுதியாயிருந்த த்ரவ்யத்தைத் ததீயாராதனார்த்தமாக வைத்துக்கொள்ள; அப்போதுத் தரவுக்காரர்கள் இதன்றியுந் தான்யமும் வரவேணுமென்று நிர்ப்பந்திக்க; இவர் அற்றைப்பொழுதெல்லாம் வ்யாகுலாந்தகரணராகியிருக்க; அன்றிரவிலும் அருளாழிப்பிரானை பேரருளாளன் இவருக்கு ஸ்வப்நஞ் சாதித்து ஆழ்வீர்! அந்நாமம்போய் ஆற்றின்மணலைத் திரட்டி அளந்துகொடுமென் றருளிச்செய்துபோக; இவர் விடிவோரையிலெழுந்து அவர்களை வேகவதியாற்றுக் கழைத்துக்கொண்டுபோய், அங்குள்ள மணலைத்திரட்டி மரக்காலிட்டளக்க, அது அவர்கள் கண்ணுக்குச் செந்நெல்லாக, அவர்களற்புதமடைந்து பெற்றுக்கொண்டு இவரைவிட்டுச் சோழராஜனிடத்திற்போய் பகுதித்த்ரவ்யமுந் தரவுதான்யமுங் கிடைத்தவிதத்தை உள்ளபடி யறிவிக்க அவன் கேட்டு அச்சமுற்று, இவர் சாமான்யரல்லரென்றுணர்ந்து த்ரௌபதைக்குக்காதகரெதிரிற்புடவைசுரந்தாற்போலே இவருக்கும் காவலினெதிரில் த்ரவ்யஞ்சுரந்ததாகும் என்று மந்திரிகளிடத்திற்சொல்லி அச்சப்பட்டு, அந்தத்ரவ்யத்தைத் தன்னுடைய நிதியில் சேர்த்துக்கொள்ளாமல் ஒருபுறமாய் வைத்திருந்து, இவரை அதிகமர்யாதையோடுவரவழைத்து, இவர்திருவடிகளில் அவற்றை அபராதகாணிக்கையாகச்சமர்ப்பித்து, தண்டனிட்டெழுந்து அஞ்சலிஹஸ்தனாய்நின்று அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு, பஹுமுகமாக பஹுமானமுஞ் செய்து போக விட்டான். அதன்பின்பு இவர் அந்த த்ரவ்யத்தை வைத்துக்கொண்டு சில

காலத் ததீயாராதனத்தை நடத்திவந்து, அதுவும் இலையிடுத்த வாறே, கைங்கர்யத்தில் இவர்களூற்றத்தால், வழிபறித்தா லிதும் அதைக்குறைவறநடத்தவேணுமென்று காருர் ஆரண்யங்களிற்போய் வழிகட்டிப்பறித்துக்கொண்டுவந்து கைங்கர்யத்திற்குபயோகப்படுத்தி வருகையிலுந் த்ரவ்யமெட்டாமையாயிருக்கப் பின்னையுந் தனுர்ஜ்ஞாம்பண்ணவேண்டி, கீர்மேல்நடப்பான்-கிழுளி லொளுக்குவான்-தாருதி-தோராவழக்கன் என்கிற நால்வரையும் வெங்கேவளுமார்க்கத்திலிருத்தித்தாமுமொருமார்க்கத்திலிருந்து அந்திசந்தி இராக்காலங்களில் வழிபோவர்களுக்குள் உடைமையர் களாய்க்காணப்படுபவர்களையடக்கி, அவர்கள் ஸ்வத்தையெல்லாம் பறித்துக்கொண்டுவந்து, பதாமசேதாதமாய்ச்சிலவிட்டுத் ததீயாராதனைகளை நடத்திவந்தார். ஒருநாள் மத்தியாத்திரியில் ஒரு அம்மையார் தன்னுடைய பர்த்தா ப்ரஸாதங்கொண்ட தாம்பூல பாத்திரத்தை சுத்திசெய்கைக்காக வெளியே கொண்டுவர, இவர் திடீக்கென்றோடி அதைவெடுக்கின்று நிற்க, அந்த அம்மையார் திருவாய் கப்பெரியவனின் எங்கு இருக்க, இவர் பயந்து ஐயோ! இவ்வம்மையார் பாவனைதவென்றறியாமற் போயேனே! என்று விசனப்பட்டு அந்த பாத்திரத்தை அவள் வசத்தில் எறிந்துவிட்டோடிப்போய், மார்க்கத்தில் † திருமணக் கொல்லையில் உன்னதமாயிருந்ததொரு அஸ்வத்த வ்ருக்ஷத்தின்மேலேறிப்பதுங்கி இன்னும் யாராவது வருவாருண்டோ வென்று பார்த்துக் கொண்டிருந்தார்.

அவ்வளவிலே "ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வாமர்த்யமயீந்தநும்-மக்நாநுத்தரதே லோகாந்காருண்யாச்சாஸ்த்ரபாணிநா" என்கிறபடி ஸர்வஸ்வாமியான ஸ்ரீயபதி தன்னுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே, ஸம்ஸாரஸாகரத்தில் மூழ்கிக்கிடக்கிற சேதனர்களைத் தன்னுடைய சாஸ்த்ரமாகிய திருக்கையாலெடுத்து ரக்ஷிக்கைக்காக மநுஷ்யதேஹத்தைத் தரித்து எதிரேவருகிறானென்று மதத்தொக்க, யமுனைத்துறைவன் (இவர் வழிபறித் தாலுந் ததீயாராதனையாகிற சமபுருஷார்த்த நிஷ்டையில் த்ருடப்பெற் றிருப்பதையே பற்றாசாக) இவரை விசேஷ கடாக்ஷம் பண்ணி

† ஸ்ரீயபதி மணக்கோலங் கொண்டெழுந்தருளியதே காரணமாக அந்த சொல்லைக்குத் "திருமணக்கொல்லை" எனப் பெயர் வந்தது.



பங்கிகரிக்கக்கடவோமென்று திருவுள்ளம்பற்றி, பிராட்டிசஹித ருமாய் ப்ராஹ்மண வேஷம்பூண்டு மணக்கோலந்தரித்து அனவற்ற ஸ்த்ரீதன த்ரவ்யங்களை யெடுப்பித்துக்கொண்டு ஒருபெருத்திரளோடு வாராநிற்க; இவர்கண்டு, அதிக ஸந்தோஷத்துடனே ஆவேசித்துக்கொண்டு அதுகதராய் நெருங்கிப் பெரிய ஆரவாரம் பண்ணி அதிர்த்து, ஸந்த்ராஸநிதி ஸர்வஸ்வத்தையும் அபஹரித்துக்கொண்டு, கடைசியாய் பிராட்டியின் ஸ்ரீபாதங்களிலிருந்த அருகாழியையும் விடாத் திருவுள்ளம் பில்லன்தவராய்த் தன்னுடன் ஸமர்ப்பிக்கும்போலே காலுநடைப் பூடைவையனைகிறி திருவாய்த் திருமுத்துக்களால் கவ்வி நீக்கி யெடுத்துக்கொள்ள; அப்போது யமுனைத்துறைவன் இவரைநோக்கி நீர் கலியனோ? என்றருளிச் செய்தான்.

பின்பு இவர் தாம் பறித்துக்கொண்டவைத்துக்களையெல்லாஞ் சுமை சுமையாகக்கட்டி யெடுக்கப்போக, அவையொட்டாக்கவுங் கூடாதபடியிருந்தமையால், மணவாளப்ராம்ஹணஸ்வரூபியான யமுனைத்துறைவனைநோக்கி நீ ப்ராம்ஹணனோ? நீபோமது மந்த்ரவாதம்பண்ணி யமையமக்கப்பண்ணித்தீரோ; அம்மந்த்ரத்தைத் தமக்குறிவித்தாலொழிய நீர் நம்முடைய வாளிலிருந்து பிழைப்போகிறதில்லைகாணும் என்று தம்முடைய வாளையுருவி மிரட்டித் திருப்பி வளிகாட்ட, யமுனைத்துறைவன் பயந்தவன்போலே நின்று அதிகோதமேறியிருக்குந் திருவாளைத் திருத்தி, நாம் உமக்கதை யறிவிக்கிறேன் வாருமென்றருளி இவர் கருத்தை யறிவிக்க; இவர்சம்மதித்துக் கேட்கப்புக; இவருக்கு "ருசோயஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநிச, ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம் யச்சாந்யதபிவாங்மயம்" என்கிறபடி ருக் யஜுஸ் ஸாம அதர்வணவேதங்களாகிய சதுஸ்ஸமுத்ரங்களை மதனம்பண்ணின அஷ்டாக்ஷரத்தினுள்ளாகவே யென்றும், "ஸர்வவேதாந்த ஸாரார்த்தஸ் ஸம்ஸாரார்ணவதாரக:-கதிரஷ்டாக்ஷரோ ந்ருணாமபுநர்ப்பவகாங்க்ஷிணாம்" என்கிறபடி ஸர்வவேதாந்த ஸாரபூதமாயும், ஸம்ஸாரஸமுத்ரத்தினின்றும் கரையேற்ற வல்லதாயுமிருக்கிற திருவஷ்டாக்ஷரமே சேதனர்க்குக்கதியாகும் என்றும், "ஐஹைஸ்வர்யம் ஸ்வர்க்கத்வம் பரமைகாந்தம் கைவல்யம் பகவந்தத்ச மந்த்ரோயம் ஸாதயிஷ்யதி" என்கிறபடி இந்த லோகத்தில் பெறவேண்டிய ஸம்பத்துக்களையும், ஸ்வர்க்க

லோகஹத்திலடையவேண்டுகிற ஸம்பத்தானாலும், பரலோகாநுபவ மானாலும், கைவல்யமென்கிற ஆத்மாநுபவஸுகத்தை யடைய வேண்டியதானாலும், ஸர்வஸ்வாமியாகிய ஸ்ரீயபதியையே யடைய வேண்டியதானாலும், இத்யாதியையும் ப்ராப்தமாகச்செய்யுமது இந்தத் திருமந்த்ரமென்றேயாகும் என்றுஞ் சொல்லுகிறபடியே அனந்தக்லேச பாஜனமான ஸம்ஸாரார்ணவத்தில் விழுந்து கரையேற்றுவிக்குமதாய்ச் செவிக்கினிய செஞ்சொல்லாய் ஐஹிக, ஆமுஷ்மிக, ஐச்வர்ய, கைவல்ய, புநராவ்ருத்திரஹித பரமபுருஷார்த்த முதலான அதிகாரத்ரயமாய் "ஓமித்யக்ரே வ்யாஹரேத், நம இதி பச்சாத், நாராயணாயேத்யுபரிஷ்டாத்" என்கிறபடி முதலில் ஓம் என்றும் பின்பு நம என்றும் அதன்பிறகு நாராயணாய என்றும் உச்சரிக்கப்படுவன் என்றும் "ஓமித்யேகாக்ஷரம், நம இதி த்வே அக்ஷரே, நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி" என்கிறபடி ஓம் என்பது ஒரு அக்ஷரம் நம என்பது இரண்டக்ஷரம் நாராயணாய என்பது ஐந்தக்ஷரமென்றும், "அவன் பெயரெட்டெழுத்தும்" என்றுஞ் சொல்லுகிறபடியே எட்டெழுத்தாய்ப் பதத்ரயாத்மகமாய், வைகுந்தந் தாமல்லதான்றுகையாலே, ஸ்வரூபோபாய புருஷார்த்த ப்ரகாசகமாய் மற்றைய வ்யாபகமனுச் ஸங்கப்படாமல் போலன்றிக்கே ... ஸப்த முண்டாகையாலே ஸம்பூர்த்தியையுடையதாய், "பேராளன் பேரோதும் பெரியோர்" என்கிறபடியே ச்ரேஷ்டமாயதாய் "மந்த்ராணாம் பரமம் மந்த்ரம் குஹ்யாநாம் குஹ்யமுத்தமம், பவித்ரஞ்ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதநம்" என்கிறபடியே மந்த்ரங்களுக்கெல்லாம் முக்க்ருஷ்டதமமாகச் சொல்லாநின்ற மூல மந்த்ரமாயும், ரஹஸ்யங்களுக்கெல்லாம் சிரேஷ்டமாகச் சொல்லப்படுகிற பரமரஹஸ்யமாயும், பவித்ரங்களுக்கெல்லாம் மேம்பாடாகச் சொல்லப்படுகிற பரமபவித்ரமாயும் சாஸ்வதமாயிருக்கிற மூலமந்த்ரமென்னும் பெரிய திருமந்த்ரத்தைப், பூர்வம் பதரியாச்ரமத்தில் நாராயணனே நரனுக்கு (கேட்பாரில்லாமையால்) தனக்குத்தானே உபதேசித்துக்கொண்ட இறைவரே, கிழிச்சீலையோடே தனத்தைக் கொடுப்பாரைப்போலே இவருடைய வலத்திருக்காதிலே "குலந் தருஞ் செல்வந் தந்திடுமடியார் படுதுயராயினவெல்லாம், நிலந் தரஞ்செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநிலமளிக்கும், வலந்தருமற்றுந் தந்திடும் பெற்றதாயினுமாயினசெய்யும், நலந்



தருஞ்சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம்" என்று இவர் திருவாக்காலே அதிசயித்துச் சொல்லிக் கொள்ளாம்படிக்கும், புருஷகாரபூதையான பிராட்டிக்கும் விபுவானதனக்கும், மத்தியிலே "பெருகவாடைப்பிரானார் பிரமகுருவாகி" என்கிறபடியே உபதேசித்தருளி "ஸ்ஞ்சரதாஹஸ்ர குஷ்டேமோ தேவ்யாகாருண்ய ருபயா" என்கிறபடியே க்ருபையே பொருவடிவுகொண்டாற்போலே, காருண்யருபையான ஸ்ரீசஹாயனுப்கொண்டு "ஸுபர்ணப்ருஷ்டே ப்ரபெளஸ்யாம பிதாம் பரோஹரிஃ" என்கிறபடி ஸுவர்ணமயமான பெரியதிருவடியின்மேலெழுந்தருளிவந்து நீலமேக நிபமானவடிவை, கனகிரியின் மீமிசைக்காளமேகம் படிந்துலாவுமாபோலே, விக்ரஹசேவையையும் ஸாக்ஷாத்கரிப்பித்தருள; இவரும் தனக்கு நிர்ஹேதுகமாக லப்தமான திருமந்த்ரத்தையும், அம்மந்த்ரத்துக்குள்ளிடான ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிசேஷ்டிதங்களையும் "திருமாமகளாலருள்மாரி" என்கிறபடியே பெரிய பிராட்டியாராலே, தங்கஞானக்கண்களைப் பெற்றநுபவித்து, அவ்வநுபவஜனித ப்ரீதியுள்ளடங்காமைபோலே வாக்ப்ரவாஹமுண்டாக, அதனால் பெரியதிருமொழி திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை சிறியதிருமடல் பெரியதிருமடல் என்கிற ஷட்ப்ரபந்தங்களை, ஸ்ரீசடகோபவாங்மயமான த்ரவிடவேதசதுஷ்டயத்துக்கு ஷடங்கமாக ஆசு மதுரம் சித்ரம் விஸ்தாரம் என்கிற சாதுர்யுக்தமான கவிகளாலேயாடி லோகத்துக்குபகரித்தருளி "நாற்கவிப்பெருமாள்" என்றும் "அருள்மாரி" என்றும் ப்ரசித்தராயிருந்தார்.

இப்படி யிருக்கையில் ஒரு நாள், பெரியபெருமாளவரைக் குளிரநோக்கி ஆழ்வீர்! நீரும்முடைய பரிவாரத்துடனே திவ்யதேசங்கள் தோறும்போய் மங்களாசாசனம் பண்ணிவாருமென்றருளிச்செய்ய; இவரும் அப்படியே பத்னீஸஹிதராய் பக்திகளோடே புறப்பட்டுப், பிநாகினி க்ருஷ்ணை கோதாவிரி நதிகளில் தீர்த்தமாடிப் பத்ராசல ஸிம்ஹாசலநாதர்களையும், ஸ்ரீகூர்மநாதனையும் ஸ்ரீபுருஷோத்தமனையுஞ்சேவித்துக் கயையிலே தீர்த்தமாடி ஸ்ரீ விஷ்ணு திருவடியைத் தொழுது, யமுனையில் தீர்த்தமாடிக் கோவர்த்தனம், கோகுலப்ருந்தாவனம், வடமதுரை, த்வாரகை, திருவயோத்தி, பதரிகாசிரமம், நைமிசாரண்யம், திருப்பிரிதி,

சாளக்ராமம் முதலிய திவ்யதேசங்களை மங்களாசாஸநஞ்செய்து பாண்டிரங்களையுந் திருவடிதொழுது தொண்டனூர் திருநாராயண புரத்தெம்பெருமான்களைச் சேவித்துப் பெருமாள் கோவிலுக்கு வந்து, தத்புரோபவனத்தில் பத்நியுந்தானுமாய்ப் பரிவாரங்களோ டும் உபவசித்திருக்க; அப்போது அட்டபுயகரத்து அழகியசிங்கர் ப்ராம்ஹண வேஷதாரியாய்க் காமதேனுவைக் கொண்டுவந்து இவர் முன்னே நிறுத்திநிற்க; இவர் கண்டு நீரோரென்று கேட்க; நான் அட்ட புயகரத்தேன், நீவிர் உபவசித்திருக்கையால் ஆராதிக்கவந்தே னென்று இவர்களை ஆராதித்து அந்தர்த்தானமாக இவர் பரிவாரத்து டனே அட்டபுயகரத்துக்குப்போய் அழகியசிங்கரைக் கண்களாரச் சேவித்துத் "திரிபுரமூன்றெரித்தானு மற்றைமலர்மிசைமே லயனும்வியப்ப-முரிதிரை மாகடல்போல்முழங்கி மூவுலகும்முறையால் வணங்க வெரியெனக் கேசரிவாளெயிற்றொ டிரணியனாகமிரண்டு கூறாய் - அரியுருவாமிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென் றாரே" என்னுமிது தொடக்கமான பத்துப்பாசுரங்களால் மங்களா சாஸநஞ்செய்து அத்திகிரியருளாளனையு மடிபணிந்து, திருவேங் கடத்துக் கெழுந்தருள; அங்கே திருமலையாழ்வான் ஸஹஸ்ர பணங்களோடேகூடிய தன்னுடைய சேஷரூபத்தைச் சாக்ஷாத் கரித்தருள; இவர் தண்டன்சமர்ப்பித்து அடியிட்டேறுவதுஸ்வரூப மன்றோ வென்றஞ்சி, அடிவாரத்தில்தானே மூன்றுநாள்வரை உப வசித்திருக்கத், திருவேங்கடத்தப்பன் இவர் அத்யவஸாயத் துக்கிசை யத் தானேபிராட்டிசஹிதனாய் இவரிருக்குமிடத்தே சேவைசாதித் துத் தீர்த்தப்ரஸாதங்களருள, இவரவனருளை நினைந்து நினைந்து மாற்றந்தாமற்று, மனக்களிப்புக்குப் போக்குவீடாக, "உன்னைக் காண்பதோராசையினால் - நாயேன் வந்தடைந்தேன்" என்றும், "அப்பாவந்தடைந்தேன்" என்றும், "அன்றுவந்தடைந்தேன்" என்றும் "ஆளாய்வந்தடைந்தேன்" என்று மிவைதொடக்கமான நாற்பது பாசுரங்களால் பலவாறுபுகழ்ந்து பாடியாடித் திருவடி தொழுது, விடைகொண்டு திரும்பித், திருவெவ்வுள் திருப்புட்குழி எம்பெருமான்களை மங்களாசாஸநஞ்செய்து, திருக்கடன்மல்லைத் தலைசயனத்துறைவாரைச் சேவிக்கவேண்டியெழுந்தருளுகையில் தடத்தருகேயிருந்த திருநின்றவூரை எம்பெருமான் உகந்தருளி யிருக்கும் ப்ரதேசமென்றறியாமல் கடந்தடைவிட்டுப்போய்த் தலை சயனத்துறைவாரைச் சேவித்து நிற்குந்தறுவாயில், திருநின்ற



வூரான் பிராட்டிசஹிதனாய் அவ்விடத்திற்கே யெழுந்தருளிச் சேவைசாதித்து நாற்கவிப்பெருமாளே! நம்விஷயத்திலுமிக்கப் படிப் பராமுகமிருக்கலாமோ? நம்மைக் கவிபாடத் திருவுள்ள மில்லையோவென்ன; இவர் அறியாமல் வந்துவிட்டதற்காக அச்ச முற்றும் அவனுடைய வாத்சல்ய சௌலப்யங்களுக்காக ஆச்சர்ய மடைந்தும், † எனைப்பெற்றதாயே! என்று புருஷகாரபூதையான பிராட்டி திருவடிகளிலும், பத்தராவியே! என்று ரக்ஷகனான பெருமாள் திருவடிகளிலும் முடியையணைத் தெழுந்துநின்று "பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப் பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்றுமோதி - மாண்டவத்தம் போகாதேவம்பி னெந்தை - என்வணங்கப்படுவானைக் கணங்களேத்தும் - நீண்டவத் தைக்கருமுகிலையெம்மான்றன்னை - நின்றவூர்நித்திலத்தைத் தொத் தார்சோலைக் - காண்டவத்தைக் கனலெரிவாய்ப்பெய்வித்தானைக்- கண்டதுநான் கடன்மல்லைத்தலைசயனத்தே" என்றிருபாசுர மருளிக், கடன்மல்லைநாதனுடன் சேர்த்தியிலே மங்களாசாஸநஞ் செய்து விடைகொண்டு நீர்மலையாதியையும் திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி தொடக்கமான வெம்பெருமான்களையும் திருவடி தொழுது, திருக்கோவலூருக்கெழுந்தருளி ஆயனாரைச்சேவித்துத் திருவயிந்திரபுரஞ்சென்று தெய்வநாயகனையடி பணிந்து, சோழமண் டலத்தில்ப்ரவேசித்து (சீர்காழி) என்கிற காழிச்சீராமவிண்ணகரத் திற்குள் போமளவில், இவருடைய சிஷ்யர்கள் நாற்கவிப்பெருமாள் வந்தார்! ஆலிநாடர் வந்தார்! அடையார்சீயம் வந்தார்! அருண்மாரி வந்தார்! மங்கைவேந்தன் வந்தார்! கொற்றவேற்பரகாலன் வந்தார்! பரவாதிமத்தகஜகண்டீரவம் வந்தார்! என்று இத்யாதிவிருதூதி நடவாநிற்க, அங்குள்ள சைவசமயாசிரியரான சம்பந்தரென்பவரு டையசிஷ்யர்கள் பொறுப்பிலிகளாகி இவ்விருதுகளங்குச் செல்லா தென்றும், செல்லவேண்டுமாகில் தங்கள்சம்பந்தப் பெருமானிடத் தில் உத்தர ப்ரத்யுத்தரங்கள் சொல்லித் தேறவேணுமென்றுஞ் சொல்லி அடிபெயர்க்கலாகாதென்று தடுக்க; இவர் அவர்கள்சம்பந்த ரிருக்குமிடத்தைக் காட்டவேணுமென்ன; அவர்களிவரை யழைத் துக்கொண்டுபோய்விட்டுகிடந்ததை யறிவிக்க; அந்தச்சம்பந்தருமிவ

---

† இவர் அன்றழைத்ததே காரணமாக இன்றுவரையிலும் திருநின்றவூரானுக்குப் "பத்தராவி" என்றும், பிராட்டிக்கு "என்னைப் பெற்றதாய்" என்றும் பெயர்வழங்கலாயிற்று.

ருடன் தர்க்கிக்கவர; அந்தப்ரதேச முழுமையும் விரசைவயாபிஷ்டமாய், ஊரடைய ஏககண்டியாயிருக்கக்காண்கையால், இவர் பக்கல் ஒருபகவத்விக்ரஹமிருந்தாற்போதுமென்று சிந்திக்க; அவ்வளவில் வைஷ்ணவியாயிருப்பாளொரு அம்மையார் அங்கே வரக்கண்டு, அவருடைய திருவாராதனமானவெண்ணெயுண்டதாடாளனை ஒரு க்ஷணப்போது தந்தருள வேணுமென்று கேட்டெழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டு, இனித்தர்க்கஞ்செய்யலாம்வாருமென்று சம்பந்தரையழைத்தார். அப்போது சம்பந்தர், ஒரு குறள்பாடு மென்ன; இவர் அவருடைய கேள்வியினுதித்தவாக்யத்தையே முதலாக வமைத்துக்கொண்டு "ஒருகுறளா யிருநிலமூ வடிமண் வேண்டி - உலகனைத்து மீரடியா லொடிக்கி யொன்றுந்-தருகவென மாவலியைச் சிறையில் வைத்த - தாடாளன் தாளணைவீர் தக்க கீர்த்தி - அருமறையின் திரள்நான்கும் வேள்வி யைந்தும் - அங்கங்க ளவையாறு மிசைக ளேழும் - தெருவில்மலி விழாவளமுஞ் சிறக்குங்காழிச் - சீராம விண்ணகரே சேர்மினீரே" என்று பாடியருளி நீரொருகவி சொல்லுமென்று அவரைக்கேட்க; அதற்கவர் சிலசொல்ல, அதன்மேலிவர் "பொருவில்வலம் புரியரக்கன் முடிகள் பத்தும் புற்றுமறிந் தனபோலப் புவிமேற் சிந்தச் - செருவில் வலம் புரிசிலைக்கை மலைத்தோள் வேந்தன் - திருவடிசேர்ந் துய்மிற்பிர் திரைநீர்த் தெள்கி - மருவிவலம் புரிகைதைக் கழியூடாடி - வயனண்ணி மழைதருநீர்த் தவழ்கான் மன்னித் - தெருவில்வலம் புரிதரள மீனுங் காழிச் - சீராம விண்ணகரே சேர்மினீரே" என்கிற பாசுரத்தையுமருளி உம்முடைய கவியில் இங்ஙனம் ரஸமிருக்குமோ வென்றுரைத்து அதன்மேலும் தம்முடைய வேற்றந் தோன்றுமாறு மற்றொருபாசுரத்தில் "ஆலிநாட னருள்மாரி யரட்டமுக்கி யடையார் சீயங் - கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தன் - கொற்றவேற் பரகாலன் கலியன் சொன்ன - சங்கமுகத் தமிழ்மாலை" என்றமைத்துப்பாட, அச்சம்பந்தர் இவர் விஷயத்தில் அச்சமுற்று, உமக்கு நித்யாதி விருதுகளுஞ் செல்லுமென்றுசொல்லி, இவர் விஷயமாகக் "கடியுண்ட நெடுவானை காவிற்றப்பிக் கயத்துக்கு ளடங்காமல் விசும்பிற் பாய - படியுண்ட பெருமானைப் பரிந்தப் பாடிப் பதம்பெற்ற பெருமானே தமியேன் பெற்ற-கொடியொன்று நின்பவனிக் கெதிரேசென்று - கும்பிட்ட நுயிரொன்றுங் [illegible] தாளே" என்றொரு கவியையும் பாடித்



தமது கையிலிருந்த வேலாயுதத்தையுஞ் சமர்ப்பித்துப் போக விட்டார்.

அனந்தரம் இவர் திருநறையூருக்கெழுந்தருளி நறையூர் நம்பியைச்சேவித்து அவ்வடிவழகிலே யீடுபட்டவராய் "நன்னறையூர் நம்பிதன்நல்லமாமலர்ச்சேவடிசென்னியிற்-சூடியுந்தொழுதாடியுந் தொண்டர்கட்கவன் சொன்னசொன் மாலைப் பாடல்பத்திவைபாடு மின்றொண்டீர் பாடநும்மிடைப்பாவம் நில்லாவே" என்னுமளவாக வுள்ள பாசுரங்களை யருளிச்செய்ய, நம்பி இவரைக்கடாக்ஷித்து இவர் தன்னைக் கால்வாசி யறிவாராயிருந்தனரென்று, ஆழ்வீர்! நீர் நம்முடைய திருச்சேறையில்வந்தால் உம்முடைய அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டித் தருகிறோமென்ன; இவரும் திருச்சேறைக் கெழுந்தருளி சாரநாதனைத் தர்சித்துக், "கண்சோர வெங்குருதி வந்திழிய வெந்தழல்போற் கூந்தலாளை - மண்சேர முலையுண்ட மாமதலாய் வானவர்தங் கோவே" என்றுபாட; அவ்வளவிலே மாமதலைப்பிரான் தன்னுடைய திருவடிகளைக்கொண்டு இவர் திருமுடியிலே வைக்கவர, இவரதற்றைப் புறங்கையாலே தட்டி, நின் போதுநின்ற பொன்னங்கழலோ வென்றலைமே லிருக்கக்கருதினை னென்ன; மாமதலைப்பிரான் மற்றெதுகாணென்ன; "உன்றன் தொழுவார் காண்மினென்றலைமேலோ" வென்றார்; அவனிதைக்கேட்டு உமக்கு நாம் அந்தர்யாமியா யிருக்கிறோமேயென்ன; "உன்றன் தொழுவாரெப்பொழுது மென்மனத்தேயிருக்கின்றாரே" என்றார். நாமுமக் கர்ச்சாவதாரமாய்ச் சுலபரா யிருக்கிறோமே யென்ன; "கடன்மல்லைத் தலசயனத் துறைவாரைக்கொண்டாடு நெஞ்சுடையாரவரெங்கள் குலதெய்வமே" என்றார். ஆகிலவர்க ளெங்கே யுளர்காணென்ன; "போதொடு புனல்தூவும் புண்ணியரே விண்ணவரிற் பொலிகின்றாரே" என்றார். ஆகில் "கண்களாரளவு" மென்றபடியே கண்ணுக்கிலக்கா யிருக்கைக்கும், அனுசந்தானமாக நெஞ்சுக்கிலக்காயிருக்கைக்கும், நாமுமக்குவேண்டுமோ வென்ன; "வண்சேறை யெம்பெருமானடியார் தம்மைக்கண்டேனுக் கிது காணீ ரென்னெஞ்சுங் கண்ணிணையுங் களிக்குமாறே" என்றார். ஆகிலும், ஆழ்வீர்! உபாய உபேயங்களுக்காவது நாம்வேண்டாமோ வென்ன; உபாயத்துக்கு முற்பாடராகையாலும் உபேயத்துக்கு எல்லைநிலமாகையாலும் இங்குள்ளாரைக்கு உசாத்துணையாகையாலும் "பேராளன்பேரோதும் பெரியோரை யொருகால

னும் பிரிகிலேனே" என்றார். இதைக்கொண்டு சொல்லுகிறீரென்ன; ஒருவனைக்கவிபாடுமவன் ஊரும்பேருங்குடியும் உகந்தாரும் வரக்கவிபாடுமாபோலே சொன்னேனித்தனை என்றும் "அடியார்க்கென்னை யாட்படுத்தாய்" என்கிறபடியே ததியவிஷயத்தையே உத்தேசித்துச் சொன்னேனென்றும் சாதித்தார். அதன்மேலும் மாயுதவேப்பிரான் ஆழ்வீர்! நம்மை இப்படிப் பிரித்துச் சொல்லலாமோவென்ன; பர்த்தாவினுடைய தேஹத்தை விரும்பும் பதிவ்ரதைக்கு அதில் குற்றந்தோற்றுமோ தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹத்தை விரும்பு மடியேனுக்கு மதிள் குற்றமுண்டாமோவென்றார். இப்படி இவர் ததியவிஷயத்தில் தமக்குண்டான ஊற்றத்தைச் சொல்லிக் களித்துநிற்கிறதை மாயுதவேப்பிரான் கண்டு உகந்து படலெடுக்கும்படி யாயிற்று.

அனந்தரம் இவர் "காவேரீ விரஜாஸேயம் வைகுண்டம் ரங்கமந்திரம் - ஸவாஸுதேவோ ரங்கேஸ: ப்ரத்யக்ஷம் பரமம் பதம்" என்கிறபடி காவேரியே விரஜையாயும், ஸ்ரீரங்கக்ஷேத்ரமே வைகுண்டமாயும், ஸ்ரீரங்கநாதனே வாஸுதேவ பரவாஸுதேவனுமாய் விளங்குகிறபடியால் பரமபதமான அந்த ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தைப் ப்ரத்யக்ஷமாகச் சேவிக்கிறேனென்றும், "விமானம் ப்ரணவாகாரம் வேதஶ்ருங்கம் மஹாத்புதம் - ஸ்ரீரங்கஶாயீ பகவாந் ப்ரணவார்த்த ப்ரகாஶக:" என்றுஞ் சொல்லுகிறபடி அத்யாச்சர்யகரமாய் வேதஶ்ருங்கங்களையே கலசங்களாகவுடையதாய், ப்ரணவாகாரமானதாய் அந்த ப்ரணவார்த்தத்தை ப்ரதிபாதிக்கக் கடவனை ஸ்ரீயப்பதியையும் மத்யப்ரதேசத்தில் சாய்ந்தருளப் பெற்றிருக்குமதான விமானத்தையுடைய திருவரங்கம் பெரியகோயிலுக் கெழுந்தருளி "மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்க்கண் வைத்த" பெரிய பெருமாளையும் திருவரங்கச் செல்வனார் அழகிய மணவாளனையும் ஸேவித்து, அங்கே விமான கோபுரமண்டப ப்ராகாராதி ரூபமான கைங்கர்யங்களைச் செய்யவேணுமென்று திருவுள்ளமாய், அதற்காகத் தம்முடைய பரிசனங்களை யழைத்துத் தனார்ஜனம் பண்ணுகைக்கு விரகேதென்றுகேட்க; அவர்கள் நாகைப்பட்டணத்திலே புலையறமா யிருப்பதொரு பௌத்தப்ரதிமை பொன்னாற் செய்யப்பட்டிருக்கிறதாகக் கேள்விப்படுகிறோம்; ஆகையால் அதைக்கொண்டுவந்து நெருப்பிலிட்டுத் த்ரவ்ய மாக்கிக்கொண்டு கைங்கர்யத்தை



முடிக்கலாகுமென்றார்கள்; இவரதைக்கேட்டு "அறுப்பதே கருமங் கண்டாய்" என்கிறபடியே அதிகதுணிவுடையராய்த் தம்முடைய மைத்துனராகிய எதிராஜரைக் கூட்டிக்கொண்டு பரிவாரத்துடனே அவ்விடத்துக்குப்போய் அங்கே பரமபாகவதையாயிருப்பாளொரு அம்மையாருடைய திருமாளிகைக் கெழுந்தருள; அவ்வம்மையாரும் ஸ்வரூபாநுரூபமாகத் தண்டன் ஸமர்ப்பித்து வந்தகாரியமேதென்று வினவ; இவர் அம்மணி! நாம் வந்தகாரியம் ஸிலகைங்கர்யத்தை நாடியிருக்கும். ஆதலால் இவ்விடத்திலுள்ள ஆலயங்களில் ஏதாவது ரஹஸ்யங்களிருக்கில் உமக்குத் தெரிந்தவரையில் நமக்கறிவிக்கவேண்டுமென்ன; அவ்வம்மையாரும் ஸ்வாமி! இவ்வூரிலொரு பௌத்தாலயமுண்டு; அதிலொரு ஸ்வர்ண விக்ரஹமுண்டு; அவ் விக்ரஹத்தை இதுநாள் பார்ப்பதற்குக் கூடாமையென்றார்; ஆகில், நாம் அதைப்பார்ப்பதற் குபாயமேதென்ன; ஸ்வாமி! அந்த ஆலயத்திற் கெம்முகத்திலும் வழியில்லையென்றும் அதைப்பரிபா லித்தவர்கள் [illegible]ந்ரம் போகவாநில்லாமையால் மார்க்கம்வைத்திருக்கிற தென்றும், அம்மார்க்கத்துக்கு முகத்வாரம் வெகுதூரத்தில் வைத்திருக்கிறதென்றும், அம்முகத்வாரத்துக்குப் பஹுபத்ரமான கதவமைத்துக் காவல்வைத்திருக்கிறதென்றும், யாராவது ஒருசமயத்தில்மேலேயுள்ள நாபியைக்கல்லிலேவழிசெய்துகொண்டுஉள்ளே இறங்கிவிடுவார்களென்கிற பயசங்கையால் அதனுட்புறத்தில் ஒரு யந்த்ரம் வைத்திருக்கிறதென்றும், அந்த யந்த்ரமானது ஸ்தூபியின்மேலேறினோர்கலசத்தைத் தொட்டமாத்திரத்தில் அவர்களைச் சுழற்றி யுள்ளேயிழுத்துக்கொண்டு கண்டித்து விடுகிறதென்றும், அவ்விதம் சூத்ரத்தைச்செய்த சிற்பாசாரி † ஸிங்களத்வீபத்திலிருக்கிறானென்றும், அவனந்த சூத்ரத்தின் நுட்பத்தைப் பிறருக்கறிவிப்பானாகில் அப்போதே இந்தப் பௌத்தர்கள் அவன் சிரஸைச் சேதித்து விடுவதாய் உடன்படிக்கை செய்துகொண்டு பஹுத்ரவ்யத்தை யவனுக்குபகரித் திருக்கிறார்களென்றும், அடியேனுடைய மாமியார் ஒருகாலத்தில் பஹுரஹஸ்யமாகச் சொல்லிக் கொண்டிருக்கையில் கேட்டிருக்கிறேனென்றனள்.

இவரிந்த வ்ருத்தாந்தத்தைக்கேட்டு அதித்வரையாய் ஓடமேறி ஸிங்களத்வீபத்துக்குப்போய் அந்தச் சிற்பாசாரியிருக்கு மிடத்தை பஹுதந்த்ரமாய் விசாரித்தறிந்துகொண்டு அவனுடைய

† இப்போது கொழும்புதேசமென்று சொல்லப்படுகிறது.

இடைகழியிலேயெழுந்தருளித் தம்முடைய அடியார்களோடு சம்பாஷித்துக்கொண்டிருக்க; அந்தச்சமயத்தில் சிற்பாசாரியும் அடியார்கள் கையில் தாம்பூலங்கொண்டு இடைகழிக்குவந்து இவர்களைப் பார்த்து நீவிராரென்று கேட்க; இவர் நாங்கள் வர்த்தககார்யமாய் வந்திருக்கிறோமென்ன; உங்களூரேதுவென்ன; நாங்களிருக்குமூர் நாகைப்பட்டணமென்ன; அவ்வூரில் தேவஸ்தானம் பத்ரமாயிருக்கிறதோவென்ன; அவ்வளவிலே இவர் பெருமூச்செறிந்து கொண்டு துக்கிக்க; ஏனிப்படி வருத்தமுறுகிறீரோ தெரியவில்லையேயென்று அவன் அபேக்ஷிக்க; அந்தவுவாயில் இவருடைய மந்த்ரிகளிலொருவரான சமயநிரீக்ஷகன் என்பவர் அந்தச்சிற்பாசாரியைநோக்கி என்னகாண்? அழிந்திருந்த அக்ரத்தை ஊர்றெடுத்துச் சொரியச் செய்தாயென்ன; அவனதை விவரமாகத் தனக்குச்சொல்ல வேண்டுமென்று ப்ரார்த்தித்தவளவில்; நம்முடையவரிசிலெழுந்தருளியிருந்த சுவர்ணவிக்ரஹத்தைத் திருவுள்ளங்கொண்டு ஆலயத்தின் கதவைப்பிடித்து வழிகண்டு உள்ளே பிரவேசித்து பயமறிந்துக்கொண்டு போய்விட்டதால் நாங்களடைந்திருக்கிற துக்கத்துக்கு அளவில்லை, அவ்வாலயத்திலிருந்த மகுடரூபத்தின் ரஹஸ்யத்தை வெளியிட்டிருப்பவன் தலைமொழியாதிருக்கப் போகிறதில்லை காணென்றார்; அவ்வளவிலே அவன் மிகவும் நடுங்கிக் கையிலிருந்த தாம்பூலத்தை நிலத்தில் சோரவிட்டுத், தங்களையோ பழிபவத்தவரென்று அதிக்கித் துக்கித்துக் கண்ணீர்விட்டுக்கைகாலோய்ந்து ஒருபுறஞ்சாய்ந்து பிதற்றல்கானவ; அந்தசையிலே ஐயோ !! என்றொருவரும் நடந்ததில்லையேயென்ன; அப்போது அலிக்குமுறமப்னென்று மிவருடையமற்றொரு மந்த்ரி உன்றலல்லது அவ்வாயம் வெளிப்பட்டிருக்குமோ காணென்ன; அவன் கேவலம்பிதறாய், என்றால் வெளிப்படவேயில்லை, நானந்த ஆலயத்தின் மகுடசிகரத் தடிவாரத்தில் வைத்த சூத்ரத்திலிருந்திழிய விட்டபிணையல் சங்கிலியை கோமுகை விழுகிற ஜலதாரையின்கீழ் கல்லுக்குள் இருப்பாணிபிலிருக்கிய போது அந்த ஊரிலிருந்த கம்மாளரிலெந்த த்ரோஹியோ என்னையுமறியாமல் கண்டிருந்து, சமயம்பார்த்து த்ரவ்யமேபகைக் கொண்டுவெளியிட்டு என்தலைக்கு ஆக்ஞைநேரிடச் செய்துவிட்டான்போலிருக்கிறதே !!! என்று மிகவும் பரிதபிக்க; இவ்வாழ்வார் இத்தனை ரஹஸ்யங்களும் வெளிவருமளவும் மௌனமா



யிருந்து அவற்றைநன்றாய் க்ரஹித்துக்கொண்டுஉள்ளில்சந்தோஷ்டராகி அந்தச் சிற்பாசாரியைப் பார்த்து, நீசொல்லியபடியே சங்கிலி சூத்ரம்வெளிப்பட்டிருக்குமாகிலும், சிகரசூத்ரம்யாரால்வெளிப்பட்டிருக்குமென்பாயென்ன; அவனும் ஐயனே ! எப்போது சங்கிலிதளர்ந்ததோ அப்போதே மேலிருந்த சக்கரத்தின்பலங் குறையுமென்பதில் ஐயமேது; அவ்வளவு பலஹீனமதற்குண்டானவாறே அதை நிறுத்திவிடுவதற்கு வாழைவில்தரிந்துக் கிடக்கிற தேசத்தில் வேறுபாயந்தேட வேண்டியதில்லையே யென்றான். அதன்பின்பு இவரவனுடையபயத்தையொருவா[illegible] ளக்கித் தம்முடைய மந்த்ரிகளைப்பார்த்துக், காலதிக்ரு இவ்விளன்செய்வானென்று, பக்வமாகச் சம்பாஷணையை முடிவுபெறச்செய்து, உடனே ப்ரயாணமாய்ச் சமுத்ரகரைக்குவந்து ஓடந்தேடினர்.

அவ்வளவிலே அங்கேயொரு வர்த்தகன் பாக்குப்பொதிகளை யேற்றுவிக்க ஓரோடத்தைக்கொண்டுவர, இவரவனைக்கண்டு நாமுமிந்த ஓடத்தில்தானே உம்முடன் நாகைப் பட்டணத்துக்குவர இடங் கொடுப்பீரோவென்றுகேட்க, அவனும் சம்மதிக்க, இவர் தம்முடைய பரிவாரத்துடனேயேறி † நாவாய் ப்ரயாணமாகஜலத்தில் மத்யதூரத்தில் வருகையில், இவருடைய மந்த்ரிகளிலொருவரான தோளாவழக்கனென்பவன் ஒரு பாக்கைச்சீவி ஒரு பாதியைத்தின்றுவிட்டு மறுபாதியை அந்த வர்த்தகனுக்குக் காட்டி ஐயா ! நானிந்த பாதிப்பாக்கை உம்முடைய படவையில் வைத்திருக்கிறேன்பாரும்; ஒருவேளை இதை உம்முடைய ஸ்வத்தாகவெண்ணி உமதுகிங்கார் நம்மிடத்திலபாதம் வாங்காதிருக்கும்படி இப்படவையில் நமக்குப் பாதி பாக்குண்டென்று ஒருகை சீறிச்சீட்டுக்கொடுமென்றுஇனியவார்த்தைகளால்கேட்க; அவனுமப்படியே கொடுக்க; அதைவாங்கிப் பத்ரமாகவைத்துக்கொண்டு கரையில்வந்தவாறே, வர்த்தகன் பாக்குமூட்டைகளையெடுப்பிக்கையில், அந்தச் சீட்டைக்காட்டி நமக்குமிப்படவையில் பாதிக்குப்பங்குண்டேயென்ன; வர்த்தகன் திடுக்கிட்டு, ஏதுகாணென்ன, அவனைமடக்கிவைத்துக்கொண்டு பாக்குமூட்டைகளுக்குங் காவலிட்டு, நாவாய்த்துறை ந்யாயாதிபனிடத்தில்விண்ணப்பங்கொடுத்து சீட்டையுங்காட்ட; அவனும் ந்யாயசோதனைசெய்து, படவையில்வந்திறங்கியபாக்கில் பங்கு வாங்கிக்கொடுக்க; அவ்வர்த்தகன்

† நாவாய் - மரக்கலம், ஓடம், படவை.

அதற்குரிய த்ரவ்யத்தைக் கொடுத்து விடுகிறேனென்று கேட்டுக் கொள்ள; அப்படியே த்ரவ்யத்தைப் பெற்றுக்கொண்டு ஆழ்வார் திருவடிகளில் ஸமர்ப்பித்தான்.

அதன்பின்பு இவ்வாழ்வார் பரிவாரத்துடனே நாகைப்பட்டணத்துக்குச் சென்று மத்யராத்ரியில் பௌத்தாலயத்துக் குட்போய்க் கோபுரத்தை நிர்த்தாரணையின்றியே புகல்வீசினேதித்துச் சிற்பாசாரிசொல்லியிருந்த சங்கிலிசூத்திரத்தைக்கண்டு பேதித்து ஸ்தூபியின்மேலேறிக் கலசத்தை இடவலமாகத் திருப்பிப்பிடுங்கி விட்டு அதன் கீழ் ப்ராணாயாமத்தைக் கருடதாய் இடவலமாகச் சுழன்றுகொண்டிருந்த மருட்டுச்சித்ரத்திற்கு வாய்முத்தன்டை இரையாகக்கொடுத்து அதன் ஓட்டத்தை யடக்கிவைத்துக் கருகு ந்வாரமுகத்தால் உள்ளே அதிகசோபிதமாயிருக்கிறதொரு ஸ்வர்ண விக்ரஹத்தைப் பார்த்து (ஈயத்தாலானாதோ இரும்புதன்னாலானாதோ, பூயுத்தாலின்கறதோ பூத்தாலானதோ - தேயத்தேய்பித் தனைச்செம்பினாலானதோ - மரத்தினால்வண்டிடிமோ மதித் தன்னைப் பண்ணுவீக்கதே) என்றுசொல்லி, அதிலிருக்கியுள்ளே போவதாகமென்றுடிபார்க்க; இவர் மைத்துனராகிய எதிராஜரென் பவர்வந்து சுவாமீ! அடியேனைப்புகவிடுகின்றகாலே தான்ன; ஆகிலிறங்கு மென்று அவரையுமிறக்கி அந்த விக்ரஹத்தைத் திருச் சங்கிலியிற் கட்டிவைத்துத் தாமுமேறிக்கொள்ள; மேலேயிருந்த ஆழ்வாரும் மந்த்ரிகளுமாகச் சங்கிலியையிழுத்து விக்ரஹத்தை யெடுத்துக்கொண்டு, எதிராஜருக்குக் கைகொடுத்து இழுக்கையில் அவர் விக்ரஹத்தை யெடுத்துக்கொண்ட பாத்ரத்தில் கைங்கர் யத்துக்கு த்ரவ்யம் சித்தித்ததே யென்கிற சந்தோஷத்தினால் தேஹம் பூரித்துவிட்டபடியால் அத்த்வாரத்தில் வரமாட்டாமல் ஒரு கையும் தலையுமாகத் திரைய, இவ்வாழ்வார்கண்டு திடுக்கிட்டு அதிசோகத்துடனே எதிராஜா! மோசம்போய்த்ததே!! பரமபாதக ஹேதுவான உன்னையிட்டுத் திரிம்பினேனே! உன்னைப் பிராக்ருத யாத்ஸம்ஹாரம் செய்யவிடலாமோ! ஆகிலுமென்ன அனன்யகதி முடையவனாய்த், பரமசாத்விகனாய், அதிபாகவதக் கைங்கர்ய பரனாய் விசுவாசவானாய்த் தருணமூர்த்தியாய் எனக்குச் சகா தரியாயிருப்பவனொருத்தனுக்கு வைதவ்ய முண்டாம்படி செய்து பாகவதாபசாரத்திற்குப் பாத்ரனானேனே! இனிமேலுக்கு கைங்கர்யமேதுக்காம்; ஸ்வர்ணவிக்ரஹமேதுக்காம் என்று அத்த



ஆர்த்தியுடன் பேராக்ஷேபிக்க; இதைக்கேட்டு எதிராஜர் பரமப்ரீதி யுடனே இவருக்குத் தண்டன் ஸமர்ப்பித்துச் சுவாமீ! தேவரீர் பரமபத நாதனுடைய சார்ங்காம்சராய், அகிலசேதனருக்கும் ஜீவ னார்த்தமாகத் திருவவதரித்து, அடியார்களுக்குச் சகலபுருஷார்த் தங்களையும் ப்ரஸாதித்து, இப்போது பகவத்கைங்கர்ய நிர்வா ஹார்த்தம் பரமபுருஷார்த்தமென்று உத்தேசித்து நியமித்தபடியால், இதில் விழுந்திருக்கிறேன்; இக்காயமோ "மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்" என்கிறபடி பிணிபசிமூப்புத்துன்பங்களுக்கு நிலமானதாய்ப், "பஸாருதிர மாம்ஸமேதோ மஜ்ஜாஸ்திஸ தனல்" என்கிறபடியே ஷட்விகார ஸம்பந்தமுடைய பாஞ்சபௌ திகமாய்ப் பசி - உஷ்ண - சோக - மோஹ - மல - மூத்ர - பித்த - ச்லேஷ்ம - ஸ்வேத - ஜராரோஹபூரித துர்க்கந்தமான இவற்று டன் கூடியதாகையால் இதைப் பரித்யஜித்துப் "பரமேஷ்டி பமாந்" என்கிறபடியே பஞ்சோபநிஷன்மயமான திவ்யதேஹத் தைப்பெற்றுநித்யமுக்தர்களோடுகூடி, †தத்ததவஸ்தோசிதமான பகவத்கைங்கர்ய நிரதிசயானந்தத்தைப்பெற்றுவாழும்படி க்ருபை பண்ணுவதற்குத் தேவரீர் இங்கெழுந்தருளியிருக்கக், கேவலம் பத்த ஸம்ஸாரியைப்போலே துக்கிக்கலாமோ? ஆபாஸ தா மத்தைப்பற்றின ஸிபிச்சக்ரவர்த்தி ததிசி முதலானவர்களுடைய வ்ருத்தாந்தங்களே அநித்யமாயும் அதிதுஷ்கரமாயு மிருக்கு மானால் பகவதேகபராயணரான ஸத்தாதிகள் விஷயத்தில் சொல்லவேண்டியது முண்டோ? பரமபுருஷார்த்தமான நம்பெரு மாள் கைங்கர்யத்தி லிச்சரீரத்தைச் சமர்ப்பிக்கலாகாதோ? ஆக விக்யாதி யோசனையால் அடியேனைப்பிரார்த்தையி லொப்புவிக்காமல் அடியேனுக்கிரங்கியருளித்தேவரீருடைய ஸ்ரீஹஸ்தத்தால்தானே அடியேனுடைய கண்டத்தை ஸ்ரீரங்கேசார்ப்பிதமாகக் கண்டித்து விட்டு இத்தச்சுவர்ண விக்ரஹத்தைக் கொண்டுபோய்க் கைங்கர் யத்தை நிறைவேற்றத் திருவுள்ளம்பற்ற வேண்டுமென்று பஹு விதமாய்ப் பிரார்த்தித்தார். அனந்தரம் இவர் கொஞ்சநேரம் யோசித்து விடியுங்காலம் சமீபிப்பதைநோக்கி நெஞ்சுக்குட்டாய் எதிராஜா! த்ரிபாத் விபூதிக்கு அதிநாதனனவன் நீயல்லனோ? என்று ஆசீடபாதராய்ச் சடக்கெனக்கரவாளையுருவி ஸ்ரீரங்க நாதா! என்றுச்சரித்துக்கொண்டே அவர் சிரஸைக் கண்டித்துச்

† தத்ததவஸ்தோசிதமான - அந்த அந்த அவஸ்தைக்கு உசிதமான.

அவர்ணை விக்ரஹத்தையும் அந்தச் சிரஸையும் ஒரு பாடையில் வைத்து மூடி யெடுப்பித்துக் கொண்டு நெருப்புச்சட்டியுங் கையுமாய் சோகவ்யாகுலமாய் நகரத்தைக்கடந்து வெகுதூரம்போய்க் காட்டிலேயொரு புதரில் அந்தச் சிரஸை நாய் நரிகள் தீண்டாதபடி பக்குவப்படுத்தி வைத்துவிட்டு விக்ரஹத்தைமாத்ரம் எரிப்பித்துக்கொண்டு கடுகடையிட்டு நம்பெருமாள் சந்நிதியை நோக்கி வந்தார்.

இங்கே வர்த்தமானமிப்படியிருக்க, அங்கே பெரியகோயிலிலே ஸ்ரீரங்கநாயகித்தாயார் பெரியபெருமாளை யடிபணிந்து, ஐயோ !! நமக்காக யெதிராஜன் ப்ராணன்விட்டதைப் பார்த்திருக்கலாமோ? தேவரீருடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்த்யாதிகள் மாயமாய்ப் போய்விட்டதோ ? ராஜ்யத்துக்காகவும் பெண்டுக்காகவும் ஆசிரயித்த சக்ரவர்த்திராஜனுடைய சைன்யங்கள் இந்த்ரஜித்து கையிலகப்பட்டு ப்ரம்ஹாஸ்த்ரத்தாலே உயிரை விட்டபோது தேவரீர் அவர்களைப் புனர்ஜீவிதராம்படிச் செய்யவில்லையோ? சமுத்ரத்திலே பஞ்சஜனனென்கிற ராக்ஷசன்வாயில் விழுந்து மாண்டுபோன சாந்தீபபுத்ரனை பஹுஸம்வத்ஸரங்களுக்கு மேல் தேவரீர் சமனபுரிக்குப்போய் மீட்டுக்கொண்டுவந்து குருதக்ஷிணையாகச் சமர்ப்பிக்கவில்லையோ ? தேவகியார் வயிற்றுதித்துக் கம்ஸனால் கொல்லப்பட்ட முதலாறு புத்ரர்களையும் அவ்வம்மையார் விருப்பின்படிச் சுதலலோகஞ்சென்று மீட்டுவந்தளிக்கவில்லையா ? மற்றும் வடமதுரையில் ஓர் விப்ரனுக்குப் பிறந்தவுடன் இறந்துவந்த பத்துக் குழந்தைகளையும் அவ்விப்ரனது வேண்டுகோளுக் கிரங்கி அருச்சுனனும் வியக்கும்படித் திருப்பாற்கடலை யடைந்து ஆங் கறிதுயிலமரும் பரஞ்சுடராகிய பகவானிடத்தி னின்றும் பெற்றுவந் தளிக்கவில்லையா? அப்படியிருக்கத் தாயாராய்வந்து, தேவர் திருவடிகளையே உபாயோபேயங்களாகக் கொண்டு (ஸ்வப்ரயோசனத்தைப்பற்றிச் சரணாகதரான ஸ்ரீவிபீஷணகஜேந்த்ர ப்ரப்ருதிகள்போலன்றிக்கே) தேவரையே "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்று தாரக போஷக போக்யங்களாகக்கொண்டு தந்தைதாய் தாரம் தனயர் பெருஞ்செல்வங்களாக "பிதாசகுமப்ரோஹி" என்கிறபடியே சேஷிபக்கல் சேஷபூதனிறன்று ஆதையான சரணாகதிமார்க்கத்தில் நின்று, தேவருக்கு கைங்கர்யத்தைச் செய்யப்பக்க மனை



விட்டு எதிர்பட்டகாலத்திலும், கைங்கர்யத்தில் ஹானிவரா ராணுமல் நீர்த்வத்தோடும் உயிரைவிட்டவராகிறாரேயென்று விண்ணப்பஞ்செய்ய; அவ்வளவில், பெரியபெருமாள் மந்தஸ்மிதஞ்செய்து பெரியதிருவடியையழைத்து நீர் சீக்கிரமாய் நாகைப்பட்டணத்துக்குப்போய் அங்கே பௌத்தாலயத்துக்குள்ளே விழுந்து கிடக்கிற எதிராஜருடைய தேஹத்தை யெடுத்துக்கொண்டு புதரிலே யிருக்கிற அவருடைய சிரஸை யெடுத்துப் பொருந்த வைத்து ப்ராணப்ரதானம்பண்ணி அதிவேகமாய்க் கொண்டுபோய் நம்முடைய பரகாலன்சந்நிதியில் விட்டுவாருமென்று ஆக்ஞாபிக்க; அவரும் தன்யனுயினேனென்றுரைத்து உடனே ப்ரயாணப்பட்டுப்போய் எதிராஜர் தேஹத்தைக்கண்டு, இப்படி நம்பெருமாளுக்காகச் சரீரத்தைச்சமர்ப்பித்த பரமதார்மீகனை இதுநாளும் இந்த ப்ரம்ஹாண்டத்தில் சேவித்ததில்லையேயென்று ஆச்சர்யப்பட்டு, அந்தச் சரீரத்தை யெடுத்துக்கொண்டு புதரிலிருந்த சிரஸில் பொருந்தவைத்து ப்ராணப்ரதானம்பண்ண; எதிராஜர் திருக்கண்களை விழித்துப்பார்த்துப் பெரிய திருவடியைச்சேவித்து, அவராலே நம்பெருமாளுடைய ஆக்ஞாப்ரகாரத்தை யறிந்துகொண்டு ஐயோ ! அடியேன் நித்யசௌக்யம்பெறுவது நம்பெருமாளுக்குத் திருவுள்ளமில்லையோ ! என்று சோகித்தளிக்க பெரியதிருவடி அவரைத்தேற்றித் தன்முதுகில் ஏற்றிக்கொண்டுவந்து இவ்வாழ்வார் சந்நிதியில்விட்டு, நம்பெருமான் நியமனமிருந்தபடியை யறிவித்து அவரால் பஹுமதிக்கருதராய் மீண்டுபோய் நம்பெருமாளிடத்தில் நடந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்தவராயினார்.

பின்பு இவ்வாழ்வாரும் மந்த்ரிகளும் எதிராஜனைக் கண்டு, சவத்தில் ஆத்மா ஸ்புரித்த பின்பு அப்ரகர்ஷரான இந்த்ரியங்களைப் போலும், நித்யதரித்ரன் நிதியைக்கண்டாற்போலும், தேசாந்தரகதமான புத்ரனைக்கண்ட மாதாபிதாக்களைப்போலும், அத்யந்த சந்தோஷத்திலழுந்திக் காடாலிங்கனஞ்செய்துகொண்டு ஹர்ஷத்துடன் கூத்தாடி, எதிராஜா? நீர் எங்களைவிட்டுத் தனியேபோய்ப் பரமபதத்திலனுபவிக்கிற ப்ரம்ஹசுகமுடையத்துச் சுகமாயோவென்று சொல்லி இனிப்ராஹுருத்யோக்த்யாதி காரியங்களும் ஏககண்டமாய்க்கூடி இந்தக்கைங்கர்யத்தை விக்னஞ்செய்வதாக வந்ததிர்த்

தானும் நிமிஷமாத்திரத்திலவர்களைப் பராஜிதராக்கி, ஸ்ரீமத்ரங்கேச மண்டபப்ராகாராதிகளை நிரங்குசமாகத் தீர்க்கக்கடவோமென்று அதிகோலாஹலத்துடன் புறப்பட்டுக் கண்ணங்குடி மார்க்கமாய் வருகையில் அவ்வூர்த் தலையாரிப்பறையனொருவன் இவர்கள்பின்னே தடதடவென்றோடிவர; இவ்வாழ்வார்திரும்பி, நீயாரென்று கேட்க; ஸ்வாமி! அடியேனிந்த வூர்த் தலையாரிப்பறையன் இந்த ப்ரதேசத்தில் எவ்விடத்தில் குளமெடுத்தாலும் தீர்த்தமுண்டாகிறதில்லை யாகையால் தேவரீர் இங்கெழுந்தருளிக் கடாக்ஷித்தால் தீர்த்த முண்டாமென்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருந்தேன்; ஆகவின் ஒருபக லிங்கெழுந்தருளும் படியாய்ப் ப்ரார்த்திக்கிறேனென்ன; இவர் ஒரு கல்லையெடுத்து அதில் அடையாளம் வைத்து அவனுக்குக்காட்டி இது விழுந்த இடத்தில் தீர்த்தமுண்டாகும் போவென்று ஊரைநோக்கி யெறிந்துவிட்டு விடியுங்காலமாகிறதற்குள்ளாக ஒரு அக்ரஹாரத்துக் கருகேபோய் அங்கே உழுது சேறுக்கி வைத்திருந்த ஒரு வயலில் ஸ்வர்ண விக்ரஹத்தைப் புதைத்துவிட்டுச் சமீபத்தி லிருந்ததொரு திந்த்ருணீ வ்ருக்ஷத்தடியில் வீற்றிருக்க; அவ்வளவில் பொழுதுவிடிய; அந்த வயலையுடையவன் நடுகைக்கு நாற்றுச் சுமையை யெடுத்துக் கொண்டுவந்து அதிலிறங்க; உடனே தோராவழக்கனெழுந்தோடி அவனைத்தடுத்து எம்முடைய பிதாமகன் நட்டுவைத்த செய்யில் நாற்று நடுவதற்கு நீயெங்கிருந்துவந்தாய்கா ளென்றுவழக்கிட; அவன் திகைத்திட்டு வ்யவஹாரிகளைக் கொண்டுவந்துபேச; அவர்களுடன் அஸ்தமயமாகிறகாலமளவும் வியவஹாரம்பண்ணி, அவ்வயல் தம்முடைய பித்ரார்ஜிதமென்று நிரூபிக்கத்தக்க சாஸனங்களை மறுநாளுதயத்திற் கொண்டுவந்து காட்டுகிறேனென்ன; வ்யவஹாரபுருஷர்கள் அப்படியே செய்யக்கடவாயென்றுசொல்லி உழவனைநாற்றுச்சுமையோடே வீட்டுக்கனுப்பிவிட்டுப் போயினார்கள். இவர்கள் அன்றிராத்ரியில்தானே புதைத்துவைத்த விக்ரஹத்தை யெடுத்துக்கொண்டு அவ்விடம்விட்டு ப்ரயாணமாய் அதிசீக்ரமான யாத்ரைசெய்து ஸூர்யோதயமாவதற்குள்ளாக உத்தமர்சன்னிதிக்குவந்துசேர்ந்து, அவ்விக்ரஹத்தை † நிக்ஷேபஞ்செய்துவிட்டார்கள்.

† நிக்ஷேபம் - புதையல்.



(†) இதற்குள்ளாக நாகைப்பட்டணத்திலுள்ளவர்கள் பௌத்தாலயத்தின் சிகரத்தை மழித்துவிட்டிருக்கக்கண்டு வெகு அபரிதங்களைப்பண்ணி, மணியக்காரர்களும் தலையாரிகளும் அடிச்சுவடு சோதிக்கத்தலைப்பட; அது கண்ணங்குடிவரையில் கொண்டுவந்து அங்கிருந்து அக்ரஹாரத்தின் வயல்மார்க்கமாய் உத்தமர்சன்னிதியளவும்வந்து இவர்க ளடியில்மறைய; அவர்க ளிவர்களைச் சூழ்ந்துகொண்டு விக்ரஹத்தைத் தரவேண்டுமென்று பாதிக்க; அவ்வளவிலேஇவ்வாழ்வார்சன்னிதிக்குள்ளிருந்துவெளியேவந்து அவர்கள் செய்கிற ‡ விபரீதங்களைக்கண்டு அவர்க ளவசரத்தை யொருவாறடக்கி நீங்கள் சுவடுகண்டுவந்ததும் விக்ரஹத்தை யிழந்திருப்பதும் உண்மையாகில் நாம் நிர்விசாரித்து ஸேஷித்துக் வாங்கித்தருவோம்; நீங்கள் பயப்படவேண்டியதில்லையென்று சொல்ல; அவர்களிவரை ஆலிநாட்டரசனென்றறிந்திருந்தார்களாகையால், ஸ்வாமி! இப்போது சொன்னபடிச் செய்துதருகிறேனென்று ஒரு சீட்டு கொடுத்தால் எங்கள் தலைவருக்குக்காட்டி எங்களுக்கு நேரும் தண்டனையினின்று மீள்வோமென்று கேட்டுக்கொள்ள; இவர் தோராவழக்கனையழைத்துச் சீட்டெழுதுமென்ன; அவனும் உங்களுடைய ஸ்வர்ண விக்ரஹக் களவைக் கண்டுபிடித்துச் சிறு

‡ "தோராவழக்குத் திருக்கண்ணங்குடி ஊராக்கினது உறங்காப்புளி" என்னும் பழமொழி யிங்கறிதற் பாற்று.

(†) மற்றொரு பிரதியில்:—

பின்பு நாகப்பட்டணத்தி லிருக்கின்ற பௌத்தர்களெல்லாந் தங்கள் ஸ்வர்ண விக்ரகத்தை யெடுத்துப்போனவ ரின்னாரென்று கேள்விப்பட்டுச் சோழராஜனிடத்திற்போய்ச்சொல்லிமுறையிட்டுக்கொண்டார்கள். அரசன் திருமங்கையாழ்வாரை யழைப்பித்துக்கேட்க; ஆழ்வாரும் நாமே அந்தவிக்ரகத்தை யெடுத்துக்கொண்டுபோய் எம்பெருமானை ஸ்ரீரங்கநாதனுடைய கைங்கர்யங்களுக்கு உபயோகித்தோம்; அதனால் குற்றமென்ன? பொய்யாகிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு திவ்யமாக இவர்கள் வணங்குகின்ற புத்தவிக்ரகம் பெரும்பேறு [illegible] றதென்றுசொல்ல; பௌத்தர்கள் அரசனைப்பார்த்து ஐயா! இவர் திருடிப்போனது மல்லாமல் எங்கள் ஸமயம் பொய்யென்று நிந்தனையுஞ் செய்தார். இவர்ஸமயம் எப்படிப்பட்டது? இவ்விரு ஸமயங்களையுங் குறித்து உமதுஸமூகம் சாக்ஷியாக வாதிக்கலாம்; அதிலிவர் தோற்றால் இதற்குத்தக்கதண்டனைசெய்யவேண்டியது; நாங்கள் தோற்றால் எங்களுக்குத்தக்க தண்டனை செய்கிறது மல்லாமல் எங்கள் விக்ரகத்தை யெடுத்துப்போனதற்குக் கேள்வி வேண்டுவதில்லை என்று சொல்ல. அரசன் திருமங்கையாழ்வாரைப் பார்த்து இதுவிஷயத்தி லுமது

விலைக் குறைவுபடாமல் கொடுப்பிப்போமென்றும் அதற்குக்காலவரை வருகிறவருஷம் பங்குனிமாதம் ரோஹிணி நக்ஷத்ரமென்று மெழுதிக்காட்ட; அதிலிவர் கையெழுத்திட்டுக்கொடுக்க; அவர்களதைச்சமாதானமாய் வாங்கிக்கொண்டு போயினார்கள். அங்கே கண்ணங்குடி பறையனும் ஊருக்குள்போய் இவர் அடையாளமிட்டெறிந்தகல்லைச் சன்னிதிக்குமுன்பே விழுந்திருக்கக்கண்டு, இவர் நியமனத்தை க்ராமாதிபர்க்கறிவிக்க; அவர்களும் மனமுவந்து பித்துத் தீர்த்தமுண்டாகக்கண்டு ஊரடைய மகிழ்வெய்தினார்கள்.

அதன்பின்பு இவ்வாழ்வார் சங்கையில்லாமல் விக்ரஹத்தைச் சுட்டுரைத்து நன்பொன்னாக்கிக், கோடிபொன்னாக்கிக் கொண்டு பெரியபெருமாளுக்குத் திருமண்டப ப்ராகாராதி கைங்கர்யங்களை நிறைவேற்ற வேண்டுமென்று திருவுள்ளமாய்க், கட்டுவிக்கிறசெய்கையிலே, ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை கட்டுகிற ஸ்தலம் சேர்பட, இவரந்த ஸ்தலத்தைத் தப்புவித்துத் திருமதிளை யொதுக்கிக்கட்டுவிக்க; இவருக்கவ்வாழ்வார் ப்ரஸன்னராய்த் தம்முடைய திருப்பூக்கூடைக்கு இவருடைய திருநாமங்களிலொன்றாகிய "அருள்மாரி" என்கிற திருநாமத்தைச்சாற்றி ப்ரீதராயருளினார். பிறகு இவர் கைங்கர்யங்களைப் பூர்த்திசெய்து வைத்துத், திருக்குறுங்குடி நம்பியைச்சேவித்தவரைத் திருவுள்ளம்பற்ற; அத்துறைவாயில் நாகைப்பட்டணத்தி லிருந்து ஸ்வர்ண விக்ரஹத்துக்காக அவர்கள் சீட்டை யெடுத்துக்கொண்டு வந்து காட்டிக் காலவரை யாயிற்றென்ன; இவரத்த விக்ரஹத்தின் சிறுவிரலை பத்ரமாகவைத்திருந்து கொடுக்க; அவர்கள் விக்ரஹமுழுமையும் வர வேண்டாமோ வென்ன; சீட்டை நன்றாக வாசித்துப் பார்த்து அதன்படியே பெற்றுக்கொள்ளக் கடவீர்களென்ன; அவர்களிவரை வ்யவஹாரஸ்தானத்தி லழைப்பிக்க; இவர் அங்கும்போய்ச் சீட்டின்படியே சிறுவிரலைச் சேர்ப்பிக்கக் கடவேனென்று வழக்

கருத்தென்னவென்றுகேட்க? ஆழ்வாரும் பௌத்தர்களைப்பார்த்து உங்கள் ஸமய லக்ஷணங்களைச் சொல்லுங்களென்ன? அவர்கள் அவைகளைச் சொல்லுந்தோறும் அவைகளிலுள்ள அபாசங்களையெல்லாம் விளங்கும்படித் தெரிவிக்க; அவர்கள் எங்கள் ஸமயம் கிடக்கட்டும், உமது ஸமயலக்ஷணங்களைச் சொல்லுமென்று கேட்க? ஆழ்வார் நித்தியவஸ்துவைக் காட்டுகின்ற ஸ்ரீவைஷ்ணவஸமய ஸித்தாந்தத்தை யாவருமறிந்து அன்புகொள்ளத் திருவாய்மலர்ந்தருளி அப்புத்தர்களை வென்று ஆண்சிங்கம்போலப் பொருவித்தத்துடன் முகமலர்ந்திருந்தார்.



டார்; ந்யாயாதிபனும் இவர்பக்ஷத்தில் தான் ந்யாயமுண்டென்று அந்தச் சிறுவிரலையே வாங்கி அவர்களுக்குக் கொடுத்துப் போக விட்டான்.

அதன்பிறகு, இவர் பரிவாரத்துடனே திருக்குறுங்குடிக்கு ப்ரயாணமாய்ப் போகையில், திருக்குருகூரில் ஆதிப்பிரானையடி பணிந்து, திருப்புளியின்கீழ் அர்ச்சையாயெழுந்தருளியிருக்கிற நம்மாழ்வாரைத் தரிசித்துச், "சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ நாமம் பராங்குசனோ நாரணனோ - தாமம் துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும் உளவோ பெருமானுனக்கு" என்றபடி ஸ்வாமி! தேவரீருக்கு இருப்பிடம் க்ஷீரசாகரமென்றும், திருநாமம் நாராயணனென்றும், தரித்திருப்பது திருத்துழாய் மாலையென்றும், திருத்தோள்கள் நான்குண்டென்றும் அடியேன் சாஸ்த்ரங்களாலறிந்திருக்கிறேன்; ஆனால் போது ப்ரத்யக்ஷத்தில் அதற்குமேல் புறம்பாக இருப்பிடம் திருக்குருகையாயும், திருநாமம் பராங்குசனெனவும், தரித்திருப்பது வகுளமலர்மாலையாயும், திருத்தோள்களிரண்டாயுமிருப்பதைப்பற்ற, இனி அடியேன் பாவனை நிலைமையில் இவ்விரண்டு வகைத்தி லெதைக் கொள்ள வேண்டுமோ சொல்லீரென்றார். அப்போது ஸ்ரீபராங்குசர் அவ் விருப்பிற்றானே சதுர்ப்புஜ சங்கசக்ராதி திவ்யாயுததாரராய் வைகுண்டநாதனுமி ஸ்ரீமதுரகவியாழ்வாரைப்பிராட்டியாகவும் திருப்புளியாழ்வாரை அனந்தாழ்வானாகவும்செய்துகொண்டு சேவைசாதித்தருள; இவர் ஹர்ஷப்ரகர்ஷராய் ஆடிப்பாடி (உளவோ பெருமானுனக்கு என்பதை பற்றிய) அடியே னிரண்டு வகையைப் பற்றிக் கேட்டபுக; இம்மொரு கம்பீரமான சேவையுந்தந்தீரே! இதுவுமொன் றுண்டோ தேவரீருக்கு என்று விண்ணப்பஞ் செய்து தீர்த்தப்ர

அரசன் மனமகிழ்ந்து ஆழ்வாரை அனேகவிதமான அளவிறந்த திரவியங்களையும் அபாரமான வஸ்த்ராபரணங்களையும் ஸமர்ப்பித்து, மதம்பொழிகின்ற யானையின் பிடரிமேலெழுந்தருளப் பண்ணிக்கொண்டு அக்கர் வலஞ்செய்வித்து, மங்களவாத்யங்கள்கோஷிக்கத் தனது மந்த்ரிமுதலானவர்களுடன் கூழ்ந்துபோய்த் திருவரங்கத்திற்கு எழுந்தருளச்செய்து தான் விடைபெற்றுக் கொண்டு திரும்பித் தன்னகரத்துக்குப் போய் விட்டான். ஆழ்வாரும் திருவரங்கத்தையடைந்து யானையை விட்டிறங்கி ஸந்நிதியிற் சென்று ஸ்ரீரங்கநாதனை யடிபணிந்து புறம்வந்து ததீயாராதனஞ்செய்வித்து ப்ரஸாதமும் ஸ்ரீபாததீர்த்தமும்பெற்றுக் குழுதவல்லியிடத்திற்குவந்து அரசன் கொடுத்த பரிசுகளைக்காட்டி ஸந்தோஷஞ் செய்வித்து இன்புற்றிருந்தார்.

னாதங்களை லபித்துக்கொண்டு விடைகொண்டு திருக்குறுங்குடிக்கெழுந்தருளி நம்பியை மங்களாசாஸனஞ்செய்து மீண்டும் நம்பெருமாள் ஸந்நிதிக்கெழுந்தருளினார்.

அப்போது திருமதிள் கட்டினகொல்லர் முதலியதொழிலாளிகள் தங்களுக்குக்கொடுக்க வேண்டியகூலிக்காக ஒருமித்துவந்து இவரைப்பாதிக்க; இவரவர்களிடத்தில் ஹிதமாகப்பேசித் திருக்காவேரி த்வீபத்தில் சிலத்ரவ்யம்சேமித்துவைத்திருக்கிறதென்றும் அங்கேவந்தால்வேண்டியவரையில்கொடுப்போமென்றுஞ்சொல்ல; அவர்களுமிசைய; அவர்களையெல்லாம் ஓர் ஓடத்திலேற்றிக்கொண்டு திவ்யஜ்ஞானங்களை அமோகமாய்ப்போதித்து அவர்களுக்கிந்த ஜகத்திலிருந்த இச்சையைமாற்றிப் பக்வஸ்தர்களாம்படிப் பண்ணி ப்ரவாஹத்தின் மத்தியிலேபோமளவில் இவர் அவர்களைநோக்கி, உங்களுக்கெல்லாமிப்போது த்ரவ்யத்தின் பேரிலிச்சையோ? நித்யவாழ்வைப்பெறவிச்சையோ? என்றுகேட்க; நித்யவாழ்வேவேண்டுமென்று அவர்களெல்லாரு மேககண்டமாய்ப் ப்ரார்த்திக்க; அப்படியானால் யாவரும் சிரஸின்மேல் கைகளைக்கூப்பிக்கொண்டு பெரியபெருமாள் திருவடிகளில் மனதைச் சத்யமாக நிறுத்திவைத்து த்யானித்துக்கிடப்பீர்களாகில் இப்போதே அந்தப்பரமபதநாதனை நாம் ப்ரத்யக்ஷமாக்கித் தருகிறோமென்ன; அவர்களு மப்படியே செய்துநிற்க; அந்தசமயத்தில் ஓடக்காரனுக்குச்சமிக்ஞைபண்ணி, அவனுந் தாமுமாய்ப் பிணையல் போட்டுக்கொண்டுவந்த மற்றோரோடத்தில் தாண்டிக்கொண்டு, அவர்களையோடத்தோடே கவிழ்த்துவிட்டுத் திருநாடளித்துத் திருப்பிவந்துகோயிலிலெழுந்தருளியிருந்தார். அனந்தரம் அந்தத்தொழிலாளிகளுடைய புத்ரபௌத்ரர்கள் இந்த வர்த்தமானத்தையறிந்துகொண்டு, எங்களுடைய பிதாக்களையும் பிதாமஹர்களையும் கொன்றுவிட்டிருப்பதற்குக்காரணஞ்சொல்லுமென்று இவரைச்சூழ்ந்துக்கொண்டுபஹுவிதமாக இமைய; அப்போ இவர் மஹாதுக்கத்துக்குள்ளாகி விழித்துக்கிடக்க; நம்பெருமாளிவருடைய ஸ்வப்நத்தி லெழுந்தருளி ஆழ்வீர்! நீரேதுக்கு கஷ்டிக்கிறீர்? அவர்களையெல்லாம் திருக்காவேரியில் தீர்த்தமாடித்திருமண்தரித்துக்கொண்டு நம்முடைய திருமண்டபத்தில் வந்துநின்று அவர்களாபிதாக்களை அழைக்கச்சொல்லீராகில்நாமவர்களைக் காட்டித்தராமற்போமோ வென்று திருவாய்மலர்ந்தருளிப் போக; இவருமவர்களைப்பார்த்துப் பெரியபெருமாளியமனப்படியே



சொல்லித் திருக்காவேரியில் தீர்த்தமாடித் திருமண் தரித்துக் கொண்டு வரச்செய்து அழகியமணவாளன் திருமண்டபத்தில் அழைத்துக் கொண்டுபோய் நிறுத்தி, உங்களுடைய பெரியோர்களைப் பெயரிட்டு அழையுங்கோ ளென்ன; அவர்களு மப்படியே யழைக்க; அவர்கள்பெரியோரெல்லாம் பெரியபெருமாள் பின்னே நின்றுகொண்டு முகங்காட்டி ஆழ்வாருடைய க்ருபையால் நித்யத்வத்தைப் பெற்றுச் சுகித்திருக்கிற நாங்களைக்குறித்து உங்களுடைய துர்க்கதியைக்கண்டு வ்யஸனப்பட வேண்டியது; அப்படியிருக்க, நீங்களெங்களுக்காகத் துக்கிக்கலாமோ? நீங்களும் இவ்வாழ்வாருடைய திருவடிகளை ஆச்ரயித்துச் சீக்கிரத்தில் எங்களுடன்வந்து கலந்துகொள்ளுகை தேடிக்கொள்ள வேண்டுமென்றுசொல்லி மறைந்து விட்டார்கள்; அப்போது அவர்களெல்லோரும் ஆழ்வார் திருவடிகளை அபசாரப்பட்டோமே யென்றுவருந்தித் தண்டன் ஸமர்ப்பித்து அபசாரக்ஷாபணம் பண்ணிக்கொண்டு இவர் திருவடிகளையாச்ரயித்திருந்தார்கள்.

(†) அனந்தரம் இவர் ஒருநாள் பெரியபெருமாளைச்சேவித்து "இன்று ஒருமாறு சிந்தித்துக் கொண்டிருக்கப்; பெரிய பெருமாள் கடாக்ஷித்து நீரேதுக்குச் சிந்திக்கிறீர்காணென்ன! இவர் அவரை

(†) மற்றொரு பிரதியில்:—
இப்படியே நாள்தோறும் சேஷசாயியான ஸ்ரீரங்கநாதனைசேவித்து வருகின்றவர் ஒருநாள் ஸந்நிதியில் திருநெடுந்தாண்டகமென்னும் ப்ரபந்தத்தைத் தேவகானத்திலே பாடிக்கொண்டு மனமுருகிநிற்க; ஸ்ரீரங்கநாதனும் திருவுளமுவந்து ஆழ்வாரைக் கடாக்ஷித்தருளி உமக்கென்ன வேண்டுமென்று திருவாய் மலர்ந்தருள; ஆழ்வாரும் எம்பெருமானைப்பணிந்து ஸ்வாமி, முன் ஸ்ரீசடகோபாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய த்ராவிடவேதங்களாகியவையும் ‡ திருவத்யயனோத்ஸவத்தில் கீர்வாணவேதங்களுடன் ஸ்ரீவைஷ்ணவர்கள் பாராயணம் பண்ணும்படி க்ருபைசெய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்ளப்; பெரியபெருமாளும் அவ்வாறே அநுக்ரஹஞ் செய்தருளினார். பின்பு திருக்குருகூரிலிருக்குஞ்சடகோபரும் ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளும்படித் திருமுகப்பட்டயமெழுதி ஸந்நிதியிலிருக்கின்ற ஸ்ரீவைஷ்ணவரிடத்தில் கொடுத்தனுப்பத், திருமுகத்தைக் கொண்டுபோய்த் திருக்குருகூர்நம்பி ஸந்நிதியில்கொடுக்க ஆழ்வார்பரிஜனங்கள் அந் நியமனப்படி ஆழ்வாரை ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளப்பண்ணத்; திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரை யெதிர்கொண்டு திருவடிதொழுது ஸந்நிதிக்கு எழுந்தருளப்பண்ணிக் கொண்டுபோய்ச்சேர்க்க; எம்பெருமான் ஆழ்வாரை க்ருபைகூர்ந்து நம்மாழ்வாரே யென்றழைத்தருளித் திருப்பரிவட்டம் திருமாலை முதலானவரிசைகளை ப்ரஸாதித்தருளினார்.

‡ இதன் விரிவைத் தனியனுரைப்பாட்டிற் கண்டுகொள்க.

இந்த ஸ்ரீரங்க விமானத்தைச் செம்பொன்னால் முடித்துக் காண போக்யனாகாமற் போனேனே யென்னப்; பெரியபெருமாள் அந்த நிமிஷத்தில் தானே விமானமண்டபகோபுராதிகளையெல்லாம் பொன்மயமாய்க்காணும்படிச் செய்ய; இவர் தரிசித்து என்றுமிப்படியே இருக்கும்படிக்குத் திருவுள்ளம் பற்றவேணுமென்று ப்ரார்த்திக்கப்; பெரியபெருமாள், ஆழ்வீர்! த்ரவ்யாபேக்ஷைகொண்டு தீபகதிக் காளாகும் இம்மண்டலத்தாருக் கிந்தவிமானம் உம்முடைய அபீஷ்டப்படி யிருக்குமாகில் பஹுவ ப்ரமாதங்களாய்விடு மாகையால் இங்ஙன மிருக்கலாகாதென்று சாதிக்கப், பழையபடியே செய்துவிட்டு, இன்னமும் உம்முடைய இஷ்டவிசேஷமிருப்பதைச் சொல்லிக்காணுமென்ன; இவர், ஸ்வாமி! இப்போது திருமதிள் வேலைக் காரர்களைத் தேவரீர் ஆட்கொள்ள இடமாகவமைந்த வடதிருக்காவேரிக்குக் "கொள்ளிட" மெனவும் அந்தத்துறைக்குப் "பாபவாணத்துறை" யெனவும் பெயர்வருமாறு அந்ததீரத்தில் அடியேன் வெளியிட்டுக்கொள்ளவும் அங்வேலிக்குள் அநாத ப்ரேதங்களுக்கெல்லாம் அடியேன் ஸம்ஸ்காரஞ் செய்து கொண்டிருக்கவும் அவைகளுக்குத் தேவரீர் பரமபதம் சாதித்தருளவும் க்ருபை புரிய வேண்டியதாய் ப்ரார்த்திக்கின்றேனென்னப் பெரியபெருமாள்

---

ஆழ்வாரும் விடைபெற்றுக்கொண்டு திருமங்கையாழ்வாருடன் எழுந்தருளியிருந்தார். பின்பு திருமங்கையாழ்வார் மறுநாள் ஏகாதசிதொடங்கிப் பத்துநாளளவும் பகலில் ஸம்ஸ்க்ருத வேத பாராயணமும் இரவில் திருவாய்மொழியாகிய திராவிடவேத பாராயணமும் செய்வித்துப், பத்தாவதுநாளிரவில் திருவாய்மொழியோதிச் சாத்தும்போது ஸ்ரீசடகோபர் ஜீவாத்மாக்கள் ஸ்ரீரங்கநாதனைத் திருவடிதொழும்படியான வழியையநுசரித்தருளும்படிச் செய்வித்துப் பின்பு வருஷந்தோறும் இவ்வாறே எழுந்தருளும்படிச் சடகோபரது திருவுள்ளம்பெற்றுக்கொண்டார். சடகோபரும்பெரியபெருமாளடிபணிந்து விடைகொண்டு திருக்குருகூருக் கெழுந்தருளினார். பின்பு திருமங்கையாழ்வார் உலகிலுள்ளவர்கள் யாவரும் கடைத்தேறும்படியாக ஸ்ரீரங்கநாதனுடைய திருவுள்ளப்படி அந்தத் திவ்யதேசத்தி லொருபக்கத்தில் நிதிநிலம்வளர்த்து முதலாட்க இந்நிலத்திலுள்ளயாத்மாக்களை யல்லது பாபிகளாயினும் தயவுபண்ணப் பெறுவார்களாகில் பரமபதம் அடைவார்களென்று உண்மையாகத் தெரிவித்தருளினார்.

பின்பு சிலகாலம் ஸ்ரீரங்கத்திலே யிருந்தருளிப் பூர்வம் திவ்யதேச யாத்திரை செய்யும்போது மந்த்ரஸித்திக்குசமீபத்தில் பத்ராஸ்ரமமென்று சொல்லப்பட்ட திருக்குறுங்குடியிற் சென்று நம்பியினழைக்கண்டு களித்து நித்யவாசஞ்செய்ய வேண்டுமென்று எண்ணியும் அவ்வெண்ணத்தை முடிக்காது ஸ்ரீரங்கத்தில் கைங்கர்யஞ்*செய்ய வேண்டி வந்தவரானபடியால் அத் திருக்குறுங்குடிக்கு எழுந்தருள வேண்டுமென்று திரும்பவும்



உகந்தருள்ளத்தகாப் ஆழ்வீர்! நீரிந்த வேலிக்குள் விழுந்திறக்கிற மனுஷ்ய பசுபக்ஷ்யாதி சகலசீவர்களுக்கும் பரமபதந்தாவிருக்கிற நாம் உம்மால் சம்ஸ்காரம்பண்ணப்படுமவர்களுக்குமாத்ரமே இல்லையென்போமென்று வரந்தந்தருள; இவர் புனிக்ருத காந்ராய்ப் பாபவாணத் துறையைத் திருத்தி மண்டபமியற்றி அனந்தமான அநாதப்ரேத சம்ஸ்காரங்கள் செய்து அவர்களுக்கெல்லாம் முத்தி தந்துகொண்டிருக்குந் தசையிலே, ஒருநாள் பெரிய பெருமாள் இவரை நோக்கி உமக்கின்னமும் நம்மாலாக வேண்டியது

---

ஆசைமேற்பட்டு ஸ்ரீரங்கநாதனிடத்தில் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுக் குமுதவல்லி யாருடன் பரிஜனங்களுடன் பரசமயகோளரி வந்தாரென்று சின்னங்களூத வெழுந்தருளிச், சோலைமலையழகரையும், கூடலழகரையும், ஸ்ரீவில்லிபுத்தூர் வடபத்ரசாயியையும், பெரியாழ்வாரையும், திருப்பொருநல் வடகரையில் ஸ்ரீவைகுண்ட நாதனையும், எம்மிடர்கடிவார் காசினிவேந்தர் அரவிந்தலோசனர் மாயக்கூத்தர் வைத்தமாநிதி என்கின்ற திருநாமங்களையுடைய எம்பெருமான் அர்ச்சாவதாரங்களை அவ்வவ்விடங்களி லெழுந்தருளி சேவித்துக்கொண்டு திருக்குருகூர் வானமாமலை முதலான திவ்யதேசங்களிற்சென்று எம்பெருமானை அடிபணிந்து திருக்குறுங்குடிக்கு எழுந்தருளினார்.

ஆழ்வார் எழுந்தருளுவதைக்கேட்ட அத்தலத்திலுள்ள பரிஜனங்களுடன் ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாருந் திரண்டு எதிர்கொண்டுபணிய அவர்களுடன்சென்று திருப்பாற்கடலில் தீர்த்தமாடிக்கோபுரவாயிற்றுட் புகுந்து காண்டமாடு பொய்கையின் கரையில் கரும்பினைப் பெரும்பழம் விழுவதும் வாளைபாய்வதும் பார்த்துமகிழ்ந்து *ஆனந்தபரவசராய்ப், பேரன்புடன் உடல்முழுதும் புளகமெழக் கைகளைக் குவித்துக்கொண்டு கண்களில் ஆனந்த பாஷ்பம் பொழிந்து ஆனந்தமுடையவராய் விழுந்துவிழுந்து தண்டன் சமர்ப்பித்து நின்றநம்பி இருந்தநம்பி கிடந்தநம்பி திருப்பாற்கடல் நம்பி திருமலைநம்பி என்கிற ஐந்துநம்பிகளையும் சேவித்து அடியேனுக்கு இன்றுபரமபதம் ப்ரசாதித்தருள வேண்டுமென்று அழகிய நம்பியின் பொன்னடியிரண்டையும் பற்றிக் கீழ்விழுந்துருகியுருகி யன்பேவடிவாகக் கிடந்தார். அப்பொழுது எம்பெருமான் ஆழ்வாரே உமது இஷ்டப்படியே கொடுத்தருளினோமென்று திருவாய்மலர்ந்தருள; அந்தக்ஷணமே திருமங்கையாழ்வார் ஸ்ரீமந்நாராயணனுடைய நியமனப்படி அவர்ஸந்நிதியில் சகல வரிசைகளையும் பெற்று மணவாளப் பிள்ளையைப்போலே ஸ்ரீவைகுந்த மாநகரத்திலிருக்கும் திருமாமணி மண்டபத்தைச் சேர்ந்தருளினார். இவர் இந்த லீலாவிபூதியில் - ௱௫ - திருநக்ஷத்திர மெழுந்தருளி யிருந்தார். திருக்குறுங்குடியில் கழனிக்காட்டில் திருமங்கை யாழ்வாருடைய ஸந்நிதியொன்று ஸ்தாபிக்கப்பட்டு இன்றும் நித்யோத்ஸவ முதலியவை நடந்தேறிவருவது மிக்கவிசேஷம்.

எனுமளவிலிருக்கில் சேவிரென்ன; இவர், தேவரீருடைய தசாவதாரத்தைச் சேவிக்கப் பெற்றிலேனே யென்ன; அப்போது பெரியபெருமாள், மத்ஸ்ய கூர்ம வராஹ வாமன நாரசிம்ஹ ஸ்ரீராம க்ருஷ்ணர்களான ஒன்பதுவிபவங்களைச்சேவை தர; இவர், ஸ்வாமீ! தேவரீர் இனிவருங்காலத்தில் எடுக்கப்போகிற பத்தாவது விபவமான கல்க்யவதாரத்தைச் சேவிக்கும்நாள் ஆகுமோ வென்ன, பெரியபெருமாள் இவரைப்பார்த்து நாம் அந்தவவதாரமெடுக்கும் போது நீர் நம்மிடம் அர்ச்சையாயிருந்து சேவிக்கலாமென்றார்.

அனந்தரம் கலியாப்தம் நாலாயிரத்திரண்டுக்குமேல் திருமங்கையாழ்வார் தசாவதாரக் கோயிலைக்கட்டிப் பிரதிஷ்டிப்பித்துத் தம்மையும் விக்ரஹமாக வுபலிதந்து விக்ரஹங்களை எழுந்தருளப் பண்ணிப் ப்ரதிஷ்டிப்பித்து, அதற்குவடபுறமாகத் தம்மாளிகை யோடு (அதாவது ஆழ்வார்தமது கையிலிருந்தவாளை விசிறியெறிய அதுபோய் விழுந்தவிடமே அவ்வாளாலுண்டான ஆறு என்றபடி) இதைக் கொண்டே ஸ்ரீபண்டாரத்திலே இரவியுதய முதல் 'பாடிய வாளாலுறை' என்று அதற்குத் திருநாமஞ்சாற்றி, அவ்விடத்திலே ஸம்ஸ்க்ருதமான பேருக்குப் பாடமுண்டாகத் தக்கதாக அந்தப்ரதேசத்துக்கு வாட்குழிபடி யில்லாதபடிப் பெருமானர்சந்நிதியில் வரம்பெற்று, அத்துறைக்கு இன்றும் 'திருமங்கை மன்னன் படித்துறை' எனப் பெயர்வழங்கும்படிச் செய்து தாம்பெரிய பெருமாளுடைய திருவடிகளையே உபாயோபேயங்களாகப்பற்றிக் குமுதவல்லியாருடன் எழுந்தருளி நித்திய சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இவர் மானுஷ விக்ரஹமாக விருந்தது நூற்றைந்து ஸம்வத்ஸரம்.

திருநக்ஷத்ரத் தனியன்.

வ்ருச்சிகே க்ருத்திகாஜாதம்
சதுஷ்கவி ஶிகாமணிம்
ஷட்ப்ரபந்த க்ருதம்ஶார்ங்க
மூர்த்திம் கலிஹமாஶ்ரயே.

ஸ்ரீ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர்திருவடிகளே சரணம்.

☞ ஸ்ரீ திருமங்கையாழ்வார் திருவவதாரவருஷம்-சதுஷ்கவிக்குச்சரியான ப்ரமாதி வருஷம்.

---

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான

# நம்மாழ்வார் வைபவம்.

ஈச்வரமுனிக ளருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

திருவழுதி நாடென்றுந் தென்குருகூ ரென்றும்
மருவினிய வண்பொருநலென்றும்—அருமறைகள்
அந்தாதி செய்தா னடியிணையே யெப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

சொட்டைநம்பிக ளருளிச்செய்தது.

நேரிசைவெண்பா.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்
இனத்தாரை யல்லா திறைஞ்சேன்—தனத்தாலும்
ஏதுங் குறைவிலே னெந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று.

"ததக் கலியுகஸ்யாதௌ வைஶாக்யாம் விப்ரஸத்தமா: - விஷ்ணுபக்தி ப்ரதிஷ்டார்த்தம் ஶேஷோ ஸம்பவிஷ்யதி" என்கிறபடி கலியுகாரம்பத்தில் விசாகநக்ஷத்ரத்தில் விஷ்ணுபக்தியை நிலைநிறுத்துதற்பொருட்டு விச்வக்ஸேநருடைய அம்சபூதரொருவர் அவதரிக்கப்போகின்றாரென்றும், "லோகோபகருணார்த்த திவ்யமந்த்ர த்வயம்ருதா— த்ராவிடாம்நாயவக்தாரம் பட்கோபகுருமீஜே" என்கிறபடி நிலமகளுக்கு முகபாவனத்தைப்போலிருப்பவரும் குருஶ்ரேஷ்டராயுமிருந்து ஸேநைமுதலியாருடைய அம்சத்தைப்பெற்று வேதாந்தத்திலுள்ள மஹாமந்த்ரத்வயார்த்தங்களைப் ப்ரதிபாதிக்கின்ற தமிழ்வேதங்களையருளிச்செய்தவருமாகிய ஸ்ரீசடகோபரைச் சேவிக்கின்றேன் என்றும், "ஸ்ரீவிஷ்ணோரநிமோத்த ரேஹநிகலௌ வர்ஷேப்ரமாத்யாஹ்வயே மாஸே மாதவநாம்நி பார்க்கவதிநே ருக்ஷேவிஶாகாபிதே - லக்நோபாத்த சதுர்த்தகௌ திதிபுதே ஸ்ரீமத்குருகாபிதே க்ஷித்யாம்பாரது பூத்பராங்குஶகவிர் பாக்யோ தயோஸ்மாத்ருஶாம்" என்கிறபடி இவ்வுலகில் கலியுகாதியில் நாற்பத்துமூன்றுவது நாளில்ப்ரமாதிவருஷம்வைகாசிமாதம்சுக்ரவாரம்

ஈக்லபக்ஷம் சதுர்த்தசி கடகலக்னம் விசாகநக்ஷத்ரங்கூடிய சுபதினத்தில் அவதரித்தனம்போலிகளுக்குப்ராப்யகாரணராயிருக்கிற ஸ்ரீ பராங்குசனைத் துதிக்கின்றேன் என்றும், "வகுளாலங்க்ருதம் ஸ்ரீமச்சடகோபபதத்வயம்–அஸ்மத்குலதனம் போக்யமஸ்துமே மூர்த்நி ஸந்ததம்" என்கிறபடியே வகுளபுஷ்பாலங்க்ருதமான ஸ்ரீ சடகோபருடைய உபயதிருவடிகளும் எமக்குக்குலதனமாகையாலே அவற்றை எம்முடைய சிரஸ்ஸுகளில் வைத்துக்கொண்டநுபவிப்போமாக என்றும், "அப்திபொண்ட்பேஷு தேசேபதா காசிச்சீ நகரீ திஷ்டி – தாம்ரபர்ணி நதித்தீரே ஸாக்ஷாத் த்ருஷ்டோ தியபே ராஸ்க்ஷூக கக்காசபூவைறவ தகாலோதா லோகவதிரப்டதா லித்து காவேரிதாம்ரபர்ணிதீதரா" என்கிறபடியே கங்கை–யமுனை–கோதாவரி–ஸரஸ்வதி–நர்மதை–ஸிந்து–காவேரி–நதிகளுக்கெல்லாம் [illegible] ரபர்ணி நதிக்கரையில் [illegible] உருக்காட்டுவன் என்றும் இவ்வுரு சரிதையிலே சொல்லிற்று.

## ஆழ்வார் திருவவதாரஞ்செய்த குலத்தின் வைபவம்.

இவ்வாழ்வாருடைய குலவைபவமெங்ஙனேயெனில்:— † பொருநற்றுறையில் "நல்லார்கள் திருநகரில்" "எந்தை தந்தை தந்தை தந்தைக்கு முந்தை" என்கிறபடியேயும், "ஏழாட்காலும்பழிப்பிலோம்" என்கிறபடியேயும், ஏழுதலைமுறையிலும் புகழ்பெற்ற தொண்டர்க்குடித்தொண்டுசெய்த * பூவைசியகுலத்தில் திருவழுதிவளநாடனென்கிற அரசன் மஹாதார்மிகனாய் நெறிமுறைதவறாது ராஜ்யபாரத்தைச் செய்துகொண்டிருக்கையில், ஒருதினத்தில் கும்பசம்பவர் ஆங்கிரசமுதலான மஹாருஷிகள் அவரிடத்தில் வர, அவர் எதிர்கொண்டுபோய்த் தண்டன்ஸமர்ப்பித்து அழைத்துவந்து ஆசனத்திலிருத்தி அர்க்யபாத்யாதிகளால் பூஜித்துச் சத்கரித்து வந்தகாரியமேதென்று வினவ; கும்பசம்பவர் மஹாப்ரீதராய் அரசனே! உமது முற்பாட்டனுள் குருகன் என்பவர் இராஜ்யாபிஷேகஞ்செய்துகொண்டபோது இந்தநகரியை ஜனஸ்தானமாக்கிக்கொண்டு குருநகராக்கை

* பூவைசியர் – வேளாளர்.

† தாம்ரபர்ணி எனவும் பொருநலதி எனவும் பெயருண்டு.



யால், இதற்குக் குருகாபுரியென்றுபெயர்வந்திருக்கிறது; அவ்வரசனால் அநாசாரதுலை பயமின்றிக்கே ப்ரஜைகள் சுகித்திருக்கக் கண்டிருக்கின்றோம்; அப்படியே நீரும் ஆண்டுகொண்டிருக்கிறபடியால், எங்களுக்கு நேர்ந்திருக்கிற ஆபத்தைத் தீர்த்துக் காப்பீரென்றெண்ணி இங்குவந்திருக்கின்றோமென்னத், திருவழுதிவளநாடர், அடியேனுக் கதைவிளித்துப் பணிகொள்ள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அப்போது ‡ கும்பசம்பவர் கேளீர் அரசனே! துந்துமாரனென்னுமொரு ராக்ஷஸன், ப்ரம்ஹாவினுடைய வரப்ரசாதத்தால் அதிகபலிஷ்டனாய், யாயாருபங்களை யெடுக்கவும்வல்லவனாய், எங்களாச்ரமங்களையும் யாகயோக்யபூமிகளையும் வேதசாஸ்த்ர புராணங்களையும் நாசஞ்செய்ய வெத்தனித்து அதிக உபத்ரவம் செய்யாநிற்க நாங்கள் சஹிக்காமல் பிரம்ஹா பக்கல் போய் அவனுடைய துன்மார்க்கங்களை யெல்லாம் விண்ணப்பஞ்செய்து அவனுக்கு எந்தக்காலத்திலேயால் முடிவுநேருமென்றுகேட்க; அதற்கு ப்ரம்ஹா திருப்பாவையை க்ரமமாகஜபிக்கிற ஒருவனுக்குச் சுதர்சனசஹிதனாய்விஷ்ணு ப்ரத்யக்ஷமாகப்போகித்ரனுப் வரப்போகிற சக்ரபாணியால் அவன் சம்ஹரிக்கப்படவேண்டுமென்றும் அல்லாதாரால் தனக்கு முடிவுநேரிடாதென்றும் அவன் தம்மிடத்தில் வரம்பெற்றிருக்கின்றானாகையால், நீங்கள் ஸ்ரீயபதியான விஷ்ணுவை ப்ரார்த்தித்து அவனாலவனுக்கு முடிவுநேரக் கடவீர்களென்றுகூறிவிக்க, நாங்கள் க்ஷீராப்திக்குப்போய் எம்பெருமானை யடிபணிந்து இந்தவிருத்தாந்தங்களை விண்ணப்பம் பண்ணிக்கொள்ள; அந்தத் தயாளு எங்களுக்கிரங்கி அஞ்சவேண்டாம் முனிவர்களே! பாண்டியதேசத்தில் ஸ்ரீநகரிக்கதிபதியான திருவழுதிவளநாடனென்கிற அரசனுக்கு நாமேபௌத்ரனாகப்பிறந்து உங்களுடைய குறையைத் தீர்த்துக்கொடுக்க விருக்கின்றோமாகையால் நீங்கள்போய் அவ்வரசனுக்குத் திருப்பாவையை யுபதேசித்து, க்ரமமாக ஒரு வருஷகாலம் ஜபித்துக்கொண்டிருக்கும்படிச் செய்யவேண்டுமென்றுகூறியிக்க; அதைச்சிரமேற்கொண்டு, இப்போது உம்மிடத்தில் வந்திருக்கிறோம் காணீர்; இனி எங்கள் மனோரத்தை வ்ருத்தி செய்தற்பொருட்டு, பஞ்சஸம்ஸ்கார பூர்வமாக அந்தத்திருப்பாவையைக் கேட்டனர்ந்துஜபிக்க வேண்டியதொன்றுதான் உம்மாலெங்களுக் காகத்தக்க உபகாரமென்று சொன்னார்கள்; அதன்பின்பு அரசன் அகஸ்தியரை நோக்கிச்சுவாமி!பூர்வகாலத்திலேயாகிலுமிந்தத்திருப்பாவையை

இவ்விதமாக வனுசந்தித்துச் சந்தானப்ரவிருத்தி பெற்றிருந்த துண்டாகில் அடியேனுக்குணர்த்த வேண்டுமென்று ப்ரார்த்தித்தவனாகக்; கும்பமுனிவர், கேளீர் வழுதிவளநாடரே! பூர்வத்தில் மஹீஸாரக்ஷேத்ரத்தில் சம்ஹநனம் என்கிற சந்துக்கதிபதியாயிருந்த க்ஷேத்ரவ்ரதனென்பவன், [illegible] யங்களைத் தர்ப்பயாரங்களிலே செலவிட்டவனாய்ப் பஹுகால முழன்று, அதற்குப்பலனாக ரோகங்களைச்சம்பாதித்து அவற்றால் பிடிக்கப்பட்டு மஹாதுக்கத்துக்காளாகி, அந்தத்தசையில் ஜன்மாந்தர சுகிர்தவழியில் க்ஷேத்ரதபத்தையடைந்து மதியைப்பெற்று நல்லகேள்விகளை யுடையவனாய் ஸ்ரீவைஷ்ணவ சஹவாசத்தைப் பேணிப் பஞ்சஸம்ஸ்கார பூர்வமாக இந்தத் திருப்பாவையைக் கேட்டு மனதிற்பதித்து, நித்யமாய்ப்பக்திபூர்வமாக அநுசந்தித்துக்கொண்டு [illegible] சந்ததிக்காளாகினான். அன்றியும் வடதிசையில் [illegible] நாகநகரத்துக்கதிபதியாயிருந்த [illegible]னென்பவன் [illegible] மந்திரியாகிய புண்டரீகனென்கிற ஸ்ரீவைஷ்ணவருடைய [illegible] காரத்தால் திருவரங்கம் பெரியகோயிலுக்குப்போய் நம்பெருமாளைச்சேவித்து, அங்கே விப்ரநாராயணரென்னுமொரு பாகவதோத்தமரை யாச்ரயித்துக்கொண்டிருக்க; ஒருநாளவர் அந்தப்ப[illegible]தர் அவன் முகத்தைப்பார்த்து, உம்முடைய மனதிலே [illegible] மிருப்பதாகத் தென்படுகிறதே யென்றான்; அவன் தேவரீருடைய க்ருபையால் அடியேனுக்கு ஐச்வர்யக் [illegible] ஒன்றும் குறைவில்லை யாயினும் சந்தானமில்லாத குறையொன்றே என்னை [illegible] ஸஜ்ஜனர்கள் ஸாங்கத்யத்திலிருக்கினும் பெனை வாட்டி வருத்தச் செய்கின்றதென்ன; அந்தப்பாகவதர் [illegible]னுக்கிரங்கிப், பஞ்ச ஸம்ஸ்காரஞ்செய்து திருப்பாவையை [illegible] தேசித்து, இதை நீர் ஒருவருஷகாலவரை அநுஸந்தித்துப் [illegible] வீராகில் உமக்குச் சுபுத்ரனுண்டாவானென்றநுக்ரஹிக்க; அவனும் மஹாபாக்யமென்று சொல்லி விடைபெற்றுத் தன்னுடைய நகரத்திற்குப்போய்ச் சிலகாலத்துக்குப்பின், குதிருஷ்டிகளுடைய சஹவாசத்தால் மதிமயக்குண்டு அநுசந்தானத்தையுமற்று [illegible] டையைப்பற்ற; சிலவருஷங்களாயும் அவனுக்குச் சந்தானமுமக[illegible] காமலேயிருந்தது; அதன் மேலவன் மிகவும் புத்ர[illegible] வருந்தியிருக்கையில் ஓர்நாளிரவில் [illegible]



போய்த் தன்னுடைய உடைவாளையுருவிக்கொண்டு, ஓ! சந்த்ரசேகரனே! சந்தானஹீனனான எனக்கு ராஜ்யமிருந் தென்னாக்கும்? ப்ராணனிருந்தென்னாக்கும்? இதோ உன்னடியிலேயே என்னுயிரை விடுகிறேன் கொள்ளுமென்று சிரசைச்சேதித்துக்கொள்ள எத்தனிக்கையில், பசுபதிபார்த்து நில்லுங்காண்! ஒருகாலத்திலுபய விபூதி நாயகனான நம்பெருமாள்சன்னிதிக்குப்போய்ப் பரமபாகவதரான விப்ரநாராயணராலே திருப்பாவையை லபித்துக்கொண்டு வந்தநீர் அவருடைய ஆக்ஞைப்படியே அதை யநுசந்திக்க வேண்டியதாயிருக்க, அயோக்யரைப்பேணி அதை அநாதரம் பண்ணி அபசாரப்பட்டிருக்கிறீராகையால் உமக்கிப்படிச் சபலம் நேரிட்டது; ஆகையால் இப்போதாவது அந்தத் திருப்பாவையைக்ரமப்படிக்கு அநுஸந்தானம்பண்ணிப்போருவீராகில்சிலகாலத்துள் ஒருபுத்ரனுண்டாகி, முதலில் வைஷ்ணவத்வேஷியாயிருந்து பின்பு ஸ்ரீவைஷ்ணவனாகி, உமக்குச் சத்கதியையுந் தரவல்லவனாவானென்ன; உக்ரஸ்யன் உடைவாளை யுறையிலிட்டுக் கொண்டு அநுஸ்தானமடைந்து, க்ரமப்படிக்குத் திருப்பாவையை யநுசந்தித்துக் கொண்டிருக்க; அவன் பத்னி கர்ப்பவதியாய்ச் சங்காதத்தனென்னுமோர் குமாரனைப்பெற்றாள். அந்தப் புத்ரன் வ்யவகாரதசையை யடைந்தவாறே, வைஷ்ணவர்களை த்வேஷித்துச் சதுரங்க பலத்துடன் பலவிடங்களுக்குஞ்சென்று உபத்ரவஞ்செய்து கடைசியில் பதரிகாச்ரமத்திற்கடுத்த ஸ்ரீவைகுண்டபுரம் என்கிற நகரத்துக்குப்போக, அங்கிருந்த கோபாலகுலதிலகரான கோவிந்ததாஸரென்னுமொரு பாகவதர் தன்னுடைய சைந்யங்களைக் கூட்டிக் கொண்டுவந்தெதிர்த்து அவனைப் பராஜிதனாக்கி அவனுடைய ராஜ்யத்தையும் ஆக்ரமித்துக்கொள்ள; † அவன்காந்திசீகனாய்த் தனிப்பட்டுக் காடுறைய; அவ்வளவிலே திருவேங்கடத்தெந்தை அவன் விஷயத்தில் க்ருபையுடையவராக; அவன் தன்னுடைய துன்மார்க்கச்செய்கைகளைத் தன்றாட்டானையோசித்து மனம்நொந்து, ஸ்ரீநிவாசனைப்ரத்யக்ஷதெய்வமென்று தன்னுடையபூர்வதசையில்கேட்டிருந்ததையும் நினைத்துத், திருமலைக்குப்போய்த் திருவேங்கடமுடையானைச்சேவித்துப், பாண்டவதீர்த்தத் தருகிலிருந்தவோர் ஸ்ரீவைஷ்ணவனையாச்ரயித்துப், பஞ்சஸம்ஸ்காரஸம்பன்னனாய்த் திருவேங்கடதாஸனென்று நாமகரணமும்பெற்றுத், திருப்பாவையை

† காந்திசீகனாய் - ஓடிக்குறைந்தவனாய்.

ஷித்து, ஸக்ரமமாக் ஒருவருஷகாலம் ஜபித்துக்கொண்டிருக்கத் திருவேங்கடத்தப்பன் மிகவும் ப்ரீதனுகிக் கோவிந்ததாஸருடைய ஸ்வப்நத்திற்சென்று கோவிந்ததாஸனே! பூர்வம் சங்கரதத்த னென்னும் பெயரையுடையவனுய் உம்மிடம் வந்திருந்துப் பரா ஜிதனுய்ப்போன வைஷ்ணவத்வேஷி இப்போது நம்முடைய திரு மலையையடைந்து ஸ்ரீவைஷ்ணவனுய்த் திருவேங்கடதாஸனென் னுந் திருநாமத்தைப்பெற்று, நம்முடைய ஸந்நிதியில் திருப்பா ணியை ஜபித்துக்கொண்டு க்ருதார்த்தனுய்ப்போருகிறுன். ஆகை யால் நீர் அவனுடைய ராஜ்யத்தை அவனுக்கே ஸமர்ப்பித்து விட்டு ஸ்வஸ்தானத்திற்குப் போமென்று ஆஜ்ஞாபிக்கக் கோவிந்த தாஸரும், பரிவாரத்துடனே திருமலைக்கெழுந்தருளித் திருவேங் கடதாஸரைக்கண்டுசேவித்துப் பஹுமர்யாதைகளுடனே அழைத் துக்கொண்டுபோய், இராஜ்யாபிஷேகஞ்செய்துவைத்துத் தன்னு டைய நகரத்துக்குப் போயினுனென்று கும்பமுனிவர் அருளிச் செய்தார்.

அப்போது திருவழுதி வளநாடர் கும்பமுனிவரை யடி பணிந்து அடியேன் க்ருதார்த்தனுகி யருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவர் பஞ்சஸம்ஸ்கார பூர்வகமாகத் திருப்பாவையை யுபதேசித்து ஆதாசந்தான க்ரமத்தையு மருளிச்செய்து, அங்கிரசாதி ருஷிகளுடனே தம்முடைய ஆச்ரமத்தை யடைந்தவராயி னர். அனந்தரம் திருவழுதிவளநாடர் திருப்பாவையைப்பலவருடமாது குப்பமாக ஒருவருஷகாலஞ் ஜபித்து, ஸ்ரீமந்நாராயணனையே தர்மதய னென்னும் புத்ரனைப்பெற்று, அப்புத்ரன் ப்ராப்தயௌவனனுன வாறே, இராஜ்யாபிஷேகஞ்செய்துவைத்துப் பத்னிஸஹிதனுய்த் திரு மலைக்கெழுந்தருளினுர். பின்பு தர்மதர் ப்ரஜாபரிபாலனஞ்செய்து கொண்டிருக்கையில், ஒருநாளில் ஸ்ரீநாரதர் அங்கெழுந்தருளி அவ ருக்கு மந்த்ரரத்னத்தையுபதேசஞ்செய்துபோக; அவரதைச் ச்ரத்தை யாக ஜபித்துக்கொண்டு வருகிறகாலத்தில், ஸ்ரீபதி ஸ்ரீசுதர்சன னே ஹிதராய் அவருக்குச் சக்ரபாணி யென்னும் புத்ரராய்ப் பிறந்து, சிலகாலத்துக்குப்பின் சேதசமுகராய்த் தாருமாசுரனென் னும் ராக்ஷசனிருக்குமிடத் தேடிப்போய்ச் ஸம்ஹாரஞ்செய்து லோகத்தை வாழ்வித்தருளிச், சகலதர்முனிவரை சேவிகாய்த் தர்மமார்க்கத்தில் ராஜ்யபாரஞ் செய்துகொண்டிருந்தார்.



இவ்வண்ணமாக வம்சத்தில் சக்ரபாணி யென்பாருக்கு அச்யுதர் என்கிறவரும், அவருக்குச் செந்தாமரைக் கண்ணர் என்கிற வரும், அவருக்குச் செங்கண்ணர் என்கிறவரும், அவருக்குப் பொற்காரி என்கிறவரும், அவருக்குக் காரி என்கிறவரும், அவ ருக்கு மாறனென்கிற நம்மாழ்வாருமாகச் சந்தானபரம்பரை யுண் டாய் ஆட்செய்யுந் தொண்டர்களாயினுர்கள்.

## ஆழ்வாருடைய திருவவதாரம்.

இங்குச் சொல்லப்பட்டிருக்கிற பொற்காரி என்பவர் தம் முடைய புத்ரனாகிய காரியென்பவருக்கு விவாஹோசிதபருவம் வரக் கண்டு, திருவண்பரிசாரத்தில் தமக்குச் சமானமாயும் சம்பந்த யோக்யமாயுமிருந்த திருவாழ்மார்பர் என்பவருடைய புத்ரியாகிய உடைய நங்கையைத் திருக்கல்யாணஞ் செய்துவைக்கக் காரியார் பத்னீஸஹிதராய்த் திருவண்பரிசாரத் தெம்பெருமானை யடி பணிந்து, திருக்குருகூருக்கு விவாஹக் சக்ரவர்த்தித் திருமகன் ஸ்ரீமிதிலாபுரிக் கெழுந்தருளித் திக்கு விஜய புருஷனுன ஜனக ராஜன் திருமகளாரைத் திருமணம்புரிந்து மீண்டெழுந்தருளும் போது திருவயோத்தியிலுள்ள பாஹுமனுஷ்ய பௌரஜனங்கள் "பதாகாத்வஜிநீம்ரம்யாம்தூர்யோத்குஷ்டநிநாதிதாம்-ஸிக்தஸ பதாம்ரம்யாம்பரிக்ஷிப்தாம்-பௌரஜனைய்ப்ரத்யுத்கமித த்வாரம்த்விஜனுப்சபாவளம்பிதே" என்கிறபடியே ராஜமார்க்கத்தைப் பரிமளமுடைப்பெற்ற திவ்ய தீர்த்தங்களால் நனைத்து, மணமிருந்த புஷ்பங்களைப் பரிமாப்படைத் தூவித், தோரணங்களை யலங்கரித்து வைத்து, மங்கள வாத்யத்துடன் எதிர்கொண்டாற் போல் திருக்குருகையிலுள்ள ஜனங்கள் "பூரணபொற் குடம்வைத்துப் புறமெங்குந்தோரணநாட்டி," † தழுனியெழுப்பறைகொட்டி, ‡ உப லாளித் தெதிர்கொள்ள நகரத்துக்குள் புகுந்து, இல்லறதர்மத்தில் நியதராயிருக்கச் சிலநாளைக்குப்பின்பு, தம்முடைய பத்நியாகிய உடையநங்கையார், பிறந்த அகத்துக்குப் போய்வரத்திருவுள்ளம் பற்றத், திருவண்பரிசாரத்துக் கழைத்துக்கொண்டுபோய்ச் சில நாள்தங்கி மீண்டு வருகையில், "தென்கொள் சோலைத் திருக்கு றுங்குடி" க்குச்சென்று, நம்பியைச்சேவித்துத்தமக்கொரு சந்தா னந் தந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க; நம்பி அர்ச்சகமுகேந! உமக்கு நாமே புத்ரனுக அவதரித்தருளப் போகிறோமென்று

† தழுனி - ஓசை. ‡ உபலாளித்து - தழுவாக்கி.

சாதிக்க, அதைக் கேட்டு ப்ரீதராய்த் தீர்த்தப்ரஸாதங்களைப் பெற்றுக் கொண்டு ஸ்வஸ்தானத்தே சேர்ந்து மகிழ்ந்திருக்குமளவில் (பரம பதநாதன் நித்யஸூரிகளுடையவும், முக்தர்களுடையவும், அனந்தாழ் வானுடையவும், ஸேனைமுதலியார் முதலிய அம்சங்களை ஸ்ரீபராங் குசரென்கிற முனிவராக அவதரிப்பித்துச், ஸாமவேதார்த்த ப்ரதிபாத்யமாய், த்ராவிடபாஷா ரூபமாயிருக்கும் திருவாய்மொ ழியை ப்ரகாசிப்பிக்கவும், பூத-ஸரோ-மஹதாஹ்வய-பார்கவ குலசேகர-ஸ்ரீ விஷ்ணுசித்த பக்தாங்க்ரிரேணு-யோகிவாஹ- பரகாலாதி முனிகளாகவும் அவதரிப்பித்து த்ரிவிதவேதார்த் தங்களை ஸங்க்ரஹிக்கவும் திருவுள்ளம்பற்றின முறையாலே) உடையநங்கையார் கர்ப்பவதியாகிக் க்ரமப்படி பத்துமாஸம் நிறைந்து காளான பரமதீர்க்கமுடைய வஸந்தருதுவில், வைகாசிமாஸம், சுக்ல பக்ஷம் சுக்ரவாரம் பௌர்ணமி கர்க்கடக லக்னம் விசாக நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில், ஆதித்யாம்சமாக ஸர்வஜகத்துக்கும் ஆச யத்திலே கிருஷ்ணன் உன்னிற்றுவிக்கச் சோதியாய்ப் பிறந்தாற்போல் வெற்றி விளங்கும் கமலத்தை மலர்ந்ததைப்போல், அநேகசுப சகு னங்களுண்டாக, வகுளபூஷண பாஸ்கரனென்கிற இவ்வாழ்வார் உடையநங்கையார் கர்ப்பமாகிற கீழ்த்திசையில் உதயமாகி, ப்ராக்ருத சிசுக்களைப்போலே அழுகையும் கண்திறவாமையும், தம் முடைய திருவாயால் முத்தனைய முலைவல் செய்து மூக்குறிஞ்சி முலையுண்ணாமையும், ஐம்பொறிகளின் ஜாதிக ளற்றுமய், நாளுக்குநா ளபிவ்ருத்தியாகிற திருமேனியை யுடையவராயிருக்கக் காரிமுதலி யாரும் இவரைப்பெற்ற வயிறுடையாளான உடையநங்கையாரும் பார்த்துத் திருக்குறுங்குடி நம்பியினுடைய ப்ரஸாதமிவ்வண்ண மிருக்குமாகில் நம்மாலாவ தென்னவென்று "உன்மகன் தானென்ன விளைந்திருந்தாய்" என்கிறபடியே நம்பிக்கல் ஸமர்ப்பிக்கப் பண்ணிக்கொண்டாராகில் "ஸங்கீர்த்தனாதீமே து தாம்ராயா நக்ஷி ணேதடே-ஸாந்நித்யம் புண்டரீகாக்ஷம், ஸங்கசக்ர தரம்ஹரிம்- வரதாபயஹஸ்தஞ்ச ஸமயாதாயாலஹா - கவேரதீலாபம் பீதவஸ னமச்யுதம்" என்கிறபடித் திருச்சங்கணித்துறையை யுடைத்தான பொருநலாற்றின் தென்கரையில் திவ்யமங்கள விக்ரஹயுக்தனைச், ஸங்கசக்ரதரனைப், புண்டரீகாக்ஷனைப், இஷ்டத்தைக் கொடுத்து அனிஷ்டத்தைப் போக்குவதைக் குறிப்பிக்கிற திருக்கைகளை யுடையவனைப், நீலமேகஸத்ருசனைப், ஆகிரதங்களை பொருநற்காலத்தி னும் நழுவிடாதவனைப், எழுந்தருளியிருக்கிற பொலிந்துநின்ற



பிரான் திருமுன்பு எடுத்துக்கொண்டுபோய்ச் சேவிக்கப்பண்ணித் திருப்புளியாழ்வாரடியிலே ஆணிப்பொன்னாற்செய்தவண்ணச்சிறு தொட்டிலிற்கிடத்தி, "மாறன்" என்று திருநாமஞ்சாற்றி மகிழ் வெய்தியிருந்தவளவில், இவ்வாழ்வார் கிழேழுவித் தவழ்ந்து போய் இவருக்காகவே (த்வாபரயுகம் எட்டுலக்ஷத்தறுபத்து மூவா யிரத்தெண்ணூற்றெழுபத்தொன்பதாவதானஞ்சுவஸரவருஷம் ஆனி மாதம் மூலநக்ஷத்ரத்தில் திருவனந்தாழ்வானுடைய அம்சபூதரா யவதரித்து உறங்காப்புளியென்கிற அபிதானத்தைப்பெற்று இவ ருக்கு வர்ஷாதப நிவாரணார்த்தமாக) வளர்ந்திருக்கிற திருப்புளி யாழ்வாரடியிலே பத்மாஸனமிட்டுக்கொண்டு ஞானமுத்ரைதரித்து வீற்றிருக்க, மாதாபிதாக்களும் கோயிற்பரிகரத்தாரும் கண்டுவிஸ் மயப்பட்டு, இவரைப் புத்ரப்ரதிபத்திபண்ணாமல் "எங்கள் குடிக் கரசே" என்கிறபடியே தங்கள் குடிக்குக் குலதெய்வமாகப் பாவித்துச் சேவித்துக் கொண்டிருந்தார்கள்.

அனந்தரம் பரமபதநாதனுடைய நியமனத்தால், ஸ்ரீசேனை முதலியார்வந்து மந்த்ர மந்த்ரார்த்த நிஷ்டை புருஷார்த்தங்களையும் த்ராவிடவேதங்களையும், பிறர்காதிற்படாதபடி உபதேசித்துத் திவ்ய ஜ்ஞானஸம்பன்னராக்கி வைத்தெழுந்தருள "ஸஜ்ஜ்ஞாநகபூர்ணத் வாத் நித்ரீணி மூலவம்ஸ்ராய: - பாலஷேகட ஸாப்நாத்து மூக மௌனம் ஸமீஷ்யதி" என்கிறபடி பக்குமுந்தையான இவ்வாழ்வார் உத்க்ருஷ்டமான ஜ்ஞானபூர்ணராகித், திருப்புளியாழ்வாரடியில் தாமே பதினாறு திருநக்ஷத்ர மளவாக, அவன்முகத்தன்றி விழி யேனென்று முகுளிதநயனராய், லௌகிகரைக் கண்திறந்து பாரா மல் தாமதித்துக்கொண்டிருப்பதை யாருக்குஞ்சொல்வதென்றுமிலா திக்கையில் ஸமீபத்திலொருவரும் பக்வப்பட்டவர்களாயில்லாமை யாலே, மௌனியாயிருந்துவிட்டார். இப்படியிருக்கையில்:—

## ஸ்ரீமதுரகவியாழ்வார் வைபவம்.

"பாண்ட்யதேசமாயாம் ப்ரதிதாவதாரம் சைத்ரஸ்தசித்தோடு ஜமார்த்வஜூடம், கலம்பபாஜம் மதுரகவீந்த்ரம் ஸடாரிபக்தம் மானம்ப்ரபத்யே" என்கிறபடி பாண்டிய தேசத்தில் சித்தை மாஸம் சித்ராநக்ஷத்ரத்தில் முன்குடுமிச்சோழிய ப்ராஹ்மண

வம்சத்தில், பெரியதிருவடியின் அம்சபூதராய், ஸ்ரீ பராங்குசருக்
கு அந்தரங்கபக்தராய் அவதரித்து மதுரகவித்வர் என்கிற ப்ரசித்த
மான பெயரையுடையரான மதுரகவியாழ்வாருடைய திருவடிகளை
யுபாயமாகப் பற்றுகிறேனென்றும் "யாதேனாம்ஸ்வஸுதேனைகஹ
ஸதமஜநேத்ராபரஸ்யே ப்ரவராப்தே, சைத்ரேமாஸேத்விஸ
ஜோத்தரஜிவாவே மாபாபக்ஷேசதுர்த்யே, சித்ராக்யே பார்க்
கவியே குணவுந்நதிஜேபாது ராவேசசடாரே, ரம்ஸேநாவிர்த்தி
ஜோத்ரோ மதுரகவிரபவாத் குருத்ஸவளாய" என்கிறபடி த்வா
பரயுகத்தில், காட்டேட்டத் தமயத் தமூலையிரத்திதன்னுற்றெழு
பத்தொன்பதில் கிழக்க சர்வாஜுசம் சித்திரைமாஸம் இருபத்
தொன்றாந்திதி சக்லபக்ஷம் சதுர்த்தி சித்திரைநக்ஷத்ரங்கூடியசுபதி
னத்தில் மங்கோலிகளை பூர்த்திசெய்தபொருட்டு ஸ்ரீசட
கோபருக்குச் சிஷ்யராக ஸ்ரீமதுரகவியாழ்வார் அவதரித்தருளி
னரென்றும் "சைத்ரம் ஸ்ரீமாயமாஸ்யம் புஷ்பதநாத்தகை
† மஹேமப்ரா குரும் தாசாம்சகவிம் மதுராயத்ருதா - சைத்ரமாவி
பாவேபஹித்த நாரகாயமுநாய" என்கிறபடி ஸ்ரீமத்நாதமுனி சொல்
லப்படுகிற சித்திரையில் சித்திரை நக்ஷத்ரத்தில் விஷ்வக்சேன
குரு - வைநதேயாம்சர் ஒருவராகி மதுரகவியாழ்வா
ரென்கிற அபிதானம்பெற்று அவதரித்தனரென்றும் இவ்வசரி
சரிதையிற் சொல்லப்பட்டிருக்கிறபடியே —

ஆதித்யோதயத்திற்கு முன்னே அருணோதய முண்டாவது
போல ஸ்ரீ வகுளாபரண பாஸ்கரோதயத்திற்கு முன்னமே
இவரவதரித்து "அங்கானிவேதாச்சத்வாரோமீமாம்ஸா ந்யாயவிஸ்
தர:- புராணம் தர்மசாஸ்த்ரஞ்ச வித்யாஹ்யேதாஸ் சதுர்த்தச"
என்கிறபடி சிக்ஷை - வ்யாகரணம் - சந்தஸ் - நிருக்தி - ஜ்யோதி
ஷம் - கல்பம் என்கிற ஆறு சாஸ்த்ரங்களிலும், ருக் - யஜுஸ் -
சாமம் - அதர்வணம் என்கிற நான்கு வேதங்களிலும், மீமாம்ஸை - ந்யா
யம் - தர்ம சாஸ்த்ரங்களிலும், அஷ்டாதச புராணங்களிலும் அதி
நிபுணராய் விரக்திதசையையடைந்து "அயோத்யா மதுரா மாயா
காசீ காஞ்சீ ஹ்யவந்திகா - புரீத்வாரவதீசைவ ஸப்தைதே மோக்ஷ

---

† முன்சுலோகத்தில் "சுகாம்புஜபாஜும்" என்றும் இச்சுலோகத்தில்
"மஹேமப்ரா: குருஜோதாம்சா" என்றும் சொன்னபடியால் இம் மதுரகவி
களைச் சுருட்பகவான் குருதரென்ற கிளேவர் ஆகிய இச்சிருவம்ஸமு
முடையவரென்பர் பெரியோர்.



தாயகா:" என்கிறபடி முக்திப்ரதமாகச் சொல்லப்பெற்ற திவ்ய
தேசங்களைச் சேவிப்பதாகத் தம்முடைய அவதார ஸ்தலமான
திருக்கோளூரை விட்டுப் பெருமாள்கோயில் மதுரை - அயோத்தி
புரி - கங்கைக்கரை கண்டம், திருத்வாரகை முதலிய திருப்பதிகளைச்
சேவித்து அத்திருவயோத்தியில் யோகநித்திரையில் எழுந்தருளியிருக்
கையில் ஸ்ரீநம்மாழ்வாருடைய ப்ரபாவங்களைத் தெரிந்துகொண்
டிருக்கச்செய்தே, ஒருநாள் இராத்திரியில் இவர் ஜலசங்கா
நிவ்ருத்யர்த்தமாக வெளியில்வந்தபோது தென்திசையில் ஒரு
அபாக்ருத தேஜஸ் தோன்ற இதென்னென்று திகைத்தா
ரேதுமக் க்ராமநகரங்களில் நிமன்புனதோ அல்லது காட்டுத்
தீயோவென்று தமயித்தோம் அதுமானித்து மறுநாளும் அத்
தைக்குக் கண்வளர்ந்தருளினர். அந்தத்தேஜஸ்ஸை பின்னையும்
அடுத்தடுத்து இரண்டு மூன்றுநாள் அவ்விதமே காணப்பட இவ
ரதை நன்றாகப்பார்த்து, இது காடுதீயோ நகரதீயோ விருக்குமா
னல் அப்ராக்ருததேஜஸ்ஸையுடையதாயிராதே! அதையறிந்தப்
பரீக்ஷிக்கக் கடவோமென்று மறுநாளிராத்திரி அது தோன்றிய
திசையையே நோக்கிச்செல்ல; அது தென்திசையில் தோன்றியபோக;
இவர் ஆச்சர்யமடைந்து அன்றிரவெல்லாம் அதைத் தொடர்ந்து
போய், விடிந்தவாறே ஓரிடத்தில் தங்கி, அன்று தொடங்கிச் சில
நாள்வரையில் பகிராத்திரியிலும் அத்தத் திசையிலேதானே அதைப்
பின்றி நடந்து அதுசெல்லும் புண்யக்ஷேத்ரங்கள் தோறுஞ்
சென்று பெரியகோயிலும் சென்று அங்கிருந்தும் அதைத்
தொடர, அது மாடமாளிகைசூழ் தநுஸாய திருக்குருகூரில்
சென்று ஜொலித்துநின்ற பிராஜன் கண்டிருக்கநடக்க; இவருமவ்
விடம் சென்று, சன்னிதி முதலியதைப் பார்த்து, இவ்விதமாவது அதி
சயங்களுண்டோ வென்று கேட்க; அவர்கள் திருப்புளியாழ்வாரடி
யிலே யுண்டென்ன; இவரக்கேட்டுப்போய்ப் "பத்மாஸநோபவிஷ்டம்
பாதபுநர்நிவிஷ்டம் ஞானமுத்ரம் பரமயோக முத்ரம் பாமா
சார்யம் பராங்குசம்வந்தே" என்கிறபடி சந்ஞானபூர்ணராய்,
முகுளிதநயனராய், ஷோடசவர்ஷஸ்ரீகராய், ஷோடசகலாபூர்ண
முகசந்த்ரனைப்போலே திருமுகமண்டலப்ரகாசமுடையவராய்ப்
பரதத்வஸ்வரூபமுடையராய் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீபராங்கு
சனைச் சேவித்து அவருடைய ஸ்ரீசூக்திகளைக் கேட்கவேண்டு
மென்று திருவுள்ளமாய், கல்லை யெடுத்து சப்தித்து

"† செத்தத்தின்வயிற்றில் சிறியதுபிறந்தால் எத்தைத்தின்றெங் கேகிடக்கும்" என்றுவினவ; அவர் திருக்கண்களை மலரவிழித்து

---

" * செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின் றெங்கே கிடக்கும்" என்றும் "அத்தைத்தின் றங்கேகிடக்கும்" என்றுமிருக்கிற வினாவிடைகளுக்குப் பொருளேதென்னில்:—செத்தத்தின்-உயிரற்றதாய், ஜடமாய், அசித்யமாயிருப்பதொரு ப்ரக்ருதியென்கிற சரீரத்தின், வயிற்றில்-உள்ளே, சிறியது-அணுரூபமாய்நித்யமாயிருப்பதொருஆத்மாவென்கிற ஜீவன், பிறந்தால்- ப்ரவேசித்தால், எத்தை-எதை, தின்று-புஜித்து, எங்கே-எவ்விடத்தில், கிடக்கும்-(சுகதுக்கமடைந்து பேணி) யிருக்கும் என்று வினவியதாம்.

அத்தை - அந்தச் சரீரத்தைப் பற்றிய சப்த ஸ்பர்சரூப ரஸகந்தாதிகளால் வரும் சுகதுக்கங்களையே; தின்று-அனுபவித்து, அங்கே-அவ்வநித்யமான சரீரத்தையே ஆதாரமாகப்பற்றி, கிடக்கும்-சுகித்தேன், இளைத்தேன் என்னுமிவை தொடக்கமான ப்ரஸங்கங்களைச் செய்துகொண் டிருக்கும் என்று விடைகொடுத்ததாம்.

அன்றியும், "சித்தின்வயிற்றில் சிறியதுபிறந்தால்-எத்தைத்தின்றெங் கேகிடக்கும்" என்றும் "அத்தைத்தின் றங்கேகிடக்கும்" என்றும் பூர்வ ஆறாயிரப்படி க்ரந்தங்களில் எழுதியருளப்பண்ணியிருக்கின்றன. இவற்றிற்கு அஸ்மத் க்ருபாமாத்ர ப்ரஸன்னாசார்யர்களான அஸ்மதாசார்யரும் ஸ்ரீமான் மூடிக்கூர் அப்பாச்யதேசிகரும் இன்னுஞ்சில வைதிகோத்தமரும் பொருள்கூறியிருப்பதைப் பார்க்க. இவையே பெரியோன் பிறந்துக்கும் முனிவனுரைக்கும் அடுத்த கடாவிடை யாகலாமெனவும் பின்பழகராம் பெருமாள் ஜீயரால் அருளப்பட் டிருக்கலாமெனவுங் காணப்படுகின்றன.

பொருள்:—"அசேதனமாம்" என்கிறபடியே சித்தின்-சித்தென்கிற அணுரூபமான ஆத்மாவினிடத்தில், சிறியது-பரமாணு ரூபமாய்க்கலந்த ஸர்வேச்வரனுடைய நிர்ஹேதுக ஞாயமான கடாக்ஷமானது, பிறந்தால் - மயர்வற மதிநலமருளினன் என்கிறபடியே உண்டாகுமானால், எத்தை - தேஹ-ஆத்மாவாகிற உபயயாத்ரைக்கும் எந்த ஆஹாரத்தை, தின்று-போக்யமாகப்புஜித்து, கிடக்கும்-எவ்விடத்தைத் தனக்கு நித்யானந்த ஸ்தானமாகப்பேணி அமர்ந்திருக்கும் என்று கடாவினதாம்.

அத்தை - அப்படி "தீர்ந்த தனபால் திருத்தினை"வன் எவனோ அந்த ஸர்வேச்வரனுடைய கல்யாண குணங்களையே, தின்று- "உண்ணுஞ்சோறும் பருகுநீரும் தின்னும்வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்கிறபடியே உண்ணுஞ்சோறுதியாக வனுபவித்து, "உண்டுகளித்தேற்கு" அவ்வனுபவந் தவிர்ந்திருக்கும் தினமே தனக்கு உபவாஸதினமாமென்றென்னி, (அங்கே) அந்தக்கத்யகத்தருவின் அடியிலேயே, "பரமபக்திருச்யதே" என்கிறபடி பரமபக்திபோதிபேணி, கிடக்கும்-நித்யானந்தம் பெற்றமர்ந்திருக்கும் என்று விடைசெய்ததாம்.



இவரைக்கடாக்ஷித்து "அத்தைத்தின்றங்கே கிடக்கும்" என்று விடைசெய்ய; இவரவரை அடியேனுக்குத்தோன்றிய தென்றிசைச்சூரியன் தேவரீர்தானே!! என்று தாளுந்தடக்கையுங் கூப்பித் தண்டனிட் டெழுந்து அஞ்சலிஹஸ்தராய் நின்று தம்மை யங்கீகரித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க; அவர் இவருக்குப் பஞ்சஸம்ஸ்காரங்களை ப்ரஸாதித்து நாம் பகவதனுபவத்திற்குப் போக்கு வீடாகச்சொல்லும் பாசுரங்களை நீர் பட்டோலையிலேறியருளப் பண்ணுமென் றநுக்ரஹிக்க; அவ்வளவில்:—

## ஸ்ரீநம்மாழ்வார் வைபவம்—(தொடர்ச்சி).

"ஆதிதேவோ ஜகந்நாதோ வாஸுதேவோ ஜகத்பதி: சதுர்ப்புஜம் ப்ரயாமஸாங்கா பரமேவ்யோம் நிதிஷ்டதி" என்கிறபடியே ஸர்வகாரணபூதனாய், ஸர்வாதாரபூதனாய், ஸர்வஸ்வாமியாய், ஸர்வநியந்தாவாய், இந்த்ரநீலநிறமான திருமேனியையும் சதுர்ப்புஜங்களையுமுடையனாய், ஸ்ரீ வைகுண்டத்தி லெழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயணன் நம்மாழ்வாருக்குத் திருமுகப்ரஸாதம் பண்ணவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி "அதாகதங் கருடமதும்புரஸ்கிருதம் மஹாகிரிம் ஜலதமிவாருரோஹஸ:" என்றும் "பொலிந்திருண்ட கார்வானில் மின்னேபோல் தோன்றி-மலிந்த திருவிருந்த மார்பன்-பொலிந்த, கருடன் மேற்கொண்டகரியான்" என்றுஞ் சொல்லுகிறபடியே இறைப்பொழுதும் மார்பைவிட்டகலாத கருணாரூபையான பிராட்டியுடனேகூடப் பெரியதிருவடிமேலெழுந்தருளிவந்து தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதி சேஷ்டிதங்களையெல்லாங் குறைவறக்காட்டி, மயர்வறமதிநலமருள, ஆழ்வார் "பொன்னிவர்மேனிமரகதத்தின் பொங்கிளஞ்சோதி" யான வெம்பெருமானுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும் அதற்கு ப்ரகாசகமான திவ்யமங்களவிக்ரஹத்தையும், அதற்கு ஆதேயமான திவ்யகுணங்களையும் நன்றாகவநுபவித்து, அவ்வநுபவஜனிதப்ரீதியுள்ளடங்காமையாலே, ருக்-யஜுஸ்-ஸாம-அதர்வணமென்கிறவேதத்ரயங்களைத் திருவிருத்தம் - திருவாசிரியம் - பெரியதிருவந்தாதியாகவும் "வேதாநாம் ஸாமவேதோஸ்மி" என்கிறபடி வேதங்களுக்குள் சாமவேதம் நானேயாகிறேனென்று கீதாசார்யனால் சிலாகிக்கநின்ற சாமவேதத்தைச் சரமப்ரபந்தமான திருவாய்மொழியாகவும் நாடுமுலகும்புய்ய நல்வகையால் திருவாய்மலர்ந்தருள, அவைதம்மை மதுரகவியாழ்வார் தொடக்கமான ஸஜ்

ஜனங்கள், "பக்தர்கேட்டவர் வேதத்தினுட்பொருள்" என்று கேட்டு கட்கொண்டு அதியக்கற்றுவல்லார்களாக; அந்த அவஸரத்தில், † புஷ்ப த்யாக போகமண்டபங்கள் தொடக்கமான திவ்ய தேசத் தெம்பெருமான்கள் ஆழ்வாரிருக்குமிடத் தேற எழுந்தருளித் திருமுகப்ரஸாதம் பண்ணியருள, அப்போதுதித் திவ்யஸூரிகளும் வேதத்விபவாஜிகளும் திரண்டுவந்து திருப்புளியாழ்வா ரடியிலுள்ள வைபவங்களைச் சேவித்தார்கள்; இவர்பேர்களைப் "பொலிகபொலிக" வென்று மங்களாசாஸனம் பண்ணி, அவர்கள் வைபவங்களைப் பிரதானம்பண்ணித்த அமைந்து "பாழ்நாள்போக்கி யன்மையின்பிமை" என்றும் "இனியாவர் நிகரகல் வானத்தே" என்றும்-அநுஸந்தித்து உபய விபூதியிலும் தமக்கு நிகரில்லாத ப்ரபாவத்தை யுடையவராய் "உண்ணுஞ்சோறும் பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" என்கிறபடியே (ஜீவிப்பிறக்கார் சோறு நீர் அடைக்காயிலே முதலியவற்றைத் தேஹயாத்ரையாகக்கொள்வது போலல்லாமல்) இவர் அவனுடைய கல்யாணகுணங்களையே தம்முடைய தேஹயாத்திரைக்கு வேண்டுன சோறு நீராதிகளாக வநுபவித்து "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஶ்ச ப்ரத்யகாத்மந: - ப்ராப்த்யுபாயம் பலம்ப்ராப்தே ஸ்ததா ப்ராப்தி விரோதி ச - வதந்தி ஸகலா வேதா: ஸேதிஹாஸபுராணகா:" என்கிறபடி சேதனர் கதியென்று நடையப் பெருமையுள்ள எம்பெருமானுடைய ஸ்வரூபத்தையும், அதையடையும் ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தையும், அடைதற்கு உபாயத்தின் ஸ்வரூபத்தையும், அந்த பலனை அடைதலின்னும் பிரித்துவிடும் தான விரோதி ஸ்வரூபத்தையும், விளக்குகிற ஸகலவேத சாஸ்த்ரார்த்த ஸங்க்ரஹமான அர்த்தபஞ்சகத்துடன் "த்வயாத்பர தரம் நஸ்தி மந்த்ரம் வேதேஷ்வபி த்விஜ" என்கிறபடி மந்த்ரப்ரதிபாதகங்களான வேதங்களில் தனக்கு மேற்பட்ட தொன்றில்லையென்று சொல்லப்பட்டிருக்கின்ற, அந்த மந்த்ரரத்னமென்கிற த்வயத்தை இரண்டு கண்டமாய்ப் பத்து வாக்யங்களாக்கிச் சரமப்ரபந்த மென்கிற திருவாய்மொழியில் முதற்பத்தில், "மலர்மகள் விரும்

† புஷ்பமண்டபம் - திருவேங்கடத்தில் ஆனந்தநிலயவிமானம். த்யாகமண்டபம் - திருக்கச்சியில் பெருமான் கோயிலென்கிற புண்ணியகோடிவிமானம். போகமண்டபம் - திருவரங்கம் பெரிய கோயிலென்கிற ப்ரணவாகாரவிமானம்.



பும் நம் அரும் பெறலடிகள்" "மலராள்மைந்தன்" "திருமாமகளார் தனிக்கேள்வன்" "திருவின்மணாளன்" "பூமகளார் தனிக்கேள்வன்" "மலராள்மணவாளன்" என்று இத்யாதி பாசுரங்களால் பூர்வகண்டத்தில் முதல்வாக்யமான "ஸ்ரீமன்" என்கிற சப்தத்திற்குரிய ஸ்ரீயபதித்வத்தையும், இரண்டாம் பத்தில் "எம்பெருமான்நாரணன்" "எம்பிரானெம்மான் நாராயணன்" "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்வேதமயன்" என்றுமித்யாதி பாசுரங்களாலே இரண்டாம்வாக்யமான "நாராயண" என்கிற சப்தத்திற்குரிய வேதமயமான நாராயணத்வத்தையும், மூன்றும்பத்தில் "தாமரையடித்தாமரை" "அங்கதிரடியன்" "அவன் பாதபங்கயம்" "அன்றுதேர்கடவிய பெருமான் கனைகழல்" "மூவுலகுந் தொழுதேத்துஞ் சீரடியான்" என்று மித்யாதி பாசுரங்களாலே மூன்றும் வாக்யமான "சரணௌ" என்கிற சப்தத்திற்குரிய ஸர்வலோக சரண்யமான ஸ்ரீமந்நாராயண னுடைய சரணாரவிந்த யுகளத்தையும், நான்காம்பத்தில் "இலங்கை நகர் அம்பெரியுய்த்தவர்" "வல்வினைதீர்க்குங் கண்ணன்" "தொல்வினை தீர" "வெய்யநோய்கள் முழுதும் வியன்ஞாலத்துவீய" "வேமின்று தொழுவார்வினை போகமேவும்" "பிறந்தாய் செய்தவின் றிடம்பெறுதனமதிக்கோழித்தேன்" "பிறவாய்ப்புமியினும் பெய்தினை பொழிய" "வேட்கையெல்லாம் விடுவித்து ஆக்கிய திருவடிக்கட்கடிமை" "அம்பேதயுமாய் புருவது" "உய்வுபாயம் நின்னடிக்கே" என்றுமித்யாதி பாசுரங்களால் நான்காம்வாக்யமான "சரணம்" என்கிற சப்தார்த்தமானவனுடைய அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்தி ஹேதுவான உபாயத்வத்தையும், ஐந்தாம்பத்தில் "நமியேனுக் கருளாய்" "ஆவனுக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" "உன்னாலல்லால் யாவராலுங் குறைவேண்டேன்" "அவனையல்லாற் றுண்டோன் கழல்களையே சரணாகக்கொண்ட சடகோபன்" "நாமங்களாயிர முடைய நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்" "நாகணைமிசை நம்பிரான் சரணேசரண் நமக்கென்று நாடோறு மேகசிந்தையனாய்" என்றுமித்யாதி பாசுரங்களால் ஐந்தாம் வாக்யமான "ப்ரபத்யே" என்கிற சப்தார்த்தமான ப்ரார்த்தனாபூர்வ விஸ்ரம்பத்தையும், ஆறாம்பத்தில் "திருமாம விருந்தாம மணித்திருந்து" "அடிமைசெய்வார் திருமாலுக்கே"

“ஒழிந்தவொண்மலீரான் கொழுனன்” “என்திருமார்பா” “தே லக் திருமா மகளோ நின்னை” என்னுமித்யாதி பாசுரங்களால் உ தாகண்டத்தில் முதல்வாக்யமான “ஸ்ரீமதே” என்கிற பூர்வார்த்த மான கைங்கர்ய ப்ரார்த்தநா கர்ப்பமாயிருந்துள்ள நித்யசம்பந்தத் தையும், ஏழாம்பத்தில் “கண்ணாவேயமுதே” “திருமாலின் சீர் படித்தெதிர்காலம் பழுகினுமாரிலேனே” “ஏழுலகையின்பமயக்க” என்னுமித்யாதி பாசுரங்களால் இரண்டாம்வாக்யமான “நாரா” சப் தத்திற்குரிய கைங்கர்ய ப்ரதிசம்பந்தமான ஸர்வாதுலை [illegible] சய போக்யதைதையையும், எட்டாம்பத்தில் “அடியேன் பெரியவம் மான்” “விண்ணவர் கோனங்கள் கோன்” “அமர்த்தநாதனே” “நேர் படவிறை மூவுலகுக்கு நாயகன்” “மூவுலகாளி” என்னுமித்யாதி பாசுரங்களால் மூன்றாம் வாக்யமான “அயன” சப்தத்திற்குரிய ஸ்வாமித்வத்தையும், ஒன்பதாம்பத்தில் “பண்டைநாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளுங் கொண்டு நின்கோயில் சீய்த்து” “நின்தீர்த்தவடிக் குற்றேவல்” “தொடர்ந்து குற்றே வல்செய்து” “கொடுமாவினை யேனுமிடக்க” “உருவநித்தவெள் ளுயர்காட்டப்டு” “ஆட்கொள்வானொத்து” “நாளுமீளா வடி மைப்பணி செய்யப்புகுந்தேன்” என்னுமித்யாதி பாசுரங்களாலே நான்காம்வாக்யமான “ஆய” சப்தார்த்தமான நித்யகைங்கர்யத் தையும், பத்தாம் பத்தில் “அயர்செறும்” “கெடுமிடராயவெல் லாம்” “எழுமைபு மேதைஞ்சாரா” “இடரெறப்புக்கும்” “பிணி யொன்றுஞ்சாரா” “பிறவித்துயர் கடிந்தோம்” “வின்டேயொ ழிந்த வினையாயினவெல்லாம்” “அமரா வினைகளே” “கடுநரகம்புக லொழித்த” “அடிமாற்றவினை கெடவிரித்தான்” “பிறவி கெடுத் தேன்” “அவாவற்று வீடுபெற்ற” என்னுமித்யாதி பாசுரங்களால் ஐந்தாம் வாக்யமான “நம:” சப்தார்த்தமானகைங்கர்ய ப்ரதிபந்தக நிச்சேஷ நிவாரணத்தையும் தெளிவாகத் தொண்டர்க்கமுதுண் ணச் சொன்மாலைகளாய் பெண்ணும் பேதைமை மறிக் அந்ஜிவிக்க ஹேதுவாயருளிச் செய்து லோகத்தை வாழ்வித்தருளி பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளை யுடையராயிருந்து முப்பத் தைந்தாவது திருநட்சத்திரத்தில் அவாவற்று வீடுபெற்றருளினார்.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.



## ஸ்ரீமதுரகவியாழ்வார் வைபவம்—(தொடர்ச்சி).

பின்பு “திருமால் திருப்பேர் வல்லா ரடிக்கண்ணி சூடியமா றன்” என்கிற நம்மாழ்வாருக்கு முக்யசிஷ்யரான ஸ்ரீமதுரகவி யாழ்வார், ப்ரபன்ன ஜனகூடஸ்தரான ஸ்வாசார்ய வைபவத்தைக் “குருபாதாம் புஜத்யாயேத் குரோர்நாம ஸதாஜபேத்” என்கிற படியே கண்ணிநுண் சிறுத்தாம்பு என்கிற திவ்யப்ரபந்தத்தி லரு ளிச்செய்து சரமார்த்தமான பஞ்சமோபாய நிஷ்டையை முமு க்ஷுக்களுக் குபகரித்தருளி அர்ச்சாவதார ரூபமான நம்மாழ்வா ருக்கு நித்யோத்ஸவ - பக்ஷோத்ஸவ - மாஸோத்ஸவ - ஸம்வத்ஸ ரோத்ஸவ - மஹோத்ஸவாதிகளைக் குறைவற நடத்திக்கொண்டு, ¶ வேதந் தமிழ்செய்த பெருமாளெழுந்தருளினார்! திருவாய்மொ ழிப் பெருமாளெழுந்தருளினார்! திருவழுதிவளநாட ரெழுந்தருளி

---

¶ மற்றொருபிரதியில்:—

பாண்டிநாட்டிலுள்ள திருக்குருகூரென்னும் திவ்ய தேசத்தில் ஆழ்வாருக்குக் கோயிலிலும் வீதிப்புறப்பாட்டிலும் வெகுகாலமாக வேதந் தமிழ்செய்த மாறன்சடகோப னென்பது முதலாகப் பற்பல விருதுகூறித் திருச்சின்ன மூதுவதையும் பிரமோச்சவம் கண்டருளப் பண்ணுவதை யும் பற்றி ஒருகாலத்தில் மதுரைச் சங்கத்தார் கர்வத்தால் அசூயை கொண்டு இந்த ஆழ்வார் பக்தரே யல்லாமல் புலவரல்லவே; இவருக்கு விருதுகூறித் திருச்சின்ன மூதுவதும் உச்சவம்நடத்துவதும் வியர்த்தமே; இது அணிற்பிள்ளையின் தலைமேலே அம்மிக்கல்லை வைக்கிறதுபோலிருக் கிறது. இவர்பாடின திருவாய்மொழி யென்ன? சங்கமேறிய செய்யுளா? அதை வேதத்தமிழென்று அவ்வளவாகச் சிலாகிப்பது தகுதியல்லவே யென்று வாய்மதம்பேசி அபகரிப்பட்டார்கள். அத்தருணத்தில் ஆழ்வார் திருநகரியிலிருந்த வைஷ்ணவர்களுக்குச் சகியாமல் மனம்பதைத்தமை யால், குருகைப்பிரான் சந்நிதிப்போய் அவர்கள் ஸாஷ்டாங்கமாய் விழுந்து சேவித்து, ஆழ்வாரே! உம்மையும் உமது திருவாய்மொழியையும் அவ மதித்த சங்கத்தாருக்குக் கர்வபங்கமாம்படி தேவரீர் ஏதாவது பிராயச்சித் தம் செய்வித்தாலொழிய அடியோங்கள் எழுந்திருக்கக் கடவோமல்லோ மென்று தீக்ஷைவைராக்ய சித்தர்களாய் மூன்றுநாள் வரையில் ஸ்நானம், அனுஷ்டானம், ஜெபம், ஹோமம், வேதபாராயணம், பகவதாராதனம் முதலானவைகளும் இல்லாமற் கிடந்த கிடையா யெழுந்திரா திருந்தார் கள்.

அதுபற்றி, ஆழ்வார் ஒருவிருத்த பிராமணராகி வந்து ஆர்காணும் மூன்றுநாளாக இந்தக் கோயிலின்வாசலிற் கிடக்கிறவர்கள்? என்ன நிமித் தத்தால் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்க, அவர்கள் நம்மாழ்வாரையும்

னார்! திருநகரிப் பெருமானெழுந்தருளினார்! திருக்குருகூர்நம்பி யெழுந்தருளினார்! காரிமாறனெழுந்தருளினார்! ஸ்ரீசடகோப னெழுந்

அவரது திருவாய்மொழியாகிய திராவிட வேதத்தையும் சங்கத்தார் இகழ்ந்தபடியினாலே அவர்களுக்கு ஆழ்வார் யாதேனும் பிராயச்சித்தஞ்செய்விக்கவேண்டுமென்பது எங்கள் அபிமதமென்ன; பிராமணன் இக்கலிகாலத்திலும் அப்படி நடக்குமா இதென்னவைத்தியமென்ன; வைஷ்ணவர்கள் நடந்தால் எழுந்திருக்கிறோம்; நடவாவிட்டால் இங்ஙனமே அன்னபானாதிகளில்லாமலிருந்து பிராணனை விட்டுவிடுகிறோமென்ன, ஆழ்வார் அவர்கள் மனோநிச்சயத்தை அறிந்து குருகைக்கொண்டு [illegible] அருளிச்செய்த திருவாய்மொழியில் இன்னபாட்டின் இத்தனையாம்பாதத்தை ஒரு சிறு நறுக்கின் எழுதிக்கொண்டு போய்ச் சங்கப்பலகையின்மேல் வையுங்கள்; உங்கள் அபீஷ்டப்படி நடக்குமென்றுசொல்லி அந்தர்த்தானமாய்விட்டார். வைஷ்ணவர்கள் திருக்குருகைப் பிரானே இத்தன்மையாக எழுந்தருளினாரென்று தெரிந்து அவரருளிச்செய்தபடி செய்தார்கள்.

அவர்கள் அந்தத் திருவாய்மொழிச் செய்யுளடியை எழுதிய ஒரு சிறு நறுக்கைக் கொண்டுபோய்வைத்தமாத்திரத்திலே சங்கப்புலவர்களேறியிருந்த பலகையானது பொற்றாமரைத் தடத்தில் ஆச்சரியமாய் அமிழ்ந்துவிட்டது. அதிலிருந்த புலவர்களெல்லாம் நீரில் இடமின்றி விழுந்து அமிழ்ந்து நீந்தித் தடுமாறி எழுந்து மெல்லநீந்திக் கரைசேர்ந்து பார்க்கும்பொழுது, அமிழ்ந்தபலகை உடனே குபீரென்று கிளம்பித் தன்னிடத்தில் வைக்கப்பட்ட சிறுநறுக்கைமாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது. அவர்களதை யெடுத்து அதிலெழுதியிருக்கின்ற ஆழ்வாரருளிச்செய்த ஆயிரப்பிரபந்தத்தின் சொன்னூற்றைந்தாம் திருவாய்மொழியில் "கண்ணன் கழலிணை நண்ணுமனமுடையீர், எண்ணுந் திருநாமம், திண்ணம் நாரணமே" என்னும் முதற்கவியின் முதற்பாதத்தை வாசித்தறிந்து, உலகெலாம் உள்ளடக்கிய கண்ணன் கழலிணைகளைத் தன்னிடத்தில் அடக்கிய இச்சிறுநறுக்கிற்கு இடங்கொடுத்த சங்கப்பலகை இதற்கேற்ற இடமான அதனால் நமக்கும் இடங்கொடுக்குமா? கொடாதாதலால் நம்மை அகற்றிவிட்டதென்றும், சகலவேத சாஸ்திரங்களையும் பிறரால் கற்பிக்கப் படாமல் தானேயுணர்ந்த சாக்ஷாத்பகவத் விஷயமாகிய ஆழ்வாருடைய தெய்வீகமான பாண்டித்தியத்திற்கு நமது பாண்டித்தியம் ஸகாமிகத்தில் ஏகாமிகமும் ஆகாதென்று நினைத்துத் துக்கித்து, மற்றும் திருவள்ளுவர் குறள் செய்தகாலத்தில் அவரும் ஔவையும் இடைக்காடரும் சந்தித்த சமயத்தில் அன்னவரை நோக்கி மற்றையிருவரும் இயற்றிய நூல் [illegible] அவர் அகஸ்தியராற் பிரசித்தம் பண்ணப்பட்ட இயல் இசை நாடகமென மூன்றிறத்ததாகிய தமிழும் ஒன்றுதிரட்டிச்செய்யப்பட்ட குறளும் உடையநங்கையின் திருக்குமாரராகிய சடகோப ரருளிச்செய்த திருவாய்மொழியின் புத்திரன் தானாகிய வழிநூலென்னுங் கருத்தை உள்ளமைத்து



தருளினார்! ஸ்ரீபராங்குச னெழுந்தருளினார்! ஸ்ரீ வகுளாபரண பாஸ்கர னெழுந்தருளினார்! பொருநற்றுறைவரும் புங்கவர்கோன்

"குறுமுனிவன் முத்தமிழு மெங்கோ னிங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்"

என்று சொன்னதையும்,

அதுகேட்டு ஔவை, அர்த்தபஞ்சகத்தையும், சதுர்வித புருஷார்த்தத்தையும் அறப்பால்முதலிய முப்பாலுள் அடக்கி அமைக்கப்பட்ட உண்மைப்பொருளை, எல்லையைப்பட்ட வேதங்களுக்கும் சம்மதமாகிய மேலான பொருளைக் குளிர்ச்சிதங்கிய தாம்ரபரணி தீரத்திலிருக்கும் திருக்குருகூரிற் காரிமுதலியார் புதல்வராய் அவதரித்த நம்மாழ்வாரது திருவாய்மொழியாகிய திராவிடவேதமென்று சிலர் சொல்வார்கள். நான் அவர்கள் சொல்லை மறுத்து அக்குறளை இந்த வுலகத்திற்குத் தாயாகிய ஸ்ரீமந் நாராயணனால் பிரமனுக்கு உபதேசிக்கப்பட்ட வந்த கீர்வாண வேதமென்றே சொல்லுவேனென்னும் கருத்தை உள்ளிட்டு,

"ஐம்பொருளு நாற்பொருளு முப்பொருளிற் பெய்தமைத்த
செம்பொருளை யெம்மறைக்குஞ் சேட்பொருளைத் - தண்குருகூர்ச்
செய்மொழியி தென்பர் சிலரியா னவ்வுலகின்
தாய்மொழியி தென்பேன் றகைந்து"

என்று சொன்னதையும்,

இடைக்காடர், திராவிட வேதமாகிய செய்மொழியையும், கீர்வாண வேதமாகிய தாய்மொழியையும் ஆராய்ந்து சொல்லுமிடத்தில் இரண்டும் ஒன்றேயாம். திருவாய்மொழியை யாவரும் சங்கையின்றி வேதமென்றே சொல்லுவார்கள். திருவாய்மொழியைப்போல, சிறந்த நூல்கள் அனேகம் உண்டென்று சிலர் குதர்க்கஞ்செய்தாலும், நானவர்களை மறுத்து அவைகளெல்லாம் இந்தக்குறளும் அத்திருவாய்மொழியினது சாயையா யிருப்பவைகளென்றே சொல்லுவேனென்னுங் கருத்தை அடக்கி,

"செய்மொழியோ தாய்மொழியோ செப்பி லிரண்டுமொன்றவ்
வாய்மொழியை யாரு மறையென்ப - வாய்மொழிபோல்
ஆய்மொழிகள் சால வுளவெனினு மம்மொழியின்
சாய்மொழியென் பேன்யான் றகைந்து"

என்று சொன்னதையும் நினையாமற் போனோமே அவைகளை நினையாவிடினும்,

ஒருகாலத்தில் தாம்பரணி நதியின் வடகரையில் வசித்திருந்த யோகியொருவர் வளர்த்த நாயொன்று தென்கரையிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குப் பிரதினமும் நதியோரம் சேர்ந்துபோய், வீதியிலிருக்கும் வைஷ்ணவர்களுடைய உச்சிஷ்டத்தைத் தின்று வயிற்றை நிரப்பிக்

எழுந்தருளினீர்! என்று பலசின்னம் பரிமாறி விருதூதிக் கொண்டு வராநிற்க; அவ்வளவிலே, சங்கத்தார் சிஷ்யர்கள் கொண்டு வருவதன்கீழ் அவ்வழக்கப்படி ஒருநாள் போய்த் திரும்பிவர நேரப்பட்டதனால், யோகியானவர் நாயின் வரவில்லையேயென்று ஆத்திரத்தில் வந்து பார்க்கும்பொழுது, அந்நாய் நடைமாற்றில் வருகையில், அகஸ்மாத்தா வெள்ளம் வந்ததையால் நீந்தி காலோய்ந்துபோய் நீரில் அமிழ்ந்து இளைப்பிற்று. அக்ஷணத்தில் ஆகாசபாணம் வெடித்து அந்த ரத்னத் தின்வழியாய் நாயின் ஆத்மாவாகிய ஜோதியானது எழுந்து அமாவாசை யிருளில் கொடிமின்னல் பிரகாசம்போல பிரகாசித்ததைப் பிரத்யக்ஷமாகப் பார்த்து அசேதனமாகிய நாயும் பெறுதற்கரியபேறு பெற்றதே, இதென்ன ஆச்சர்யத்தை யுடைத்தாயிருந்தது, ஒன்றுமில்லாதிருந்தும், ஆழ்வார் திருநகரியின் உச்சிஷ்டத்தை உண்டதனாலல்லவோ இப்படிச் சம்பவித்தது. இது தபசிகள் யோகிகள் ஞானிகள் முதலானவர்களுக்கும் சித்திக்கமாட்டாதே என்று நினைத்து மனதுருகிக் கண்ணீர் விட்டு அழுது அவர்,

“வாய்க்குங் குருகைத் திருவீதி யெச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரமபதமளித் தாயந்த நாயொடிந்தப்
பேய்க்கு மிடமளித் தாற்பழு தோபெருமானுனக்கே
சாய்க்கும் படிக்குக் கவிசொன்ன ஞானத் தமிழ்க்கடலே.”

என்பது முதலாகப் பலபாட்டுகளால் ஆழ்வாரை ஸ்தோத்திரித்ததுமாவது, அல்லது ஸ்வவைதே னென்றும் பாண்டியன் சபையிற் பெரியாழ்வார் விஜயத்துப் பரத்துவ நிர்ணயஞ் செய்தபொழுது நாம் காவப்பட்டதையாவது நினைக்கவேண்டுமே; அப்படியுஞ் செய்யாமற் போக்கினேன் ஆழ்வார் விஷயத்தில் அபசாரப் பட்டோமே; அவர் திருவாய்மொழியையும் அவமதித்தோமே யென்று எண்ணி யெண்ணி அநுதாபப் பட்டுப் பின்பு அவர்களெல்லாம் நிகர்விகளாய், அவ்வபசாரத்தை ஆழ்வார் க்ஷமிக்கும் பொருட்டு அவருடைய மகிமை தங்கிய ப்ரபாவத்தைக் குறித்து,

“சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ — தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும்
உளவோ பெருமா னுனக்கு”.

என்றுபாடி ஸ்துதி செய்தார்கள்.

சங்கப்புலவர்கள் அந்நூலைப் பற்றும் ஆழ்வார் விஷயத்திற் பாடிய பாடல்களெல்லாம் ஒன்றுகொண்டு நூறுசொல்லாவது, ஓரெழுத்தாவது, எழுத்தின் உருப்பாவது, அசை சீர் தளை முதலியவைகளில் ஏதாவது



அந்நூலுடன் தர்க்கித்து உங்கள்பெருமான் எங்கள்சங்கத்தாரிடம்வந்து ஜயித்து சங்கப்பலகை யேறினலொழிய வேதந் தமிழ்செய்த பெருமானென்று நீர் விருதூதிப்பறைசொல்லும்; அப்படிக் கில்லாவிடிற் செல்லாதென்றுதடுக்க; இவர்தாக் கேட்டருளி நீர் சொல்லுவது ந்யாயமேயாகிலும், எங்கள்பெருமான் திருப்புளி யாழ்வாரடியை விட்டெழுந்தருளின தில்லையே! இப்போது நாம் அவருடைய அருளிச்செயல்கள் ஆயிரத்திலொரு பாசுரத்தை இந்தச் சிறுமுறியி லெழுதியருளப்பண்ணிக் கொடுக்கின்றோம்; நீர் இதனைக் கொண்டுபோய் உம்முடைய சங்கப்பலகைமேல் வைத்துச் சங்கத்தார்களை ஜயிக்கவல்லவர்களாகிறார்களோ இல்லையோவென்று பார்த்து எம்மிடம்வந்து தர்க்கிக்கலாமென்ன; அவரும் கொடுமென்ன; இவர் ஒருசிறுமுறியில் “கண்ணன்கழலிணை” என்னும் பாசுரத்தை எழுதியருளப் பண்ணிக்கொடுக்க; அவர்களதை யெடுத்துக் கொண்டுபோய்ச் சங்கத்தாரிடம் நடந்த வாக்வாதங்களையுஞ் சொல்லிப் பலகையின்மீது வைக்க; உடனே அந்தப்பலகை தன்மீதிருந்த முந்நூறு சங்கத்தமிழ்ப் புலவர்களையும் குப்புறக் கவிழ்த்துவிட்டு ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தி சிறுமுறியை மாத்திரம் தரித்து நிற்க; அவர்களெல்லோரும் பயந்து, ஒவ்வொருவரும் தனித்தனியே ஆழ்வார் திருவடிகளில் கவிகள் சமர்ப்பித்து அபசாரக்ஷாபணம் பண்ணிக் கொண்டவர்கள் சிறிதும் பேதமில்லாமல் இவ்வொரு பாடலின்படியே இருக்கக்கண்டு இதென்ன அற்புதமென்று அதிசயப்பட்டுப் பின்பு அவரது திருவாய்மொழியின் ஏற்றத்தைப்பற்றி,

“ஈயாடுவதோ கருடற்கெதிரே இரவிக்கெதிரின் மினியாடுவதோ நாயாடுவதோ வுறுவெம்புலிமுன் நரியாடுவதோ நரகேசரிமுன், பேயாடுவதோ வழகூர்வசிமுன் பெருமான் வகுளாபரணன் னருள்கூர்ந், தேவாதுரையப் பிரமாதரைவீ டுறுசொற்பொருளோ வுலகிற்கவியே”

என்பதும்,

“நீயே பதியென நினைக்கத் தெளிந்த நெறியன்கை
யாயே பதியுமற் றாதி வாதிப் பெயர்களுக்குத்
தாயே பொருநைத் திருக்குரு கூர்த்தமிழ்க் காரிபெற்ற
சேயே யெனது திருவாய் மொழியின் செழும்பொருளே”

என்பது முதலாகச் சிற்சில கவிகள்பாடி ஸ்தோத்திரஞ்செய்து, அவ்வாழ்வாருக்கு அன்றுமுதல் விருதுகூறல் முதலிய சகல விபவங்களும் முன்னினும் விசேஷமாக நிரந்தரமாய் நடப்பிக்கும்படி செய்தார்கள் என்பதாம்.

ளாக, அந்தப்பலகை மட்டுமே அவர்களுக்கு இடங்கொடுத்தது; அப்போது அவர்கள் "ஈயாடுவதோ கருடற்கெதிரே இரவிக்கெதிர் மின்மினி யாடுவதோ - நாயாடுவதோ வுறுமிப் புலிமுன் நரிகேசரி முன் நடையாவதோ - பேயாடுவதோ வெழிலூர்வசிமுன் பெருமான் வகுளாபரணன் அருள்கூர்ந்து, ஓவாதுரையா யிரமாமறையின் ஒருசொற் பொருமோ வுலகிற் கவியே" என்று கவிசொல்லி ஆழ்வார் திருவடிகளிற் சமர்ப்பிக்கும்படி போகவிட; அதைக் கொண்டுவந்து மதுரகவி யாழ்வாரிடத்திற் சமர்ப்பித்துத் தண்டனிட்டுத் தாமுன்பு இவரிடத்தில் வாக்வாதம் பண்ணினது துர்வாதமென்று, சங்கப்பலகைமேல்கண்ட அதிசயத்தையும் விண்ணப்பம்பண்ணி க்ஷமைபெற்றுப் போயினார்கள். இப்படிக் "குரும்பசகாப ப்ரேத்திமாந்" என்கிறபடியே ஸ்ரீமதுரகவி யாழ்வார், ஸ்வாசார்யரான நம்மாழ்வார் வைபவத்தை ஊருக்காடும்

---

## தமிழின் வைபவம்: —

"சிவபிரான் உமாதேவியைப் பாணிக்கிரஹணம் செய்துகொள்வதைப் பார்க்கும்படி பல திக்குகளிலுமிருந்து தேவர்களும் தபோதனர்களும் திரண்டுவந்து சேர்ந்தபோது, பூமியின் வடபுறம் கனத்துத் தென்புறம் மேலெழுந்தமையால், சிவபிரான் விசுவகர்மாவைப் பார்த்து நீர் தென்புறம் போய் உயர்ந்தபூமியைச் சமமாகச்செய்வீராக வென்றுசொல்ல; விசுவகர்மாவும் சிவபிரானைப்போற்றி இத்தேவ மாதவ கூட்டத்தினின்றும் அவ்விடத்திற்கு யாவர்போயினும் பூமிசமப்படாது; சமுத்திரபானஞ்செய்த பெருந்தவத்தையுடைய அகஸ்தியமுனிவர் போவாராயின் பூமிசமப்படும் என்று சொல்லினன். உடனே சிவபெருமான் அகஸ்தியரைப்பார்த்து, மிக்க தவத்தையுடையீர்! நீவிர் மேலெழுந்த பூமியினிடத்திற்குச் செல்வீராக என்றுகூற; முனிசிரேஷ்டர் பெருங்கோபத்துடன் விசுவகர்மாவைநோக்கி உமாதேவியின் திருக்கல்யாணத்தைத் தரிசிக்கவொட்டாமல் என்னைப்பிரித்த உன்னுடைய குலமுழுதும் பேதமாய்ச்செய்யும் தொழில் அதிகப்பட்டுப் பெறும் பொருள்களும் அற்பமாய் ஒழியக்கடவன என்று ஒழியாதசாபத்தைக் கொடுத்தனர்; விஸ்வகர்மாவும் கோபாவேசனாய் நான் எல்லோருக்கும் இதமானதையே ப்ரேரேபித்ததைக் குற்றமாக எண்ணிய படியால் உனது அழகுநிறைந்த தமிழானது வேதத்தைப் போலப் பூஜ்யமான தன்மையுடையதாகிப் புதர்விடக்கடவது என்று சபித்தனன். அகஸ்தியர் வியாகுலராகக் கண்ணீராய்ச் சிவபிரான் முன்சென்று ஸ்வாமீ! தேவரீர் அடியேனுக்கருளிச் செய்த தமிழானது வேதத்திற்குப் புறம்பானதாகப் பரிசுத்தர்கள் எண்ணக்கடவர்களென்று விசுவகர்மா சபித்திட்டனன்; அச்சாபத்தைப் போக்குவீராகவென்று இரக்கவேண்ட; சிவபிரான் அகஸ்தியரைப்பார்த்து, நா



எல்லாருமறியும்படி ப்ரகாசிப்பித்துக் கொண்டிருந்து உலகத்தை வாழ்வித்தருளிக் கலியாப்தம் 50 வது வருஷமான தம்முடைய நாற்றெழுபத் தோராவது திருநக்ஷத்ரத்தில் தம்முடைய சிஷ்யரான ஸ்ரீபராங்குச தாஸரிடத்தில் பரமாசார்யரான ஸ்ரீபராங்குசருக்கு ஆகவேண்டிய கைங்கர்யங்களை யொப்புவித்துத் தன்னடிச் சோதிக் கெழுந்தருளினார்.

ஸ்ரீ மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்.

---

உமது தமிழைப் பரிசுத்தமான வேதத்தினும் சிறந்ததாக விரும்புவோமென்று வாக்களித்தனர். அகஸ்தியரும் விடைபெற்றுக்கொண்டு முனிவரும் தேவரும் கண்களைமேலெடுத்து அதிசயிக்க மாவிந்தமலையினின்றும் உயர்வடைந்த தென்திசையைச் சேர்ந்தனர். பொதியமலையின்கண் பொருந்தி விதிமுறைதவறாது தமிழைப் பூமியில் ப்ரவர்த்திப்பித்துக் கொண்டு வரும்போது தத்துவஞானம்வழுவாத பரமபாகவதர்கள் இத் தமிழ் மோக்ஷத்தைத் தாராதென்று அநாதரித்துவிட; அதுகண்ட முனிவர் ஆயிரத் திருநூறு ஐம்பதுவரை ஸ்ரீமந்நாராயணனை நோக்கி அருந்தவம் புரிந்தனர்; அப்போது பகவான் அவர்முன் ப்ரசன்னமாய் முநீந்திரரே! வேதமனைத்தையும் உமது செந்தமிழாக்குவோம்; அன்றியும் கீர்வாணவேதத்தினும் திராவிடவேதமே சீரியதெனப் பூமியிலுள்ள அறிஞர் யாவரும் நன்குமதிக்க வைப்பதுடன் நமது மகனை சீலர்களாகிய பாகவதர்களும் அதைப்பற்றி யனுபவித்துக்கொண்டாடவுஞ் செய்வோம்; எமக்கும் இன்பமானதாக அணிவோம்; நீவிர் தளரவேண்டாவென்று வாக்கொடுத்துப் பஞ்சாயுதங்களையும் ஆதிசேஷனையும் பூமிதேவியையும் கௌஸ்துபத்தையும் ஸ்ரீவத்ஸத்தையும் வனமாலையையும் பெரிய திருவடியையும் பூமியில் அவதரிப்பித்து அவர்களால் சொல்வதற்கரிய வேதநூலைத் தமிழிற்சொல்வித்துத் திருவாக்குமுதலிய திருப்பதிகளில் அவர்களுக்குப் பிரசன்னமாய் அவர்களைக்கொண்டு உலகத்தார்க்குத் திருவிசைப்பா முதலியவை செய்வித்து இகபரபோகங்களை அடையச்செய்தனன். மற்றும் பகவான் தன் விஷயமாய்ச் சொல்லிய தமிழை யாவரொருவர் சொல்லநினைத்தாலும் தப்பில்லாமற் சொன்னாலும் அவ்வாழ்வாராசார்யர்களைத் துதித்தாலும் மூவித பிறப்புமின்றி உயர்ந்தமோக்ஷத்தை யடைவார்கள் என்று அருளிச் செய்தனன். இவ்வாறு சேனைமுதலியாரது திருத்தேவியாரான சூத்ரவதியாருக்குப் பெரியபிராட்டியார் தாம் பகவானிடம் கேட்டவண்ணஞ் சொல்லப்பட்டதென்று வேறொரு குருபரம்பரையின் பாடபேதசருக்கத்தி லெழுதப்பட்டிருக்கின்றது.

அனந்தர மொருகாலத்தில், ஔவையார் திருக்குருகூர் மார்க்கமாய்த் தென்காசிக்குப் போகும்போது, ஸ்ரீபராங்குசதாசர் தம்முடைய பரமாசார்யரான நம்மாழ்வாருக்கு வருஷோத்ஸவம் கண்டருளப் பண்ணி, மாடவீதியி லெழுந் தருளப் பண்ணிக் கொண்டு ஆழ்வாருக்குரிய விருதாவளியெல்லாம் கூறித் திருச்சின்னம் பரிமாறுவதைக்கண்டு அவரைப்பார்த்து உம்முடைய பரமாசார்யனருளிச்செயல்களை நாம்பார்க்கவேண்டுமென்ன; அவரும் திவ்ய ப்ரபந்தங்களைத் தர்சிப்பிக்க; ஔவையார் மிகவும் ப்ரீதையாய் ஆழ்வாருடைய அவதாரக்ரமங்களையும் கேட்டானந்தித்து ஆழ்வாரைத் துதித்துப் போயினார்.

நம்மாழ்வார் திருநக்ஷத்ரத் தனியன்.

"வ்ருஷே விசாகாயாம்
குருகாபுரி காரிஜம்
பாண்ட்யதேசே கலேராதௌ
சடாரிம் ஸைன்யபம்பஜே".

மதுரகவியாழ்வார் திருநக்ஷத்ரத்தனியன்.

"மேஷே சித்ரா ஸமுத்பூதம்
பாண்ட்யதேசே கணாம்சகம்
ஸ்ரீபராங்குச ஸத்பக்தம்
மதுரங்கவி மாச்ரயே".

ஸ்ரீநம்மாழ்வார் திருவடிகளே சரணம்,
ஸ்ரீ மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர்திருவடிகளேசரணம்.

ப்ரதம பாகம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீநம்மாழ்வார் திருவவதாரவருஷம் ௩௬௮௨ க்கு } சரியான
ஸ்ரீமதுரகவியாழ்வார் திருவவதாரவருஷம் ௩௬௦௨ க்கு } ப்ரமாதி-வருஷ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீமந் நாதமுநிகள் வைபவம்.

தனியன்.

"ஸ்யோமக்ஷ பாலநாத்மலிதம் லமேந்ய லக்ஷ்மயாதியோ காத்குருகா திராஜ: ஸ்மந்த்ர ரத்நத்வயமா நுயஸ்மை நாதாய தஸ்மை முநயே நமோஸ்து.

இவ்வுலகில் பரமக்ருபையாலே அவதரித்தருளி உய்பவர்க்குய்யும் வண்ணமாகத் திவ்ய ப்ரபந்தங்களைத் திருவாய்மலர்ந்தருளினவர்களான ஆழ்வார்கள் தன்னடிச்சோதிக்கெழுந்தருளின பின்பு, அவ்வருளிச்செயல்களில் பக்திவிச்வாசம் வைத்து ஓதி வழிவழியவ் தாட்செய்த தொண்டர்கள் விஷயத்தில் ஸர்வேச்வரன் மஹாப்ரீதனாய், "ஓதவல்லார் பிறவாரே" என்றும், "சேரார் வீடர் கண்டீர் வைகுந்தந் தின்னணமே" என்றும், "வல்லாருள்ளோர் கூடுவர் வைகுந்தமே" என்றும், "பன்னிருநாமம் பாட்டண்ணல் தாளிணைவிக்குமே" என்றும், "பண்டலையிற் சொன்ன தமிழாயிரத்திப் பத்தும் வல்லார் விண்டலையில் வீற்றிருந்தாள்வ ரெம்மாவீடே" என்றும், "கெடலில் வீடுசெய்யுங் கிளர்வார்க்கே" என்றும் "அருளுடையவன்றாளணைவிக்கு முடித்தே" என்றும், "உயிரின்மேலாக்கை யூனிடையொழிவிக்குமே" என்றும், "தாழ்வப்பாடி யாடவல்லார் வைகுந்தமேறுவர்" என்றும், "வயிரஞ்சேர் பிறப்பறுத்து வைகுந்தம் நண்ணுவரே" என்றும் "திருவடியே யடைவிக்கும்" என்றும், "மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றதுகையதுவே" என்றும், "ஆர்வண்ணத்தால் உரைப்பார் அடிக்கீழ் புகுவார்பொலிந்தே" என்றும், "இறந்துபோய் வைகுந்தஞ்சேராவா றெங்ஙனேயோ" என்றும், "மாகவைகுந்த மகிழ்வெய்துவர் வைகலுமே" என்றும், "பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுண்ணிலாவுவரே" என்றும், "முகில்வானத் திமையவர் சூழவிருப்பர் பேரின்ப வெள்ளத்தே" என்றும், "வானின்மீதேற்றி யருள்செய்து முடிக்கும் பிறவிமாமாயக் கூத்தினையே" என்றும், "வைகுந்தமேறுதல்

பான்மையே" என்னுமிவை தொடக்கமான ஆழ்வாருடைய மங்களா சாசனத்தின் படியே, மேல்விட்டுக் கடிமை கொண்டருள் வதைக் கண்ட ப்ராம்ஹணர்கள் கலிமஹிமையாலும் அபிஜன வித்யாவித்தங்களாலும், மதாந்தர்களாய், அவ்வருளிச் செயல்கள் மேல் (கொல்லும்பாட்டென்று) தோஷங்கூறி ஆகர ப்ராக்ருதி களாய், அவற்றை நெருப்பிலிட்டு உருவழிக்கத்தலைப்பட்டு ஏறக் குறைய மூவாயிர வருஷங்களுக்குள்ளாக ஆராவமுதன் விஷய மான பத்துப் பாசுரங்களும், மதுரகவியாழ்வா ரருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்புந்தவிர மிருந்தவை யெல்லாம் பற்றற அழிந்து அவைகளிருந்தன வென்னும் சுவடுகூட உலகத்தாருக் குத் தெரியாமற் போய்விட்டது; அப்போது பொதியமலையில் வாழும் கும்பசம்பவரும் ஆங்கிரசாதி ருஷிகளும் (மதுகைடபாக ளிடத்தில் வேதங்களைப் பறிகொடுத்த சதுர்முகனைப்போலே) மிகவும்கிலேசித்துத், திருமலைக் கெழுந்தருளித், திருவேங்கடத் தப்பனைத் திருவடிதொழுது, விண்ணப்பஞ் செய்துகொள்ள; அப் பன், அவர் முறைகேட்டு, "கும்பசம்பவரே! நீரஞ்சவேண்டாம், வீரநாராயணபுரத்தில், மன்னனார் சந்நிதியில் நித்யவாசஞ்செய்து கொண்டு அவருக்கு அந்தரங்க பக்தராயிருக்கிற சடகோபாழ் வாருக்கு சம்புடைய ஹம்சபூதரொருவரை, நாதமுனிகளென் னும் அபிதானத்தால் அவதரிப்பித்து, த்ராவிடவேதங்களைக் கொடுப்பிக்கக் கடவோமென்று திருவாய்மலர்ந்தருள; ருஷிகள் அபயமாய் விடைகொண்டு, வீரநாராயணபுரத்திற் கெழுந்தருளி, மன்னனாரை யடிபணிந்து, சடகோபாழ்வாருக்குஞ் சேவை தந்து, திருவேங்கடத் தப்பன் திருவுள்ளமிருக்கும் படியைத் தெரிவித்து, அவரால் பஹுமானிக்கப்பட்டுத், திரும்பி, ஸ்வஸ்தானஞ் சேர்ந்து, "இனியுன் றிருக்குறிப்பே" என்கிறபடியே ஸ்ரீநிவாச னருளையே எதிர்பார்த்திருந்தார்கள். அதன்பின்பு சடகோபாழ் வாருடைய பத்னி கர்ப்பவதியாய்க், கலியாப்தம் மூவாயிரத் தறுநூற்றெண்பத்தைந்தில் கீழ்ந்த சோபக்ருது வருஷம் ஆனிமாஸம் சுக்லபக்ஷம் சதுர்த்தசி புதவாரம் அநுஷநக்ஷத்ரங் கூடிய சுபதினத்தில் ப்ரஸவிக்க இப்படியொருமஹாபுருஷர் அவதரித்தரு ளினார்; இவரை இவர் திருத்தகப்பனார் கும்பசம்பவருக் கறிவிக்க; அவரும் அதிப்ரீதியுடன் அப்பொழுதே புறப்பட்டு வந்து (இவர்



நாத னொருவருவானவர் ஆகையாலே) இவருக்கு நாதமுனிக ளென்று நாமகரணஞ்செய்து, அவ்வக்காலவயஸ்ஸுக்கு நடக்க வேண்டிய தபருசகமான கர்மங்களை யெல்லாம் தாமே அருகி லிருந்து நடத்திவைத்து, வித்யாப்யாசத் தொடக்கமான சர்வ சாஸ்திரங்களிலும், † அணிமா-மஹிமா-கரிமா-லஹிமா-ப்ராப்தி ப்ராகாம்யம்-ஈசத்வம்-வசித்வம் என்கிற அஷ்டமா ஸித்திகளும், ‡ இயமம்-நியமம்-ஆசனம்-ப்ராணாயாமம்-ப்ரத்யாஹாரம்-தாரணை த்யானம்-சமாதி என்கிற அஷ்டாங்கயோகங்களிலும் அதிநிபுண ராக்கிவைத்துத் தாம் திருவேங்கடத் தப்பனிடத்தில் செய்து கொண்ட விண்ணப்பத்தையும், அவனருளிச்செய்திருந்ததையும், இவரை ஏகாந்த ஸ்தலத்தில் வைத்துக்கொண் டறிவித்துவிட்டுப் போயினார்.

---

† 1. அணிமா - மிகச் சிறிய வுருவினையுடையதாதல். 2. மஹிமா - மிகப்பெரிய வுருவினையுடையதாதல். 3. கரிமா - மிகக்கனத்திருத்தல். 4. லஹிமா - துரும்பைப்போன்ற கனமின்றி மிருதுவாயிருத்தல். 5. பிராப்தி - விரும்பியதை விரும்பியவாறடைதல். 6. பிராகாம்யம் - பரகாயப் பிரவேசஞ்செய்தல், ஆகாயகமனம் புரிதல், இச்சித்த சர்வ போகங்களு மிருந்தவிடத்திற் பெறுதல், சூரியவொளியால் பொருள்களைக் காணுமாறுபோன்று தனதுடலொளியால் பொருள்களைக்காணுதல், திரி காலவுணர்ச்சி. 7. ஈசத்வம் - எத்தகையோர்க்கு மேற்பட் டிருத்தல். 8. வசித்வம் - சராசரப்பொருள்க ளியாவற்றையும் தன் வசமாக்கல். இவை அஷ்டமாஸித்தி யெனப்படும்.

‡ 1. இயமம் - கொல்லாமை, பொய்ம்மைகூறல், திருடாமை, பிறர் பொருட்களின் ஆசையின்மை, இந்திரியங்களை யடக்கலாம். 2 நியமம்-தவம், சௌசம் (அதாவது உடலை நீரினாலும், மனத்தைச் சத்தியத்தினாலும் பரி சுத்தமாக்கல்), தத்துவ நூலாராய்ச்சி, பெற்றதுகொண்டு மகிழ்தல், தெய்வ வழிபாடு என்பனவாம். 3. ஆசனம்-(அதாவது இருப்பு) பத்திரமென்றும் அதாவது பீஜத்தின்கீழ்ப் பாகமாகிய காம்பி னிருபக்கங்களிலும் இருகாற் பரட்டையுஞ்சேர்த்து அவ்விருகால்களையும் இருகைகளாலும் இறுகப்பிடி த்து அசையாதிருத்தல்; கோமுகமென்றும் அதாவது சகன (பிருஷ்டபாக ம்)பக்கத்தில் இரண்டுகால்களின்பரட்டையுமமாறவைத்து அந்தஇரண்டு கால்களின் பெருவிரல்களைக் கைகளால்பிடித்திருத்தல்; பங்கயமென்றும் அதாவது இரண்டு தொடைகளின்மேலும் இரண்டு உள்ளங்கால்களையும் மாறித்தோன்ற வைத்தல்; கேசரியென்றும் அதாவது பீஜத்தின்கீழ்ப்பாக மாகிய காம்பின் இருபக்கங்களிலும் இரண்டுபரடுகளையுஞ்சேர்த்து முழந்தா ளின்மேல் இரண்டுகைகளையும்நன்றாய்ப்பொருந்தும்படி வைத்து அக்கை விரல்களைச் செவ்வையாய்விரித்து வாய்திறந்து நாக்கை நீட்டிக்கொண்டு

அனந்தரம் ஈச்வரபட்டாழ்வாரும், ஸ்ரீமந்நாதமுனிகளும் இவர் திருக்குமாரர் ஈச்வரமுனிகளும் ஒருநாளையில், மன்னனார் திருமுன்பு சென்று தண்டன் ஸமர்ப்பித்து "பரித்ராணாய ஸாதூநாம்விநாசாய சதுஷ்க்ருதாம்—தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமியுகேயுகே" என்னுந் திருமுகப்படியே தேவரீர் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தமாக அவதரித்து விளையாடியருளின ஸ்ரீமதுரை - திருவாய்ப்பாடி - ஸ்ரீப்ருந்தாவனம் - யமுனாதீரம் - ஸ்ரீ கோவர்த்தனகிரி - ஸ்ரீத்வாரகை - திருவயோத்யை - ஸ்ரீ ஸாளக்ராமம் - ஸ்ரீ பதரிகாச்ரமம் - ஸ்ரீ நைமிசாரண்யம் - ஸ்ரீஸிம்ஹகிரி முதலிய வடதிசையிலுள்ள திவ்யதேசங்களெங்கும் திருவடிதொழுதுவர நியமித்தருள வேணுமென்று விண்ணப்பஞ்செய்து, அர்ச்சகமுகேன விடைபெற்றுக் கொண்டு குடும்பமாகப் புறப்பட்டுப்போய் (வடதிசைமதுரை, சாளக்ராமம் வைகுந்தத்துவாரயோத்தி - இடமுடைவதரி) முதலான திவ்யதேசத் தெம்பெருமான்களைத் திருவடிதொழுது, "யமுனாஞ் சாதிகம்பீராம் நாநாவர்த்தஜ்ஷாகுலாம்" என்கிறபடியே மஹாகம்பீரமாய்ப் பலமடுக்களையும் அவற்றில் சுழிகளையுமுடைத்தாய்ப் பெருகாநின்ற யமுனாதீரத்திலுள்ள கோவர்த்தனபுரத்திலெழுந்தருளியிருக்கிற, யமுனைத்துறைவனைத் திருவடிதொழுது

---

மூக்குநுனியைப் பார்த்திருத்தல்; சுவஸ்திகம் என்றும் அதாவது தொடைக்கும் முழங்கால்களுக்கும் இடையே இரண்டு உள்ளங்கால்களையுஞ் செலுத்தி இடுமைத்திருத்தல்; சுகாஸனம் என்றும் அதாவது எவ்விதமிருந்தால் திட்டுமோ அவ்விதமிருத்தல் என்பனவாம். 4. பிராணாயாமம் - இரேசகவாயுவை மூக்கின் வலது துவாரத்தால் விடுத்தல், பூரகவாயுவை மூக்கின் இடது துவாரத்தின் வழியாக உள்ளுக்கிழுத்தல், கும்பகம் (வாயுவையுள்ளே அடக்குதல்) செய்தலாம். 5. பிரத்யாஹாரம் - விஷயங்களில் செல்லாவண்ணம் மன இந்திரியங்களையும் தடுத்து உள்நோக்கியிருத்தலாம். 6. தாரணை - மனதைத் தானேபோன்று இடைவிடாது அந்தக்கரணம் ஒருவகைப்பட்டிருத்தலாம். 7. தியானம் - இடைவிட்டு விட்டுவிட்டுச் செல்லும் அந்தக்கரணத்தின் ப்ரவாஹமாம். 8. ஸமாதி - உண்டாயிருக்கும் ஸமஸ்காரம் (வாசனை) கழிந்து ஸ்பஷ்டமாயிருக்கும் ஸமஸ்காரங்களில் வெளிப்பாடு உண்டாகி அந்தக்கரணம் ஒருமுகமாய்ப் பரிணமித்திருத்தலாம். இயமம் பத்துவகைப்படும் என்பதும், நியமம் பத்துவகைப்படும் என்பதும், ஆஸனம் எண்பத்துநான்கு வகைப்படும் என்பதும், பிராணாயாமம் இருவகைப்படும் என்பதும் பிறவுமாகிய இவற்றின் விரிவெல்லாம் அஷ்டயோகதீபிகை முதலியவற்றிற் கண்டுகொள்கவும்.



மிகவும் ப்ரீதராய் அவ்விடத்திலேயே சிலகாலம் நித்யவாசஞ் செய்யத் திருவுள்ளமாய், ஸர்வவித கைங்கர்யங்களும் பண்ணிக்கொண்டு சேவித்திருக்கிறகாலத்தில், ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு மன்னனார் ஸ்வப்நங்காட்டி நம்முடைய வீரநாராயணபுரத்தே வாராதேதோ வென்று சாதித்தருள; இவர் இனிசெய்யத்தக்கதென்னென்று, யமுனைத்துறைவன் திருமுன்பு நின்று தண்டன் ஸமர்ப்பித்து, மன்னனார் திருவுள்ளத்தை விண்ணப்பஞ் செய்துகொள்ள; யமுனைத்துறைவனும் அர்ச்சகமுகேன தீர்த்தப்ரஸாதங்களை ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார்; பின்பு இவர் அங்குநின்றும் குடும்பஸஹிதமாகத் திரும்பி, வாராணஸிமார்க்கமாய் "யஸ்ய ஸ்தல ஸ லோகேஷு லோகா லோகே ச ஸாகரே - நாஸ்தி நாஸ்தி ஸமம் க்ஷேத்ரம் உத்தமம் புருஷோத்தமம்" என்று சதுர்த்தச புவனங்களிலும் தனக்கு நிகரில்லையெனச் சொல்லப்படுகிற ஸ்ரீபுருஷோத்தமத்துக் கெழுந்தருளி ஸ்ரீ ஜகந்நாதனைத் திருவடிதொழுது, அங்குநின்றும் புறப்பட்டு ஸிம்ஹாத்ரிக் கெழுந்தருளி ஸிம்ஹகிரியப்பனை யடிபணிந்து, அஹோபிலத்துக் கெழுந்தருளி "அஹோவீர்ய மஹோசௌர்யம் அஹோபாஹு பராக்ரமம் - நாரஸிம்ஹம் பரந்தைவம் அஹோபலமஹோபலம்" என்கிறபடியே ஆச்சர்யத்திற் கிடமான சௌர்ய பராக்ரமாதிகளையுடைய அழகிய சிங்கரைத் திருவடிதொழுது "பரன்சென்றுசேர் திருவேங்கட"த்துக் கெழுந்தருளித் திருமலையாழ்வாரைச் சேவித்து "மாயாவிபாமாநந்தந் த்யக்த்வா வைகுண்ட முத்தமம் - ஸ்வாமிபுஷ்கரிணீ தீரே ரமயா ஸஹ மோததே" என்கிறபடி ஜகந்நாடக ஸூத்ரதாரனான ஸ்ரீவைகுண்டநாதனே இவ்விபூதியிலுள்ளாரை ரக்ஷிக்கையிலுள்ள ஆசையாலே தன்னுடைய பரமபதத்தை யுபேக்ஷித்துவந்து திருக்கோனேரி புஷ்கரிணிக் கரையில் திருமகளோடு ஸர்வஸுலபனாய் ஸ்ரீநிவாஸனென்னு மபிதானத்தால் சேவைசாதித்துக் கொண்டிருக்கிறனென்ன நின்ற திருவேங்கடத்தப்பனைச் சேவித்து அங்கே நித்யவாசம்பண்ணவேணுமென்று ப்ரீதியைக்கொள்ள; அப்படிச்செய்யும் விஷயத்தில் மன்னனாருக்குத் திருவுள்ளமில்லாதிருக்கையில், விடைகொண்டு, கடிகாசலத்திற்கெழுந்தருளிக் "கடிகைத்தடங்குன்றின்மிசை" யிருக்கும் அக்காரக்கனி அழகிய சிங்கரைத் திருவடிதொழுது, திருப்புட்குழிக்கெழுந்தருளிப் "புட்குழியம்போரேறு" ஆன விஜயராகவ

னையும் *பெரியவுடையாரையும்சேவித்து "நகரீணுஞ்ச ஸர்வாஸாம்
புரீகாஞ்சீ விஷிஷ்யதே- கிரீணுஞ்சாபிஸர்வேஷாம் ப்ரகே
ஹஸ்தி கிரிஸ்ஸ்ம்ருத:- வேகவத்யுத்தரேதீரே புண்யகோடி
ஹரிஸ்ஸ்வயம்-வரதஸ் ஸர்வபூதாநாம் அத்யாபிபரிதரு ப்யதே"
என்கிறபடி வேகவதியின் வடதிருக்கரையில் நகரங்களுக்கெல்லாம்
உத்தமமான கரியாயிருக்கிற காஞ்சிநகரியில், கிரிகளில்ஸ்ரேஷ்ட
மான ஹஸ்திகிரியின்மேலே புண்யகோடி விமானத்தின் மத்தி
யில் எழுந்தருளிநின்று அடியார்கள் பாபங்களைத்துக்களுப், ஸர்வ
சேதனர்களுடைய ஸேவ்யமானவருமாய், ஸர்வார்த்த ப்ரதருமாயிருக்கிற பே
ரருளாளனையும், அந்த க்ஷேத்ரத்திலுள்ள மற்ற எம்பெருமான்
களையும்சேவித்துத் திருவயிந்திரபுரத்துக்கெழுந்தருளித் தெய்வ
நாயகனையும் திருக்கோவலூரில் மூவராழ்வார்களையும்,ஆயனாரை
திருவடி தொழுது "ரங்கம் ரங்கமிதி ப்ருயாத் க்ஷுத்ப்ரஸ் க
ராதிஷு-விஷ்ணுர்ணா மஹாபாபாத் ஸத்ய: [illegible]" என்
கிறபடி [illegible] ஸ்லோகங்கள் சேர்ந்தால் [illegible]
[illegible] மாகத் திருவரங்கம் பெரியகோயில் என்றது
தேயமாய், அதுவே பாபஹரமாய் க்ஷேத்ரமமர்ந்திருக்கிற பெ
ரியகோயிலுக்கெழுந்தருளிப் பெரியபெருமாளைச்சேவித்துத் தி
ருக்குடந்தைக் கெழுந்தருளி ஆராவமுதனைச்சேவித்து மீண்டு வீ
ரநாராயணபுரத்திற்கு வந்து மன்னனார்கோயிலே எழுந்தரு
அப்போது அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் எ
கொண்டு வரப்புகுந்து, மன்னனாரைத் திருவடி தொழுது, அ
ப்ரீதராய்நிற்க, மன்னனார் இவரையும் ஈச்வரபட்டாழ்வாரை
ஈச்வரமுனிகளையும் உகந்தருளி, அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்க
ளழைத்து, நமக்குப் பிரியர்களாயிருக்குமிவர்களை நீவிர் ஆதரித்து
கொண்டு போருமென்று அருளிச்செய்ய, அவர்களும், தங்கபடி தி
மாளிகை யிடத்திலேயொட்டித் திருமாளிகைக்கு வேண்டின
வெல்லாம் "[illegible] முன்னிதபாக" என்
படியே சமைப்பித்துக் கொண்டு போருகிற காலத்திலே இவர்
மன்னனாருக்குத்திருத்தவனஞ்செய்து திருமாலைகள்கட்டி ஸம
ர்ப்பித்து அருகுபடி திருத்தல் - சாத்துப்படி சேர்த்தல் - திருவி

* ஜடாயுவைப் பெரிய உடையாரென்றும், ஸுக்ரீவனை மஹரா
ஜனென்றும், மாருதியைச் சிறிய திருவடியென்றும், தசரதனைச் சக்ரவர்
த்தியென்றும் சொல்வது ஸம்ப்ரதாயம்.



செரித்தல் முதலிய கைங்கர்யங்களையும் குறைவற நடத்திக்
கொண்டு, திவ்யந் கோஷ்டிகளுடன் சாஸ்த்ர பரவர்த்தனங்களை
யுஞ் செய்துகொண் டிருக்கச்செய்தே மேல் நாட்டிலிருந்து சில
ஸ்ரீவைஷ்ணவர்கள் அவ்விடத்திற் கெழுந்தருளி மன்னனாரைச்
சேவித்து அவர்திருமுன்பில், "ஆராவமுதே" என்கிற திருவாய்
மொழியை யநுஸந்தித்தார்; அதை ஸ்ரீமந்நாதமுனிகள் நன்றாகச்
செவிசாய்த்துக் கேட்டருளி அதிப்ரீதராய் அவர்களைப் பார்த்து
(ஆயிரத்துள் இப்பத்து) என்றிருக்கிறதே, இப்பத்த முங்களுக்கு
முற்றவும்வருமோ வென்று கேட்டருள; அவர்கள் தங்களுக்கிப்
பத்துப்பாசுரங்களே தெரிந்திருப்பதென்று விண்ணப்பஞ்செய்ய;
இவர், உங்கள் நாட்டிலே இந்த ஸ்ரீகோசமுண்டோவென்று கேட்
டருளத் தங்களுக்கெவ்வளவுவருமோ அவ்வளவே மற்றவிடத்து
மிருப்ப தென்றார்கள்; இவர், அவர்களுக்கு மன்னனாருடைய
தீர்த்த ப்ரஸாதங்களை ப்ரஸாதிப்பித்தருளி இவ்வாயிரம் பாசுரங்
களையுங் கண்டுபிடிப்பதற்கு விசேஷித்தென்று ஆலோசித்து இவை
ஸ்ரீ சடகோபரருளிச்செய்தருளின திருக்குருகூர் ப்ரதேசத்திலே
இருக்க வேணுமென்றுதேறி, உடனே திருநகரிக் கெழுந்தருளி
ஆழ்வாரையும் பொலிந்துநின்ற ஆதிப்பிரானையும் சேவித்து
அங்கே ஸ்ரீமதுரகவிகளுடைய சிஷ்ய பரம்பரையில் வந்தவரான
ஸ்ரீபராங்குச தாஸரென்பவரைச் சேவித்து, இவ்விடத்தில் திரு
வாய்மொழியை யோதினவர்களும் அந்த ஸ்ரீகோசமுமுண்டோ
வென்று கேட்டருள; அவர், திருவாய்மொழியும் மற்றுமுள்ள
திவ்ய ப்ரபந்தங்களும், பரமஸித்தமாய் நெடுங்கால மாயிற்றென்
றும் தமது பரமாசார்யரான ஸ்ரீமதுரகவிகள் திருவாய்மலர்ந்
தருளிய "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்னும் திவ்ய ப்ரபந்த
மொன்றுமாத்ரமே இருக்கிறதென்றும் சாதித்து அதையும்
தர்சிப்பித்து இதை ஆழ்வார் திருமுன்பில், ஏகாசனத்திலிருந்து
ஏகாக்ரசித்தராய் அவர் திருவடிகளே த்யானித்துக் கொண்டு
நியமத்துடனே பன்னீராயிரம் உரு அநுஸந்தித்தால் ஆழ்வார்
ப்ரஸந்நராவரென்று நம் ஆசார்யர் அருளிச் செய்திருக்கிறா
ரென்ன; இவர் தண்டன் ஸமர்ப்பித்து அதை அடியேனுக்கு ப்ர
ஸாதித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய; அவரு மிகவு
முகப்புடனே போதித்தருள; இவரும் ஓதித் திருப்புளியாழ்
வாரடியிலிருக்கும் ஆழ்வார் திருமுன்பில் ஏகாசனத்தி லிருந்து

ஏகாக்ரசித்தராகி, நியமத்தோடே பன்னீராயிரமுரு அநுசந்திக்க; "ஆஸ்திகோ தர்மஶீலஶ்ச ஶீலவாந் வைஷ்ணவஶ்ஶுசி:— கம்பீரஶ்சதுரோ தீரஶ்ஶிஷ்ய இத்யபிதீயதே" என்கிறபடி பரலோகமும் அதிலிருக்கும் பரனொருவனும் உண்டென்னு மெண்ணத்தையுடையவனும், சத்கர்மத்தில் மனோவ்ருத்தியுடையவனும், விஷ்ணுபக்தியுடையவனும், சத்தாஹார முடையவனும், ஆசார்யமூலேன லபித்துக்கொண்ட பரமார்த்தங்களை உயிர்வாழ்க்கைக் குறுப்பான ஐசுவர்யமாகப்பாவித்துச் சிதறாது காப்பவனும் இதர வ்ருத்தியில் அருசியுடையவனும், ஸம்ஸார தாபத்தில் சலியாமையையுடையவனுமான ஒருவனையே சிஷ்யனாக ஆதரித்துப் போரலாகுமென்று சொல்லியிருக்கிறபடியே ஆஸ்திக்யாதி குணலக்ஷணங்களையுடையரான இம்மஹாநுபாவருக்குப் பெரிய பிராட்டியார் நிர்ஹேதுக ஆழ்வார் ப்ரஸன்னராகி, அசரீரி வாணி சொல்லுமாபோலே திருவாய்மலர்ந்து ஏன் காணும் நம்மைக் குறித்து இப்படி உபாஸியாநின்றீர் என்று கேட்டருள; இவர், திருவாய்மொழிமுதலான திவ்ய ப்ரபந்தங்களை அடியேனுக்கிரங்கி யருளவேணுமென்று விண்ணப்பஞ் செய்ய; ஆழ்வார் பட்டுத் திரையிட்டபடி பிடித்தருளித் திரைக்குள்ளிருந்து ப்ரீதியுடனே ஸர்வேஶ்வரன் தமக்கு மயர்வறமதிநல மருளினாற்போலே இவருக்கு "திவ்யந்ததாமி தே சக்ஷு:" என்கிறபடியே திவ்ய ஜ்ஞான சக்ஷுஸ்ஸை ப்ரஸாதித்தருளித் தாம் திருவாய்மலர்ந்தருளிய ப்ரபந்தங்களோடு மற்றையாழ்வார்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்களையும் பூர்த்தியாக வருளிச்செய்து கொண்டு வர; இவர் பட்டோலை பிடித்து எழுதியருளப் பண்ணிக் கொண்டு வருகையில், "பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம் - நலியு நரகமும் நைந்த நமனுக்கிங் கியாதொன்று மில்லை - கலியுங் கெடுங்கண்டு கொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்-மலியப் புகுந்திசை பாடி யாடி யுழிதரக் கண்டோம்" என்னும் திருவாய்மொழி பாசுரங்கள்வர; இவர் விஸ்மிதராய், ஆழ்வார் திருவடிகளில் தண்டனிட்டு இப்படி அவதாரம் பண்ணப் போகின்றவரை இன்னாரென்றருளிச் செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்க; ஆழ்வாரும் க்ருபையுடையவராய், இந்த ப்ரபந்ந குலத்திலொரு மஹாநுபாவர் இராமாநுஜர் என்னும் அபிதானத்தோடவதரிக்கப் போகின்றார்; அவராலே நாடடங்க நாரணநகராகி வாழப்போகிறது காணென்ன; இவர் "பயனன்றாகிலும் செயல்நன்றாகத்



திருத்திப் பணிகொள்வான்" என்கிறபாசுரத்தை இயலுமிசையுமாக விட்டு ஆழ்வாரைப்பாடியுகப்பித்துத் தேவரீர் ப்ரகாசிப்பிக்கும் வர்த்தமான காலத்ரய பர்யவஸாயி ஜ்ஞானமுடைய ஸர்வஜ்ஞராகையாலே அறியப்போகாத தொன்றுமில்லாமையால், அந்த வ்யக்தியினுடைய ஸம்ஸ்தானத்தைத் தேவரீர் பாவித்துக் காட்டியருளவேணுமென்று ப்ரார்த்திக்க; அன்றிராத்திரியில், ஆழ்வார் க்ருபாமாத்ர ப்ரஸன்னாசார்யரென்கிற இராமாநுஜ வ்யக்தியை த்வாதஶோர்த்வ புண்ட்ர-காஷாய- திருப்பரிவட்ட த்ரிதண்டாலங்க்ருதராய், ஆஜாநுபாஹுவையும், நிரவதிக தேஜோரூபமான திருமுக மண்டலத்தையும் அதனிருபுறத்திலும் "மகரஞ்சேர் குழை யிருபாடிலங்கியாட"த் தீர்க்கமாய்த் தரித்துக்கொண்டு, இவரிருக்குமிடத் தெழுந்தருளி, க்ருபாப்ரவாஹஸூசகமான முறுவலும் கமலக் கண்களுமாகச் சேவைசாதித்தருளி, ஸ்ரீமந்நாதமுனிகளே! அந்த வ்யக்தி யிருக்கும்படி இதுவே காணீர் என்ன; இவருமுடனே ஆழ்வார் திருவடிகளிலே ஸாஷ்டாங்கமாய்ப் படிந்து சேவித்துச் சுவாமீ! தேவரீருடைய ஸம்ஸ்தானத்திலும், தேவரீர் பாவித்தருளின ஸம்ஸ்தானம் அடியேனுக்கு மிகவும் ஆகர்ஷமாக விருக்கின்றதென்று விண்ணப்பஞ் செய்துநிற்க; ஆழ்வார் அழகிதுகாண் நீர்சொல்வது! இந்த விஷயத்திலன்றோ! உபயவிபூதியிலுள்ளாரும் விபூதிநாயகனும் ஸர்வரும் மேல்விழப்போகிறதென்று திருவாய்மலர்ந்தருளினார். அதன் பின்பும் இவர் ஆழ்வாரையுகப்பித்து இந்தபவிஷ்யத் ராமாநுஜாசார்ய விக்ரஹத்தை அடியேன் நித்யமாக வநுபவித்துக்கொண்டிருக்க விரகேதென்று தளர்ந்து விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் ஆக்கித் தருக்கடவோமென்று திருவாய்மலர்ந்தருளி விட்டு மறுநாளிராத்திரியில், அவ்விக்ரஹத்துக்குக் கடவ சில்ப ஸம்சிட்டத்திலே ஸ்வப்நமுகேன வெழுந்தருளிப் பவிஷ்யத் ராமாநுஜாசார்ய விக்ரஹ லக்ஷணத்தை வகுத்துக்காட்டியருளி, நாளை நம் திருப்புளிக்கீழ் வந்து இப்படியே ஸர்வாவயவ பூர்ணமாகச் சமைப்பிக்கோ என்றருளிச்செய்ய; சில்பரும் விழித்தவாறே, ஆழ்வார் ஸந்நிதிக் கெழுந்தருளி நியமனமிருந்தபடியே, சிரோஸ்நான பூர்வமாக ஆஹார நித்ரையின்றிக்கேயிருந்து அவ்விக்ரஹத்தை முடித்துக் கொடுக்க; ஆழ்வார், அதிலொரு சக்திவிசேஷத்தைப் ப்ரதிஷ்டிப்பித்தருளி ஸ்ரீமந்நாதமுனிகளை அழைத்து உம்முடைய அபேக்ஷி

தந்தை இதோ தலைக்கட்டிவைத்தோம் கண்டீரோ வென்று அதை ப்ரஸாதித்தருளி, இதை நக் தர்சநத்துக்காக அடியிட்டு வைத்தோமாகையாலே இதை நம்முடைய அவயவமாக நினைத்துப் போரும் உம்முடைய குலத்தில் ஒருவர் ரக்ஷித்து இதைச் சாக்ஷாத்கரிக்கப்போகிறார் என்றருளிச்செய்ய; இவர் ஆழ்வார் சேவைக்குத்தோற்று "யஸ்யப்ரஸாதேந கருணாகரஸ்ய மஹிஷ்ய தர்சநீய வராஸ்வாதுபம் ஸைத்ரூபமாய மதுராநுபாவம் தக்காரி ஸூநுஞ் ஸரணம்ப்ரபத்யே" என்று ஸ்தோத்ரம்பண்ணி நாலாயிரங்களையும் அதிபருளைப் பண்ணிக்கொண்டு ஆழ்வார் திருவடிகளிலே கைங்கர்ய நிரதராய் நித்யவாஸஞ் செய்துகொண்டிருந்தார்.

இப்படி யிருக்கையில் சிலநாளில் மன்னனார் இவருடைய ஸ்வப்நத்தில் எழுந்தருளி, நீர் நம்முடைய ஸந்நிதிக்கு இவ்வப்ரபந்தங்களை ஒரு உருச்சொல்லவேணும் என்றுசிட்டருளி; இவர் மதுரகவி ஆழ்வாரையும் ஸேவித்துநின்று, மீளவும் ஸேவித்துநின்று, இச்செய்திகளை விண்ணப்பஞ்செய்தவராக; ஆழ்வார் ப்ரீத்தராய், நீர் மன்னனார் திருவுள்ளப்படியே வீரநாராயணபுரத்திற்குப்போய், இப்ப்ரபந்தங்களைச் சமர்த்தராய் யாத்மகுணங்களையுடையரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அதிகாரத்துக்கு வல்லாரம்படி ஈதுவிப்பதென்று நியமித்துத் தீர்த்த ப்ரஸாதங்களை யருளி விடைகொடுத்தருளினார்; அனந்தரம், இவர் ஆழ்வாரருளப்பட்ட பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை அதி வைபவத்துடனே மங்கள வாத்யங்கள் தொடக்கமான ப்ரபலரின்னங்களைப் பரிமாறி எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வழியிலுள்ள திவ்யதேசங்களைச் சேவித்து அவ்வவர்களின் ப்ரபாவத்தை வெளியிட்டு திவ்ய ப்ரபந்தாநுஸந்தானத்துடனே வீரநாராயணபுரத்தேற வந்து, மன்னனாரைத் திருவடி தொழுதுநின்று, நாம் ஆழ்வாரை ஸேவிமாளித்தப்பட்டபடியை விண்ணப்பஞ்செய்ய; மன்னனாரும் மிகவு முகப்புடனே தன்னுடைய நிஜவுருவை ஸ்வப்நமுகேன இவருக்குக் காட்டியருளி, நாதமுனிகளே! ஸம்ஸாரிகளை யுஜ்ஜீவிப்பிக்கைக்காக நாம் காண ஸ்வப்நங்களைக் கொடுத்தும், வழிபடுவதற்குறுப்பான சான்றோர்களைத் தந்தும் அவற்றின் பொருளையறிவிப்பதற்கு நாமே வந்து பிறந்து அறியாதன அறிவித்தும் செய்யாதன செய்துகாட்டியும் காப்பகமாகவே தரதியப பின்பு ஆழ்வார்களை அவதரிப்பித்துத் திவ்ய ப்ரபந்தங்களைச் செய்ய, அவ ... வையகங்களின் இப்படிப்பட்ட ப்ரபந்தங்கள் ப்ர



முஷிதமானால் நாம் பார்த்திருக்கமுடியுமோ? இனிநீர் இவற்றை இயலிசையுமாக்கி உலகத்தில் ப்ரவர்த்தமாம்படி பண்ணக்கடவீரென்று நியமித்தருள; இவர் அப்படியே தம்முடைய மருமக்களான கீழையகத்தாழ்வானையும் மேலையகத்தாழ்வானையும் † திருக்கண்ணமங்கை யாண்டானையும் அழைத்தருளி, ஆழ்வார் தம்மைப் பணிகொண்டு திவ்ய ப்ரபந்தங்களைக் கடாக்ஷித்த படியையும், மன்னனார் அவற்றை இயலும் இசையுமாக்க வேணுமென்று நியமித்திருப்பதையும் அறிவித்து, இவ்விருவரும் பரம கவிகளாலே "செஞ்சொல்லாலெடுத்த தெய்வநன்மாலையாக" இருக்கு இவற்றைத் திவ்யகானத்திலே சேர்த்துப்பாடுவோம் வாரீரென்று கூட்டிக்கொண்டு (ஸ்ரீவேதவ்யாஸபகவான் வேதங்களை உதாத்த அநுதாத்த ஸ்வரித ப்ரசய யுக்தங்களாக உச்சரிக்கலாம்படி செய்தாற்போல) இவ்வப்ரபந்தங்களைத் திவ்யமான கானங்களிலேயடைத்து, இயலும் இசையுமாக்கி அவர்களுக்குச் சிக்ஷை சொல்லிப் பாடுவித்தருள; அனந்தரம் அருளிச்செயல்கள் ப்ரவர்த்தமாயின.

---

† ஸ்ரீமந்நாதமுனிகளுடைய சிஷ்யர்களில் ஒருவரான, திருக்கண்ணமங்கை யாண்டானுடைய வைபவத்தை இங்கே ஸ்ரீபட்டர்சுத்தியருக்குத் திருவாய்மலர்ந்தபடி யெங்ஙனேயெனில்:—

ப்ரபன்னாம்ருதம்:—

தனியன்:—

"ஸௌரிர்வைகுண்டலோகாத்த ஹரிஷ்மந்த்க்ருஷ்ணபத்ரோஜந்தவா- ஷேத்ரே லக்ஷ்மீ பதிர் திவி திலிகா நாதமுன்யாப்ப்யாடய: ஸத்குணரூபம் ப்ரபத்தே: ஸ்பஷ்ட அதநிஷ்டம் ஸாவதேஷ்ஷுவிருத்யஷாஸ்யம் - மத்வா ஸ்வத்வாப யாக்ஷர்ஷ்ணஹதுரூபதே நிர்ஹேதுபுரீய நாமத:" என்றபடி.

திருக்கண்ணமங்கையில் வாழ்க்கைப்பட்டிருந்த ஸ்ரீமந் நாதமுனிகளுடைய உடன்பிறந்தாளுக்குப் புத்ரராக, ப்ரபவ வருஷம் ஆவணிமாஸம் திருவோண நக்ஷத்ரத்தி லவதரித்து, லக்ஷ்மீநாத தாஸரென்கிற திருநாமம்பெற்று யௌவனம் வந்தவாறே திருத்தல் ஸாமிநதனை ஸேவித்து, அந்தக் கிராமத்துக் கருகிய பொக்குதி "தனக்காளுமேகனுண்டைவீச" வென்கிறபடியே, ஸம்பத்தில் குறைவற்றவராயிருந்து ஆண்டு கொண்டிருந்த காரணத்தால் திருக்கண்ணமங்கையாண்டான் என்கிற திருநாமத்தையும்பெற்று ஸர்வசாஸ்த்ர ஸம்பந்ந ஆசார ஸம்பிஷத்ஞானமுண்ணராய்ப்ப்ரகாசித்துத் தமது மாதுலராகிய ஸ்ரீமந் நாதமுனிகளுடைய திருவடிகளையாச்ரயித்து, ஜ்ஞாநபக்தி வைராக்யாதி ஸத்குணபரிபூர்ணராய், த்ராவிடாம்நாய நிரதராய், ஸ்ரீ மதுரகவிகளைப்போலே வேதார்த்த திவ்யபாரத்தை யாய் பஞ்சமோபாய

அனந்தரம், அந்த ராஜ்யத்திற்கு அரசனாயிருந்த சோழன் வாசலிலே தேவகானம் பாடுவா ளொருத்தியும் மனுஷ்யகானம் பாடுவா ளொருத்தியுமான இரண்டு வாரஸ்த்ரீகள் தங்களில் தேவகான முத்க்ருஷ்டமென்று ஒருத்தி சொல்ல; அஃதில்லை, மனுஷ்ய கானமே உத்க்ருஷ்டமென்று மற்றொருத்தி தகைய; அதனால் விவாதமதிகரித்து, இராஜனிடத்திற்போக; அவனும் அனேகவித்வான்களைச் சேர்த்து மத்யத்தில் அவ்விருவரையும் பாடுவித்து, மனுஷ்யகானம் பண்ணினவளை மாத்திரம் ஸன்மானிக்க; முன்னவள் மிகவும் மனம்சோர்ந்து, தான் பாடுகிற பாட்டையும் கானத்தையும் தேவர்களறியுமத்தனையே யல்லது மனுஷ்யர்களறிந்து அன்றென்றெண்ணி சன்னிதிகள் தோறும் புக்குப் பாடிக்கொண்டு வந்து மன்னனார் கோயிலில் இவர் முன்னே பாட; இவரதைக்கேட்டுகந்து கொண்டாடி, அவளுக்கு மன்னனாருடைய தீர்த்தப்ரஸாதமும் திருமாலை திருப்பரிவட்டமும் ப்ரஸாதிப்பித்தருள; அவளிவரடியில் தண்டன் ஸமர்ப்பித்து விடைகொண்டு அரசனிடம்போய் நான்பாடுகிற தேவகானத்தை யறிவாரொருவர் வீரநாராயணபுரத்தில் மன்னனார் கோயிலி லிருக்கும் ஸ்ரீமந் நாதமுனிகளென்கிற பெரியவரே தவிர உலகில் மற்றொருவரில்லையென்றுரைக்க; அரசன் உடனே இவரை எழுந்தருள வேண்டுமென்றழைத்துவரவிட; இவர் திருவாய்மொழிமுதலான திவ்ய ப்ரபந்தங்களைத் திவ்ய கானத்திலேயிட்ட திருப்பணையும் அவற்றின் வைபவத்தையும் இராஜகோஷ்டியில் வெளியிக்கவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி யிருந்தாராகையாலே, உடனேயெழுந்தருளி இராஜனால்பூஜிக்கப்பட்டுத் திவ்யாஸனத்தின்மீதெழுந்தருளியிருக்க; அவன் அதிக வாதரத்துடனே இவருக்குத் தண்டனிட்டு, இவள் பாடுகிற தேவகானத்தைத் தேவரீர் அறிவீரோவென்று கேட்டவளவில்; இவர் மனுஷ்யகானம் பாடுகிறவளையும் தேவகானம் பாடுகிறவளையும் பாடச்செய்து கேட்டருளி அரசனைப்பார்த்து, அவள் பாடுகிற மனுஷ்யகானம் உமக்குத் தெரியும் இவள் பாடுகிற தேவகானம் எனக்குத் தெரியுமென்ன; அரசன் தேவரீரதி லிரண்டுமிடம் காண்குறியும்படி யெங்ஙனே யென்ன? இவர்

---

நிஷ்டையைப்பற்றி மோக்ஷத்தில் ஆசக்தியுடையவராய், ஸ்ரீ பக்தாங்க்ரி ரேணு பட்டர்களைப்போலே திருக்கண்ணமங்கை பக்தவத்ஸலப் பெருமான் திருவடிகளில் அனவரத அனிசாம கைங்கர்யநிரதராய், அவரதபகவத் தாஸ்யாமிகராய், ஸாமகவோகார்த்தம் நெஞ்சில் தேங்கி, ஸம்ஸாரஸம்பந்தமறித்யாக் க்ருதாத்யவஸாயத்தால் இனத்திவர்த்தமான கைங்கர்யப்ரவீணராயிருக்கையில் ஒருநாளையில், இரண்டு சூத்ரர்கள் கட்கபாணிகளாய்த் தாங்கள் வளர்த்துக் கொண்டிருந்த நாய்களைக்கூட்டிக் கொண்டு ஒருகார்யமாய்ப்போய்வருகையில், பக்தவத்ஸலன் சந்நிதிவெளிப் புறத்தில், தங்கள் பாதரக்ஷைகளை விட்டு அவற்றிற்கு நாய்களைக் காவல் வைத்துவிட்டுச் சன்னிதிக்குள்போய்ப் பக்தவத்ஸலனைச் சேவித்து மீளுந் தருவாயில், அந்த நாய்களிலொன்று, மற்றொருவனின் யஜமானனுடைய பாதரக்ஷையைக் கடிக்க, அதற்குக் கோபமுண்டாய்ச்சீறி மேல்விழ, ஒன்றைக் கொன்று கலைப்பட்டுக் கடித்துக் கொண்டதால் ஒருநாய்சாக; அதை யுடையவன்கொன்றநாயையடிக்க, அதுவும்சாக; அதையுடையவன் இவன் மேல்விழ, இருவருஞ்சீறி, அன்யோன்ய கட்காகட்டிப்ரகாரத்தால் (சுந் தோப சுந்தாளிருவரும் ஒருமாளுறபோல) வெட்டிக்கொண்டு மாய்ந்து விட, அவ்விடத்தில் க்ராமவாசிகள் சூழ்ந்து வேடிக்கைப் பார்த்திருந்தார்கள். அப்போது அவ்வழியாய்ப் பல்லக்கிலேறி வந்துகொண்டிருந்த திருக்கண்ண மங்கையாண்டான், ஸ்ரீ பாதத்தாங்கிகளை யழைத்து நிஷ்காரணமாய் இவ் விடத்திலிப்படி பெருந்திரண்டாகக் காரணமென்னென்று அறிந்து வர விட, அவன் போய்விசாரித்து செய்திகளை விண்ணப்பஞ்செய்ய; அதைக் கேட்டு ஆச்சர்யப்பட்டுச் சற்றுநேரம் தீர்க்கமா யாலோசித்து சந்ரதாப க்ருதிகளாய், மனுஷ்யசேவா வ்ருத்தி செய்து ஜீவிப்பவர்களாய்த் தர்ம தர்ம விவேக சூன்யர்களாயிருக்கும் இவ்விருவர்களுக்குத் தொண்டுபட்டதாய் களுக்காக வளர்த்த வாதிவைய்யத்தா லிவர்களு மடிந்தார்களாகில் அவ் யாஜமானவாய், ஆசிவாரத்தவேதியாய், அபிதக்ருபாஷியாய், அவிஷ்தர்ம தர்மமாம விவேகியாய், ஸர்வக்ஞனாய், ஸர்வசக்தனாய், ஸமஸ்தக்ருதஜ்ஞ னாய், ஸர்வேஸ்வரனாய், ஸகலஜகன்மாதா புருஷகார பூதையான பெரிய பிராட்டிக்குத் தனிக்கேள்வனாய், ஸர்வலோக ரக்ஷகனாயிருக்கிற ஸ்ரீமந் நாராயணனுக்கு இவ்வனர்த்தொண்டுபட்டால் அவனுடைய க்ருபை யெவ்வள வாயிருக்குமோ வென்று, பயத்தராய்த் தண்டிகையை விட்டுத் தொப்பென நிலத்தில் குதித்து அனுஷ்டானாதி ஸமஸ்த கர்மங்களையும் ஸவாஸனமாக விட்டுத் திகம்பரராய், ஜாநுபாணிகளால் தவழ்ந்து கொண்டு பக்தவத்ஸலன் சந்நிதிக்குட்போய், க்ராமஸிம்ஹம்போலே படுத் திருந்து, நித்யமும் க்ராமத்துக்கு வெளிப்புறத்திற்போய் ஜலத்தைக் கா லாற்பருகி, உள்ளாழுக்கைக்கழுவி வெளியிற்பரிமலிட்டு, பசுவைப்போலே ஜலத்திற்படிந்து நீராடிக்கரையேறித் தெளகார்திகளின்றிக்கே தவழ்ந்து கொண்டு சந்நிதிக்குள்ளேவந்து பக்தவத்ஸலனுக்குத் தண்டனமர்ப்பித்து திருவடிக்கீழ்த்தடியிலே யிருந்து (பக்தவத்ஸலன் இவர்விஷயத்தில் மஹா

ஜாருவு ஸ்தானங்களைக் கொண்டு வாசிசெய்து, மேசர் ஒத்துச் சொல்லி, அவ்வோசையைக் கேட்டு அது இவ்வளவு நிறையுள்ளது, இது இவ்வளவு நிறையுள்ளதென்று ஆஸ்ரயின்றி அவையுடைய நிறையை அருளிச்செய்ய; அவற்றை அரசனும் தனித்தனியே நிறுத்துச் சோதித்து அவற்றின் முந்தின நிறையாவது ஏற்றக் குறைவில்லா திருந்தபடியைக் கண்டு ஆச்சர்யப்பட்டு இவருடைய ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு பஹுமானங்களைச் சமர்ப்பிக்கவும்; இவர் சதுர்முக-பசுபதி- ஜந்மச ப்ரப்ருதி பதங்களையும் நிராகரித்திருக்கும் நிஸ்ப்ருஹராகையாலே அவற்றை வேண்டாவென்று அரசனையாசிர்வதித்து மீண்டு வீரநாராயணபுரத்துக் கெழுந்தருளி மன்னனார் திருவடிகளில் கைங்கர்ய நிரதராய் வாழ்ந்துகொண்டிருக்குங்காலத்திலேயே இவர் ஸ்ரீபாதத்தில் ஆஸ்ரயித்தவர்களாய் "ப்ராம ணாய் விஜ்ஞாய வாசை: கர்மஜ்ஞாநாங் - குர்வர்த்தந்தாரயேத் யஸ்து வதீப்யேவ தேஹாவஸாநாத்" என்கிறபடி சரீர- அர்த்த காம்ய-சித்தவிருத்தவா இங்கப்போதும் ஆசார்யனை விடாதவைக் குத் கருணாசிந்துர்களான உய்யக்கொண்டார் - குருகைகாவலப்பன் - நம்பிகருணாகரதாசர் - ஏறுதிருவுடையார் - வானமாமலை

யீஸ்வரி நித்யப்படி அர்ச்சகரையேவி இவருக்குத் திருமஞ்சனிலேத்தாய்ய ளாதமறுப்ப) அவன் ஸ்வீகரித்த அக்கா பதார்த்தங்களையேய ஸ்வீகரித்து, நிச்சலிக்கராய் மௌனியா யிருந்துவிட்டார். இப்படியிருக்கையில், ஆகா ரமாவசியில் சிலர் இவரைப்பார்த்து ஐயோ! மஹாபுத் திப்பன்னருஞ் சதாசிஷ்டரும் விலக்ஷண வைஷ்ணவோத்தமருமாயிருந்த இவர் ஏது இப்படி மாணிதோ வென்றதுதப்பாருக்கு, சிலர் ஐயோ! இவருடைய ஸர்வஜ்ஞபம்ஸ வைம்மிருந்தபடி இதுவோவென்று சொல்லாரும், சிலர் இவருக்கிப்படி நேர்ந்ததைக் ஜனனமரணாதிக்க வேறுமாகிகளுக்கு நியமான இந்த ஜன்மத்துக்குக் குலாலனைப்போலே நிமித்தகாரணமும் தர்மப்ரேதைப்போலே காரியமுண்டு இருப்பான் என்று கூறுவாரும், சிலர் இவருடைய வ்யாபாரத்தை நன்குகப் பார்த்து இவருக்கு ஜ்ஞானபக்தி வைராக்யாதிகள் நிறைவுண்டை கொண்டுவிட்டமையால் ஸர்வபரித்யாகம்பண்ணியிருக்கிறாரென்று சொல்வாரும், சிலர் இவரை ஆச்சர்யனிலேக்கலாகாது. இவர் இதரவ்யாபாரங்களைவிட்டு பகவத் வத்ஸலனையே அநிவார்யமடைந்து அவனுடைய தீர்த்தப்ரஸாதங்களுக்கே எதிர்பார்த்துக்கொண்டு உசுருடைய ஸ்வரூபத்தை யொழித்தும்



தேய்வாரயகதுண்டான் - உருப்பட்டி ராச்சானிப்பிள்ளை - சொக்கத்து தாழ்வான் - பிள்ளை கருணாகரதாஸர் - யேளை பரத்தாழ்வான் - இறையகத் தாழ்வான் என்கிற பதின்மரும் "அஷ்டாங்க்யயோக யாஸுஜத்யம் அதிதேர விர யமதேமயம் - மக்தாரத்தரம்பயாத காம் வேதஸாரம்ஸநாதநம்" என்கிறபடி மந்த்ரரத்நமென்று சொல்லித்தும் சொல்லப்படுகிற த்வயார்த்தத்தை ப்ரஸாதித்துத் திருவாய்மொழிமுதலிய திவ்யப்ரபந்தங்களை யோதுவித்து, வேத சாஸ்த்ரங்களையுபதேசிப்பித்து, ஸகலப்ரபஞ்சாதாரத்தமாய்ச் சகலஜகத் காரணபூதமான ஸ்ரீ புருஷோத்தமனயத்தையும் நியாஸத்வத்தையும் அருளிச்செய்து, ஆழ்வாருடைய திவ்யகோலத் திருவுருவைத் தியானித்துக்கொண்டு யோகத்திலெழுந்தருளி யிருந்தார்.

இப்படியிருக்குமநாளையில், அரசன் இவருடைய யோகவைபவத்தைக் கேட்டு, அங்கேறவந்து, மன்னனாரைச் சேவித்துத் தானும் ஸந்நிகருமாகவந்து, இவர் யோகத்திலிருக்கும்படியைக் கண்டு ஆச்சர்யமடைந்து, மீண்டுபோகிறவளவில், இவர் "இருளைட் மன்னனைக் காணிற் றிருமாலைக் கண்டேனே" என்கிறபடியே அவர்களை க்ருஷ்ணனும் கோபிமார்களுமாக வெண்ணி

கொண்டு மௌனமாயிருக்கையால் ஏதோவில அற்புதங்களை இவராக்காண விருக்கிறோ மென்பாரும், சிலர் ஒன்றுஞ் சொல்லாமல் இவர் திருவடிகளை நமக்கெல்லாம் உத்தாரகமென்று நினைத்துத் தண்டனிட்டுத் திவ்யாகமாக விருந்தார்கள். இவ்வண்ணம் சிலகாலங் கழிந்தபோது, இவருடைய ப்ரபாவம் தேசமெங்கும் பெருகி அவ்வவ் விடத்திருந்தும் அநேகர் வந்து தர்சித்து க்ருதார்த்தராயினர்கள்.

அநந்தரம், பெருமாள் திருக்கண்ணமங்கை ஆண்டானை ஒருநாளளவில் நோக்கி உமக்கு நாளைய தினம் நம்முடைய மேல்வீடு தரப்போகிறோமென்று திருவாய்மலர்ந்தருளி அன்றிராத்திரியிலேதானே அந்தத் திவ்யதேசத்திலுள்ள அநேக ஸத்புருஷர்களுக்கு ஸ்வப்நங்காட்டி, நம்முடைய அந்தரங்க பக்தரான திருக்கண்ணமங்கையாண்டானுக்கு நாளைய தினம் அபிஜித் முஹூர்த்தத்தில் மோக்ஷ ஸாம்ராஜ்யம் க்ருபைசெய்யப் போகிறோமாகையால் நீங்களெல்லாரும் வந்துசேவித்து க்ருதார்த்தராக வேண்டுமென்று வாத்ஸல்யத்தாலே நியமித்தருள, மறுநாள் ஸூர்யோதயத்துக்கு எல்லாரும் ஸந்தோஷத்துடன் ஸந்நிதியில் வந்து சேர்ந்திருந்தார்கள். அப்போது ஆண்டானும் பூர்வம்போலே தேஜோரூபராய் வந்து ஸந்நிதியைப் ப்ரதக்ஷிணஞ்செய்து த்வார பாலகர்களுக்குத் தண்டஸமர்ப்பித்து

அவர்கள் பின்னை கங்கைகொண்ட சோழபுரத்தேற எழுந்தரு
ளாநிற்க; அதுகேட்டு உய்யக்கொண்டார் குருகைகாவலப்பன்
முதலிட்ட முதலிகள் உடைய பின்தொடர்ந்து எழுந்தருளி, இவரைக்
கங்கைகொண்ட சோழபுரத்திலே கண்டு தேவரீர் இப்படிச் செய்யலாகு
மோவென்று விண்ணப்பஞ்செய்ய; அவர்களை க்ருஷ்ணனும்
கோபிமார்களுமாக நினைத்து வந்தேனென் றருளிச்செய்து மீள
எழுந்தருளினார். பின்னையுஞ் சிலநாள் கழிந்தவாறே, ஒருநாளை
யில் அரசன்வந்து மன்னனாரைச் சேவித்து மீண்டு போகையில்
தன்னுடைய சாமந்தன் தலையை வடிவிட்டு ஆனைக் கழுத்திலே
ஏற, அதை இவர்கண்டு ஸர்வேஶ்வரன் ப்ரஹ்மாதி தேவர்கள்
தலையிலே அடியிட்டுப் பெரிய திருவடி மேல்கொள்ளும்படி இதுவா
காதோவென்று மோஹித்தாரென்பதும் பாவித்தும். அனந்
தரம் குருகைகாவலப்பனுக்கு யோகரஹஸ்யத்தை யருளிச்செய்து,

---

உள்ளே ப்ரவேசித்து ஸ்வாமி திருவடிகளை த்யானித்துச் சமீபத்திலே போய்
"அதஶ தசுருத்தம்" என்றும் "அவிக்ருதோச்சாய" என்றுமுச்சரித்தார்; அவ்வே
ளையில், சந்நிதிகளிலெல்லாரும் அவ்வுச்சாரணையைக் கேட்டுப் பரமாச்சர்
யமாய் வாய்திறவாமல் மௌனியாயிருந்தவர் இப்படி எல்லாருங்கேட்கும்படித்
திருவாய் மலர்ந்ததைப் பற்றி அற்புதமடைந்து இமைகொட்டாமல் இவ
ரையும் பெருமானையுமே பார்த்திருந்தார்கள்; அப்போது பக்தவத்ஸலன்
திருவடிகளில் மறைந்தானை யொளியோடு கூடிய ஒருமின்னல் தோன்றாக,
அதைக்கண்டு எல்லோர்க்கும் ஒருவருக்கும் கூடாமையாய்க் கண்களை மூடிக்
கொண்டு சிரவின்மேல் கைகளைக் குவித்துக்கொண்டு பக்தவத்ஸலா! பக்த
வத்ஸலா!! வென்று அத்தத்தியாய பெருங்கூச்சலிட்டார்கள்; அவ்வளவி
லே பக்தவத்ஸலன் ஆண்டானைத் திருமேனியோடும் மேல்வீட்டிலெழுப்பி
யருளிப் பழையபடியிருந்தார்; பின்பு அவர் வரும் கண்களைத் திறந்து
பார்த்து ஆண்டான் மறைந்ததைக் கண்டு பக்தவத்ஸலன் திருவடிகளே
அத்யந்த ஆச்சர்யத்துடன் பற்றி வாழ்ந்திருந்தார்களென்றும், கண்ணன் என்று
இருந்தே தாட்டிக்கொடுத்த சரமச்லோகத்தின் அர்த்தத்தின்படிக்குத் தானே
பிரத்யக்ஷமாய் பக்தவத்ஸலன் இன்று திருக்கண்ணமங்கையில் ஸர்வ
ருக்கும் ஸேவைசாதித்துக்கொண்டிருப்பது இவர் மூலமாக ப்ரகாசிப்பித்தாரென்
றும் பெரியோர் கூறியருளிச்செய்தார்.

திருக்கண்ணமங்கையாண்டான் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.



உய்யக்கொண்டாரை யழைத்து நீரும் யோகரஹஸ்யத்தை அப்
யஸியுமென்ன; அவர் பிணங் கிடக்க, மணம்புணரலாமோ? இந்த
சரீராவஸாநதசையிலே அநுபவிக்கவமையுமென்று விண்ணப்பஞ்
செய்ய; ஆகில் நீர் ஶாஸ்த்ரத்தையும் திருவாய்மொழி முதலான
திவ்யப்ரபந்தங்களையும் ப்ரவர்த்திப்பியுமென் றருளிச்செய்து, தம்
முடைய புத்ரராகிய ஈச்வரமுனிகளைப் பார்த்து, உமக்கொரு
குமாரருண்டாகப் போகிறார், அவருக்கு யமுனைத்துறைவரென்று
திருநாமஞ் சாற்றுமென்று அருளிச்செய்து, உய்யக்கொண்டாரை
அழைத்து ஆழ்வார் தமக்கு ப்ரஸாதித்தருளின பவிஷ்யதாசார்ய
விக்ரஹத்தைக் காட்டிக்கொடுத்து இதை ஈச்வரமுனிகள் குமார
ருக்கு நாம் விரும்பின விஷயமென்று சொல்லித் தஞ்சமாகக்
காட்டிக்கொடுமென் றருளிச்செய்து, அனந்தரம் குருகைகாவ
லப்பனையும் மற்றுமுள்ளவர்களுக்கு நாம் சொன்ன த்வய தாத்பர்ய
யோகரஹஸ்யார்த்த விசேஷங்களை யமுனைத்துறைவருக் குப
தேசியுங்கோளென்று நியமித்தருளி, முன்போலவே யோகத்தி
லிருந்து அனந்தர மொருநாளில் அரசன் வைரிகளை வேட்
டைக்குவந்து மீண்டுபோகா நிற்கச்செய்தே, இவருடைய பெண்
பிள்ளைகள்வந்து ஐயா! நம்மகத்திலே ஒருகுரங்கும் இரண்டு
வில்லிகளும் ஒருபெண்பிள்ளையுமாக வந்து நாதமுனிகளெங்கே
யென்று தேடிப்போனார்களென்ன; அப்பொழுதே இவர் "அத்
ரதஃ ப்ரயயௌ ராமஸ் ஸீதாமத்ய ஸுமத்யமா ப்ருஷ்டதஸ்து
தநுஷ்பாணிர் லக்ஷ்மணோநுஜகாம ஹ" என்று சொல்லப்பட்ட
பெருமாளும் பிராட்டியும் பின்சென்ற வில்லியான இளைய பெரு
மாளும் ப்ரயோஜனாந்தர கிரமேணா கஷ்டத்தைக்கண்டு பெரு
மாளுகந்து ஸஹபோஜன போக்யமாக்கிக்கொண்ட ஐந்த்ரவ்யா
கரண பண்டிதனுமாகுமென்று திருவுள்ளம்பற்றிப் பின்தொடர்ந்
தெழுந்தருளி, வழியிலெதிரில் சந்தித்தவர்களைப் பார்த்து இவ்
வண்ணமாய்ப் போகின்றவர்களைக் கண்டீரோவென்று கேட்க; அவர்
களும் போகிறார் போகிறார்களென்று சொல்ல; கடுநடையிட்டு
தொடர்ந்தா ரெழுந்தருளிக் கங்கைகொண்ட சோழபுரத்தின் திரு
வாசலளவாக வெழுந்தருளி அங்குள்ளவர்களையும் பார்த்து இன்ன
படி போகின்றவர்களைக் கண்டீர்களோ வென்றுகேட்க; அவர்கள்
கண்டிலோமென்ன; இவர் ஏங்கி யடித்துக்கொண்டு விழுந்து
மோஹித்து, அதுவே ஹேதுவாகப் "பரந்தாமம் வைகுண்டம் லோகம்

நித்யாநந்தம் அநுபவத்தும் — தத்ர ஸ்வாநுபூதிர் நிம்மலமிதி [illegible] வேதஸம்பாதம் — ஸர்வேஷாம் ஹ்ருதயங்கமம் — ஸர்வவேதஸமம் [illegible] — அப்ரக்ருதமபாதிக்ய [illegible] [illegible] — ஏகாந்தி நம்மதா ப்ரஹ்மத்யாநி [illegible] — தேஷாம் தத்பர மம்ஸ்தாநம் யுக்தவை [illegible] என்கிறபடியே [illegible] ஆக்கைப்பட்டதாயும் — [illegible] — வேதமா மாயும் — ஆனந்தமயமாயும் — பரிசுத்தமாயும் — அப்ராக்ருதமாயும் — [illegible] மாயும் — அடைத்தாரை [illegible] தாயும் — ஸர்வகாலமும் பகவத்பாராயணமென்னும் யோகத்திலே அக்ரேசர் களான நித்ய ஸூரிகளால் ஸாமகானஞ் செய்யப்பெற்றதாயும் —

குறிப்பு:—திருமங்கையாழ்வாரால் நடத்தப்பட்டுப் பிறகு கலிதோ [illegible] குந்ததால் நின்றுபோயிருந்த நம்மாழ்வார் அத்யயநோத்ஸவத்தை முன்புபோலே நடப்பெருமாளும் அத்யயநோத்ஸவத்திலே ஆழ்வார் [illegible] வேறுவெழுந்தருளும்படிக்கும் வேதபாராயணத்தோடே திருவாய்மொழி அநுஸந்தாநம் கேட்கும்படி பண்ணி; பெரியபெருமாள் திருவாய்மொழிக்கு வேதஸாம்யத்தை அநுக்ரஹித்தபடியாலே, வேதங்களுக்கு உபக்ரமோத்ஸவம் [illegible] முன்புசாதுர்ந்தபோலே (திராவிடப்ரபந்தமொழிதேசிகம்) என்று [illegible] [illegible] அத்யயநமான திருவாய்மொழிக்கும் திருக்கார்த்திகை திவ்ய மஹோத்ஸவத்திலே உத்ஸவாரம்பமென்றும், மார்கழிமாதத்திலே அத்யயநோத்ஸவத்திலே உபக்ரமகாலமென்றும், [illegible] திருவாய்மொழியைத் திருக்கார்த்திகை திவ்ய மஹோத்ஸவத்திலே உத் [illegible] [illegible] அத்யயநோத்ஸவத்திலே பெரிய பெருமாள் கேட்டருளுமவையும் ஸ்ரீவைஷ்ணவர்கள் [illegible] வாயினால் மொழியுமாறு [illegible]; பெரியபெருமாள் ஆழ்வாருக்கு ப்ரதிவருஷம் [illegible] அன்று திருக் கார்த்திகை திவ்ய மஹோத்ஸவத்திலே பெரியபெருமாள் [illegible] கொண்ட [illegible] திருமங்கை மன்னன் திரு மீடத்திலே [illegible] தம்மையும் [illegible] திரு படி பண்ணினபடியாலே, ப்ரதிவர்ஷம் திருக்கார்த்திகை திவ்ய மஹோத்ஸவத்திலே பெரியபெருமாள் [illegible] என்னையும் [illegible] வேறுடைத்தை ஆழ்வார்களுக்கெல்லாம் [illegible] நம்மாழ்வார் திரு மீடத்திலே [illegible] அந்தவேதத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்கள் தங்கள் திருமீடத்திலே [illegible] வேதங்களுக்கு [illegible] இதிஹாஸ புராணங்களும் அங்கோபாங்[illegible] [illegible] யிருக்குமாபோலே, ஆழ்வார் அருளிச்செய்த [illegible] ப்ரபந்தங்களும்



ஸர்வபஸப்ரதனான ஸ்ரீயபதியினுடைய சேவையைச் சதாதந்து கொண்டிருப்பதுமான "மீளாமெகாடுக்கிலும் போகவொட்டாத" அடியார் நிலவுகின்ற வைகுந்தமாகக்கையைத் தமது முன்னூற்று முப்பதாவது திருநக்ஷத்ரமான தாதுசம்வத்ஸரம் மாசிமாஸம் சுக்லபக்ஷம் ஏகாதசியில் வைகுந்தத் தமரு முனிவரும் வந்தெதிர்கொள்ள ப்ராபித்தருளினார்.

(ஆஹா! பெருமானைக்கலந்துபிரிந்தபிராட்டிபடத் துயரசந்தரித் திருந்தாராகிலும் இவர்கண்டுகந்து காண்பதற்குமுன்னே, காணப்

நாலுவேத ஸ்தாநேயாகவும்; திருமங்கைமன்னன் அருளிச்செய்த ஆறு ப்ரபந்தங்களும் மற்றையாழ்வார்களும் ஆண்டாளும் அருளிச்செய்த ப்ரபந்தங்களும் அங்கோபாங்கங்களாகவும்; திருவாய்மொழிதானும் த்வயார்த்த விவரணமென்றும்; திருப்பல்லாண்டுமுதல் பெரியாழ்வார் திருமொழி திருப்பாவை, நாச்சியார்திருமொழி, பெருமாள் திருமொழி, திருச்சந்த விருத்தம், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிபிரான் ஆக இப்ரபந்தங்கள் ப்ராயேண ப்ரணவார்த்த ப்ரகாசகமாகையாலே முதலாயிரமென்றும்; கண்ணிநுண் சிறுத்தாம்பு நமஸ்ஸப்தார்த்த விவரணமென்றும்; திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் முதலாழ்வார்க ளருளிச்செய்த திருவந்தாதிமூன்றும், நான்முகன் திருவந்தாதி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரியதிருமடல் மந்த்ரவிசேஷவிவரணமென்றும்; இவற்றில் திருவந்தாதி மூன்றுமுதலாக பெரிய திருமடலீறாக ஸப்தரஸப்ரதாநமா யிருக்கையாலே இயற்பா என்றும்; இப்படி இருபத்து மூன்று ப்ரபந்தங்களும் திருமந்த்ரார்த்த விவரணமென்றும்; இப்ரபந்தங்களிலே ஆழ்வார்க ளநுபவத்துக்கு விஷயமாய் எம்பெருமான் விரும்பி வர்த்திக்கிற ஸ்தலங்கள் பரமபதம் திருப்பாற்கடல் தொடக்கமாக நூற்றெட்டென்றும்; திருவாய்மொழியொழிந்த ப்ரபந்தங்கள், திருப்பல்லாண்டுமுதலாக திருநெடுந்தாண்டக மளவாக, அத்யயநோத்ஸவத்துக்கு முன்புபத்துநாளாகப்பெரியபெருமாள்கேட்டருளும்படிக்கும்; திருவந்தாதி முதலாக பெரியதிருமடலீறாக, அத்யயநோத்ஸவாநந்தரம் மற்றைநாள் கேட்டருளும்படிக்கும், ஆழ்வார்கள் பதின்மர், ஆண்டாள், ஸ்ரீமதுரகவிகள் ஆக பன்னிரண்டு திருநாமங்களும் அருளிச்செய்த இருபத்துநான்கு ப்ரபந்தங்களில் பாட்டு நாலாயிரமென்றும்; பிராம்ஹணனுக்கு வேத வேதாங்கங்கள் இதிஹாஸபுராணங்கள் அதிகரிக்க வேண்டுமாபோலே ப்ரபந்நரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இவ்வப்ரபந்தங்கள் அதிகரிக்கவேணு மென்றும்; இவற்றில், திருப்பாவை திருப்பள்ளியெழுச்சி யப்பெருமாளைத் செய

பெருத இழவு இருந்திக்கொண்டுபோக வெழுந்தருளினனென்ப தொருவிசேஷமிறே). இச்செய்தியை உய்யக்கொண்டார் தொடக்க மான சிஷ்யர்கள் கேட்டு வ்யாகுலப்பட்டு அங்கேறப்போய் இவ ருடைய வ்யவசாய விக்ரஹத்தைச் சேவித்துத் தங்கள் கண்ணீரும் கொந்தளக்கத் தேக்கிக்கொண்டு சோகார்த்தராய்க்கிடந்து நடித்து, ஒருவாறு தேறி, ஈச்வர முனிகள் திருக்கையாலே ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரமடங்கச் சரமகைங்கர்யங்களைச்செய்வித்துத் திருப்பள்ளி படுத்திப் பின்பு வீரநாராயணபுரத்திற் கெழுந்தருளி மற்றுஞ் செய்ய வேண்டிய க்ருத்யங்களை யெல்லாம் ஈச்வரமுனிகளைக் கொண்டு செய்வித்தார்கள். ஸ்ரீமந் நாதமுனிகள் எழுந்தருளி யிருந்த யோகஸ்தானத் திருமேனி குருகைக் காவலப்பன் எழுந் தருளியிருந்தார்.

திருநக்ஷத்ரத்தனியன்.

த்ரைபிஷ்டபாஸேவ்யத்வமதோதநாதம் நாதமுநிம்ப்ரபத்யே
யஸ்ஸ்ரீமதோ ராமாநுஜஸ்யாப்ய மகிலம் தமோபஹ:

ஸ்ரீமந்நாதமுனிகள் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

(1) ஸ்ரீமந்நாதமுனிகள் திருவவதார வருஷம் - கலி - க்குச்சரியான ப்ரமாதி வருஷம்.

திருப்பள்ளியுணர்த்துவதாகையாலே ப்ராதக்காலத்திலே விநியோகம் அநுஸந்தேயமென்றும், கட்டியோதும் ப்ரபந்தாநுஸந்தாநத்துக்கு முன்பு மங்களாசாஸநமான திருப்பல்லாண்டு அநுஸந்தேயமென்றும், திருவாய்மொழி அநுஸந்தாநத்துக்கு பூர்வோத்தரங்களிலே ஆழ்வார் விஷயமான கண்ணிநுண்சிறுத்தாம்பு அநுஸந்தேயமென்றும்; இப்படி ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திலே அநேக ஸ்ரீவைஷ்ணவ தர்மங்களை ஸ்ரீமந்நாதமுனிகள் நியமித்த விஷயமும் அறியத்தக்கது.

# ஸ்ரீஉய்யக்கொண்டார் வைபவம்.

தனியன்.

நமபங்கஜநேத்ராய நாதஸ்ரீபாதபங்கஜே
ந்யஸ்தஸர்வபராயாஸ்மத் குலநாதாய தீமதே.

ஸ்ரீஉய்யக்கொண்டார் ஸ்வாசார்யரான ஸ்ரீமந் நாதமுனிக ளால் ஆக்ஞாபிக்கப் பட்டபடியே அவர் ஸ்ரீபாதத்தில் ஆச்ரயித் திருந்த முதலிகளைக் கூட்டிக்கொண்டு திருவாய்மொழி தொடக்க மான திவ்ய ப்ரபந்தங்களையும் தர்சன சாஸ்த்ரார்த்தங்களையும் அருளிச்செய்து ஆதரித்து வருகையில், மணக்கால் நம்பி - திரு வல்லிக்கேணி பான்பெருமாளரையர் - செட்டைப்பூசிச் சென் டலங்கார தாஸர் - புண்டரீகாக்ஷதாசர் - கோமடம் திருவிண்ணகரப் பன் - உருப்பெருமாள்கந்தை யென்கிற இவ்வாறு முதலிகளும் வந்து ஆச்ரயித்துத், தர்சன சாஸ்த்ரார்த்தங்களை யதிகரித்துப் போந்தார்கள்; இவர்களில், மணக்கால்நம்பி யென்பவர் உய்யக் கொண்டார் திருவடிகளிலே "அஹம்ஸர்வம் கரிஷ்யாமி" என்கிற இளைய பெருமாளைப்போலே ஸர்வவித கைங்கர்யங்களையுஞ்செய்து கொண்டிருக்கையில் உய்யக்கொண்டாருடைய திருத்தேவிகளான ஆண்டாள் திருநாட்டுக்கெழுந்தருள; (வசிஷ்ட்ருடைய வன் மடைப்பள்ளியில் உத்யோகத்தை யமருமாபோலே) இவ ரும் கைங்கர்யத்தி லபிருசியுடையவ ராகையாலே திருமாளிகை யின் கைங்கர்யமெல்லாம் தமக்கே பரமாக நடத்திக் கொண்டுபோ கச்செய்தே, ஒருநாளில் உய்யக்கொண்டாருடைய பெண்பிள்ளைக ளிருவரையும் தீர்த்தமாடச்செய் தழைத்துக்கொண்டுவர; வழியி லே குறுக்கான வாய்க்கால் சேறாயிருக்கக்கண்டு அவர்கள் திகைத் திருக்கத் தாம் அங்கேபடியாய்க்கிடந்து அவர்களைத் தமது முது கின்மேலில் அடியிட் டெழுந்தருளுவித்துக்கொண்டு வந்தார். இச் செய்தியை உய்யக்கொண்டார்கேட்டு, இவரிப்படிசெய்வதே! என்று போரப்ரீதராய் மணக்கால்நம்பியினுடைய உத்தமாங் கத்தைத் தமது திருவடித்தாமரைகளாலே அலங்கரித்துப், பொன்னடிப்பூவை அவர் முடியிற்சூட்டி நாமுமக்குச் செய்யவே ண்டிவ தென்னென்று கேட்டருள; அவர் "உற்றேனுக்கு பணி செய்து பாதம்பெற்றேனே இனி வேண்டுவதென்னாய்"

என்கிறபடியே தேவரீர் திருவடிகளின் சேவையே அடியேனுக்கு வேண்டியிருப்ப தென்ன; அவரையுகந்து உடையவர் மிகுதியாலே "அதிதாகாசதத்ஜ்ஞாந மாத்ம தத்வப்ரகாசகம் - ஸர்வவேதார்த்த விஜ்ஞாநம் ஸர்வசாஸ்த்ரார்த்ததர்சநம், மாநஸம் வாசிகம்பாபம் காயிகஞ்சத்ரிதாக்ருதம் - த்வயஸ்மரண மாத்ரேண நாசம்யாதி ஸம்சிப்சிதம்" என்கிறபடி பாபகாலங்கள் போருங்காலங்களின் தன்மை யிருக்கும்படியையும், ஆத்மஸ்வரூப மிருக்கும்படியையும், வேதாந்த தாத்பர்யங்களையும் தெரியச்செய்து, மனத்தாலும் - வாக்காலும் - காயத்தாலும் செய்யப்படு மவையான மூவித பாபங்களினின்றும் (உச்சரித்த மாத்திரத்தில்) விடுவித்துக் காக்கு மதான மந்த்ர ரத்ன மென்கிற த்வயத்தை யினவு முபதேசித் தருளினார்.

அனந்தரம் சிலநாள்கழிந்தவாறே, உய்யக்கொண்டார் திருநாட்டுக் கெழுந்தருளுந் தசையாக அப்போது மணக்கால்நம்பி தண்டன் ஸமர்ப்பித்து, இனி தர்சன ப்ரவர்த்தகராவார் ஆரென்று கேட்க; இங்குள்ள முதலிகளைக் கூட்டிக்கொண்டு நீரே தர்சனத்தை நிர்வஹியுமென்று சாதித்துத் தம்மிடத்தில் ஸ்ரீமந்நாத முனிகள் ப்ரஸாதித்திருந்த பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தையுங் கொடுத்து நம்பீ! செவி சாயுமென்ன; நம்பியும் வணங்க; நம்முடைய ஆசார்யரான ஸ்ரீமந் நாதமுனிகள் தம்முடைய அந்திமதசையிலே இந்த விக்ரஹத்தை நமக்குக் காட்டிக்கொடுத்து ஈச்வர முனிகளுக் கொரு புத்ரருண்டாகப் போகிறரென்றும், அவருக்கு யமுனைத் துறைவரென்று திருநாமஞ்சாற்றி அருளிச்செயல்களையும் தர்சன சாஸ்த்ரங்களையும் தெரிவித்து இவ்விக்ரஹத்தை அவருக்குத் தஞ்சமாகக் காட்டிக்கொடுக்கவேண்டுமென்றும் நியமித்திருந்தார். அவர் ஆஜ்ஞைப்ரகாரம் செய்யலாமென்று நாம் மிக விருப்போடிருந்தும் நம்காலத்தில் அவர் அவதரிக்கப் பெற்றிலோமே; ஆகையால் இனியிருக்கப் போகின்றவர் நீரானபடியால் அவரை யநுவர்த்தித்தாகிலும், க்ரந்தங்களையும் சாஸ்த்ரார்த்தங்களையும் பழக்கவோதி, இவ்விக்ரஹத்தை அவர் திருப்பாட்டனார் விரும்பினவிஷயமென்று தஞ்சமாகக் காட்டிக்கொடுத்துத் தர்சன ப்ரவர்த்தகராம்படி செய்யக் கடவீரென்று நியமித்தருளி, ஸ்ரீமந் நாதமுனிகளுடைய திருவடிகளிலே த்யானபரராய்க் கொண்டு பத்மாஸனோபவிஷ்டராய்த் திருவிளையிலே சாய்ந்து திருநாட்டுக் கெழுந்தருளினார்.





இவர் ஜயத்சேனைப்பர். இவருக்குத் திருநாமங்கள்:—உய்யக்கொண்டார் - புண்டரீகாக்ஷர் - பத்மாக்ஷர் - ராஜீவாக்ஷர் - அரவிந்தாக்ஷர். இவரவதரித்த காலம்:—கலியாப்தம் - ௩௯௨௯ - ல் நிகழ்ந்த பராபவ வருஷம் - சித்திரைமாஸம் - சுக்லபக்ஷம் - ப்ரதமை - புதவாரம் - க்ருத்திகா நக்ஷத்ரங்கூடிய சுபதினம். அவதாரஸ்தலம் திருவெள்ளறை - எழுந்தருளியிருந்தது நாற்றைந்து திருநக்ஷத்ரம். சிஷ்யர்கள் உள்ளே சொல்லப்பட்டிருக்கிற அறுவர்.

திருநக்ஷத்ரதனியன்.

மேஷமாஸே ஸரோஜாதம் க்ருத்திகா ஜாதமாச்ரயே
நாதயோகிஸுதாம்போஜ த்விதத்வப்ரவணமாநஸம்.

ஸ்ரீ உய்யக்கொண்டார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

☞ ஸ்ரீஉய்யக்கொண்டார் திருவவதார ௯௨௦௯-க்குச் சரியான ப்ரமாதிவருஷம்.

# ஸ்ரீமணக்கால்நம்பி வைபவம்.

## தனியன்.

அயத்நதோ யாமுநமாத்மதாஸ
மலர்க்கபத்ரார்ப்பணநிஷ்க்ரயேண
யக்ரீதவாநாஸ்திதயௌவராஜ்யம்
நமாமிதம்ராமமமேயஸத்வம்.

ஸ்ரீஉய்யக்கொண்டார் திருநாட்டுக் கெழுந்தருளினபடியைக் கண்டு ஸ்ரீமணக்கால்நம்பி உள்ளிட்ட முதலிகளெல்லாரும் மிகவும் சோகார்த்தராய் ஆசார்ய விச்லேஷாஸஹிஷ்ணுக்களாய்ப் பெருமிடறுசெய்து விழுந்து போரக்லேசித்துத் தங்களில் தாங்களே ஒருவாறு தேறி, அவரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துத் திருப்பள்ளிபடுத்திப் பின்னுஞ் செய்யவேண்டிய க்ருத்யங்களை யெல்லாம் குறைவறச்செய்து, சிலநாள்வரையில் ஆறுதலர்களாயிருந்து, அனந்தரம் இனிசெய்வதென்னென்று ஆலோசித்திருக்கையில்; ஸ்ரீமணக்கால்நம்பிகள் அவர்களைக் கூட்டிக்கொண்டு தர்சனம் நிர்

ஹித் தருளாதிருக்கச்செய்தே, ஈச்வரமுனிகளுக்குக், கலியாப்தம் நாலாயிரத் துப் பதினெட்டில் நிகழ்ந்த, தாதுவருஷம்-ஆடிமாசம்-பௌர்ணமி-புதவாரம் - உத்ராட நக்ஷத்ரங்கூடிய சுபதினத்தில் ஒருபுத்திரர் அவதரித்தருள; நம்பிகள் கேட்டு அதிசந்தோஷமாய் அங்கேதமெழுந்தருளி "ஜாதகர்மண்யபோது விஷ்ணோர்ப்சக்ர ஸம்புதாரணம் - சௌளோபநயநேசாபி தந்மந்த்ராத்யயநேபிவா - விதிநாவைஷ்ணவஞ் சக்ராந்தார ஜித்வாத்விஜோத்தம:" என்கிற படியே ஈச்வரமுனிகளைக்கொண்டு ஜாதகர்மங்களைச் செய்வித்து "வைஷ்ணவைப்ப சைவலை உக்தைர்ப்ச குர்யாத்ஸம் மார்ஜநம்வி போர:-தஸ்யதக்ஷிணகர்ணே து ஜபேதஷ்டாக்ஷரத்வயம்-மூர்த்நி ஹஸ்தம் விநிக்ஷிப்ய ஜபேச் சத்வாதசாக்ஷரம் - நாமகுர்யாத்தத: பச்சாத் வைஷ்ணவம்பாபநாசநம்" என்கிறபடியே பன்னிரண்டா வதுநாளில் விஷ்ணுசூக்தங்களாலே ஸ்நானஞ்செய்வித்து, வலத் திருக்காதில் அஷ்டாக்ஷர மந்த்ரத்தையும் த்வயத்தையும் ஓதி, சிரஸின்மேல் தமது ஸ்ரீஹஸ்தத்தை வைத்து த்வாதசாக்ஷர மந்த்ரத்தை ஜபித்து, அநந்தரம் "யமுனைத்துறைவர்" என்கிற விஷ்ணு ஸம்பந்தமான திருநாமத்தை (தமது பரமாசார்யரான ஸ்ரீமந் நாதமுனிகள் திருவுள்ளப்படியே) சாற்றியருளி ஸ்ரீஉய்யக் கொண்டார் அகமகிழும்படிக் கெழுந்தருளியிருந்தார்,

(இன்னும் பின்தொடர்களில் வரும்).

---

## ஸ்ரீஆளவந்தார் என்கிற

# ஸ்ரீ யமுனைத்துறைவர் வைபவம்.

### தனியன்.

ஸ்ரீராமமிச்ர ஸச்சிஷ்யம் வந்தே தத்வார்த்தகோவிதம்
வாதநாதவாப்த ராஜ்யார்த்யோ விரக்தோ யாமுநோபவத்
யத்பதாம் போருஹ த்யாநவித்வஸ்தாசேஷகல்மஷ:
வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயம் நமாமிதம்.
ஸிம்ஹாஸநாம்பரபவீச்வரயோகவிக்து
முக்தாமணிம் மஹிதநாதமுநீந்த்ர பௌத்ரம்
ப்ராஜ்ஞாவிமோஹ ஜலதிம் ப்ரதிவாதிதூல
கஞ்ஜாநிலம் ஹ்ருதய சிந்தய யாமுநார்யம்.



ஸ்ரீயமுனைத் துறைவருக்குத் திருத்தகப்பனாரான ஈச்வர முனிகள் கால க்ரமப்படிக்கு அந்த ப்ராமண சௌளோபநயநாதி களையும் செய்தருளி ஐந்தாவது வயதில் அக்ஷராப்யாசஞ் செய்து வைத்து அனந்தரம் வேதாத்யயனம் பண்ணுவிக்க; யமுனைத் துறைவர் மஹாமேதாவியாய் உபாத்யாயிகள் இரண்டாமுறை சந்தை சொல்லும்போது என்னகாண்? ஓதின இடத்தையே மறு படியும் ஓதுகின்றீர் என்று தாம் ஓதாமல் தவிர்ந்திருந்தும், அதைத் திருத்தகப்பனார் பார்த்து என்பிள்ளாய்! ஓதப்போக வில்லையென்றால் அவர்கள் ஓதின இடத்தையே ஓதா நின்றார் என்று விடைகொடுத்தும், ஏகசந்தக்ராஹியாயிருந்துகொண்டு அங்கோ பாங்கங்களோடு பதக்ரம ஸஹிதமாக அத்யயனம் பண்ணினவராகி) ஆறுவது திருநட்சத்ரத்தில் மஹா பாஷ்யபட்ட ரென்கிற பண்டிதாக்ரேசரிடத்தில் சாஸ்த்ராப்யாசம் பண்ணிக் கொண்டிருக்க; (†) அந்நாளில் சோழராஜனுடைய புரோஹிதனும் மஹாவித்வானுமாயிருந்த வித்வஜ்ஜனகோலாஹல னென்னும்

---

மற்றொரு பிரதியில்:—

(†) பூமாதேவியின் முகதிலகம்போன்ற செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் ராஜதானியாகிய மதுரைமா நகரத்தில் ஏழுநூறு வருஷத்திற்கு முன்பு அரசாண்ட பாண்டிய குலத்தரசன் ஒருவனுடைய சமஸ்தானத்தில் வித்வ ஜ்ஜன கோலாகலனென்னும் எண்டிசையிலும் பிரசித்தமாகப் பெயர்பெற்ற சமஸ்க்ருதவித்வான் ஒருவனிருந்தான். அவன் தர்க்கம், வியாகரணம், மீமாஞ்சை, தர்மசாஸ்த்ரமென்கிற நான்கிலும் பூரணபாண்டித்திய முள்ளவன். மற்ற வித்வஜ்ஜனங்கள் யாவரும் அவனைக் காணுமிடத்தில் கருட னைக்கண்ட பாம்புபோலவும், யமனைக்கண்ட உயிர்போலவும் நடுங்குவார்கள். அவன் அத்தன்மையாகிய வித்தியாசாமர்த்திய முடையவனாதலால், பாண் டியன் அவனைச்சன்மானித்துத் தன்னருகில் அதிககௌரவமாக வைத்துச் சம்ரக்ஷணை செய்துவந்தான்; அவ்வித்வான் தனக்குண்டான வித்தியா கர்வத்தினாலும், "கொண்டவன் பலமிருந்தால் குப்பையேறிச் சண்டை செய்யலாம்" என்பதற்கிசைய, அரசன் தன்மேல்வைத்த தயையினாலும் ஒருவரையும் மதிக்கிறதேயில்லை. பச்சோந்தியைக்கண்டு பயந்து மயில் தன்கண்ணை அதனிடத்தில் கொண்டுபோய்க் கொடுப்பதுபோல, பல தேசங்களிலும் இருக்கின்ற கவிஜனங்களெல்லாம் அவனுக்கு அஞ்சி வரு ஷாந்தரம் கப்பம் கொடுத்து வந்தார்கள். கையில் ஏடுமெழுத்தாணியும் எடுத்தவர்களிடத்தி லெல்லாமவன் கப்பம் வாங்கிவருகையில்,

ஸ்ரீவைஷ்ணவ சமயாசாரியர்களுக்குள் மகிமைதங்கிய யமுனைத் துறைவரென்றும், யமுனாசிரியரென்றும், ஸ்ரீஆளவந்தாரென்றும் திருநாம முடைய அவதார புருஷரொருவர் ஏறக்குறையப் பத்துப்பன்னிரண்டு

பெயரையுடையாக்கியாழ்வானென்பவன் அர்த்தநிச்சக்தியுள்ள வித்வான்களையெல்லாம் ஜயித்துக் கப்பம் வாங்கிக்கொண்டு வரும் அதர்மசாலியாய்ப் ப்ரகாசித்து, மஹாபாஷ்யபட்டர் பக்கலி லும் கப்பம்வாங்கிவரும்படி தர்வக்காரரை யனுப்பிவைக்க; அவர் களைக்கண்டு மஹாபாஷ்யபட்டர் திடுக்கிட்டுக்கிடக்க; யமுனைத்

---

வயதுள்ள சிறு பிள்ளையாய்ப் பாஷியாசாரியரென்னும் உபாத்தியாய ருடைய பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருந்தார். ஒருநாட்காலையில் எழெட்டு நாழிகைக்கு அப்பள்ளிக்கூடத்தில் இப்பிள்ளையைக் காவலாக வைத்துவிட்டு, மற்ற பிள்ளைகளும் உபாத்தியாயரும் போஜனத்திற்குப் போயிருந்தார்கள். அத்தருணத்தில் அந்த உபாத்தியாயர் நாலைந்து வருஷத்துக்கு வரி கொடுக்கவில்லையென்று அதைக்கேட்டு வாங்கிவர வித்வஜனகோலாகலன் அனுப்பிய தண்டக்காரன் வந்து உபாத்தியாயர் எங்கே போனாரென்று கேட்க; காவலாயிருந்த யமுனைத்துறைவர் எங்க ளுபாத்தியாயரைத் தேடுகிறவிதம் என்னவென்று கேட்டார்? அச்சேவகன் வித்வஜனகோலாகலனென்னும் எங்கள் வித்வச்சிரோமணி உங்களுபாத்தி யாயரிடத்தில் கப்பம்வாங்கிவரச் சொன்னார்; அதுநிமித்தம் அவரைத் தேடு கிறேனென்ன; யமுனைரியர் வரிவாங்குவது எதுக்காகவென்ன? அவன் எங்கள்வித்வான் சகலபண்டிதர்களுக்கும் சிரேஷ்டராகையால் அவருக்கு எழுத்தாணியும் பிடிக்கிறவர்களெல்லாம் கொடுக்கிறது வழக்கந்தா னென்றான். அதைக்கேட்டு யமுனைத்துறைவர் இதென்ன வழக்கம்! நியாய விரோதமாயிருக்கின்றதே! படித்தவருக்கெல்லாம் பெண்டுபோல உல கான்பவருக்கும் வரி கொடுக்கிறது, இவனுக்கும் வரிகொடுக்கிறதா? நன்று யிருக்கிறதென்று அதிசயித்து வரி கொடுக்கிறதில்லையெனப் போய்சொல லென்றார். அச்சமயத்தில் உபாத்தியாயர்வந்து அதை யறிந்து சிங்கசொப் பனங்கண்ட யானையைப்போலக் கைகால் விலவிலக்கக் குடிமுழுகிப் போயிற்றே! சுபாவத்திலேயே அவன் கொடியவன்; அப்படியிருக்க, இதைக்கேட்டால் அவன் சும்மாவிடுவானோ! வாதுக்கழைப்பானே! அந்த யமகண்டனை ஆர்வெல்லுகிறதென்று பயந்தார்; யமுனைரியர் தேவரீர் அதைப்பற்றிக் கவலைகொள்ளவேண்டுவ தில்லை; வெந்நீர்வீடு வேகுமா? இருப்புத்தூணைச் செல்லரிக்குமா? அப்படியே வருமானால் தாமொன்றுஞ் சிந்தியாமல் அடியேனை யனுப்பினால் நான்போய் உமது கடாட்சத்தினால் ஜயிக்கிறேனென்று விண்ணப்பஞ் செய்தார். இவர் சத்தினைவிதத்தில் சொன்னதும் அவைகளை உபாத்தியாயர் "கண்ணைப் பிடுங்கி முன்னே யெறிந்தும் கண்கட்டிவித்தை என்பார்போல்" நம்பவில்லை.

இப்படி வார்த்தைசொல்லிக் கொண்டிருக்கையில் அந்தஆள் போய் இங்கே நடந்தவைகளை யெல்லாம் சொல்ல; அவ்வித்வான் "கொட்டினால்



துறைவர் அவரைநோக்கி நீர்படி கிடக்கைக்கு ஹேதுவென் னென்றுகேட்க; அவருந்தனக்கு நேர்ந்திருப்பதைச்சொல்ல; இவர் அந்தஓலையைவாங்கிக்கிழித்துப்போகவிட்டார்; ஆக்கியாழ்வானிவ் வர்த்தமானமறிந்து அதிக வருத்தப்பட்டுக் கிழித்தவன்வெறும்

---

தேளும் கொட்டாவிட்டாற் பிள்ளைப்பூச்சியமா" என்று கோபித்துக் கொண்டு, அந்தச்செய்தியை அரசனுக்கறிவித்து, அவனுடைய அனுமதிப் படி வாதுக்கு வரச்சொன்னான். அதுகேட்டு உபாத்தியாயர் மனங்கலங்கி ஐயையோ! இனி நானெப்படி தலையெடுப்பதென்று துக்கித்தார். யமுனைத் துறைவர் அவருக்கு சிரிப்புமாகும்படி தைரியஞ்சொல்லிச் சேவகனைப் பார்த்து வாதுசெய்கிறதற்கு உங்கள் வித்வானை இங்கேவரச்சொல்; அல்ல வென்று நம்மை அவ்விடத்திற்கு அழைப்பிக்கிறதானால் மரியாதைப்படி நடந்துகொள்ளச் சொல்லென்றார். உடனே சத்திர சாமரமுதலிய பரிவட் டங்களோடு பல்லக்குவந்தது; அதன்மேலேறிச்சென்று மதுரையின் ராஜவீதியிற் பிரவேசிக்கும்போது, உப்பரிகைமேல் உலாவிக்கொண்டிருந்த பாண்டியராஜன் கண்டு மிகவும் ஆச்சரியங்கொண்டு கைகொட்டிச் சிரித் தான். அவனருகிலிருந்த ராணியானவள் மகாப்பிரபு! நீர் நகைக்கின்ற காரணமென்னவென்றாள்; மகாராஜன் பெண்ணே இதோபார் வீதியிற் பல்லக்கில்வருகிற இந்தக் குழந்தை நமது வித்வஜனகோலாகலனுடனே வாதுசெய்ய வருகிறதாமென்றான். ராஜபத்தினி அக்குழந்தையின் திரு முக தேஜஸை நன்றாயுற்றுப்பார்த்து அதிக மகிழ்ச்சிகூர்ந்து இவர் வாது செய்வதன்றி நமது வித்வானையும் அவருக்கு மேலானவர்களையும் ஜயிப் பதும் அருமையல்லவென்றாள்; அரசனுக்கு அந்தச்சொற் புண்ணிலே கோலிட்டதுபோல் வருத்தத்தை விளைக்க அவன் போபோ நீயென்ன பேதையாயிருக்கிறாய்; நமது வித்வானுக்கு மேலானவர்களும் உண்டெ ன்றுசொல்வது "பெட்டைக்கு இரைக்கு இரட்டைக்கொம்பு முளைத்தது" என்பதுபோலிருக்கின்றது. இச்சிறுபிள்ளையும் அவரை வெல்லுமா? காலில் லாத முடவனுங் கடலைத்தாண்டுவானோ? மண் பூனையும் எலி பிடிக்குமா? இது சொப்பனந்தானென்றான். ராஜமஹிஷி வித்வான் தோற்பது நிச் சயமே. அது இவர் முகக்குறியால் எனக்கு உள்ளங்கைப்பொருள்போல விளங்குகின்றது; சந்தேகமில்லையென்றாள். இவ்வாறு இருவரும் சம்பா ஷிக்கையில் அரசன் நீ இந்தப்பிள்ளையை எவ்வளவு சிறப்பித்துச் சொன் னாலும் நான் நம்பமாட்டேன்; விரல் உரலானால் உரல் எப்படியாகமாட் டாது; நமது வித்வானே ஜயிப்பார்; இவர் ஆரம்பத்திலேயே தோற்பார்; தோற்றால் நீயென்னசெய்வாயென? இராக்கினி மெய்யாயிவர் தோற்று ரானால் நான் உமது தாதிக்குத் தாதியாகி அவளிட்ட வேலைசெய்வேனென் றாள். வேந்தன் வைத்தியக்காரி "மன்னுதிரையைநம்பி ஆற்றிலிறங்குவார் போல்" யோசியாமற்பேசுகிறாய்; உன்சொற்படியே இவர் ஜயித்தால் நான் இவருக்கு எனது ராச்சியத்திற் பாதியைக்கொடுப்பேனென்றான்.

கவியோ? தந்த்ரபாரகனோ? என்று கேட்டுவரவிட; அதற்கவர் "நவயம்கவயஸ்து கேவலம் நவயம்கேவலதந்த்ர பாரகா: அபிது ப்ரதிவாதி வாரணப்ரகடாடோப விபாடநக்ஷமா:" என்கிறபடி நாங்கள் கேவலமான கவிகளுமல்லோம் சாமான்யமான சாஸ்த்ர

---

பின்பு யமுனைத்துறைவர் அவ்வரசன் சமுகத்தில் வந்தார். அப்போது அங்குவந்த வித்வஜ்ஜன கோலாகலன் அவர் வடிவைப்பார்த்து வயதைக்குறித்துக் குலுங்கநகைத்து, நெடிய மகா மேருவுடனே அற்பமாகிய ஒரு திரணமானது எதிர்ப்பதுபோல, சுண்டுவிரலத்தனை சிறுபையல் வாதுசெய்ய வந்தானேயென்று அலட்சியம்பண்ணி மிகவும் கர்வத்தோடே அவரைநோக்கி ஓய் சிறுபிள்ளாய்! நீ ஹரிச்சுவடி வாசித்தாயா? உனக்கு எழுத்து கூட்டத்தெரியுமா? உன்பெயரைப் பிழையில்லாமல் எழுதுவையா? ஒரு பூனைக்குட்டியானது வேங்கைப்புலியை வெல்லவருவது போலக் கவிசிங்கமாகிய நம்முடன் வாதுக்குவந்தவன் நீதானோவென்றான்? யாமுனாரியர் இவன் ஆரம்பசூரத்தனமாய்ப் பேசுகிறானென்று புன்சிரிப்புகொண்டு, நீர் பெரியவராயும் நாம் சிறுபிள்ளையாயு மிருப்பதைப்பற்றி நம்மை அவமதிக்கிறீர். யானை எத்தனைபெரிது, அதைக்கண்டவுடனே உக்கிரங்கொண்டு விசையாயெழும்பிப் பாய்ந்து அதன் மஸ்தகத்தைப் பிளக்கின்ற சிங்கக்குட்டி எத்தனை சிறிது. மலை பிரமாண்டமானதாயிருந்தும் அதை ஒரு விரலளவான சிற்றுளி சக்கைசக்கையாகப் பெயர்த்தெறியவில்லையா? அறுகம்புல் நுனியில் தங்கி நிற்கின்ற தினையளவாகிய பனித்துளி பெரியபனையளவையும் தனக்குள் அடக்கிக்காட்டவில்லையா? ஒரு பயறளவாகிய நெருப்புப்பொறியுமல்லவோ ஆகாசமளாவிய வைக்கோற்போரைச் சுட்டெரிக்கின்றது. சிறிய மீன்சினையிலும் சிறிதாகிய வித்திலிருந்து வெகுதூரமட்டும் கிளைத்து கன்றாய்த் தழைத்து ஓங்கி மேலெழுந்து வளர்ந்து பூமியின்மேல் இரண்டு மூன்று பருவபாகம் வேர்விழுந்து அடர் விழுதுவிட்டு மட்டற்ற யானைசேனைகளோடு அரசர்களுக்கு இருக்க நிழல்கொடுக்கின்ற ஆலவிருட்சம் உற்பத்தியாகின்றதே. பெருந்தாழி நிறையப் பூரிக்கப்பட்ட பாலைத் துளி மோர்பிரையானது தயிராய்ப் பரிணமிக்கப் பண்ணுகின்றதே. உலகமெங்கும் வியாபிக்கின்ற சூரியனை ஒரு கைக்குடையுமல்லவோ மறைக்கின்றது. இருபத்தொருநிலைக் கோபுரம்போலுயர்ந்த தேரை நடத்துவது இறையத்தனை அச்சாணியல்லவா? அன்றியும், அங்குஷ்டப்ரமாண தேகத்தையுடைய அகஸ்தியமுனிவர் அண்டத்தை முட்டிய விந்திய பர்வதத்தை அடக்கி மகாசமுத்திரத்தையும் உட்கொள்ளவில்லையா! இவைகளையெல்லாம் நீர் ஆலோசியாமல் இளையனென்றும் முதியனென்றும் விவகரித்துக்கொண்டு வீண்காலம் போக்குவானேன்; எடுத்தகாரியத்தை நடத்தத் துணிவதே நலமென்றார். வித்வான் அப்பொழுதும் இறுமாப்படங்காமல் அவரைச் சிறுபிள்ளையாக நினைத்து முட்டைப் பனியாரம்போலக் குதித்தெழும்பித் தன்னரி

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீமத் குருபரம்பரா ப்ரபாவப்

பிரகடன

## ❀ விசேஷக் குறிப்பு ❀

ஸ்ரீயபதியின் நிர்ஹேதுக கடாக்ஷத்தால் மானுடப்பிறவி
பூண்டு இப் பரதகண்டத்தை மருவப்பெற்ற சேதன கோடிகள்
தாங்கொண்ட மானுடதேகத்தின் அருமையையும் நிலையாமை
யையும் உய்த்துணர்ந்து, அஃதுள்ள போதே அதைக்கொண்டு
தக்ககாலத்தில் அடையவேண்டிய உறுதிப்பயனை அடைகிலராய்ச்
சமையப் புலிக்கிருந்து துயரால் மனம்வருந்தும் நிலைமைக்
கிரங்கி அவர்களை ஆட்கொள்வான் கருதி ஒத்த இனத்தராய் அவத
ரித்துத் தமிழாரண முதலிய அரும்பெறல் நூல்களையருளிய
மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வாராசாரியர்களின் திவ்ய
சரித்திரங்கள்முழுதும் அடங்கிய ஸ்ரீமத் குருபரம்பரா ப்ரபாவம்
என்னும் அரிய கிரந்தத்தைத் தற்போது பெண்ணுக்கும் பேதைக்
கும் நன்கு விளங்கவும், எளியரும் சுலபமாய்ப்பெற்று அநுபவ
விக்கவும், அரும்[illegible]டனும், வேண்டியவிடத்துப் பல
விசேஷக் குறிப்[illegible]ம் சத்[illegible]பில் விலை அணா நான்கே கொ
ண்ட டிம்[illegible] பார[illegible] [illegible] சஞ்சிகை ரூபமாக வெளி
யிடப் பக[illegible]கடாக்ஷத்தை முன்னிட்டு வந்துள்ளோம். இக் கிரந்
தத்தில் [illegible]ர்கள் தொடங்கி யதிராஜப் பிரவணரான மணவாள
மாமுனிகள் பரியந்தமுள்ள சரிதைகள் முழுமையும் குறைவின்றி
வரும். [illegible]யும் ஆறாயிரப்படியும் பன்னீராயிரப்படியும் பிரமா
ணங்களுட[illegible]ற்பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்துப் பூர்வா
சாரியர்களின் [illegible]வாக்கியங்கள் ஒன்றும் விடுபடாமல் அச்சிடப்
படும். அடியோங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி இனிது நிறை
வேறுமாறு ஸ்ரீமத் பர[illegible] பாகவத ஸ்ரீமான்கள் அனைவரும் இஷ்
சஞ்சிகைக்குக் [illegible]யாய் அருள் புரிவார்களென்று
பிரார்த்திக்கின்றனம். இது ஏறக் குறைய 8 சஞ்சிகையில் முடிவு
பெறும். 8 பாரங்கொண்ட சஞ்சிகை ஒன்றன் விலை அணா நான்கே.
எவ்வித ஆப்தர்களாயினும், சஞ்சிகையின் கிரயத்தைச் செலுத்தி
விட்டே சஞ்சிகைகளைப் பெறுவார்களென்று வேண்டுகிறோம்.
சஞ்சிகை பெற்றபின் அது திருப்பப்படுமாயின் வாங்கிக்கொள்ளப்
படமாட்டாது.

☞ இது இங்கிலீஷ், பிரான்சு இலாக்காக்களில் ரிஜிஸ்டர்
செய்யப்பட்டிருக்கின்றது. இதனை யாவருங் கவனிப்பாராக.

பெ. து. சீ. செ. இ. அ.

17, [illegible] [illegible], ஈ. போஸ்ட் திருவல்லிக்கேணி.